சந்திரா

தமிழ் உரை

ஏழாம் வகுப்பு



சுந்திரா

தமிழ் உரை நூல்

ஏழாம் வகுப்பு

அரசியலார் திருத்தி அமைத்து வெளியிட்டுள்ள ஏழாம் வகுப்புத் தமிழ்ப் பாட நூலில் உள்ள உரைநடைப் பாடங்களுக்கு அருஞ்சொற்பொருள், மொழிப் பயிற்சி, வினா - விடை, இலக்கணக் குறிப்பு, செய்யுளுக்குச் சொற்பொருள், கருத்துரை, வினா - விடை, துணைப்பாடக் கட்டுரைகள், பொதுக் கட்டுரைகள் அடங்கியுள்ளன.

சுதந்திரா பதிப்பகம்
பப்ளிஷர்ஸ், புக்செல்லர்ஸ் & ஸ்டேஷனர்ஸ்
செவ்வாய்ப்பேட்டை : : சேலம்-636002
(போன் : 8579)

 1977 [விலை: ரூ. 2.70

முதலாம் பதிப்பு—1977

முன்னுரை

அரசியலார் வெளியிட்டுள்ள ஏழாம் வகுப்புத் தமிழ்ப் பாடநூலில் வந்துள்ள உரைநடைப் பாடங்களுக்கு அருஞ்சொற் பொருள், மொழிப் பயிற்சி, வினு-விடை ஆகியவைகளும், செய்யுளுக்குச் சொற்பொருள், கருத்துரை, வினு-விடை ஆகியவைகளும் இலக்கணக் குறிப்புகளும் இவ்வகுப்பில் படிக்கும் மாணவ, மாணவிகள் எளிதில் படித்தறியுமாறு மிகத் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன.

பாடநூலில் தரப்பட்டுள்ள வினுக்களுக்கு மட்டுமன்றி, பாடம் முழுவதையும் தழுவிய புதிய வினுக்களையும் சேர்த்து, அவற்றிற்குரிய விடைகளும் தரப்பட்டிருக்கின்றன.

இந்த உரைநூலை ஏழாம் வகுப்பு மாணவ, மாணவிகள் வாங்கிப் பயன்படுத்துமாறு செய்யும் வண்ணம் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களையும், பள்ளிக்கூட நிர்வாகிகளையும் வேண்டிக்கொள்கிறோம்.

பதிப்பகத்தார்

(Paper used : White Printing D. Demy 16 kg.)

Printed at Jeevan Press, Madras-600 005

பொருளடக்கம்

செய்யுட் பகுதி

உரைநடைப் பகுதி

சந்திரா தமிழ் உரைநூல்

ஏழாம் வகுப்பு

செய்யுட் பகுதி

I. வாழ்த்து

திருவருட்பா

திரு + அருள் + பா = திருவருட்பா. இறைவன் அருளால் பாடப்பட்ட பாடல்கள் என்றும், அவன் அருளைப்பெற வேண்டிப் பாடிய பாடல்கள் என்றும் பொருள்படும். சமரச சன்மார்க்க நெறியை உணர்த்தும் இப் பாடல்கள் படிப்போர் உள்ளத்தை உருக்கும் தன்மை உடையவை.

ஆசிரியர் வரலாறு : இந்நூலை இயற்றியவர் இராமலிங்க அடிகளாவார். தந்தையார் பெயர் இராமையா பிள்ளை. தாயார் பெயர் சின்னம்மாள். இவரது ஊர் சிதம்பரத்தை அடுத்த மருதூர். வடலூரில் சமரச சன்மார்க்க சங்கம் ஏற்படுத்தித் தம் 50ஆம் வயதில் ஓர் அறைக்குள் நுழைந்து மறைந்துவிட்டார். இவர் உயிர் வாழ்ந்த காலம் கி. பி. 1823—74. இவரது பாடல்கள் எளியவை.

§ **பொய்யனேன் பிழைகள் எல்லாம்**
பொறுத்திடல் வேண்டும் போற்றி !
கையனேன் தன்னை இன்னும்
காத்திடல் வேண்டும் போற்றி !
மெய்யனே ! மெய்ய ருள்ளே
மேவிய விளைவே போற்றி !
ஐயனே ! அப்பனே ! எம்
அரசனே ! போற்றி போற்றி ! 1

பதவுரை

மெய்யனே - உண்மையானவனே
மெய்யர் உள்ளே - அன்பர் உள்ளத்தில்
மேவிய - இருக்கும்
விளைவே - பயனே
போற்றி - உன்னை வணங்குகின்றேன்
ஐயனே அப்பனே எம் அரசனே - தலைவனே, தந்தையே, எமது அரசனே
போற்றி போற்றி - பன்முறை வணங்குகின்றேன்
பொய்யனேன் - பொய்மை உடைய என்
பிழைகள் எல்லாம் - தவறுகளை எல்லாம்

செய்யுட் பகுதியில் (§) இக் குறியிட்ட பாட்டுகள் மனப்பாடம் செய்யவேண்டியவை.

பொறுத்திடல் வேண்டும் - பொறுத்துக்கொள்ள வேண்டும்	**இன்னும்** - இனிமேலும்
கையனேன்தன்னை - இழிந்தவனாகிய என்னை	**காத்திடல்வேண்டும்** - காத்தருள வேண்டும்
	போற்றி - உன்னை வணங்குகின்றேன்

தெளிவுரை : நான் பொய்மை உருவானவன். நான் செய்யும் பிழைகளையெல்லாம் பொறுத்தருளவேண்டும். இழிந்த தன்மை உடையவனாகிய என்னை, இனி நீதான் காப்பாற்றவேண்டும். உண்மையானவனே, என் தலைவனே, என் தந்தையே, அன்பர் உள்ளத்திருக்கும் அப்பனே, உன்னை வணங்குகின்றேன்.

§ **பேரிடர் தவிர்த்துப் பேரருள் புரிந்த**
பெரும ! நின் றன்னை என் றனக்கே
சாருறு தாயே என்றுரைப் பேனோ !
தந்தையே என்றுரைப் பேனோ !
சீருறு குருவே என்றுரைப் பேனோ!
தெய்வமே என்றுரைப் பேனோ !
யாரென உரைப்பேன் ? என்னெனப் புகழ்வேன் ?
யாதுமொன் றறிந்திலேன் அந்தோ ! 2

பதவுரை

பேரிடர்தீர்த்து - பெரிய துன்பத்தைப் போக்கி	**குருவே என்று** - நல்ஆசிரியர் என்று
பேர் அருள் புரிந்த - பெருமை பொருந்திய நின் அருளை ஈந்த	**உரைப்பேனோ** - கூறுவேனோ
பெரும - பெருமானே	**தெய்வமே என்று** - கடவுளே என்று
நின்தன்னை என் தனக்கே-உன்னை எனக்கு	**உரைப்பேனோ** - கூறுவேனோ
சார் உறுதாயே என்று - வாய்த்த தாயே என்று	**ஆர்என** - இவர்களுள் யார் என்று
உரைப்பேனோ - கூறுவேனோ	**உரைப்பேன்** - கூறுவேன்
தந்தையே என்று-என் தந்தையே என்று	**என் எனப் புகழ்வேன்** - என் என்று கூறிப் புகழ்வேன்
உரைப்பேனோ - கூறுவேனோ	**அந்தோ** - ஐயோ !
சீர்உறு - சிறப்புப் பொருந்திய	**யாது ஒன்றும்** - ஏதொன்றும்
	அறிந்திலேன் - அறியாதவனாக இருக்கின்றேன்

தெளிவுரை : பெருந் துன்பத்தைப் போக்கி, பேரருளைப் புரிந்த பெருமானே ! உன்னை எனக்குச் சார்பாயிருக்கும் தாயென்று கூறுவதா ? தந்தை எனக் கூறுவதா ? சிறப்புப் பொருந்திய குருவே என்று கூறுவதா ? தெய்வமே என்றழைப்பதா? அன்றி, உன்னை யாரென்று கூறுவது ? என்னவென்று புகழ்வது ? ஒன்றையும் அறியாமல் இருக்கின்றேன்.

இலக்கணம்

பொய் × மெய், தாய் × தந்தை, காத்து × அழித்து
பெருமை + இடர் = பேரிடர், பெருமை + அருள் = பேரருள்
பேரருள் = பண்புத் தொகை
போற்றி, போற்றி = அடுக்குத்தொடர்
பொறுத்தல், காத்தல் - தொழிற் பெயர்கள்
அந்தோ — இரக்கக் குறிப்பு தரும் சொல்
உரைப்பேன் — தன்மை ஒருமைவினை முற்று

II. நீதிப் பகுதி

1. திருக்குறள்

திரு + குறள் = திருக்குறள். சிறப்புப் பொருந்திய ஈரடிக் குறள் வெண்பாக்களாலான நீதி நூல். திரு - சிறப்பினைக் குறிக்கும் அடை மொழியாகும். இது பதினெண் கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்று. இதன் சிறப்பை உணர்ந்த பாரதியார், 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று குறளையும் அதனை இயற்றிய வள்ளுவரையும் புகழ்ந்து கூறியுள்ளார். பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டிருப்பதே இதன் சிறப்பை உணர்த்தும்.

இந்நூல், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ளது. அதனால் முப்பால் என்ற பெயரும் வழங்குகிறது. ஏழு இயல்களையும், நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும் கொண்டது. 1330 குறட்பாக்களைக் கொண்டது.

ஆசிரியர் — திருவள்ளுவர். கி. மு. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனத் தெரிகிறது. தந்தை-பகவன், தாய்-ஆதி. மனைவி-வாசுகி. தொழில்-நெசவுத் தொழில் என்பர்.

அன்புடைமை

(தொடர்புடைய சுற்றத்திடம் அன்புடையராய் இருத்தல்)

§ 1. அன்பிலார் எல்லாந் தமக்குரியர் ; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு.

பதவுரை

அன்பு இலார் - அன்பு என்னும் உயர்குணம் இல்லாதவர்	**அன்பு உடையார்** - அன்பை உடையவர்கள்
எல்லாம் - எல்லாப்பொருள் களையும்	**என்பும்** - தம் உடம்பாலும்
தமக்கு உரியர் - தமக்கே உரிமை ஆக்கிக்கொள்வர்	**பிறர்க்கு** - மற்றவர்க்கு
	உரியர் — சொந்தமாகும் தன்மை உடையவர்

தெளிவுரை : தொடர்புடையார் இடத்துக் காட்டும் அன்பு எனும் குணத்தைப் பெருதவர்களால் மற்றவர்க்கு எவ்விதப் பயனும் இல்லை. இவர்கள் எல்லாப் பொருள்களையும் தங்களுடையதே எனக் கருதுவர். அன்புடையார் தங்கள் பொருளால் அன்றி உடம்பாலும் பிறர்க்கு உதவுவார்.

இலக்கணம்

அன்பு + இலார் = அன்பிலார்
பிறர்க்கு + உரியர் = பிறர்க்குரியர்
என்பு – சினையாகு பெயர்

2. அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை, வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று.

பதவுரை

அன்பு - அன்பானது
அகத்துஇல்லா - உள்ளத்தில் இல்லாமல்
உயிர்வாழ்க்கை - உயிரோடு வாழும் வாழ்க்கை
வன்பால்கண் - வலிய பாலை நிலத்தில் உள்ள
வற்றல் மரம் - வாடிக் காய்ந்து போன மரம்
தளிர்த்து அற்று - துளிர்விட்டுத் தழைத்ததுபோலாகும்

தெளிவுரை : தன் மனத்தில் அன்பு இல்லாமல் உயிரோடு வாழும் வாழக்கை, மழையே காணுத வறட்சியான பாலை நிலத்தில் காய்ந்து வற்றிப்போன மரம், துளிர் விட்டுத் தழைப்பதற்கு ஒப்பாகும்.

இலக்கணம்

இல்லா உயிர் வாழ்க்கை — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
வற்றல் — தொழிற்பெயர்
தளிர்த்தற்று = தளிர்த்த + அற்று
அன்பு + அகத்து + இல்லா = அன்பகத்தில்லா
வன்மை + பால் = வன்பால்
வன்பால் — பண்புத்தொகை.

3. அன்பின் வழிய துயிர்நிலை ; அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த உடம்பு.

பதவுரை

அன்பு - அன்பு என்னும் அருங்குணத்தின்
வழியது - வழியில் இயங்கும்
உயிர்நிலை - (உடம்பே) உயிர் உள்ள உடம்பாகும்
அஃது இலார்க்கு - அந்த அன்பு இல்லாதவர்க்கு
உடம்பு - உள்ள உடம்பு
என்பு தோல் - எலும்பும் தோலும்
போர்த்த – சேர்த்து மூடிய உடம்பாகும்

தெளிவுரை : அன்பை உள்ளத்தே கொண்ட உடம்பே உயிருள்ள உடம்பாகும். உள்ளத்தே அன்பில்லாதவர் பெற்ற உடம்பு, எலும்பைத் தோலால் போர்த்து மறைத்த உயிரற்ற வெற்றுடம்பாகும்.

இலக்கணம்

வழியது + உயிர்நிலை = வழியதுயிர்நிலை
அஃது + இலார்க்கு = அஃதிலார்க்கு
உடம்பு — பால்பகா அஃறிணைப் பெயர்
வழியது — வினையாலணையும் பெயர்
போர்த்த — போர்த்தன எனப் பொருள்படுவதால் பலவின் பால் வினைமுற்று.

பொறையுடைமை

(பிறர் செய்த பிழைகளைப் பொறுத்தல்)

4. பொறுத்தல் இறப்பினை யென்றும் ; அதனை
மறத்தல் அதனினும் நன்று.

பதவுரை

என்றும் – எக்காலத்தும்
இறப்பினை - பிறர்செய்த துன்பத்தை
பொறுத்தல் - (தண்டிக்கும் வல்லமை உடையவராயினும்) தண்டிக்காமல் அத்துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும்
அதனை - அத்துன்பத்தை
மறத்தல் - மனத்தில் கொள்ளாமல் மறந்து விடுதல்
அதனினும் நன்று - பிழையைப் பொறுத்துக் கொள்வதைக் காட்டிலும் நன்மை உடையது

தெளிவுரை : எக்காலத்தும் பிறர் செய்த பிழைகளைப் பொறுத்துக் கொள்வது நல்லது. அப்பிழைக்காகத் தண்டிக்கும் ஆற்றல் பெற்றிருந்தும் அதனைச் செய்யாது பொறுத்துக் கொள்வது அதனினும் சிறந்தது. மனத்தில் கொள்ளாமல் மறப்பது எல்லாவற்றினும் சிறந்தது.

இலக்கணம்

இறப்பு, பொறுத்தல், மறத்தல் — தொழிற் பெயர்கள்
பொறுத்தல் — வியங்கோள் வினைமுற்று

§ 5. ஒறுத்தாரை ஒன்றாக வையாரே ; வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

பதவுரை

ஒறுத்தாரை – (பிறர் செய்த தீமையைப் பொறுக்காமல்) அவரைத் தண்டிப்பவரை
ஒன்றாகவையார் - (அறிவுடையோர்) ஒரு பொருளாகக் கருதமாட்டார்கள்

பொறுத்தாரை – அதனைக் கருதாமல் பொறுத்துக் கொள்பவரை	**பொன்போல்** – மேலான பொன்னைப் போன்று **பொதிந்துவைப்பர்** - மனத்தில் வைத்துப் போற்றுவர்

தெளிவுரை : பிறர் செய்த தீமையைப் பொறுக்காமல் தண்டிப்பவர்களை அறிவுடைய சான்றோர் மதிக்க மாட்டார்கள். ஆனால் அவர் செய்த தீங்கினைப் பொறுத்துக் கொள்பவரை, பொன்னைக் காப்பது போலப் போற்றித் தம் மனத்தில் வைத்துப் பாராட்டுவர்.

இலக்கணம்

பொன்போல் + பொதிந்து = பொன்போற் பொதிந்து
வைப்பர் — உடன்பாட்டு பலர்பால் வினைமுற்று
வையார் — எதிர்மறைப் பலர்பால் வினைமுற்று
பொறுத்தாரை, ஒறுத்தாரை — வினையாலணையும் பெயர்கள்

6. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்.

பதவுரை

மிகுதியான் – மனச்செருக்கினால் **மிக்கவை** –. தீயசெயல்களை **செய்தாரை** – செய்தவர்களை **தாம்தம்** – (அறிவுடையோர்) தம்முடைய	**தகுதியால்** – பொறுமைக் குணத்தினால் **வென்றுவிடல்** – பொறுத்து வென்றுவிடவேண்டும்

தெளிவுரை : மனச் செருக்கால் தீமை செய்தவர்களை அறிவுடையோர் தம் பொறுமைக் குணத்தினால் பொறுத்து, அவர்களை நாணமுறச் செய்து வெல்ல வேண்டும்.

இலக்கணம்

செய்தவரை — வினையாலணையும் பெயர்
வென்றுவிடல்—வியங்கோள் வினைமுற்று
தாம் + தம் = தாந்தம்

கள்ளாமை

(பிறர் பொருளை வஞ்சனையால் கவர்ந்து கொள்ளாதிருத்தல்)

§ 7. உள்ளத்தால் உள்ளலும் தீதே, 'பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம்' எனல்.

பதவுரை

உள்ளத்தால் - (குற்றங்களை) தம் மனத்தால்	**கள்ளத்தால்** – அவன் அறியாத வாறு (திருட்டுத்தனமாக)
உள்ளலும் – நினைப்பதும்	**கள்வேம்** - வஞ்சனையாகக் களவு செய்வோம்
தீதே - தீமை பயப்பதாகும்	**எனல்** - என்று நினைக்க வேண்டாம்
பிறன்பொருளை – (ஆதலால்) பிறனுக்குரிய பொருளை	

தெளிவுரை : பிறர்க்குரிய பொருளை அவர் அறியாதவாறு வஞ்சனையாகக் கவர்ந்து கொள்வோம் என்று மனத்தால் எண்ணுவதும் தீமையைப் பயப்பதாகும்.

இலக்கணம்

கள்வேம் — தன்மைப் பன்மை வினைமுற்று
எனல் — எதிர்மறை வியங்கோள் வினைமுற்று

**8. களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்
தாவது போலக் கெடும்.**

பதவுரை

களவினால் – களவுசெய்வதால்	**அளவு இறந்து** - பின் அளவு கடந்து
ஆகிய செல்வம் – பெற்ற செல்வம்	**கெடும்** - (ஒன்றும் இல்லாமல் எல்லாச் செல்வமும்) அழிந்துவிடும்
ஆவதுபோல் - பெருகி வளர்வது போல் தோன்றி	

தெளிவுரை : களவின்மூலம் உண்டாகும் செல்வமானது முதலில் பெருகுவது போலத் தோன்றிப் பின்னர் முன்னிருந்த அளவையுங் கடந்து அவனுக்குப் பயன்படாமல் அறவே அழிந்துவிடும்.

இலக்கணம்

அளவிறந்தாவது = அளவு + இறந்து + ஆவது
கெடும் — செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று
ஆக்கம் — ஆக்கப்படுவது (காரிய ஆகு பெயர்)

**9. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்று தவர்.**

பதவுரை

களவு அல்ல - களவு அல்லாத	**அளவு அல்ல** - அளவு அல்லாத பிற தீய செயல்களை
மற்றைய - மற்ற செயல்களை	**செய்து ஆங்கே** - செய்த அப்பொழுதே
தேற்றுதவர் - அறியாதவர்	**வீவர்** - கெட்டழிவர்

தெளிவுரை : வஞ்சித்துப் பிறர் பொருளைத் திருடுவது தவிர மற்ற செயல்களை அறியாதவர், அளவற்ற தீய செயல்களைச் செய்து பின் விரைவில் அழிவர்.

இலக்கணம்

களவு + அல்ல = களவல்ல
செய்து + ஆங்கே = செய்தாங்கே
வீவர் — பலர்பால் வினைமுற்று
தேற்றுதவர் — வினையாலணையும் பெயர்

ஊக்கம் உடைமை

(மனவலிமையுடன் செய்யும் செயல்களில் உற்சாகம் உடைமை)

10. உள்ளம் உடைமை உடைமை; பொருளுடைமை நில்லாது நீங்கி விடும்.

பதவுரை

உள்ளம்உடைமை - ஒருவன் தான் செய்யும் செயலில் ஊக்கம் கொள்வதே
உடைமை - நிலைபெற்ற செல்வம் ஆகும்
பொருள் உடைமை - மற்ற செல்வங்களைப் பெற்றிருப்பது
நில்லாது - நிலைபெற்று நில்லாது
நீங்கிவிடும் - (நம்மைவிட்டு) விலகிவிடும்

தெளிவுரை : ஒருவன் தான்செய்யும் செயல்களில் ஊக்கம் உடையவனாய் இருக்கவேண்டும். அது அவனுக்கு அழியாத நிலைபெற்ற செல்வமாகும். மற்ற செல்வங்கள் யாவும் நிலைத்து நில்லாது விரைவில் அழிந்துவிடும்.

இலக்கணம்

பொருளுடைமை = பொருள் + உடைமை
உள்ளம் — இடவாகு பெயர்
உடைமை — தொழிற்பெயர்

§ 11. ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா ஊக்கம் உடையா னுழை.

பதவுரை

அசைவு இலா - சிறிதும் தளர்ச்சி இல்லாத
ஊக்கம் - ஊக்கம்
உடையான் - உடையவன்
உழை - இடத்து
ஆக்கம் - செல்வம்
அதர்வினாய் - (தானே) வழி கேட்டுக்கொண்டு
செல்லும் - அவன் இருக்கும் இடத்திற்குச் செல்லும்

தெளிவுரை : தான் செய்யும் செயலில் தளர்வில்லாத ஊக்கம் உடையவன் இடத்துச் செல்வம், தானே வழிகேட்டுக் கொண்டு போய்ச் சேரும்.

இலக்கணம்

அசைவு + இலா = அசைவிலா
உடையானுழை = உடையான் + உழை
ஆக்கம் — காரணப் பெயர். வினுய் — வினையெச்சம்
செல்லும் — வினைமுற்று

12. பரியது கூர்ங்கோட்ட தாயினும், யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

பதவுரை

பரியது - (விலங்குகளுள்) பெரிய உடம்பை உடையது
கூர்ங்கோட்டது - கூர்மையான கொம்புகளை உடையது
ஆயினும் - என்றாலும்
யானை - யானையானது (ஊக்கம் இல்லாமையால்)
புலி - (உருவத்தில் சிறிய) புலி
தாக்குறின் - எதிர்ப்பட்டுத் தாக்கினுல்
வெரூஉம் - அதற்கு அஞ்சும்

தெளிவுரை : பெரிய உடம்பையும், கூரிய தந்தங்களையும் பெற்ற யானை ஊக்கம் இல்லாமையால், ஊக்கமுடைய உருவத்தில் சிறிய புலி எதிர்ப்பட்டுத் தாக்கினுல் பயந்து ஓடும். அதுபோல, மிக்க படை வலிமையுடைய அரசனுயினும் ஊக்கம் இல்லாதவனுக இருந்தால் பகைவரால் அழிவுறுவான்.

இலக்கணம்

வெரூஉம் — இன்னிசை அளபெடை
தாக்குறின் = தாக்கு + உறின்
கூர்ங்கோடு — பண்புத்தொகை
கூர்மை + கொடு + அது = கூர்ங்கோட்டது

நாடு

(நாட்டின் இயல்பு)

13. தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு.

பதவுரை

தள்ளா - குறைவில்லாத
விளையுளும் - விளைவைச் செய்யும் உழவரும்
தக்காரும் - அறிவிற் சிறந்த சான்றோரும்
தாழ்வுஇலா - கெடுதல் இல்லாத
செல்வரும் - செல்வம் உடையவரும்
சேர்வது - ஒன்றுபட்டுச் சேர்ந்து வாழ்வதே
நாடு - சிறந்த நாடாகும்

தெளிவுரை : குறையாத விளைபொருளைத் தரும் உழவரும், அறிவுடைய சான்றோரும், அழியாத செல்வமுடையவரும் ஒன்றுபட்டுக்கூடி வாழும் நாடே சிறந்த நாடாகும்.

இலக்கணம்

தள்ளா, தாழ்விலா, இலாச்செல்வர் — ஈறுகெட்ட எதிர் மறைப் பெயர் எச்சங்கள்

**14. உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு.**

பதவுரை

உறுபசியும் - மிக்க பசியும்
ஓவாப் பிணியும் - நீங்காதநோயும்
செறுபகையும்-நாட்டைத் தாக்கி அழிவு செய்யும் பகையும்
சேராது - தன்னை வந்தடையாது
இயல்வது - இனிது நடப்பதே
நாடு - சிறந்த நாடாகும்

தெளிவுரை : மிகுந்த பசியும், நீங்காத நோயும், புறத்திருந்து வந்து அழிவுசெய்யும் பகையும தன்னை வந்தடையாமல் நல்ல முறையில் நடைபெறும் நாடே நல்ல நாடாகும்.

இலக்கணம்

உறுபசி — உரிச்சொல் தொடர்
செறுபகை — வினைத்தொகை
ஓவா — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**§ 15. நாடென்ப நாடா வளத்தன; நாடல்ல
நாட வளந்தரு நாடு.**

பதவுரை

நாடா - (நாட்டில் வாழ்பவர்) தேடி வருந்தாமல்
வளத்தன - செழுமையான செல்வமுடைய நாட்டை
நாடுஎன்ப - (சான்றோர்) சிறந்த நாடு என்று கூறுவர்
நாட - மக்கள் வருந்திச்சென்று
வளந்தரும் நாடு - செல்வத்தைப் பெறச்செய்யும் நாடு
நாடு அல்ல - சிறந்த நாடாகாது

தெளிவுரை : தன்னிடத்து வாழ்வோர் தேடி வருந்தாமல், எல்லாச் செல்வ வளங்களும் தன்னிடத்தே கொண்ட நாடுகளையே சான்றோர் நல்ல நாடு என்று கூறுவர். தன்னிடம் வாழ்வோர் தேடிவருந்திச்சென்று செல்வத்தைப் பெறச்செய்யும் நாடு நாடாக மாட்டாது. பிறநாட்டின் உதவியை நாடி நிற்கும் நாடு சிறந்த நாடு ஆகாது.

இலக்கணம்

நாடா — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
நாடு + அல்ல = நாடல்ல
என்ப — பலர்பால் வினைமுற்று

பெரியாரைப் பிழையாமை

(பெரியோர்களை அவமதிக்காமல் இருத்தல்)

**16. ஆற்றுவார் ஆற்றல் இகழாமை, போற்றுவார்
போற்றலு ளெல்லாம் தலை.**

பதவுரை

ஆற்றுவார் - (தாம் எடுத்துக் கொண்ட செயல்களை) செய்துமுடிக்கவல்ல பெரியோர்களின்	**போற்றுவார்** - (தமக்குத் தீங்கு வராமல்) காப்பவர்
ஆற்றல் - திறமைகளை	**போற்றலுள் எல்லாம்** - செய்து கொள்ளும் காவல்களில் எல்லாம்
இகழாமை - அவமதியாதுஇருத்தல்	**தலை** - சிறந்ததாகும்

தெளிவுரை : மேற்கொண்ட செயல்களையெல்லாம் முடிக்க வல்லாரது திறமையை அவமதியாமல் இருக்கவேண்டும். அவ்வாறு இருத்தல், தமக்குத் தீங்குவராமல் காக்க நினைப்பவர் செய்துகொள்ளும் காவல்கள் எல்லாவற்றிலும் சிறந்ததாகும்.

இலக்கணம்

ஆற்றுவார், போற்றுவார்—வினையாலணையும் பெயர்கள்
ஆற்றல், இகழ்தல் — தொழிற்பெயர்கள்
இகழ்தல் × புகழ்தல்

**§ 17. எரியால் சுடப்படினும் உய்வுண்டாம்; உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.**

பதவுரை

எரியால் - நெருப்பினால்	**பிழைத்து** - இகழ்ந்து
சுடப்படினும் - சுடப்பட்டாலும்	**ஒழுகுவார்** - வாழ்பவர்
உய்வுண்டாம் - உயிர் பிழைத்தல்கூடும் (ஆனால்)	**உய்யார்** - (எதனாலும்) உயிர் பிழைக்கமாட்டார்
பெரியோரை - அறிவில் சிறந்த பெரியோரை	

தெளிவுரை : ஒருவன் நெருப்பால் சுடப்பட்டாலும் உயிர் தப்பிப் பிழைக்கலாம். ஆனால், அறிவாற்றலால் சிறந்த சான்றோர்க்குத் தீங்கு செய்பவர் எந்த வகையிலும் உயிர் பிழைக்க இயலாது.

இலக்கணம்

உய்யார் — எதிர்மறை பலர்பால் வினைமுற்று
ஒழுகுவார் — வினையாலணையும் பெயர்
பிழைத்தொழுகுவார் = பிழைத்து + ஒழுகுவார்

உய்வுண்டாம் — உய்வு + உண்டாம்
பெரியார் × சிறியார்

**18. ஏந்திய கொள்கையார் சீறின், இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.**

பதவுரை

ஏந்திய - அரிய விரதங்களை மேற்கொண்ட	**வேந்தனும்** - நாட்டை ஆளும் அரசனும்
கொள்கையார் - (கோட்பாடுகளைக் கொண்ட) சான்றோர்	**இடை** - நடுவில்
சீறின் - கோபம் கொண்டால்	**வேந்து** - அரச பதவியை
	முரிந்து - இழந்து
	கெடும் - கெடுவான்

தெளிவுரை : காத்தற்கரிய விரதங்களை உடைய சான்றோர், கோபப்பட்டால் அரசனும் தன் பதவியிழந்து கெடுவான்.

இலக்கணம்

ஏந்திய—பெயரெச்சம்
கெடும்—செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று
முரிந்து—வினையெச்சம்

மருந்து

(நோய் தீர்க்கும் மருந்தின் தன்மையைக் கூறல்)

**§ 19. அற்றால் அளவறிந் துண்க; அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு.**

பதவுரை

அற்றால் - முன்பு உண்ட உணவு செரித்துவிட்டால்	**உடம்பு பெற்றான்** - இம் மனித உடம்பினைப் பெற்ற ஒருவன்
அளவு அறிந்து - வயிறு கொள்ளும் அளவினை அறிந்து	**நெடிது** - அதனை நீண்ட காலம்
உண்க - உண்பானாக	**உய்க்கும்** - கொண்டு செலுத்தும் (வாழச் செய்யும்)
அஃது - அதுவே	**ஆறு** - வழியாகும்

தெளிவுரை : நாம் முதலில் உண்ட உணவு செரித்தபின், செரிக்கும் அளவினை அறிந்து உண்ணவேண்டும். அவ்வாறு உண்ணுதலே பெறற்கரிய இவ்வுடம்பினைப் பெற்ற ஒருவன் அதனை நெடுங்காலம் வாழவைக்கும் வழியாகும்.

இலக்கணம்

அற்றால்—வினையெச்சம்
உண்க—வியங்கோள் வினைமுற்று
பெற்றான்—வினையாலணையும் பெயர்

உய்க்கும்—பெயரெச்சம்
அளவறிந்து—அளவு+அறிந்து

**20. மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபா டில்லை உயிர்க்கு.**

பதவுரை

மாறுபாடு - உடம்பிற்கும் கால இயல்பிற்கும் எவ்வித மாறுபாடும்	**உண்ணின்** - உண்டால்
இல்லா உண்டி - இல்லாத உணவை	**உயிர்க்கு** - உடம்பில் வாழும் உயிர்க்கு
மறுத்து - (தன் உள்ளம் விரும்பும் அளவை) அடக்கி	**ஊறுபாடு** - பிணியால் உளதாகும் துன்பம்
	இல்லை - உண்டாகாது

தெளிவுரை : மாறுபாடில்லாத, நன்மை தரக்கூடிய உணவினை, தன் மனம் விரும்பும் அளவை மறுத்துத் தேவையான அளவு உண்டு வாழந்தால், ஒருவனுடைய உயிர்க்கு நோயால் உண்டாகும் துன்பம் இல்லையாம்.

இலக்கணம்

ஊறுபாடு, மாறுபாடு—தொழிற்பெயர்கள், உண்ணின்—வினையெச்சம்

**21. நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.**

பதவுரை

நோய் நாடி - (ஒருவனிடம் காணப்படும் குறிகளால்) இன்ன நோய் என்பதை அறிந்து	**வாய் நாடி** - வழி வகைகளை அறிந்து
நோய் முதல் நாடி - பின் அந்நோய் உண்டாதற்குக் காரணம் இன்னதென்றறிந்து	**வாய்ப்ப** - பயன் தரும் முறையில் பொருந்தும்படியாக
அது தணிக்கும் - அந்நோயைப் போக்கும்	**செயல்** - முன்னோர் வகுத்த முறையினின்றும் பிழையாமல் செய்க

தெளிவுரை : மருத்துவன் நோயாளியிடம் ஏற்படும் குறிகளைக் கண்டு இன்ன நோயென்று தெளிந்து, அந்நோய் வருதற்குரிய காரணத்தை அறிந்து, பின்னர் அதைப் போக்குதற்குரிய வழியை அறிந்து, அதனை முன்னோர் வகுத்த முறையினின்றும் பிழையாமல் செய்யவேண்டும்.

இலக்கணம்

நாடி—வினை யெச்சம், தணிக்கும்—பெயரெச்சம்
செயல்—வியங்கோள் வினைமுற்று

பெருமை

(செயற்கரிய செய்யும் பெரியாரின் தன்மை)

§ 22. **பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்; சிறப்பொவ்வா**
செய்தொழில் வேற்றுமை யான்.

பதவுரை

எல்லா உயிர்க்கும்-எல்லா மக்கள் உயிர்க்கும்	**வேற்றுமையான்** - உயர்வு தாழ்வு வேறுபாடுகளால்
பிறப்பு ஒக்கும் - பிறப்பு இயல்பு ஒரே தன்மையானது	**சிறப்பு** - சிறப்பு இயல்புகள்
செய்தொழில் - (ஆனால்) செய்கின்ற தொழில்களின்	**ஒவ்வா** - ஒரே தன்மையாக ஒத்து இருக்கமாட்டா

தெளிவுரை : உலகில் பிறந்த மக்கள் எல்லோர்க்கும் பிறப்பு இயல்பு ஒரே தன்மையானது. ஆயினும் ஒவ்வொருவருக்கும் அவர்கள் செய்யும் தொழில்களின் உயர்வு, தாழ்வு வேறுபாடுகளால் சிறப்பியல்புகள் ஒரே தன்மையனவாக இரா. உயர்வான செயல்களால் உயர்ந்தோர் என்றும், தாழ்வான செயல்களால் தாழ்ந்தோர் என்றும் கருதப்படுவர்.

இலக்கணம்

பிறப்பொக்கும்—பிறப்பு + ஒக்கும்
செய்தொழில்—வினைத்தொகை
சிறப்பு + ஒவ்வா = சிறப்பொவ்வா, ஒக்கும்—வினைமுற்று
ஒவ்வா—பலவின்பால் வினைமுற்று
ஒற்றுமை × வேற்றுமை

23. **பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்**
அருமை யுடைய செயல்.

பதவுரை

பெருமை உடையவர் - பெருமைப் பண்பு உடைய சான்றோர்	**ஆற்றின்** - செய்தற்கு உரிய வழியில் செய்து
அருமை உடைய (பிறரால் செய்வதற்கு) அருமையாயுள்ள	**ஆற்றுவார்** - முடிக்க வல்லவர் ஆவார்
செயல் - செயல்களை	

தெளிவுரை : மேன்மைக் குணம் வாய்ந்த சான்றோர் பிறர் செய்வதற்கரிய செயலைச் செய்வதற்கு உரிய வழியில் விடாது செய்து முடிப்பர்.

இலக்கணம்

ஆற்றுவார்—பலர்பால் வினைமுற்று
ஆற்றின்—வினையெச்சம்
அருமை + உடைய = அருமையுடைய

24. **அற்றம் மறைக்கும் பெருமை;, சிறுமைதான்**
குற்றமே கூறி விடும்.

பதவுரை

பெருமை - மேன்மைக் குணம் உடையவர்	**சிறுமைதான்** - சிறுமையோ (கீழ் மக்களோ)
அற்றம் - பிறர் செய்த குற்றங் களை	**குற்றம்** - பிறருடைய குற்றங் களையே
மறைக்கும் - பிறர் அறியாமல் மறைப்பர்	**கூறிவிடும்** - எடுத்துக் கூறுவர்

தெளிவுரை : பெருமையுடைய சான்ருேர் பிறருடைய நற்குணங்களைக் கூறிக் குற்றங்களை மறைப்பர். ஆனல் கீழோர் பிறருடைய குற்றங்களை மட்டும் கூறி அவர்களுடைய நற்குணங்களை மறைப்பர்.

இலக்கணம்

அற்றம் — பெயர்ச்சொல், பெருமை×சிறுமை (பண்பாகு பெயர்கள்), மறைக்கும்—வினைமுற்று

சான்ருண்மை

(பல நற்குணங்கள் நிறைந்திருக்கும் தன்மை)

§ **25.** **கொல்லா நலத்தது நோன்மை; பிறர்தீமை**
சொல்லா நலத்தது சால்பு.

பதவுரை

நோன்மை - தவம் என்பது	**பிறர்தீமை** - பிறர் செய்த குற்றத்தை
கொல்லா - ஒருயிரையும் கொல்லாத	**சொல்லா** - எடுத்துக் கூருத
நலத்தது - அறத்தினை அடிப் படையாகக்கொண்டது (அதுபோல)	**நலத்தது** - நல்ல குணத்தை அடிப்படையாகக் கொண்டது
சால்பு - சான்ருண்மை என்னும் குணம்	

தெளிவுரை : எவ்வுயிரையும் கொல்லாத அறத்தை அடிப் படையாகக் கொண்டது தவம். பிறர் குற்றத்தை வெளிப் படையாகப் பலர் அறிய எடுத்துக் கூருத உயர் குணத்தைக் கொண்டது சால்பு.

இலக்கணம்

நலம்—பண்பாகுபெயர், அறத்தைக் குறித்து நின்றது
கொல்லா—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
நலத்தது—குறிப்பு வினைமுற்று

**26. சால்பிற்குக் கட்டளை யாதெனின், தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்.**

பதவுரை

சால்பிற்கு - சான்றாண்மை என்னும் (பொன்னுக்கு)
கட்டளை - உரை கல்லாகிய கருவி (செயல்)
யாதுஎனின் - எதுவென்றால்
தோல்வி - (தம்மினும் உயர்ந்த வரிடத்து அடையும்) தோல்வியை
துலைஅல்லார் - தமக்கு ஒப்புமை இல்லாத தாழ்ந்தோரிடத்தும்
கொளல் - ஏற்றுக்கொள்ளும் குணமாகும்

தெளிவுரை : சான்றாண்மைக்கு உரைகல் யாதென்றால், தம்மின் உயர்ந்தோரிடத்துப் பெற்ற தோல்வியைத் தம்மினும் இழிந்தோர் மாட்டும் ஏற்றுக் கொள்ளுதலே யாகும்.

இலக்கணம்

கொளல் — வியங்கோள்வினைமுற்று
யாதெனின் = யாது + எனின். தோல்வி—தொழிற்பெயர்

**27. இன்மை ஒருவற் கிளிவன்று, சால்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.**

பதவுரை

சால்புஎன்னும் - சான்றாண்மை என்னும்
திண்மை - வலிமை பொருந்திய குணம்
உண்டாகப்பெறின் - உண்டாகப் பெற்றால்
ஒருவற்கு - ஒருவனுக்கு
இன்மை - (பொருள் இல்லாத) வறுமை
இளிவுஅன்று - இழிவானது ஆகாது

தெளிவுரை : சால்பு என்னும் வலிமை பொருந்திய குணம் ஒருவனிடத்தில் உண்டாகப் பெற்றால் அவனுக்குப் பொருள் இல்லாத வறுமை இழிவானது அன்று.

இலக்கணம்

திண்மை × மென்மை, இளிவு + அன்று = இளிவன்று
உண்டாகப்பெறின்— வினையெச்சம்
சால்பு + என்னும் = சால்பென்னும்

இரவச்சம்

(பிறரிடம் சென்று இரப்பதற்கு அஞ்சுதல்)

**28. கரவா துவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும்.**

பதவுரை

கரவாது - தம்மிடம் உள்ள பொருளை மறைக்காமல்	இரவாமை - :(தனக்குத் தேவை யான பொருளை) யாசியாமல் இருப்பதே
உவந்து ஈயும் - மனம் விரும்பி அளிக்கும்	
கண் அன்னார் கண்ணும் - கண் போன்ற சிறந்தவர் களிடத்தும்	**கோடிஉறும்** - கோடி மடங்கு நன்மை பயக்கும்

தெளிவுரை : தம்மிடம் உள்ள பொருளை மறைக்காமல் கொடுக்கவல்ல கண்போன்ற சிறந்தவர்களிடத்தும்; ஒருவன் இரவாமல் இருப்பது கோடி மடங்கு நல்லதாகும்.

இலக்கணம்

கரவாமை, இரவாமை—எதிர்மறைத் தொழிற் பெயர்கள்
உவந்து + ஈயும = உவந்தீயும்
கண் + அன்னார் = கண்ணன்னார்
உறும் — வினைமுற்று

**29. 'இன்மை இடும்பை இரந்துதீர் வாம்,' என்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.**

பதவுரை

இன்மை - வறுமையால்வரும்	**வன்மையின்** - வலிமை உடையதுபோல்
இடும்பை - துன்பத்தை	
இரந்து - பிறரிடம்சென்று யாசித்து	**வன்பாட்டது** - வன்மை உடையது
தீர்வாம் - போக்கிக்கொள்வோம்	**இல்** - வேறு ஒன்றும் இல்லை
என்னும் - என்று கருதும்	

தெளிவுரை : வறுமைத் துன்பத்தை வருந்தி உழைத்துப் போக்க நினைக்காமல், பிச்சை எடுப்பதன் மூலம் போக்கு வோம் என்று கருதி, முயற்சியைக் கைவிடும் வலிமை யுடைய எண்ணத்தைப் போல முரட்டுத் தன்மையானது வேறொன்றும் இல்லை.

இலக்கணம்

தீர்வாம் — தன்மைப் பன்மை வினைமுற்று
இரந்து — வினையெச்சம், வன்மை × மென்மை
வன்+பாட்டது + இல் = வன்பாட்டதில்

**§ 30. தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்த
துண்ணலின் ஊங்கினிய தில்.**

பதவுரை

தெள்நீர் - தெளிந்த நீர்போல
அடுபுற்கை - சமைத்த கூழே
ஆயினும் - ஆனாலும்
தாள் தந்தது - தன் முயற்சியின் பயனாகக் கிடைத்ததை
உண்ணலின் - உண்பதைவிட
ஊங்கு - மேலான
இனியதுஇல் - இனிமை தருவது வேறொன்றும் இல்லை

தெளிவுரை - தன் முயற்சியால் கிடைத்தது தெளிந்த நீரைப் போன்ற சமைத்த கூழே ஆனாலும், அதனை உண்பதைவிட மேலான இன்பம் பயக்கக்கூடியது வேறொன்றும் இல்லை.

இலக்கணம்

உண்ணல்—தொழிற்பெயர், அடுபுற்கை—வினைத்தொகை
தெண்ணீர்=தெள் + நீர், தெண்மை+நீர்

2. திரிகடுகம்

சுக்கு, மிளகு, திப்பிலி என்னும் மூன்று காரப்பொருள்களால் செய்யப்பட்டுள்ள மருந்துக்குத் திரிகடுகம் என்பது பெயர். அம்மருந்து உடற்பிணியைப் போக்குவதுபோல, இந்நூல் ஒவ்வொரு பாடலிலும் மும்மூன்று நீதிகள் அமைந்து, உள்ளத்தின் பிணியைப் போக்கும் தன்மை வாய்ந்தமையால், 'திரிகடுகம்' என்னும் பெயர் பெற்றது. இந்நூல் 'பதினெண் கீழ்க்கணக்கு' என்னும் தொகைநூலைச் சார்ந்தது. இந்நூல் காப்புச் செய்யுள் உட்பட 101 பாடல்களைக் கொண்டது.

இந்நூலாசிரியர் நல்லாதனார். வைணவ சமயத்தைச் சார்ந்தவர். 1800 ஆண்டுகட்கு முற்பட்டவர்.

1. செல்வங்கள் மூன்று

§ **பிறர்தன்னைப் பேணுங்கால் நாணலும், பேணார்**
திறன்வேறு கூறிற் பொறையும்,—அறவினையைக்
காராண்மை போல ஒழுகலும் இம்மூன்றும்
ஊராண்மை என்னும் செருக்கு.

பதவுரை

பிறர் - மற்றவர்
தன்னைப்பேணுங்கால் - தன்னை விரும்பிப் புகழுங் காலத்தில்
நாணலும் - வெட்கப்படுதலும்
பேணார் - விரும்பாத பகைவரால்
திறன் - தன்தகுதியை
வேறுகூறின் - மாறுபடக் கூறுமிடத்து
பொறையும் - அதனைப் பொறுக்கும் பொறுமையும்

அறவினையை - பிறர்க்கு உதவி செய்தலாகிய நல்ல செயல்களை
கார் - மேகம்
ஆண்மைபோல - (கைம்மாறு கருதாது) உதவுவதுபோல
ஒழுகலும் - நடத்தலும்
இம்மூன்றும் - ஆகிய மூன்று செயல்களும்
ஊர் ஆண்மை - ஊரை ஆளும் தன்மை வாய்ந்த
செருக்கு - பெருமிதம் வாய்ந்த செல்வங்களாகும்

தெளிவுரை : பிறர் தன்னை உயர்த்திப் புகழுங் காலத்தில் தனக்கிது தகாதென வெட்கமடைதலும், விரும்பாதவர் தன்னை வெறுத்து இகழும் இடத்துக் கோபங்கொள்ளாது பொறுத்துக் கொள்ளுதலும், மேகத்தைப்போன்று கைம்மாறு கருதாமல் உதவிசெய்தலும் ஆகிய மூன்று குணங்களும் சிறந்த செயல் களாகும்.

இலக்கணம்

ஆண்மை, பொறை — தொழிற்பெயர்கள்
திறன்—திறம்என்பதன் கடைப்போலி,செருக்கு—ஆகுபெயர்
கார் + ஆண்மை = காராண்மை
ஊர் + ஆண்மை = ஊராண்மை

2. நண்பராகத் தக்கவர்

தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்;
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணுதான்;
கோளாளன் என்பான் மறவாதான்; இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது.

பதவுரை

தாள்ஆளன் - முயற்சி உடையவன்
என்பான் - என்று சிறப்பித்துக் கூறப்படுபவன்
கடன்படா - கடன்படாமல்
வாழ்வான் - வாழ்பவன் ஆவான்
வேளாளன் என்பான் - பிறர்க்கு உதவி செய்பவன் எனச் சொல்லப்படுபவன்
விருந்து இருக்க - வந்த விருந்தினர் பசியோடு காத்திருக்க
உண்ணுதான்-(தனித்துத் தான் மட்டும்) உண்ணுதவன்
கோள்ஆளன் - ஆசிரியர் கூறும் நூற்பொருளை உள்ளத்தில் கொள்ளும் மாணவன்
என்பான் - என்று சொல்லப் படுபவன்
மறவாதான் - கேட்டவற்றை மறவாதவன்
இம்மூவர் - ஆகிய இம்மூவரும்
கேள்ஆக - தனக்கு நண்பராய் இருக்க
வாழ்தல் இனிது - வாழ்வது நன்மை பயப்பதாகும்

தெளிவுரை: கடன்படாது வாழ்பவன், வீட்டிற்குவந்த விருந்தினர் பசித்திருக்கத் தான்மட்டும் உண்ணுதவன், ஆசிரியர்

கற்பித்தவற்றை மறவாதிருப்பவன் ஆகிய மூன்று குணங்களையும் பெற்றவர்களை நண்பராகக்கொண்டு வாழ்வது நன்மை பயக்கும்.

இலக்கணம்

கோள் + ஆளன் = கோளாளன்,
தாள் + ஆளன் = தாளாளன்
கடன்படா — ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
என்பான் — வினையாலணையும் பெயர்
விருந்து — பண்பாகு பெயர்

3. செல்வம் அழிக்கும் கருவிகள்

§ **தன்னை வியந்து தருக்கலும், தாழ்வின்றிக்**
கொன்னே வெகுளி பெருக்கலும்,—முன்னிய
பல்பொருள் வெஃகும் சிறுமையும் இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை.

பதவுரை

தன்னைவியந்து - ஒருவன் தன்னை நன்கு மதித்து
தருக்கலும் - செருக்கடைதலும்
தாழ்வுஇன்றி - அடக்கம் இல்லாமல்
கொன்னே - வீணாக
வெகுளிபெருக்கலும் - கோபத்தை மிகுதியாகக் கொள்ளுதலும்
முன்னிய - கருதிய
பல்பொருள் - பலவகைப் பொருள்களையும்
வெஃகும் - விரும்பும்
சிறுமையும் - சிறுமைத் தன்மையும்
இம் மூன்றும் - ஆகிய இம்மூன்று குணங்களும்
செல்வம் - செல்வத்தை
உடைக்கும் படை - அழிக்கும் கருவிகளாகும்

தெளிவுரை : தன்னைத்தானே புகழ்ந்து செருக்கடைதலும், வீணாகக் கோபங்கொள்ளுதலும், விரும்பிய பொருள்கள் எல்லாவற்றையும்பெற எண்ணுதலும் ஆகிய மூன்று குணங்களும் ஒருவனுடைய செல்வத்தைத் தேய்க்கும் கருவிகளாகும்.

இலக்கணம்

தாழ்வு + இன்றி = தாழ்வின்றி
தருக்கல், பெருக்கல்—தொழிற் பெயர்கள்
உடைக்கும், வெஃகும்—பெயரெச்சங்கள்

4. உயர்ந்த நெறி சேர்ப்பவை

§ **முந்தை எழுத்தின் வரவுணர்ந்து, பிற்பாடு**
தந்தையும் தாயும் வழிபட்டு,—வந்த
ஒழுக்கம் பெருநெறி சேர்தலிம் மூன்றும்
விழுப்ப நெறிதூரா ஆறு.

பதவுரை

முந்தை - முன்னதாகிய இளமைப் பருவத்தில்
எழுத்தின் வரவு - கல்வி அறிவு பெறுதலும்
பிற்பாடு - அதன்பின்பு
உணர்ந்து-அக்கல்விப் பொருளை உணர்ந்து
தந்தையும் தாயும் - தந்தையையும் தாயையும்
வழிபட்டுவந்த - வணங்கி வந்த
ஒழுக்கமும் - ஒழுக்கமும்
பெருநெறி - பெரியோரது அறவழியில்
சேர்தல் - சேர்ந்து வாழ்தலும்
இம்மூன்றும் - ஆகிய மூன்று குணங்களும்
விழுப்ப நெறி - உயர்வாகிய நெறியை
தூரா ஆறு - தூர்க்காத வழிகளாகும்

தெளிவுரை : இளமையில் கல்விகற்று, பெற்றோர்களை வழிபட்டுப் போற்றி, சான்றோர் செல்லும் நெறியில் செல்லுதல் ஆகிய மூன்றும் நன்னெறியைத் தூர்க்காத வழிகளாகும்.

இலக்கணம்

தூரா—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
சேர்தல்—தொழிற்பெயர், விழுப்ப நெறி—பண்புத்தொகை

5. பிறந்தும் பிறவாதவர்

அருளினை நெஞ்சத் தடைகொடா தானும்,
பொருளினைத் துவ்வான் புதைத்துவைப் பானும்,
இறந்தின்னா சொல்லகிற் பானும்இம் மூவர்
பிறந்தும், பிறந்திலா தார்.

பதவுரை

அருளினை-எல்லா உயிர்களிடத்தும் செல்லும் அருளை
அடை கொடாதானும்-மனத்தில் நிறைத்து வைக்காதவனும்
பொருளினை - தான் வருந்தித் தேடிய செல்வப் பொருளை
துவ்வான் - அனுபவிக்காமல்
புதைத்து - வீணாகப் புதைத்து
வைப்பானும் - வைப்பவனும்
இறந்து - தன்நிலை கடந்து
இன்னா - பிறர்க்குத் துன்பம் தரும் சொற்களை
சொல்லகிற்பானும் - சொல்ல வல்லவனும்
இம்மூவர் - ஆகிய இம்மூவரும்
பிறந்தும் - உலகில் மகனாகப் பிறந்தும்
பிறந்து இலாதார் - பிறவாதவர் ஆவார்கள்

தெளிவுரை: அருளைத் தன்னெஞ்சத்துக் கொள்ளாதவனும், வருந்தித் தேடிய பொருளை அனுபவியாமல் புதைத்து வைப்பவனும், பிறர்க்குத் துன்பந் தரும் கடுஞ்சொற்களைச் சொல்பவனும், உலகில் மனிதராகப் பிறந்தும் பிறவாதவர் ஆவர்.

இலக்கணம்

நெஞ்சத்து + அடைகொடாதானும் = நெஞ்சத்தடைகொடாதானும்; இறந்து + இன்னு = இறந்தின்னு, துவ்வான் — வினையெச்சம்; சொல்லகிற்பான்—வினையாலணையும் பெயர்.

3. அறநெறிச்சாரம்

அறநெறிச்சாரம் என்னும் இந்நூல், மக்கள் மேற்கொள்ளத்தக்க மேலான அறமாகிய நல்ல நெறிகளைக் கூறும் நீதி நூலாகும். மேலான உண்மைகளை உரைத்து நன்னெறிப்படுத்துவது இந்நூலின் நோக்கமாகும்.

ஆசிரியர் : அறநெறிச்சாரம் அருளிய அருந் தமிழ்ப் புலவர் முனைப்பாடியார் ஆவார். இவர் சமண சமயத்தைச் சார்ந்தவர். ஐந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டவர். இந்நூல் 226 வெண்பாக்களைக் கொண்டது.

1. இளமையில் அறம் செய்க

§ இன்சொல் விளைநிலமா, ஈதலே வித்தாக,
வன்சொற் களைகட்டு, வாய்மை எருவட்டி,
அன்புநீர் பாய்ச்சி, அறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

பதவுரை

இன்சொல் - இனிமையான சொல்லே
விளைநிலமா - விளைகின்ற நிலமாகவும்
ஈதலே-இரப்பவர்க்குக் கொடுத்தலே
வித்தாக - விதையாகவும்
வன்சொல் - கடுஞ்சொல்லாகிய
களைகட்டு - களைகளை நீக்கி
வாய்மை - உண்மையாகிய
எருஅட்டி - எருவைப் பெய்து
அன்பு நீர் - அன்பாகிய நீரை
பாய்ச்சி - பாயச்செய்து
அறக்கதிர் - அறமாகிய கதிரை
ஈன்றது - தரக்கூடியது
ஓர்பைங்கூழ் - ஒப்பற்ற (நல்வினை என்னும்) பசுமைப் பயிரை
சிறுகாலை செய் - இளமைப் பருவத்தில் செய்வாயாக

தெளிவுரை : இனிய சொல்லே விளைகின்ற நிலமாகவும், ஈகைக் குணமே அந்நிலத்தில் இடும் விதையாகவும் கொண்டு, கடுஞ்சொல்லாகிய களையை நீக்கி, உண்மையாகிய எருவைப் பெய்து, அன்பாகிய நீரைப் பாய்ச்சி, அறமாகிய கதிர்களைத் தோன்றச் செய்வதாகிய ஒப்பற்ற (நல்வினை என்னும்) பசுமைப் பயிரை உன் இளமைப் பருவத்திலேயே செய்வாயாக.

இலக்கணம்

பசுமை + சூழ் = பைங்சூழ்; ஈதல்—தொழிற் பெயர்
பாய்ச்சி—வினையெச்சம்; இனிமை + சொல் = இன்சொல்
இன்சொல்—பண்புப் பெயர்; இன்சொல் × வன்சொல்
வாய்மை × பொய்மை; எருவு + அட்டி = எருவட்டி

2. அறிவுடையார் ஆராயும் முறை

§ காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண்
ஆய்தல் அறிவுடையார் கண்ணதே;—காய்வதன்கண்
உற்ற குணம்தோன்ரு தாகும்; உவப்பதன்கண்
குற்றமும் தோன்ருக் கெடும்.

பதவுரை

காய்வதன்கண் - வெறுக்கப்படும் பொருளிடத்து

உற்றகுணம் - பொருந்திய குணம்

தோன்ருது ஆகும்-(ஆராய்கின்றவனுக்கு) புலப்படாது போய் விடும்

உவப்பதன்கண் - விரும்பும்

குற்றமும் - அமைந்த குற்றமும்

தோன்ருக்கெடும் - வெளிப்படாமல் மறையும் (ஆதலால்)

காய்தல் - வெறுத்தலையும்

உவத்தல் - விரும்புதலையும்

அகற்றி - நீக்கி

ஒருபொருள்கண் - (ஆராயும்) ஒரு பொருளிடத்துள்ள

ஆய்தல் - (குணங்களையும் குற்றங்களையும்) ஆராய்வது

அறிவுடையார் கண்ணதே - அறிவுடையாரிடத்துள்ளதாகும்

தெளிவுரை : ஒரு பொருளிடத்து விருப்பங்கொண்டு ஆராய்ந்தால் அதனிடத்துள்ள குற்றம் தோன்ருது. அவ்வாறே அதன்மேல் வெறுப்புக்கொண்டு பார்ப்பினும் அதன் குணம் தோன்ருது. ஆதலால் ஒரு பொருளின் உண்மைத் தன்மையை அறிய வேண்டுமாளுல் விருப்பு வெறுப்பின்றி நடுநிலையில் நின்று ஆராய்தல் வேண்டும்.

இலக்கணம்

காய்தல், உவத்தல், ஆய்தல்—தொழிற் பெயர்கள்
அகற்றி, தோன்ரு—இறந்தகால வினையெச்சங்கள்
தோன்ருது + ஆகும் = தோன்ருதாகும்.

3. நஞ்சு அமுதம் ஆகுமா ?

உடங்கமிழ்தம் கொண்டான் ஒருவன் பலரும்
விடங்கண்டு 'நன்றிதுவே' என்ருல்—மடங்கொண்டு
பல்லவர் கண்டது நன்றென் றமிழ்தொழிய
நல்லவனும் உண்ணுமோ நஞ்சு ?

பதவுரை

உடங்கு - உயிரும் உடம்பும் ஒருசேரக் கூடியிருக்கக் காரணமாகிய
அமிழ்தம் - தேவாமிர்தத்தினை
கொண்டான் ஒருவன் - பெற்று இருக்கும் ஒருவன்
விடம் கண்டு - நஞ்சினைப் பார்த்து
பலரும் இதுவே - பலரும் இந் நஞ்சே
நன்று என்றால் - நல்லது என்றால்
பலர் கண்டது - பலர் கண்டதே
நன்று என்று - உண்மையானது என்று நம்பி
நல்லவனும் - அமிழ்தத்தைப் பெற்ற அந்த நல்லவனும்
மடம் கொண்டு - அறியாமை உடையவனாய்
அமிழ்து ஒழிய - அமுதத்தை நீக்கி
நஞ்சு உண்ணுமோ - விடத்தை உண்பானோ? (உண்ணமாட்டான்)

தெளிவுரை : நஞ்சினைப் பார்த்து 'இதுவே அமிழ்தம்' என்று பலர் கூறினாலும், உயிரும் உடலும் நிலைத்திருக்கக் காரணமாகிய அமிழ்தத்தைப் பெற்ற ஒருவன், பலர் கூறுவது உண்மையாயிருக்கும் என்று நம்பி அறியாமையால் அமிழ்தத்தை விட்டு நஞ்சினை உண்ணமாட்டான். (அதுபோல) நல்ல நூல்களைக்கற்று நன்னெறியில் ஒழுகிவரும் ஒருவன் தீ நெறியை நன்னெறியெனப் பலர் கூறினாலும அதனை மேற்கொள்ள மாட்டான் என்பது கருத்து.

இலக்கணம்

உடங்கு + அமிழ்தம்—உடங்கமிழ்தம்
நன்று + என்று = நன்றென்று
மடம் × கொண்டு = மடங்கொண்டு
உண்ணுமோ—செய்யும் என்னும் முற்று, வினைப்பொருளில் வந்துள்ளது.
பலர் × சிலர்; நல்லவன் × கெட்டவன்

4. மக்கட் பிறப்பே சிறப்புடையது

§ **எப்பிறப் பாயினும் ஏமாப் பொருவற்கு**
மக்கட் பிறப்பிற் பிறிதில்லை;—அப்பிறப்பில்
கற்றலும் கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின்.

பதவுரை

எப்பிறப்பு ஆயினும் - வேறு எந்தப் பிறப்பானாலும்
மக்கள் பிறப்பின் - மக்கள் பிறப்பைப்போல
ஒருவற்கு - ஒருவனுக்கு
ஏமாப்பு - இன்பம் செய்வது
பிறிது இல்லை - வேறு ஒன்றும் இல்லை

அப் பிறப்பில் - அம் மக்கட் பிறப்பில்
கற்றலும் - கற்றற்குரியவற்றைக் கற்றலும்
கற்றவை கேட்டலும் - கற்றவற்றைக் கேட்டுத் தெளிவு பெறுதலும்
கேட்டதன் கண் - கேட்ட நெறியின் வழி
நிற்றலும் - நின்று நடத்தலும்
கூடப்பெறின் - கூடப்பெற்றால் (கைவரப் பெற்றால்)

தெளிவுரை : கற்றற்குரியவற்றைக் கற்றலும், கற்றவற்றைப் பெரியோரிடத்துக் கேட்டுத் தெளிதலும், பின் கேட்ட நெறியின் கண்ணே நிலையாக நிற்றலும், ஒருவனுக்குக் கைவரப்பெற்றால், மனிதப் பிறவிபோல இன்பந் தரவல்லது வேறு ஒன்றும் இல்லை.

இலக்கணம்

கேட்டு + அதன் கண் = கேட்ட தன் கண்
பிறிது + இல்லை = பிறிதில்லை; பெறின்—வினையெச்சம்
ஏமாப்பு, கற்றல், கேட்டல்—தொழில் பெயர்கள்
கற்றவை—வினையாலணையும் பெயர்

5. தற்புகழ்ச்சி வேண்டாம்

'பலகற்றோம் யாம்!' என்று தற்புகழ வேண்டா;
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்;
சிலகற்றார் கண்ணும் உளதாம் பலகற்றார்க்
கச்சாணி யன்னதோர் சொல்.

பதவுரை

அலர்கதிர் - பரந்த கதிர்களை உடைய
ஞாயிற்றை - சூரியனை
கைக் குடையும் - கையில் உள்ள சிறிய குடையும்
காக்கும் - மறைத்து வெம்மையிலிருந்து காப்பாற்றும் (ஆதலால்)
யாம் பல கற்றோம் - நாம் பல நூல்களைக் கற்றுள்ளோம்
என்று தற்புகழ வேண்டா - என்று ஒருவன் தன்னைத் தானே புகழ்ந்து கொள்ள வேண்டாம்
பல கற்றார்க்கு - பல நூல்களைக் குற்றமறக் கற்றுத்தெளிந்தவர்களுக்கும்
அச்சு ஆணி - வண்டிச் சக்கரத்திற்கு இடும் கடையாணி
அன்னது ஓர் சொல் - போன்றதொரு இன்றியமையாத உறுதிச் சொல்
சில - சில நூல்களையே
கற்றார் கண்ணும் - கற்றவர்களிடத்தும்
உளவாம் - அமைந்திருக்கக் கூடும்

தெளிவுரை : பரந்த கதிர்களையுடைய சூரியனைக் கையிலுள்ள சிறிய குடையும் மறைக்கின்றது. ஆதலால், நாம் பல நூல்களையும் கற்றுள்ளோம் என்று தற்பெருமை கொள்ளக் கூடாது. ஏனெனில், சில நூல்களையே கற்றவர்களிடத்தும் தேருக்கு அச்சாணி போன்ற இன்றியமையாத உறுதி பயக்கும் சில சொற்கள் இருத்தலும் கூடும். அச்சிறு சொற்கள் பல நூல்களைக் கசடறக் கற்றவர்களுக்கும் தெரியாமல் இருக்கலாம்.

இலக்கணம்

அச்சு + ஆணி = அச்சாணி; தன் + புகழ் = தற்புகழ்
உளவாம்—வினைமுற்று
கற்றோம்—தன்மைப் பன்மை வினைமுற்று

III. கதைப் பகுதி

1. அரிச்சந்திர புராணம்

புராணம்—பழமையான வரலாறு. இந்நூல் அரிச்சந்திர மன்னனது வரலாற்றைக் கூறுவதால் அரிச்சந்திர புராணம் எனப்பட்டது. அரிச்சந்திரன் கோசல நாட்டரசன். திரிசங்கு அரசனின் மகன்; சூரிய குலத்தவன்; வாய்மை தவறாதவன். இந்நூல் பத்துக் காண்டங்களைக் கொண்டது. 1225 பாடல்கள் உள்ளன. நமக்குப் பாடமாக வந்துள்ள பகுதி மயான காண்டத்தில் உள்ளது.

ஆசிரியர் : நல்லூர் வீரை ஆசு கவிராயர். இவர் விரைவில் பாடும் ஆற்றல் பெற்றிருந்ததால் 'ஆசுகவி' என்று சிறப்பித்து அழைக்கப்பட்டார். இவர் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நல்லூரில் பிறந்தவர். இவரது காலம் கி. பி. 16ஆம் நூற்றாண்டாகும். இவர் பொற்கொல்லர் மரபைச் சேர்ந்தவர். இவரது சமயம் சைவம். இந்நூலைத் திருப்புல்லாணி திருமால் கோயிலில் அரங்கேற்றினார்.

கதைச் சுருக்கம்

அரிச்சந்திரன் கோசிக முனிவருக்கு வாக்குத் தவறாமல் பொன் கொடுக்க, மறையோன் ஒருவனிடம் தன் மனைவி சந்திரமதியையும், மகன் தேவதாசனையும் விற்றுவிடுகிறான். தேவதாசன் ஒருநாள் தன் நண்பர்களுடன் விறகு கொண்டு வரக் காட்டிற்குச் செல்கிறான். அங்கு அரவம் தீண்டி இறந்து விடுகிறான். மாலை மயங்கியும் தன் மகன் வரவில்லையே என்று வருந்திய சந்திரமதி, உடன் சென்ற சிறுவர்களைக் கேட்டுத் தன் மகன் இறந்து விட்ட செய்தியை அறிகிறாள். புழுவாய்த்

துடிக்கிருள். வேலேகளையெல்லாம் முடித்துவிட்டு, மறையவனிடம் அனுமதி பெற்று மகனைக் காண விரைந்து செல்கிருள். இறந்த மகனைக் கண்டு அலறித் துடிக்கும் சந்திரமதி பல சொல்லிப் புலம்பி அழுகிருள்.

1. மகன் இறந்தமையைச் சந்திரமதி அறிதல்

பதவுரை

வணங்கிய கரத்தாள் - தளர்ந்த கைகளை உடையவள்
சால வாடிய - மிகவும் வாடிய
மனத்தாள் - மனத்தை உடைய வளாகிய சந்திரமதி
மக்காள் - பிள்ளைகளே!
உம் உடனே இணங்கி வந்த - உங்களுடன் சேர்ந்து வந்த
என் மகன் எங்கே? - என் மகன் எங்கே? என்ருள் (அதற்கு அச் சிறுவர்)
மணம் கமழ் குழலாய் - வாசனை வீசும் கூந்தலை உடையவளே
உன்தன் - உன்னுடைய
மைந்தனை - மகனை
அரவு தீண்ட - பாம்பு கடிக்க
உணங்கியே - மிகவும் வருந்தியே
இறந்தான் என்ருர் - இறந்தான் என்று கூறினர்
உயிர்த்திலள் - (அதனைக் கேட்டு) மூச்சும் விட முடியாதவளாய்
மறுகிவீழ்ந்தாள் - மயக்கமுற்றுக் கீழே விழுந்தாள்

தெளிவுரை : தளர்ந்த கரமும், வாடிய மனத்தையும் உடையவளாகிய சந்திரமதி, சிறுவர்களைப் பார்த்து "உங்களுடன் சேர்ந்து வந்த என் மகன் எங்கே?" என்று கேட்க, சிறுவர்கள் "உன்னுடைய மகனைப் பாம்பு தீண்டியதால் வருந்தி இறந்துவிட்டான்" என்று கூறினுர்கள். அதைக் கேட்ட சந்திரமதி மூச்சும் விட இயலாதவளாய் மயக்கமுற்றுக் கீழே விழுந்தாள்.

இலக்கணம்

மணம் + கமழ் = மணங்கமழ்; உன் + தன் = உன்றன்
சால வாடிய—உரிச் சொல்தொடர்,
மறுகி—வினையெச்சம், வணங்கிய—பெயரெச்சம்

2. இறந்த இடத்தை அறிதல்

பதவுரை

மடத்தகைவல்லி - இளமையுடன் கூடிய வல்லிக்கொடி போன்ற சந்திரமதி
பின்னும் மைந்தரை நோக்கி - மேலும் அச் சிறுவரைப் பார்த்து

எந்த இடத்தில் இறந்தான் என்ன - எந்த இடத்தில் இறந்தான் என்று கேட்க
யான் வரும் வழியில் - நாங்கள் வரும் வழியில்
நிற்கும் வடத்தினுக்கு - நிற்கும் ஆலமரத்திற்குப் பக்கத்தில்
சற்றே வடக்கினில் - சிறிது வடக்கில்
குசை படர்ந்த - தருப்பைப் புல் படர்ந்து நிறைந்த
தடத்தினில் தெற்கே - மேட்டு நிலத்திற்குத் தெற்கே
என்று சாற்றியே - என்று கூறி விட்டு
அவர்கள் போனூர் - அச் சிறுவர்கள் சென்றனர்

தெளிவுரை : இளமை பொருந்திய வல்லிக்கொடி போன்றவளாகிய சந்திரமதி, பின்னும் அச் சிறுவர்களை நோக்கி, "எந்த இடத்தில் இறந்தான்?" என்று கேட்க, "நாங்கள் வரும் வழியில் நிற்கின்ற ஆலமரத்திற்குப் பக்கத்தில் சற்று வடக்கே தருப்பைப் புல் படர்ந்த இடத்திற்குத் தெற்கில் இறந்து கிடக்கிருன்" என்று கூறிச் சென்றுர்கள்.

இலக்கணம்

வல்லி—உவமைஆகுபெயர்; மடம்+தகை=மடத்தகை
சாற்றி—வினையெச்சம்; படர்ந்த—பெயரெச்சம்

3. வேலைகளை முடித்தபின் செல்ல நினைத்தல்

பதவுரை

அறுதி ஈது என்று - முடிவு இது என்று
சால அறிவு அழிந்து - மிகஅறிவு கெட்டு
உருகி வீழ்ந்து - மனம்உருகி விழுந்து
மறுகினுள் - மயங்கிக் கிடந்தாள்
உடையோர்க்கு அஞ்சி - தன்னை விலை கொடுத்து வாங்கிய மறையவனுக்கும் அவனைச் சார்ந்தவர்களுக்கும் பயந்து
வாய்திறந்து அரற்றுள் - வாயைத் திறந்து அழமுடியாதவளாய்
மாழ்கி - மனம் அழிந்து
சிறு தொழில் முழுதும் - செய்ய வேண்டிய வேலைகள் அனைத்தையும்
செய்து தீர்ந்த பின் - செய்து முடித்தபின்
தேடிச் சேறல் - (மகனை) தேடிச் சென்றடைதல்
உறுதி என்று - முடிவானது என்று
உளத்தின் உள்ளே - மனதிற்குள்ளே
ஒடுக்கிவந்து - கவலையை அடக்கிக் கொண்டுவந்து
அகத்தில் புக்காள் - வீட்டுக்குள் புகுந்தாள்

தெளிவுரை : முடிவு இதுவென்று அறிவு கெட்டு, மனம் உருகி வீழ்ந்து மயங்கிக் கிடந்தாள். தன்னை விலைகொடுத்து வாங்கிய மறையவனுக்கும், அவன் மனைவிக்கும் அஞ்சி வாய்திறந்து அழமாட்டாதவளாய் மனம் வருந்தினுள். செய்ய

வேண்டிய வேலைகள் அனைத்தையும் செய்துமுடித்து, அதன் பின் மகனைத் தேடிச் சென்றடைவது முடிவென்று தன் மனத்திற்குள் துக்கத்தை அடக்கியவளாய் வீட்டிற்குள் புகுந்தாள்.

இலக்கணம்

உருகி, வீழ்ந்து—வினையெச்சங்கள்
சேறல்—தொழிற்பெயர்
உடையோர்க்கு + அஞ்சி = உடையோர்க்கஞ்சி
அறிவு + அழிந்து = அறிவழிந்து

4. மறையோனிடம் விடைபெற்றுத் தன் மகனைத் தேடிச் செல்லல்

பதவுரை

ஆறுஎலாம் அடிகள் - வழிகளில் எல்லாம அடிச்சுவடுகள்
வைத்த அடியெலாம் - அவள் அடிவைத்த சுவடுகளில் எல்லாம்
விழிநீர் நின்ற - கண்ணீர் நின்றது
தூறு எலாம் - வழியில் உள்ள கிளைகள், செடி கொடிகள் புதர்கள் எல்லாம் (கிழித்தலால்)
அரிவை சென்ற - சந்திரமதி சென்ற
சுவடு எலாம் - பாதைகளில் எல்லாம்
குருதி - இரத்தம்
தொட்ட - அவளைத் தொட்ட
மாறு எலாம் - கிளைகளில் எல்லாம்
கூந்தல் - அவளுடைய தலைமயிர் சிக்கிக் கிடந்தது
துன்று வனம் எலாம் - அடர்ந்த காடுகளில் எல்லாம்
துணிகள் - அவளுடைய கிழிந்த துணிகள்
யார்க்கும் - இவ்வாறுக வேறு எவராலும்
தேறல் ஆம் தகைமைத்து அன்றி - கண்டுபிடிக்க முடியாத நிலையில் உள்ள
செடி எலாம் - செடிகளில் எல்லாம்
தேடிச் சென்ருள் - தேடிக் கொண்டு சென்ருள்

தெளிவுரை : எங்குப் பார்த்தாலும் சந்திரமதியின் அடிச்சுவடுகள்; அச்சுவடுகளில் எல்லால் கண்ணீர் நின்றது. வழியிலுள்ள புதர்களும், கிளைகளும், செடிகொடிகளும் அவளைக் கிழித்ததால், சென்ற சுவடுகளில் எல்லாம் இரத்தம் பெருகி நின்றது. அடர்ந்த காடு முழுவதும் அவளுடைய கிழிந்த துணிகள் தொங்கின. யாராலும் கண்டுபிடிக்க முடியாத நிலையில் உள்ள செடிகளின் இடையே எல்லாம் தன் மகனைத் தேடிச்சென்ருள்.

இலக்கணம்

ஆறு + எலாம் = ஆறெலாம்; தூறு + எலாம் = தூறெலாம்
சுவடு + எலாம் = சுவடெலாம்
அன்றி—குறிப்பு எச்சம்; தேடி—வினையெச்சம்

5. இறந்த மகனைக் காணல்

பதவுரை

ஓடினுள் - ஓடிச் சென்ருள்
உள்ளம் எல்லாம் உருகினுள் - மனம் மிக உருகினுள்
மேனி கருகி வாடினுள் - உடல் முழுவதும் கருகிச் சோர்ந் தாள்
விறகுவைத்த - விறகு வைக்கப் பட்டிருந்த
வடத்தினுக்கு - ஆலமரத்திற்கு
அருகேவந்தாள் - பக்கத்தில் வந்தாள்
நாடினுள் - மைந்தன் உடலைத் தேடினுள்
கழுகும் பேயும் - கழுகுகளும் பேய்களும்
நரிகளும் குறளும் - நரிகளும் குட்டிப் பேய்களும்
துன்றிக்கூடிய - நெருங்கிக்கூடிய (சூழ்ந்திருக்கக் கூடிய)
குழுவின் நாப்பண் - கூட்டத்தின் நடுவில்
குமரனைச் சென்று - தன் மைந்தனைச் சென்று
கண்டாள் - பார்த்தாள்

தெளிவுரை : மைந்தனைத்தேடி ஓடினுள்; மனம் உருகினுள்; உடம்பு முழுவதும் கருகி வாடினுள். விறகு வைக்கப்பட்டிருந்த ஆலமரத்திற்கு அருகில்வந்து மைந்தன் உடலைத் தேடினுள். கழுகுகளும், பேய்களும், நரிகளும், சிறு பேய்களும் நெருங்கிச் சூழ்ந்திருக்கும் கூட்டத்தின் நடுவில் மைந்தனைக் கண்டாள்.

6. மகனைக்கண்டு மனங் கலங்கிப் புலம்பல்

பதவுரை

கண்டனள் - (மகனைப்) பார்த்தாள்
கழுகு எலாம் இரியல் போக - கழுகு எல்லாம் பயந்து ஓடும்படி
கதறி விழுந்தாள் - கூச்சலிட்டு மயங்கி விழுந்தாள்
கொண்டது ஓர் மகவின் ஆசை - பிள்ளையின்மேல் தான் கொண்ட ஆசை
ஆவியைக் கொள்ளை கொள்ள - தன் உயிரைக் கொள்ளை கொள்ளும்படி
முருகனை - அழகு மிக்க மகனை
முண்டகக் கரத்தால் - தாமரை மலர் போன்ற கைகளால்
ஏந்தி மடிமேல் வைத்தே - ஏந்தித் தன் மடிமேல் வைத்துக் கொண்டு
அண்டரும் - தேவரும்
மறுகி ஏங்க - மயங்கி வருந்தும் படி
வாய்திறந்து - வாயைத் திறந்து
அரற்றல் உற்ருள் - அலறி அழத் தொடங்கினுள்

தெளிவுரை : தன் மகனைப் பார்த்தாள்; கழுகு முதலியவை அஞ்சி ஓடும்படி கதறித் துடித்துத் தரையில் விழுந்தாள். பிள்ளையின்மேல் தான்கொண்ட ஆசையினுல் தன் உயிரையே

கொள்ளை கொள்ளும்படி, அழகனுன தன் மைந்தனைத் தாமரை போன்ற தன் கையினுல் ஏந்தி எடுத்துத் தன் மடியில்வைத்துக் கொண்டு தேவர்களும் மயங்கி வருந்தும்படி வாய் திறந்து அலறி அழத் தொடங்கினுள்.

இலக்கணம்

கழுகெலாம் = கழுகு + எலாம்
முண்டகம் + கரம் = முண்டகக்கரம்
கண்டனள்—வினைமுற்று; மறுகி—வினையெச்சம்

7. சந்திரமதி புலம்பல்

§ பனியால் நனைந்து, வெயிலால் உலர்ந்து,
பசியால் அலைந்தும் உலவா,
அனியா யவெங்கண் அரவால் இறந்த
அதிபா வம்என்கொல் அறியேன் !
தனியே கிடந்து விடநோய் செறிந்து
தரைமீ துருண்ட மகனே !
இனியா ரைநம்பி உயிர்வாழ் வம்என்றன்
இறையோ னும்யானும் அவமே !

பதவுரை

பனியால் நனைந்து - பனியினுல் நனைந்து
வெயிலால் உலர்ந்து - வெயிலால் காய்ந்து
பசியால் அலைந்தும் - பசியினுல் வருந்தியும்
உலவா - இறந்து போகாமல்
அனியாய் - கொடுமை மிக்க
வெங்கண் அரவால் - கொடிய கண்களை உடைய பாம்பால்
இறந்த அநியாயம் - இறந்த பாவம்
என்கொல் அறியேன் - யாதோ அறியேன்
தனியே கிடந்து - தனியிடத்தில் கிடந்து
விடநோய் செறிந்து - விடத்தால் உண்டான துன்பம் மிகுந்து
தரைமீது உருண்ட மகனே - தரையின்மேல் உருண்ட மகனே
என்தன் இறையோனும் - என் தலைவனுகிய மன்னனும்
யானும் - நானும்
இனியாரை நம்பி - வருங் காலத்து யாரை நம்பி
அவமே உயிர் வாழ்வம் - வீணே உயிர் வாழ்வோம்

தெளிவுரை : “ பனியினுல் நனைந்தும், வெயிலால் காய்ந்தும், பசியால் வருந்தியும் இறவாமல், கொடுமை மிக்க கண்களையுடைய பாம்பினுல் இறந்த பாவம் யாதோ, அறியேன். தனியிடத்துக் கிடந்து, விடத்தால் ஏற்பட்ட துன்பம் மிகுந்து, தரையின் மேல் உருண்டு இறந்த என் மகனே ! என் தலைவ

ளுகிய மன்னனும் நானும் இனி யாரை நம்பி வீணே உயிர் வாழ்வோம் ?''

இலக்கணம்

வெம்மை + கண் = வெங்கண்
வாழ்வம்—தன்மைப் பன்மை வினைமுற்று
நனைந்து, உலர்ந்து—வினையெச்சங்கள்
மீது + உருண்ட = மீதுருண்ட

8. மன்னனுக்கு "யாது சொல்வேன் ?" என்று வருந்துதல்

§ 'செங்கோல் அறத்தின் முறையே செலுத்து
திறலோன் எவர்க்கும் உரவோன்
வெங்கோ பயானை விறன்மன் னன்நம்மை
விடுவிக் களண்ணி வருநாள்
பங்கே ருகத்து மலர்போல் விளங்கு
வதனு ! மகிழ்ந்த பரிவால்,
'எங்கே யென்ஆசை மகன்?'என் றுரைக்கில்
எதிரே துசொல்வன் மகனே !

பதவுரை

செங்கோல் - நீதிமுறை வழுவா ஆட்சியை
அறத்தின் முறையே - அறநெறிப் படியே
செலுத்து திறலோன் - செலுத்து கின்ற வலிமையுடையவன்
எவர்க்கும் உரவோன் - எல்லோரைக் காட்டிலும் வலிமை உடையவன்
வெங்கோப யானை - கொடிய மதங்கொண்ட யானையுடன்
விறல் மன்னன் - வீரமும் வெற்றியும் கொண்ட மன்னன் (உன் தந்தை)
நம்மை விடுவிக்க - நம்மை மறையவனிடமிருந்து விடுவிக்க
எண்ணிவரும் நாளில் - கருதி வருகின்ற நாளில்
பங்கேருகத்து மலர்போல் - தாமரை மலர் போன்று
விளங்கு வதனு - ஒளி வீசும் முகத்தை உடைய மகனே
மகிழ்ந்த பரிவால் - மகிழ்ச்சியுடன் கூடிய பாசத்தால்
எங்கே என் ஆசை மகன் - என் அன்பிற்குரிய மகன் எங்கே?
என்று உரைக்கில் - என்று கேட்டால்
என் சொல்வேன் மகனே - என்ன பதில் கூறுவேன் மகனே !

தெளிவுரை : "தாமரை மலர் போல் விளங்குகின்ற முகத்தையுடைய மகனே ! செங்கோல் ஆட்சியை அறநெறிப் படி செலுத்துகின்ற வலிமையுடையவனும், கொடிய கோபங் கொண்ட யானைப் படையுடன் கூடிய வலிமையும் உடைய

மன்னனும் ஆகிய உன் தந்தை, நம்மை மறையவனிடமிருந்து விடுவிக்கவருகின்ற நாளில், மகிழ்ச்சியுடன் கூடிய பாசத்தால், 'எங்கே என் ஆசை மகன்?' என்று கேட்டால் நான் என்ன பதில் கூறுவேன்" என்று கூறி அழுதாள் சந்திரமதி.

இலக்கணம்

செம்மை + கோல் = செங்கோல்

வெம்மை + கோபம் = வெங்கோபம்

என்று + உரைக்கின் = என்றுரைக்கின்

9. 'என்ன பாவம் செய்தோம்' எனப் புலம்பல்

§ மறைநீ தியுற்ற புறநா டழித்து
வருசே னைஆள்வ தறியேம்;
அறைநீ திமுற்றும் உணரா அமைச்சை
அணிவா யில்வைத்தும் அறியேம்;
குறையே இழைத்து வினையே விளைத்த
குடிவைத் திருந்தும் அறியேம்;
இறையே! தவத்தின் விளைவே! எமக்கும்
இதுவோ விதித்த விதியே?

பதவுரை

மறை நீதி உற்ற - மறை நூல் கூறியவிதிப்படி நடக்கின்ற,
புறநாடு அழித்து - அயல் நாட்டை அழித்து
வருசேனை ஆள்வது - வருகின்ற சேனையை வைத்து (நாங்கள்) ஆள்வதை
அறியேம் - அறியோம்
அறை நீதி முற்றும் - அரசருக்குரிய நீதி முறைகளை முழுவதுமாக
உணரா அமைச்சரை - அறியாத அமைச்சரை
அணி வாயில் வைத்தும் - எங்கள் அரண்மனையில் வைத்துக் கொள்ள
அறியேம் - அறிய மாட்டோம்
குறையே இழைத்து - குறைகளையே செய்து
வினையே விளைத்த - பாவங்களையே தேடிய
குடி வைத்து இருந்தும் - குடி மக்களை எங்கள் நாட்டில் குடியிருக்கச் செய்தும்
அறியேம் - அறிய மாட்டோம்
இறையே! தவத்தின் விளைவே - இறைவனே! நற்றவத்தின் பயனாய் இருக்கும் கடவுளே!
எமக்கு விதித்த விதி இதுவோ – எமக்கு நீ விதித்த விதி இது தானோ?

தெளிவுரை : "மறைநூல் விதிப்படி நடக்கின்ற அயல் நாட்டை அழிக்கும் சேனையை வைத்து நாங்கள் ஆள

வில்லை. மறைநூல் கூறுகின்ற நீதி முறைகளை முழுவதும் அறியாத அமைச்சரை எங்கள் அரண்மனையில் வைத்துக் கொள்ளவில்லை. குற்றங்களையே செய்து பாவங்களையே தேடிய குடி மக்களை எங்கள் நாட்டில் குடியிருக்கும்படி செய்தறியோம். இறைவனே ! தவத்தின் பயனுய் நிற்கும் கடவுளே! எமக்கும் நீ விதித்த விதி இதுவோ ?"

இலக்கணம்

அறியேம்—தன்மைப் பன்மை வினைமுற்று

ஆள்வது + அறியேம் = ஆள்வதறியேம்

வாயில், இல்வாய்—இலக்கணப் போலி

2. குசேலோபாக்கியானம்

குசேல + உபாக்கியானம் = குசேலோபாக்கியானம்.

குசேலரைப் பற்றிய கதை என்பது பொருள். இது பாகவதக் கதையில் ஒரு கிளைக் கதையாகும்.

ஆசிரியர் : இந்நூலை இயற்றிய ஆசிரியர் தேவராசப் பிள்ளை. இவர் தொண்டை நாட்டு வல்லூரில் கருணீகர் குலத்தில் பிறந்தவர். தந்தையார் வீராசாமிப் பிள்ளை. இவர் 19ஆம் நூற்றுண்டின் இடையில் வாழ்ந்தவர். இவர் திரிசிரபுரம் மகா வித்துவான் மீனுட்சி சுந்தரம் பிள்ளையின் மாணவர் ஆவார். இந்நூலில் அறம், பொருள், இன்பம், வீடென்னும் நாற்பொருளும் விளங்கக் காணலாம்.

முன் கதைச் சுருக்கம்

சாந்தீப முனிவரிடம், குசேலனும் கண்ணனும் ஒன்ருகக் கல்வி கற்றவர்கள். இருவரும் நெருங்கிய நண்பர்கள். குருகுல வாசம் முடிந்ததும் இருவரின் வாழ்க்கையும் பிரிந்தது. கண்ணன் பேரரசனுகத் துவாரகையை ஆண்டு வருகிருன். குசேலன் சுசீலை என்னும் பெண்ணை மணந்து இல்லறத்தை நடத்தி வருகிருன். இறைவன் குசேலருக்கு மக்கட் செல்வத்தை வாரி வழங்கினுன். வறுமையின் காரணமாக, சுசீலையின் வற்புறுத்தலுக்கு இணங்கி, குசேலன் தன் இளமைக் காலத்துப் பழைய நண்பனைக் காணத் துவாரகைக்குப் புறப்படுகிருன். பல துன்பங்களுக்கிடையில் கண்ணனின் அரண்மனைக்கு வந்து சேருகிருன்.

1. கண்ணனைக் குசேலன் காணல்

பதவுரை

வருந்தும் ஓர் மிடியன் - வறுமையால் வாடும் வறியன் ஒருவன்
சேம வைப்பு - புதையற் பொருளை
எதிர் கண்டாற் போலும் - எதிரில் பார்த்தது போலவும்
அருந்து உணவு இழந்தோன் - உண்ணக்கூடிய உணவை இழந்தவன்
விண்ணோர் அமுதம் - தேவர்கள் உண்ணும் அமுதம்
எதிர் கண்டால் போலவும் - எதிரில் கண்டது போலவும்
புரிந்து - வருந்தி
வெப்பு - வெயிலில்
உழல்வோன் - திரிகின்ற ஒருவன்
கற்பகம் - கற்பக மரத்தை
எதிர் கண்டால் போலும் - நேரே பார்த்தது போலவும்
சரிந்த பற்றினன் - மிகுந்த அன்புடைய மாணவன்
மெய் ஆசான்தனை - உண்மை ஆசிரியனை
எதிர் கண்டாற் போலவும் - நேரில் கண்டது போலவும்

தெளிவுரை : வருந்துகின்ற வறியன் ஒருவன் புதைபொருளை நேரே பார்த்தது போலவும், உண்ணக்கூடிய உணவை இழந்தவன் தேவர்கள் உண்ணும் அமுதத்தைப் பெற்றால் போலவும், வருந்தி வெயிலில் அலைகின்றவன் கற்பகத் தருவை எதிரே பார்த்தது போலவும், மிகுந்த அன்புடைய மாணவன் ஓர் உண்மையான ஆசிரியனை நேரில் கண்டாற் போலவும் (குசேலன் கண்ணனைக் கண்டான்.)

2. கண்ணனைக் கண்ணிற்காணல்

பதவுரை

எண் அனைக்கு - யாவரும் எண்ணிப் போற்றும் திருமகளுக்கு (உறைய)
இலங்கு மார்பம் – ஒளி மிக்க மார்பகத்தை
ஈந்தருள் பிரானை - கொடுத்தருளிய கண்ணபிரானை
நீலவண்ணனை - நீலநிறமுடையவனை
திகிரி சங்கம் - சக்கரத்தையும், சங்கையும்
வலம் இடம் - முறையே வலக்கையிலும், இடக்கையிலும்
உறக்கொண்டானை - பொருந்தக் கொண்டிருப்பவனை
மண் அனைத்தும் - எல்லா உலகங்களையும்
புரக்கும் - காப்பாற்றுகின்ற
வாசுதேவனை - கண்ணபிரானை
மணக்கும் கள்நனை - நறுமணம் வீசுகின்ற தேன்மிகுந்த
துளவத்தாமம் - துளவமாலையை (அணிந்துள்ள)
கண்ணனை - கண்ணபிரானை
கண்ணில் கண்டான் - கண்களினால் பார்த்தான்

தெளிவுரை: யாவரும் போற்றும் திருமகள் உறைய தம் மார்பினை இடமாகக் கொடுத்தருளிய கண்ணபிரானை, நீலநிறம்

உடையவனை, சக்கரத்தையும் சங்கையும் முறையே வலப் பக்கமும் இடப் பக்கமும் கொண்டிருப்பவனை, எல்லா உலகங்களையும் காப்பாற்றும் வாசுதேவனை, மணம் வீசுகின்ற தேன் மிகுந்த துளவமாலையை அணிந்துள்ள கண்ணபிரானைக் கண்களினுல் குசேலன் கண்டான்.

3. குசேலனைக் கண்ணன் வணங்கல்

பதவுரை

காண்டலும் - (குசேலன்)கண்ணனைப் பார்த்ததும்
உவகைபூத்து - மகிழ்ச்சி மிகக் கொண்டு
கால்விசைகொடு - வேகமாய்க் காலை வைத்து
நடந்தான் - நடந்துசென்ருன்
ஆண்டகை - பெருமையிற் சிறந்த
அவனும் — கண்ணனும்
கண்உற்று-குசேலனைப் பார்த்து
அணை உடைத்து - கரையை உடைத்துக்கொண்டு
எழும் - பொங்கி எழும்
நீத்தம்போல - வெள்ளம்போல
நீண்டபூபள்ளி - நீண்ட அழகிய படுக்கையை விட்டு
நிலவுபேர்அன்பு - உள்ளத்தில் நிலைத்துள்ள மிகுந்த அன்பு
பொங்க - பெருகி எழ
பூண்ட மாதவன் - மேற்கொண்ட பெருந்தவ முனிவனுகிய குசேலன்
முன்சென்று - முன்னுல் சென்று
பொன்அடி - அவன் பொன் போன்ற அடிகளை
வணங்கினுன் - தொழுதான்

தெளிவுரை : குசேலன் கண்ணனைப் பார்த்து மகிழ்ச்சி பொங்கக் காலை வேகமாய் வைத்து விரைந்து நடந்தான். பெருமையில் சிறந்த கண்ணனும் குசேலனைப் பார்த்ததும் கரையை உடைத்துக்கொண்டு பெருகிவரும் வெள்ளம் போல, அழகிய படுக்கையை விட்டு, மிகுந்த அன்பு பொங்க, பெருந் தவமுனிவனுகிய குசேலன் முன் சென்று, அவன் பொன் போன்ற திருவடிகளை வணங்கினுன்.

இலக்கணம்

ஆண் + தகை = ஆண்டகை
கண் ணுற்று + அணை = கண் ணுற்றணை
பொன் + அடி = பொன்னடி; காண்டல்—தொழிற்பெயர்

4. குசேலனைக் கண்ணன் தழுவிக் கொள்ளுதல்

பதவுரை

திலகம் மண்தோய - நெற்றியில் அணிந்திருந்த பொட்டு நிலத்தில் படிய
ஐயன் திரு அடி வணங்கி - அம் மறையவனுகிய குசேலனது திருவடிகளை வணங்கி

பின்னர் – பின்பு

நிலவும் மெய்புளகம் - விளங்குகின்ற உடம்பில் மயிர் சிலிர்க்க

நிரம்புறத் தழுவிக்கொண்டான் - நன்ருகத் தழுவிக் கொண்டான்

குலமறைத் தலைவன் என்றும் - சிறந்த மறை முதல்வன் என்றும்

கூர்ந்த மெய் நட்பன் என்றும் - மிக்க உண்மையான நண்பன் என்றும்

மலர்தலை உலகம் - பரந்த உலகில் உள்ளவர்

கூறும் வாய்மை காத்து - சொல்லப்படும் உண்மை மொழியைக் காத்து அருளினுன்

தெளிவுரை : நெற்றியில் அணிந்திருந்த பொட்டு நிலத்தில் படியும்படி, அம் மறையவனது திருவடிகளை வணங்கிப் பின் விளங்குகின்ற உடம்பில் மயிர் சிலிர்க்க இறுகத் தழுவினுன். சிறந்த மறை முதல்வன் என்றும் உண்மையான நண்பன் என்றும் உலகில் உள்ளோர் கூறும் மொழியைக் கண்ணன் காத்தருளினுன்.

இலக்கணம்

நிலவும்—பெயரெச்சம் நிரம்பு+உற=நிரம்புற.

5. குசேலனைக் கண்ணன் உபசரித்தல்

பதவுரை

அங்கு ஒரு மாடத்து உள்ளால் - அவ்விடத்து ஒரு மாளிகையின் உள்ளே

அரதன பீடத்து உம்பர் - இரத்தின பீடத்தின் மேல்

மங்கலம் - மங்கலம் பொருந்திய

மறை வல்லாளன் - வேதங்களில் வல்லவனுகிய குசேலனை

மகிழ்ந்து - மகிழ்ச்சியுடன்

எழுந்தருளப் பண்ணி - அமரும்படி செய்து

பொங்குபொன் - சிறந்த பொன்னுலாகிய

குடம் - குடத்தில்

பூரித்த - நிரப்பப்பட்ட

புதிய மஞ்சன நீர் ஆட்டி - புதிய திருமஞ்சன நீரில் குளிப்பாட்டி

திங்கள் அம்கதிர் என்ன - சந்திரனின் வெள் ஒளியை ஒத்த

திகழ்ந்த பொன் ஆடை சார்த்தி - விளங்கிய பொன் ஆடையை உடுத்தி

தெளிவுரை : அவ்விடத்து ஒரு மாளிகையில் இரத்தின பீடத்தின்மேல், மங்கலம் பொருந்திய வேதங்களில் வல்லவனுகிய குசேலனை, மகிழ்ந்து எழுந்தருளச் செய்து, சிறந்த பொன்னுலாகிய குடத்தில் நிரப்பப்பட்ட புதிய மஞ்சன நீரால் குளிப்பாட்டி, சந்திரனின் வெள்ளொளியை ஒத்ததாய் விளங்கிய பொன்னுடையை உடுத்தி,

6. ஆடை அணிவித்தல்

பதவுரை

கதிர்என - சூரியனைப் போல
கதிர்க்கும் - பிரகாசிக்கும்
செம்பொன் - சிறந்தபொன்னுல்
கவின்செய் - அழகாகச் செய்யப்பட்ட
பட்டாடை - பட்டாடையை
சார்த்தி - அணிவித்து
பிதிர் கருப்பூரம் - பொடியான பச்சைக் கருப்பூரமும்
நானம் - கஸ்தூரியும் கலந்த
விரை சாந்தமும் சார்த்தி - மணம் வீசும் சந்தனமும் பூசி
முதிர் ஒளி விரிக்கும் - மிகுந்த ஒளியைப் பரப்பும்
தண் என் முத்த - குளிர்ச்சியான முத்துக்களாலாகிய
அக்கதையும் சார்த்தி - மங்கல அட்சதை அரிசியும் இட்டு
அதிர்தர வண்டும் - ஒலி உண்டாக்கும் வண்டும்
தேனும் - தேனும் கலந்து
அலங்கு - விளங்கும்
பூ தொடையல் - பூமாலையை
சார்த்தி - அணிவித்து

தெளிவுரை : கதிர்போல் ஒளிவிடும் செம்பொன்னுலாகிய அழகிய பட்டாடை ஒன்றை மேலே அணிவித்து, பச்சைக் கற்பூரப் பொடியும், கத்தூரியும் பெய்து, மணந் தருகின்ற சந்தனத்தைப் பூசி, ஒளியைப் பரப்பும் குளிர்ச்சி பொருந்திய முத்து அட்சதையை இட்டு, ஒலிக்கின்ற வண்டும் தேனும் கலந்து விளங்கும் பூமாலையைச் சூட்டி,

இலக்கணம்

செம்மை + பொன் = செம்பொன்
பட்டு + ஆடை = பட்டாடை; முதிர் ஒளி—வினைத்தொகை

7. உணவளித்து உபசரித்தல்

பதவுரை

விரைதரு தூமம் காட்டி - நறுமணம் வீசும் புகையைக் காட்டி
மேவு நெய் - பொருந்திய நெய்
விளக்கம் கோட்டி - விளக்கையும் சுழற்றி
உரை பெறு பளித - சொல்லப்படும் கற்பூர ஆராதனை
நீராசனம் கலம் - மங்களமான ஆலத்தி நீரமைந்த கலத்தையும்
ஒளிரச் சுற்றி - விளங்கச் சுற்றி
திரை செய் - பாற்கடலில் தோன்றிய
நல்அமுதம் அன்ன - நல்ல அமுதத்தை ஒத்த
தீஞ்சுவை - இனிய சுவை மிக்க
உணவு நல்கி - உணவை அளித்து
கரையறு - எல்லையற்ற
தவத்தோன் - தவத்தையுடைய குசேலனுடைய
வாயும் கையும் - வாயையும் கையையும்
ஒள் அறலில் - தூய நீரால்
பூசி - துடைத்து

தெளிவுரை : நறுமணம் தரும் புகையைக் காட்டி, பொருந்திய நெய் விளக்கைச் சுற்றி, சொல்லப்படும் கற்பூர ஆராதனையும் மங்கலமான ஆலத்தி நீரமைந்த கலமும் விளங்கச் சுற்றி, திருப்பாற்கடலில் தோன்றிய அமுதத்தை ஒத்த இனிய சுவை மிக்க உணவு அளித்து, எல்லையற்ற தவத்தையுடைய குசேலனுடைய வாயையும் கையையும் தூய நீரால் துடைத்து,

இலக்கணம்

தீம் + சுவை = தீஞ்சுவை; ஒள் + அறல் = ஒள்ளறல்
காட்டி, கோட்டி, சுற்றி, பூசி—வினை யெச்சங்கள்.

8. கவரி வீசிக் களிப்பித்தல்

பதவுரை

பாகு அடை சிறப்ப நல்கி - வெற்றிலை பாக்கைச் சிறப்பாகக் கொடுத்து
பயன் பெறுமுகமன் கூறி - பயன் தரக்கூடிய உபசார வார்த்தைகளைக் கூறி
போகு உயர்மாடத்து இட்ட - மிக உயர்ந்த மாடத்து விரித்த
பொற்ற தண்படுக்கை ஏற்றி - பொன் மயமான படுக்கையில் எழுந்தருளச் செய்து
மோகம் மிக்க - அன்பு மேலிட்டு
அருகு இருந்து - பக்கத்தில் இருந்து
முதுகு தைவந்து - முதுகைத் தடவி
பின்னும் - மேலும்
கோகனக - தாமரை மலர் போன்ற
பூங்கையால் - (மென்மையான) அழகிய கையால்
குளிர் செய் - குளிர்ச்சி பொருந்திய
பொன் கவரி வீசி - பொன்னாலான சாமரம் வீசி

தெளிவுரை : வெற்றிலை பாக்கைச் சிறப்பாகக் கொடுத்து பயன்தரக் கூடிய உபசார வார்த்தைகளைக் கூறி, மிக உயர்ந்த மாடத்து விரித்த பொன் மயமான குளிர்ச்சிமிக்க பள்ளியில் எழுந்தருளச் செய்து, அன்பு மேலிட்டுப் பக்கத்திருந்து முதுகைத் தடவி, மேலும் தாமரை மலர் போன்ற மென்மையான கையினால் குளிர்ச்சி பொருந்திய பொற்சாமரம் வீசி,

9. உபசரிப்பில் குசேலர் மயங்கி இருத்தல்

பதவுரை

கமலக் கண்ணன் - தாமரை போன்ற கண்களையுடைய கண்ணபிரான்
இம்மலரடி இரண்டும் - இம் மலர் போன்ற அடிகள் இரண்டும்
வழி நடந்து - வழி நடந்ததால்
இளைத்தவே - மெலிந்தனவே
என்று - என்று கூறி
கழிமகிழ் - மிகுந்த மகிழ்ச்சி
சிறப்ப - பொங்க

மெல்ல வருடினுன் - மெல்லத் தடவினுன்
பழியில் - குற்றமற்ற
பல உபசாரங்கள் - பலவகையான உபசாரங்களை
பண்ணவும் - கண்ணபிரான் செய்யவும்
ஒழிவு அறு - நீங்கல் இல்லாத
தவக் குசேலன் - தவத்தை உடைய குசேலன்
தெரியான் ஆகி - ஒன்றும் தெரியாதவனுய்
ஒன்றும் பேசாது இருந்தான் - வாய் திறந்து ஒன்றும் மறு மொழி பேசாதவனுய் இருந்தான்

தெளிவுரை : தாமரை மலர் போன்ற கண்களையுடைய கண்ணன் 'மலர் போன்ற இவ்விரண்டடிகளும் வழி நடந்ததால் மெலிந்தனவே' என்று கூறி, மிக்க மகிழ்ச்சியுடன் மெதுவாகக் குசேலன் பாதங்களைத் தடவினுன். குற்றமில்லாத பலவகை உபசாரங்களைச் செய்யவும், நீங்காத தவத்தையுடைய குசேலன் வாய் திறந்து பேசாதிருந்தான்.

இலக்கணம்

மலர் + அடி = மலரடி; கழிமகிழ்—உரிச்சொல் தொடர்; இளைத்த — பலவின்பால் வினைமுற்று.

10. கண்ணன், 'என்ன கொண்டு வந்தனை?' என வினவல்

பதவுரை

பந்தனை அகன்ற - ஆசை என்னும் கட்டு நீங்கிய
மேலோய் - மேலோனே
பற்பல நாட்குப் பின்பு - நெடு நாள் கழிந்த பின்
வந்தனை - வந்துள்ளாய்
எனக்கு என் கொண்டு வந்தனை - எனக்கு என்ன கொண்டு வந்தாய்
அதனை இன்னே - அதை இப்போதே
தந்தனை ஆயின் நன்று - கொடுப்பாயானுல் நல்லது
தருசுவை - சுவையைத் தருகின்ற
பக்கணத்து - சிற்றுண்டிமீது
என் சிந்தனை - என் மனம்
நின்றது - சென்றுள்ளது
என்றுன் - என்று கூறினுன்
தெரிவு அரு - எவராலும் அறிந்து கொள்வதற்கு அரிய
வஞ்சகக் கள்வன் - வஞ்சகக் கள்வனுகிய கண்ணன்

தெளிவுரை : "ஆசை என்னும் கட்டு நீங்கிய மேலோனே! நெடு நாட்கள் கழிந்தபின் இங்கு வந்துள்ளாய்! எனக்கு என்ன கொண்டு வந்துள்ளாய்! சுவையுடைய சிற்றுண்டியின் மேல் என் மனம் சென்றது. ஆகவே, அப்பொருளை இப்பொழுதே கொடுப்பாயானுல் நல்லது" என்று யாராலும் புரிந்து

கொள்வதற்கு அரிய அந்த வஞ்சகக் கள்வனாகிய கண்ணன் கூறினான்.

இலக்கணம்

பற்பல=பல+பல; வந்தனை—முன்னிலை வினைமுற்று
பக்கணத்தென்—பக்கணத்து+என்

11. அவல் பொதியைக் காணல்

பதவுரை

நடலை தீர்ந்தவன் - வஞ்சகம் நீங்கியவனாகிய குசேலன்
மெய் போர்த்த - உடம்பில் போர்த்திருந்த
பலநாள் கண்ட கந்தை - மிகப் பழைய கந்தைத் துணியின்
படர்தலை சுருக்கி - விரிந்த தலைப்பைச் சுருக்கி
வாங்கி பாங்கு வைத்து - எடுத்து பக்கத்தில் வைத்து
விடல் அரும் - விடுவதற்கு அரிய (ஒப்பற்ற)
கற்பு வாய்ந்த - கற்புடைய
மின் அனார் - மின்னலை ஒத்த பெண்கள்
வணங்கும் தெய்வம் - வணங்கக் கூடிய தெய்வமான சுசீலை
இனிதின் ஆய்ந்து - நல்லபடியாக ஆராய்ந்து
திடம் உற - உறுதியாக
முடித்து வைத்த - முடிபோட்டு வைத்த
சிறு பொதி - சிறிய முடிப்பினை
கண்டு கொண்டான் - பார்த்துக் கொண்டான்

தெளிவுரை : வஞ்சகம் நீங்கியவனாகிய குசேலன் உடம்பில் போர்த்திருந்த மிகப் பழைய கந்தைத் துணியின் விரிந்த தலைப்பைச் சுருக்கி எடுத்துப் பக்கத்தில் வைத்து, விடுதற்கரிய கற்பினைக் கொண்ட மின்னலையொத்த பெண்கள் வணங்கத்தக்க தெய்வமான சுசீலை நல்லபடியாகப் புடைத்து உறுதியாக முடித்து வைத்த சிறு முடிப்பினைப் பார்த்து விட்டான்.

இலக்கணம்

அருங்கற்பு—அருமை+கற்பு; திடமுற=திடம்+உற

12. கண்ணன் ஒரு பிடி அவல் தின்னல்

§ **மலிதரும் அன்பின் வந்த**
வண்பொதி அவிழ்த்து நோக்கி,
'வலிதரும் அவற்றுள் நன்று
வாய்த்தது நமக்கி தெ'ன்னா,
ஒலிதரு கழற்கா லையன்
ஒருபிடி அவலைக் காதல்
பொலிதர எடுத்து வாயிற்
போகட்டுக் கொண்டான் மாதோ.

பதவுரை

மலிதரும் - நிறைந்த
அன்பின் - அன்போடு கொண்டு வரப்பெற்ற
வண்பொதி - வளமான அவல் பொதியை
அவிழ்த்து நோக்கி - அவிழ்த்துப் பார்த்து
வலிதரும் அவற்றுள் - உடலுக்கு வலிமை தரும் பலவற்றுள்
இது நமக்கு - இது நமக்கே
நன்று வாய்த்தது - மிகவும் சிறந்ததாகிய அவல் கிடைத்தது
என்னு - என்று எண்ணி
ஒலிதரும் - ஓசையைத் தருகின்ற
கழல்கால் ஐயன் - வீரக் கழல்களை அணிந்த கால்களை உடைய கண்ணன்
ஒரு பிடி அவலை - ஒரு கைப்பிடி அவலை
காதல் பொலிதர-அன்பு விளங்க
எடுத்து வாயில் - எடுத்து வாயில்
போகட்டுக் கொண்டான் - போட்டுக்கொண்டான்
'மாதோ' என்பது அசை

தெளிவுரை : ஒலிக்கின்ற வீரக் கழல்களையுடைய கண்ணன் நிறைந்த அன்புடன் கொண்டு வந்த வலிமையான முடிப்பினை அவிழ்த்துப் பார்த்து, உறுதியைத் தருகின்ற உணவுப் பொருள்களுள் நமக்கு இது கிடைத்தது நல்லது என்று எண்ணி ஒரு கைப்பிடி அவலை அன்பு விளங்க எடுத்து வாயில் போட்டுக்கொண்டான்.

இலக்கணம்

வண்மை + பொதி = வண்பொதி — **பண்புத்தொகை;**
கழல் + கால் = கழற்கால்

13. அவலின் சிறப்பைப் பாராட்டல்

பதவுரை

ஈது – இந்த அவல்
செறிதரு சுவைத்து – மிகுந்த சுவையை உடையது
என்றும் – என்றும்
தேவர்க்கும் – தேவர்களுக்கும்
அரியது ஆகும் – கிடைத்தற்கு அரியதாகும்
விருப்பின் அறிதரு – விருப்பத்துடன் அறியப்பட்டு
இல்லில் – வீட்டில்
அமைத்தது – செய்ததாகும்
பழையதும் அன்று – பழமையானதும் அன்று
குறிதரு விலைப்பால் – குறிக்கப்பட்ட விலையின் மூலம்
சென்றுகோடல் – சென்று வாங்கும் பொருள்
இவ்வளத்ததோ – இந்த வளமை உடையதோ (இல்லை)
என்று உறி அளை – என்று எண்ணி, உறியில் வைக்கப்பட்ட வெண்ணெயை
வாரிஉண்டோன் – அள்ளி உண்டவனாகிய கண்ணன்
ஒருபிடி அவல் – ஒருபிடி அவலை
தின்றான் – எடுத்துத் தின்றான்

தெளிவுரை : 'தெளிந்த சுவையையுடைய இந்த அவல், தேவர்களுக்கும் கிடைத்தற்கரியதாகும். விருப்பத்துடன் அறியப்பட்டு வீட்டில் தயாரிக்கப்பட்டது. பழைமையானதும் அன்று. குறிக்கப்பட்ட விலையைக் கொண்ட அவல் இவ்வளவு சிறப்புடையதாகுமோ?' என்று எண்ணி, உறியில் வைக்கப்பட்ட வெண்ணெயை வாரி உண்டவனாகிய கண்ணன், ஒரு பிடி அவலை எடுத்துத் தின்றான்.

இலக்கணம்

கொள் + தல் = கோடல் - தொழிற் பெயர்
உண்டோன்—வினையால் அணையும் பெயர்

14. இமையவர்க்கு அமுது ஊட்டியவன் எளிய அவல் தின்றான்

§ **நாட்டுமிவ் வவல்வி ருப்பம்**
நமக்குமிக் குள்ள தென்று
கேட்டுளாய் கொல்லோ ! முன்னும்
கிளந்திருப் பதுமன் றே!என்
றேட்டுமென் மலர்ப்பூந் தொங்கல்
இமையவர்க் கமிர்தம் முன்னாள்
ஊட்டிய புகழின் மேலோன்
ஒருபிடி அவல்தின் றானே.

பதவுரை

நாட்டும் இவ்அவல் – நன்கு சொல்லப்படும் இந்த அவல் மீது
நமக்கு விருப்பம் – நமக்கு விருப்பம்
மிக்குஉள்ளது என்று - மிகுதியாக உண்டென்பதை
கேட்டுளாய் கொல்லோ – கேட்டிருக்கின்றாயோ ?
முன்னும் – இதற்கு முன்பும்
கிளந்து இருப்பதும் அன்றே – (இதைக் குறித்து) நாம் சொல்லியதும் இல்லையே
என்று – என்று (வியந்து)கூறி
மெல் ஏட்டு – மெல்லிய இதழை யுடைய
மலர் பூ தொங்கல் – மலர்ந்த மலர் மாலையை அணிந்த
இமையவர்க்கு – தேவர்களுக்கு
முன்னாள் – முன்பு
அமிர்தம் ஊட்டிய – அமிழ்தத்தைக் கொடுத்த
புகழின்மேலோன் – புகழில் சிறந்த கண்ணபிரான்
ஒருபிடி – ஒரு கைப்பிடி அவலை
தின்றான் – சுவைத்துத் தின்றான்

தெளிவுரை : "நன்கு சொல்லப்படும் இந்த அவலில் எமக்கு அதிக விருப்பம் உண்டென்பதைக் கேட்டு இருக்கின்றாயோ?

இதற்கு முன்னால் எம் விருப்பத்தைக் கூறியதும் இல்லையே!" என வியந்தான் கண்ணன். மெல்லிய இதழையுடைய மலர்ந்த பூமாலையை அணிந்திருக்கும் தேவர்களுக்கு, முன்னாளில் அமிழ்தத்தையே கொடுத்த புகழ்மிக்க கண்ணன் ஒரு பிடி அவலைத்தின்றான்.

இலக்கணம்

இ + அவல் = இவ்வவல்; முன்+நாள்—முன்னாள்
ஏட்டு மென்மலர் = ஏடு + மென்மை + மலர்

15. அன்பின் உயர்வு

§ அரியஅன் பினிற்கொ டுத்தல்
இழிந்ததா யினும்சி றந்தது;
இரியுமன் பினிற்கொ டுத்தல்
இழிந்ததே சிறந்த தேனும்;
பெரியவர் புகழப் பட்ட
பெருந்தவக் குசேல மேலோன்
உரியஅன் பினையும் கூட்டி
ஒருபிடி அவல்தின் றானே.

பதவுரை

அரிய அன்பினில் – அருமையான அன்பினால்
கொடுத்தல் – கொடுக்கும் பொருள்
இழிந்ததாயினும் – தாழ்ந்த பொருளாயினும்
சிறந்தது – உயர்ந்ததாகக் கருதப்படும்
இரியும் அன்பினில் – நீங்கிய அன்பினால் (அன்பில்லாமல்)
கொடுத்தல் – கொடுக்கும் பொருள்
சிறந்ததேனும் – உயர்ந்ததாய் இருந்தாலும்
இழிந்ததே – தாழ்ந்ததாகக் கருதப்படும்
பெரியோரால் – பெரியோரால்
புகழப்பட்ட – புகழ்ந்து பேசப் பட்ட
பெருந்தவ – பெரிய அரிய தவமுடைய
குசேல மேலோன் – குசேல மாமுனிவன்
உரிய அன்பினையும் – கொண்ட அன்பினையும்
கூட்டி – உடன்சேர்த்து
ஒருபிடி அவல் தின்றான் – ஒருபிடி அவலைக் கண்ணன் தின்றான்

தெளிவுரை : மிகுந்த அன்புடன் கொடுக்கப்பட்ட பொருள் தாழ்ந்ததேயாயினும் அஃது உயர்ந்ததாகக் கருதப்படும். அன்பற்ற முறையில் கொடுக்கப்பட்ட பொருள் உயர்ந்ததே ஆயினும் அது தாழ்ந்ததாகவே கருதப்படும். பெரியோரால்

புகழ்ந்து பேசப்பட்ட அரிய பெருந்தவமுடைய குசேல முனிவரின் அன்பினையும் உடன் சேர்த்து ஒருபிடி அவலைத் தின்றான்.

இலக்கணம்

பெருமை + தவம் = பெருந்தவம்
கொடுத்தல் = தொழிற்பெயர்

3. கயவன் கல்வி அருமை அறிந்தது

கல்வியறிவில்லாத ஒருவன் ஆசிரியர் ஒருவர் மூலம் கல்வியின் சிறப்பை அறிந்த நிகழ்ச்சியை விளக்குவது இப் பகுதி.

ஆசிரியர்: கா. நமச்சிவாய முதலியார். இவர் வடஆர்க்காட்டில் உள்ள காவேரிப்பாக்கத்தைச் சேர்ந்தவர். 1826இல் பிறந்து 1936இல் இயற்கை எய்தினர். இவர் தமிழ்க் கடலாயும், பெருவள்ளலாயும் விளங்கியவர். இனிய கவிகள் இயற்றும் திறமை பெற்றவர். இவர் சென்னை அரசினர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராயிருந்தார் இவர் பல நூல்களை எழுதியுள்ளார். தனித் தமிழ் வித்துவான் பட்டத்திற்கு மன்றாடி வெற்றி பெற்றவர். சிறந்த இலக்கிய இலக்கண நூல்களை வெளியிட்டுள்ளார்.

1. எல்லன் என்னும் செல்வன்

பதவுரை

சீர்மிகுபெயரான் – சிறப்பு மிக்க பெயரால்
ஓங்கும் திருநின்ற ஊரில் - விளங்கும் திருநின்ற ஊரில் (தின்னனூரில்)
வாழ்வோன் – வாழ்பவன்
நீர்மிகும் – நீர் வளம் பொருந்திய
நிலம் – நிலங்களை
உள்ளோன் – பெற்றோன்
நிறைபல ஏர்கள் உள்ளோன் – திண்மை மிக்க ஏர்கள் பல உடையவன்
கார்மிகும் – கருமையான மேகத்தை ஒத்த
மேதி உள்ளான் – எருமைகளை உடையவன்
கால்நடை பலவும் உள்ளான் - அளவற்ற ஆடுமாடுகளை உடையோன்
ஏர்மிகும் இல்லம் – அழகு மிகுந்தவீட்டினை
உள்ளோன் – உடையவன்
எல்லன் என்று – எல்லன் என்று
இயம்பு பெயரோன் – சொல்லும் பெயரை உடையவன்

தெளிவுரை : சிறப்புப் பொருந்திய திருநின்ற ஊரில் - (தின்னனூரில்) வாழ்கின்ற எல்லன் என்னும் பெயரைக் கொண்டவன், மிகுந்த நீர்வளம் நிறைந்த நிலங்களைச் சொந்தமாகக் கொண்டவன். வலிமைமிக்க பல ஏர்களையும், கருமை

யான மேகத்தை ஒத்த பல எருமைகளையும், அளவற்ற ஆடு மாடுகளையும் தனக்குச் சொந்தமாகக் கொண்டவன். அழகு மிகுந்த வீட்டினையும் தனக்கு உடைமையாகக் கொண்டவன்.

இலக்கணம்

ஓங்கும், இயம்பும்—பெயரெச்சங்கள்

2. ஆசிரியரை நோக்கி எல்லன் கூறுவன

பதவுரை

கல்வி இங்கு எமக்கு ஏன் – கல்வி இங்கு எங்களுக்கு எதற்கு?

எங்கள் கழனியை – எங்களுடைய விளை நிலத்தை

கண்காணித்து – மேற்பார்வையிட்டு

செல்வமாய் வளர்ந்து – மேன்மையாக வளர்ந்து

மேனி திகழ் உற – உடல் அழகுடன் விளங்க

இருத்தல் போதும் – இருந்தால் போதும்

நல் விவேகத்தால் – நல்ல அறிவினால்

செல்வம் நாசமே ஆகும் – செல்வம் அழிந்தே போகும்

என்ன எங்கள் முன்னோர் – என்று எங்களுடைய பெரியோர்

சொல்லினர் – சொல்லி இருக்கின்றனர்

சூது அல – இது வஞ்சகம் அன்று

மற்றும் கேளும் – மேலும் கேளும்

தெளிவுரை : "எங்கள் நிலத்தை மேற்பார்வையிட்டு, மேன்மையாக உடல் அழகுடன் விளங்க வளர்ந்தால் போதும். கல்வி எங்களுக்கு எதற்கு?" என்று எல்லன் கூறினான். மேலும் "நல்ல அறிவினால் செல்வம் அழிந்து விடும் என்று எங்கள் முன்னோர் சொல்லியிருக்கின்றனர்" என்றான்.

இலக்கணம்

கேளும்—ஏவல் பன்மை வினைமுற்று.

சூது + அல = சூதல

3. கல்வி கற்கச் சென்றவன் இறந்தனனெனல்

பதவுரை

எங்கள் முப்பாட்டனுருக்கு – எங்கள் பாட்டனாரின் தந்தையாருக்கு

குமாரர் இருவர் ஆம் - பிள்ளைகள் இருவராவார்

தம்முள் – அவர்களுள்

ஒருவனைப் பள்ளிக்கு – ஒருவனைப் பள்ளிக்கூடத்திற்குக் கல்வி கற்க

அனுப்பினர் – அனுப்பினார்கள்

அன்றே அவனும் – அன்றைய தினமே அவனும்

பொங்கிய — மிகுந்த
காய்ச்சல் கண்டு — காய்ச்சல் கண்டு
பொன்றினன் — இறந்தான்
என்பர் — என்று கூறுவர்
அந்தோ — ஐயோ!
இங்கு என் மைந்தனையும் — இங்கு என் மகனையும்
அவ்வாறு இறந்திட — அப்படி இறந்துபோக
சொல்கின்றீரோ? — கூறுகின்றீரா?

தெளிவுரை : "எங்கள் முப்பாட்டனுக்கு இரு பிள்ளைகள் இருந்தனர். அவர்களுள் ஒருவனைப் பள்ளிக்கு அனுப்பினர். அன்றைய தினமே அவனுக்கு மிகுந்த காய்ச்சல் கண்டது. அதனால் அவன் இறந்துவிட்டான். அப்படி என் மகனையும் பள்ளிக்கு அனுப்பி இழக்கச் சொல்கின்றீர்களா?"

இலக்கணம்

கண்டு—வினையெச்சம், அங்கொரு = அங்கு + ஒரு
அனுப்பினர்—வினைமுற்று
என்பர்—பலர்பால் வினைமுற்று

4. பெற்றவளுக்குப் பிள்ளையாய் இருந்தால் போதும் எனல்

பதவுரை

பிள்ளையும் படிக்க வேண்டா — என் மகனும் படிக்க வேண்டாம்
பிரம்படி படவும் வேண்டா — (ஆசிரியரிடத்து)பிரம்படி படவும் வேண்டாம்
சள்ளையாம் சுவடி தூக்கி—துன்பம் நிறைந்த ஏட்டுச் சுவடிகளைச் சுமந்து
சங்கடப்படவும் வேண்டா — துன்பப்படவும் வேண்டாம்
முள் எனும் — முள்போன்ற
ஆணி கொண்டு — எழுத்தாணி கொண்டு
முறியினில் — பனை ஓலையில்
எழுதவும் வேண்டா — எழுதவும் வேண்டாம்
பெற்றவள் களிக்க — பெற்ற தாய் மகிழ
பிள்ளை என்று — பிள்ளை என்று
இருந்தால் போதும் என்றான் — ஒருவன் இருந்தால் போதும் என்றான்

தெளிவுரை : "என் மகன் படிக்கவும் வேண்டாம்; பிரம்பினால் அடிபடவும் வேண்டாம்; முள்போன்ற எழுத்தாணி கொண்டு பனையோலையில் எழுதவும் வேண்டாம். பெற்றெடுத்த தாய் மகிழப் பிள்ளையென்று ஒருவன் இருந்தால் போதும் என்றான்.

இலக்கணம்

பெற்றவன்—வினையாலணையும் பெயர்
பிரம்படி—பிரம்பு + அடி
என்றிருந்தால்— என்று + இருந்தால்

5. செலவு என்ன ஆகும்? என வினவல்

பதவுரை

நல்லது என் மைந்தன் தன்னை — நல்லது என் மகன் தன்னை

நலன் உற படிப்பித்தற்கு — கல்வி நலன் பெறப் படிக்கச் செய்வதற்கு

செல்லும் ஓர் தொகைதான் யாது? — செலவாகும் தொகைதான் எவ்வளவு

செப்பிடும் பார்ப்போம் என்ருன் — என்று கூறும் பார்ப்போம் என்ருன்

எல்லரே -

உமது மைந்தன் — உம்முடைய மகன்

எழுதிடவும் படித்தற்கும் — எழுதவும் படிக்கவும்

வல்லவன் ஆவதற்கு — திறமை மிக்கவனுக ஆவதற்கும்

ஓர் நால் ஐந்து — ஓர் இருபது

வராகன் ஆகும் — வராகன் ஆகும் (எழுபது ரூபாய் - மூன்றரை ரூபாய் மதிப்புள்ளது ஒரு வராகன்)

தெளிவுரை : "என் மகனை நன்ருகப் படிப்பிக்க எவ்வளவு தொகை செலவழியும் என்பதனைக் கூறும்?" என ஆசிரியரைக் கேட்க, அதற்கு ஆசிரியர், "உம்முடைய மகன் கெட்டிக்காரனுக ஆவதற்கும், எழுதவும், படிக்கவும் கற்றுக்கொள்வதற்கும் இருபது வராகன் (எழுபது ரூபாய்) ஆகும்" என்ருர்.

இலக்கணம்

மைந்தன் + தன்னை = மைந்தன்றன்னை

பார்ப்போம்—தன்மைப் பன்மை வினைமுற்று

6. இருபது வராகனில் எருது வாங்குவேன் எனல்

பதவுரை

என்றனன் — என்று ஆசிரியர் கூறினர்

என்றலோடும் — அவ்வாறு கூறிய மாத்திரத்தில்

எல்லனும் இரும்பூது எய்தி — எல்லனும் வியப்படைந்து

என்றது நாலும் ஐந்தோ — என்று நீங்கள் கூறியது நாலும் ஐந்தும் ஒன்பதா? அல்லது இருபது வராகனு?

இருபதாயின் — அவ்வாறு இருபது வராகனுயின்

இன்னெரு — மற்ருெரு

கடாவும் — எருமைக் கடாவும்

வாங்கி — விலைக்கு வாங்கி

ஏரினில் — ஏரிலே

பூட்டி — பூட்டி

நன்ரும் நெல் — நன்ருகிய நெல்லை

விளைத்து — விளையச் செய்து

குன்று என — சிறு மலைபோல

குவியலாய் — குவியலாக

குவித்திடேனே — குவிக்க மாட்டேனு?

தெளிவுரை : ஆசிரியர் கூறியதைக் கேட்ட எல்லன் மிகவும் வியப்பெய்தி, "நீர் கூறியது ஒன்பது வராகனு அல்லது

இருபது வராகனு? நீர் கூறியது இருபது வராகனுயின் அதற்கு ஓர் எருமைக் கடா வாங்கி ஏரினில் பூட்டி நன்ருக உழுது நெல்லை விளைத்துக் குன்றுபோலக் குவியலாய்க் குவிக்கலாமே?'' என்று கூறினுன்.

இலக்கணம்

குன்றென = குன்று + என; என்றனன்—வினை முற்று

7. கல்வியால் தலை எழுத்து மாருது எனல்

பதவுரை

இருபது வராகன் அந்தோ – இருபது வராகன் என்பது ஐயோ! எழுபது ரூபா யன்ரே!

ஒருபது ஒரு இருபதாயின் – ஒரு பத்தோடு இருபத்தாயின் (முப்பதாயின்)

ஒருவிதத்து – ஒரு விதமாக

ஒழிக்கலாகும் – செலவழிக்கலாம்

இங்கு அதனுல் – அப்படிச் செலவு செய்வதால் இங்கு

வருவது என்ன? - வரப்போகும் பயன் யாது?

வண்டியோ, மணியோ, மாடோ - வண்டியோ மணியோ மாடோ (வரப்போவதில்லை)

தருவது இங்கு – செலவழிப்பதால் இங்குக் கிடைப்பது

எழுத்தே அன்ரே – எழுத்து மட்டுமே யன்ரே

தலைஎழுத்து அழிவதுண்டோ – வினைப் பயனுல் ஏற்பட்ட தலையெழுத்தினை அழிக்க முடியுமோ?

தெளிவுரை : ''இருபது வராகன் என்பது எழுபது ரூபா யன்ரே? ஒரு பத்தோடு இருபதாயின் (முப்பது ஆயின்) ஒரு விதத்தில் செலவழிக்கலாம். அவ்வாறு செலவு செய்வதால், வண்டியோ, மாடோ, மணியோ வரப்போவதில்லை. செலவு செய்யும் பணத்திற்கு எழுத்தல்லவா வரப்போகிறது! ஒருவனின் வினைப் பயனுல் ஏற்படும் தலையெழுத்தை மாற்ற முடியுமா? முடியாது.

8. அறிவை அற்பமாக எண்ணவேண்டாம் எனல்

பதவுரை

என்னவே வெறுத்துக் கூறும் எல்லனே – என்று கல்வியை வெறுத்துக்கூறும் எல்லனே

நல் நய உபாத்தியாயன் – மிக நல்ல ஆசிரியன்

இழித்து நோக்கி – பரிதாபத்தோடு பார்த்து

நரைமுதிர் கிழவரே – நரைத்துப் பழுத்த பெரியவரே

நீர் பொன்னேயே – நீங்கள் பொன்னைத்தான்

பெரிதாகக் கொண்டீர் – பெரிய சொத்தாக நினைத்திருக்கிறீர்

புத்தியை — கல்வியால் வரும் அறிவை
சிறிதாக் கொண்டீர் — அற்பமாகக் கொண்டிருக்கிறீர்
பின்னை அப்பொருளை — பின் அப்பொருளைக் கொண்டு
ஓர் பெருங் கடா — பெரிய எருது ஒன்று
கொள்வீரேல் — வாங்குவீர் ஆனால்;

தெளிவுரை : கல்வியை வெறுத்துக் கூறும் எல்லனைப் பரிதாபத்தோடு நோக்கிய ஆசிரியர், "நரையுடன் கூடிய முதியவரே, நீர் பொன்னைப் பெரிதாகக் கொண்டு அறிவினை அற்பமாக மதிக்கிறீர். கல்விக்குச் செலவாகும் பணத்தைக் கொண்டு பெரிய எருது ஒன்று வாங்குவீரானால்,

9. ஒரு கடா இரண்டாகும் எனல்

பதவுரை

அப்பொழுது - அப்பொழுது
உம்மிடத்தே - உங்களிடத்திலே
அருமை கடா - அருமையான கடாக்கள்
இரண்டு இருக்கும் - இரண்டு இருக்கும்
ஒப்புடன் - (அவற்றைச்)சமமாக
ஏரினில் பூட்டி - ஏரில் பூட்டி
உழுதிடல் ஆகும் என்ன — உழுதிடலாம் எனக்கூற (அதன் பொருள் உணராமல்) எல்லன்
யான் கொள்வது — தான் வாங்குவது
ஒன்றே அன்றோ — ஒன்றேயல்லவா?
எப்படி இரண்டு உண்டாகும் — அப்படியிருக்க, எப்படி இரண்டாகும்
அப்படி இரண்டு — அவ்வாறு இரண்டு கடாக்கள்
உண்டாயின் — ஏற்படுமாயின்
அதிட்டம் என்று — நல்ல அதிட்டம் என்று
அடைவேன் அன்றோ — மகிழ்ச்சி அடைவேன் அல்லவா?

தெளிவுரை : " அப்பொழுது உங்களிடத்தில் அருமையான இரண்டு கடாக்கள் இருக்கும். இரண்டினையும் சமமாக ஏரில் பூட்டி உழுதிடலாம்" என ஆசிரியர் கூறினர். அதன் உண்மைப் பொருளை உணராத எல்லன், "எப்படி இரண்டு கடாக்கள் ஆகும்? நான் வாங்குவது ஒன்றுதானே? அவ்வாறு இரண்டு கடாக்கள் கிடைத்தால் எனக்கு ஏற்பட்ட அதிட்டம் என்று பெற்றுக்கொண்டு மகிழ்ச்சி அடைவேன்" என்ருன்.

இலக்கணம்

அருமை + கடா = அருங்கடா — பண்புத்தொகை
இரண்டுண்டாகும் = இரண்டு + உண்டாகும

10. ஒன்று இரண்டாவதன் உபாயம்

பதவுரை

சொல்லும் அவ் உபாயம் – அவ் வழியினைச் சொல்லும்
என்றே தொளைத்திட – என்று தொல்லை செய்ய
உபாத்தியாயன் – ஆசிரியன்
எல்லரே -
நீவிர் கொள்ளும் – நீங்கள் வாங்கும்
எருமை ஒன்று உடனே – எருமை ஒன்றுடன்
உம் – உம்முடைய
கல்வி இல்லாத மைந்தன் – கல்வி அறிவில்லா மகன்
கடா என – எருமைக் கடாவைப் போல
திரிவன் அன்றோ – அலைந்து திரிவான் அல்லவா (அவனையும் சேர்த்து)
வல்லவாம் – வலிமை மிக்க
இரண்டு–இரண்டு (எருமைகள்)
வரும்வழி – உண்டாகின்ற வழியை
அறிகிலீரோ – அறிய மாட்டீரோ? (இப்பொழுதாவது அறிந்து கொள்ளுங்கள்)

தெளிவுரை : இரண்டு கடாவினைப் பெறும் வழியைக் கூறும்படி தொந்தரவு செய்ய, ஆசிரியர், "எல்லரே! நீவிர் வாங்கப் போகும் கடாவுடன், உம்முடைய கல்வி அறிவில் லாது கடாவைப் போலத் திரியும் மகனையும் சேர்த்தால் இரண்டு எருமைகள் கிடைக்கும். நீங்கள் இதனை அறிய மாட்டீரோ?" என்றார்.

இலக்கணம்

அவ்வுபாயம் = அ + உபாயம்
ஒன்றுடன் = ஒன்று + உடன்
இல்லாத—எதிர்மறைப் பெயரெச்சம்

11. கல்வியின் சிறப்பைக் கூறல்

பதவுரை

என்றனன் – என்று கூறினான்
அதனைக் கேட்ட எல்லனும் – அதைக் கேட்ட எல்லன்
என்னே! – என்னே!
என்தன் ஓர் மைந்தன் தன்னை – என்னுடைய ஒரே மகனை
எருமையே ஆக்கி விட்டீர் – எருமைக் கடாவாக ஆக்கி விட்டீர்
இன்று எனக்கு அதனை – இன்று எனக்கு அதனை (கல்வியின் சிறப்பை
நன்றாய் இயம்புக என – விளக்கிக் கூறுங்கள் என்று கேட்க
அந்நல்லோன் – அந்த நல்லாசிரியன்
ஒன்றிய கல்வியின் – பொருந்திய கல்வியின்
சீர் - பெருமையை
உழவனுக்கு – உழவனுக்கு (எல்லனுக்கு)
உரைப்பது ஆனான்–கூறலானான்

தெளிவுரை : அதைக் கேட்ட எல்லன், "என்னே! என் ஒரே மகனையும் எருமையாகவே கருதிவிட்டீரே! இன்று எனக்கு அக் கல்வியின் சிறப்பினை விளக்கமாகக் கூறுக!" என்று கேட்க, நல்லாசிரியனும் பொருந்திய கல்வியின் பெருமைகளை உழவனுக்கு எடுத்துரைக்கலானான்.

12. கல்வியின் பெருமை

§ **வித்தையில் லாத மக்கள்**
விலங்கினும் கடைய ராவர் ;
புத்தியில் லாத மாந்தர்
புல்லினும் புல்ல ராவர் ;
மெய்த்திறம் காண்ப தற்கு
வித்தையே விழிய தாகும் ;
கைத்தலப் பொருளோ நந்தம்
கருத்தினை மயக்கும் அன்றே ?

பதவுரை

வித்தையில்லாத மக்கள் – கல்வியறிவில்லாத மக்கள்
விலங்கினும் – விலங்குகளைவிட
கடையராவர் – கீழானவராவர்
புத்தியில்லா மாந்தர் – அறிவில்லாத மக்கள்
புல்லினும் – புல்லைக் காட்டிலும்
புல்லராவர் – அற்பமானவராவர்
மெய்த்திறம் – உண்மையின் தன்மையை
காண்பதற்கு – அறிவதற்கு
வித்தையே – கல்வியே
விழி அது ஆகும் – கண்களாகும் (உறுதுணையாகும்)
கைத்தலப் பொருளோ – கையில் உள்ள செல்வமோ
நம் தம் கருத்தினை – நம்முடைய அறிவினை
மயக்கும் அன்றே – மயக்க வல்லதாகும்

தெளிவுரை : "கல்வி அறிவில்லா மக்கள் விலங்கிற்கும் கீழானவர்கள். புத்தியில்லா மக்கள் புல்லைவிட அற்பமானவர்கள். உண்மையின் தன்மையைக் காண்பதற்குக் கல்வியே கண்களாகும். கையில் உள்ள செல்வமோ நம்முடைய அறிவினை மயக்க வல்லது.

13. கல்வியற்றவர் உலகத்திற்குப் பாரமே

§ **கற்றறி வில்லா மாந்தர்**
கண்கெட்ட மாடே யாவார்;
மற்றவர் மண்ணின் மீதே
மடமையில் மாழ்கி நிற்பர் ;

உற்றமற் றவர்கள் இந்த
உலகுக்கோர் சுமையே ஆவர் ;
பெற்றவர் செய்த பாவம்
பிள்ளையாய்ப் பிறந்த தாமே.

பதவுரை

கற்று அறிவு இல்லா – கல்வி கற்றும் அறிவில்லா
மாந்தர் – மக்கள்
கண் கெட்ட – கண்கள் கெட்டுப் போன (குருட்டு)
மாடே ஆவர் – மாடே போன்று ஆவர்
மற்றவர் – அவர்கள்
மண்ணின் மீது – இவ்வுலகின் மீது
மடமையில் – அறியாமையில்
மாழ்கி நிற்பர் – மயங்கி இருப்பர்
உற்ற மற்றவர்கள் – இருக்கும் மற்றவர்கள்
இந்த உலகுக்கு – இந்த உலகினுக்கு
ஓர் சுமையே ஆவர் – ஒரு பாரமே ஆவர்
பெற்றவர் – பெற்ருேர்
செய்த பாவம் – செய்த பாவத்தினுல்
பிள்ளையாய் – மகனுய்
பிறந்தது ஆமே – பிறந்துள்ளதாகும்

தெளிவுரை : “ கற்றும் அறிவில்லாத மக்கள் கண் கெட்டுப் போன மாடு போன்றவர். மேலும் அவர்கள் இவ்வுலகில் அறியாமையில் மயங்கி இருப்பர். அவர்கள் இந்த உலகுக்கு ஒரு சுமை போன்றவர்கள். தாய் தந்தை செய்த பாவத்தினுல் மகனுய் வந்து பிறந்தவர்கள்.”

14. கல்வியின் இன்றியமையாமை

§ மாண்புறு கல்வி, மாந்தர்
மடமையைக் கொல்வ தல்லால்,
பூண்பணி போன்று மக்கள்
பொன்றிடக் கொல்லா தையா !
வீண்பழி சுமத்தல் நன்ருே,
வித்தையால் விளிந்தான் என்றே ?
ஆண்பெணென் றிருபா லாரும்
அறிவுறக் கற்கை நன்ருல் !’

பதவுரை

மாண்புறு கல்வி – சிறப்புப் பொருந்திய கல்வி
மாந்தர் – மக்களின்
மடமையை – அறியாமையை
கொல்வது அல்லால் – கொல்லுமே யல்லாமல்
பூண் பணி போன்று – அணியத் தக்க நகைகள் போன்று

மக்கள் பொன்றிட – மக்கள் இறந்திடும்படி
கொல்லாது ஐயா – கொல்லாது ஐயா!
வித்தையால் – கல்வியால்
விளிந்தான் என்றே – இறந்தான் என்று
வீண் பழி – பயனற்ற பழியை
சுமத்தல் – சுமத்துதல்
நன்றோ – நல்லதா ?
ஆண் பெண் என்று இரு பாலாரும் – ஆண் பெண் ஆகிய இரண்டு பாலாரும்
அறிவுற – அறிவு தெளிவு படும்படி
கற்கை – கற்பது
நன்றால் – நல்லதாகும்

தெளிவுரை : சிறப்புப் பொருந்திய கல்வி மக்களின் அறியாமையைக் கொல்லுமேயன்றி, அணியத் தக்க நகைகள் போன்று மக்கள் இறந்து படும்படி கொல்லாது. கல்வி அறிவினால் இறந்து விட்டான் என்று வீண் பழி சுமத்தல் நல்லதோ ? ஆண் பெண் ஆகிய இருபாலாரும் அறிவு தெளிவு பெறும்படி கற்பது நல்லது.”

இலக்கணம்

கற்கை—தொழிற் பெயர். பூண்பணி—வினைத்தொகை.

15. எல்லன் அறிவு பெறல்

பதவுரை

என்னவே கூறக் கேட்ட – என்று ஆசிரியன் கூறியதைக் கேட்ட
எல்லனும் – எல்லனும்
இதயம் நைந்து – மனம் வருந்தி
முன்னம் – முதலிலேயே
யானும் அறியாது – நான் அறியாது
மூடரில் – முட்டாள்களில்
முதன்மை பெற்றே – முதல் இடம் பெற்றே
இன்னமும் – இன்னும்
அறிவு மாழ்கி – அறிவு மயங்கி
இருத்திடல் – இருப்பது
எளிமை ஆமே – அறியாமையே யாகும்
மன்னிய கல்வி – நிலை பெற்ற கல்வியை
என்தன் – என்னுடைய
மைந்தனுக்கு – மகனுக்கு
உணர்த்துக – கற்பித்தருள்க
என்றான் – என்று கூறினான்

தெளிவுரை : கல்வியின் பெருமையை ஆசிரியன் கூறக் கேட்ட எல்லனும் மனம் வருந்தி, “முதலிலேயே யான் இதை அறியாது முட்டாள்களுள் முதலிடம் பெற்றுள்ளேன். இன்னமும் அறிவு மயங்கியிருப்பது அறியாமை ஆகும். நிலை பெற்ற கல்வியினை என் மகனுக்குக் கற்பித்தருளுக” என்று வேண்டிக் கொண்டான்.

இலக்கணம்

மன்னிய—பெயரெச்சம்
உணர்த்துக—வியங்கோள் வினைமுற்று

IV. மறுமலர்ச்சிப் பாடல்கள்

1. நகைச் சுவை

தீண்டாமைப் பேய்

தீண்டாமையின் கொடுமையை விளக்கும் இந் நகைச் சுவைப் பாடல்கள் கவிமணி இயற்றிய 'மலரும் மாலையும்' என்னும் நூலில் உள்ளன.

இந் நூலாசிரியர் கவிமணி, சி. தேசிகவிநாயகம் பிள்ளை. 'ஆசிய ஜோதி' என்னும் கவிதை நூலை எழுதியவர் இவரே. இவர் பிறந்தது தேரூர். காலம் 1876 - 1954. தந்தையார்– சிவதாணு பிள்ளை; தாய் - ஆதிலட்சுமி.

ஆனந்தக் களிப்பு

(திரண்ட கருத்து)

1. தீண்டாமைப் பேயின் குறும்புச் செயல்கள் அனைத்தையும் தெரிந்து கொள்வீர்களா ?

2. அது கண்களுக்குத் தெரியும்; இருகால்களும் நிலத்தில் பதிய நடக்கும்; நியதியில்லாதது; நீதிநெறியை நடுநிலையில் காணுக் கேவலமான பேய்.

3. அப்பேய் மண் பாத்திரத்தினுள்ளும் இருக்கும். அதில் வைத்துள்ள பண்டத்திலும் மறைந்திருக்கும். வெண்கலம், வெள்ளி, பொன் முதலியவற்றைக் கண்டால் அப் பேய் வெட்கமடைந்து வெளியேறிவிடும்.

4. அப் பேய், நண்பராயினும் கூடியிருக்க அனுமதியாது; அவர் கொண்டு தருபவற்றை உண்ணவிடாது; நம்மைத் தேடி வருவோரை அன்புடன் வீட்டுத் திண்ணையில் உட்கார வைக்க விடாது.

5. அப்பேய் கப்பலில் ஏறிப் பயணம்செய்யப் பயப்படும்; சில காப்பிக் கடைகளை எட்டிப் பார்க்கவும் வெட்கப்படும்; சொல்லப்படும் புகைவண்டியுள்ளே அது தன் கோபத்தை அடக்கிக்கொண்டு ஒடுங்கியிருக்கும்.

6. முன்னமேயே பெரியோர்கள் அதை வெட்டி மூடிப் புதைத்தும் உயிர்பெற்று மீண்டும் முளைத்தது. பேய்களும் கண்டு அஞ்சும் பெரிய பேய் இது.

7. இந்தப் பெரும் பேய் இனிமேலும் நம் இந்திய நாட்டில் இருந்திடலாமா ? நாம் அதனைக் கப்பலில் ஏற்றிடுவோம்; நடுக்கடலில் கொண்டு தள்ளுவோம்.

அருஞ்சொற்பொருள்

அஞ்சும் – பயப்படும், சேட்டை – குறும்புச்செயல், கலம் – பாத்திரம், நிண்ணயம் – ஒழுங்குமுறை.

இலக்கணம்

காணு—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

2. பெண்மை

நூலாசிரியர் – சுப்பிரமணிய பாரதியார். இப்பாடல்கள் ‹பாரதியார் கவிதைகள்' என்ற நூலில் உள்ளன. இவரது காலம் 1882 முதல் 1921வரை. நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் மிக்கவர். பெண்களின் விடுதலைக்குப் பெரிதும் பாடுபட்டவர். இவருடைய பாடல்கள் வீரம் செறிந்தவை.

ஊர்–எட்டயாபுரம். பெற்றோர் சின்னசாமி ஐயர், இலக்குமி அம்மையார்.

பெண்கள் விடுதலைக் கும்மி

1. **கும்மி யடி ! தமிழ் நாடு முழுதும்**
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி !
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மைகண் டோமென்று கும்மியடி ! (கும்மி)

தமிழ்நாடு முழுதும் குலுங்கும்படி கைகொட்டிக் கும்மி யடியுங்கள். நம்மைப் பிடித்த பேய்கள் போனதால் நன்மை விளைந்தன எனக் கும்மியடியுங்கள்.

2. **ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்**
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார் ;
வீட்டுக்குள் ளேபெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார். (கும்மி)

புத்தகங்களைப் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியிருந்தவர்கள் இறந்துவிட்டார்கள். பெண்களை வீட்டில் பூட்டிவைக்கும் மக்கள் தலைகவிழ்ந்திருக்கிறார்கள்.

3. மாட்டையடித்து வசப்படுத்தித் தொழுவத்தில் கட்டும் வழக்கம்போல, வீட்டிலும் பெண்களை வசப்படுத்தி வந்தார்கள். அவ்வழக்கத்தினை அகற்றிவிட்டோம் என்று கும்மியடியுங்கள்.

4. நாயை நல்ல விலைக்கு விற்பவர் அதனிடம் யோசனை கேட்பரோ? அதுபோல், நம்மைக் கொல்வதற்குத் துணிவின்றி அங்நிலையில் வைத்துள்ளனர். நம் எண்ணம் அறியாமல் தாம்

விரும்பியவர்களுக்குப் பொருள்பெற்று மணம்செய்து கொடுத்தனர்.

5. பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்;
எட்டு மறிவினில் ஆணுக்கிங் கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி! (கும்மி)

பெரிய பட்டங்களைப் பெறவும், சட்டங்கள் செய்யவும் உலகில் பெண்கள் முன்வந்துள்ளனர். ஆய்ந்துபெறும் அறிவில் ஆண்களுக்குப் பெண் தோற்றவள் அல்லள் என்று கும்மியடியுங்கள்.

6. ஒருவனை அன்போடு மணந்து, அவன் காரியங்களுக்கெல்லாம் கைகொடுத்துதவி, பழைய காலத்தைக் காட்டிலும் அறங்கள் பலசெய்து பெருமையுடன் வாழ்வோம் என்று கும்மியடியுங்கள்.

3. இயற்கை

வெங்கதிர்

இயற்கையாகிய கதிரவனின் பெருமையை விளக்குவது.

இதனை இயற்றியவர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார். பிறந்த ஊர் துள்ளம். வாழ்ந்த ஊர் சென்னை. பெற்றோர் விருத்தாசல முதலியார், சின்னம்மையார். காலம் கி. பி. 1883 முதல் 1954 வரை.

இவர் 'தமிழ்த் தென்றல்' என்று போற்றப்படுபவர். பெண்ணின் பெருமை, இளமை விருந்து, புதுமை வேட்டல் முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார். 'வெங்கதிர்' என்ற இப்பாடல் 'புதுமை வேட்டல்' என்ற நூலில் உள்ளது. கதிரவனை முன்னிலைப்படுத்திப் பல அரிய கருத்துகளை விளக்கியுள்ளார்.

திரண்ட கருத்து

1. வெங்கதிரே! நீலக்கடலோரத்தில் நிதமும் விரைந்து எழுவது ஏன்? உன் அழகான உதயத்தில் சிறு கூத்தும் அசைவும் ஏற்படுவதேன்?

2. வெங்கதிரே! பசுமையான பச்சைக் கடலிலே உன் செவ்வொளி அசைகிறது. சித்தத்தில் நுழையும் சித்திரமோ! இதனைத் தீட்டி வரைவோர் உளரோ?

3. கதிரவனே! ஆகாயமாகிய கடலிலே நீ நீந்திச்சென்று, மற்ற நட்சத்திரக் கூட்டங்களையெல்லாம் விரட்டலாமா? குளிர்ச்சி பொருந்திய கடலை மீண்டும் நீ அடைவது தாயினிடம் கொண்ட அன்பின் காரணமாகவோ!

4. கதிரவனே ! நீ உமிழ்கின்ற பேரொளியிலே மக்கள் நேரானமுறையில் மூழ்கினுல் அவர்களுக்கு நோயில்லே; பேயும் இல்லே. இதனே நுண்மையான அறிஞர்கள் விளக்கவேண்டும்

5. கதிரவனே ! எல்லோருக்கும் உன் ஒளியை அமிழ்தம் போல் பொழிகின்ருய். அப்படியிருக்க, பூமியில் 'எல்லோரும் பொது' என்ற கொள்கை நன்கு பொருந்தாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

6. ஒவ்வொரு சிறு அணுவிலும் உன் அருள் ஒளி ஊடுருவி, அருகில் சென்று நுணுகிப் பாய்கிறதே! கதிரவனே! செய்நன்றி மறப்பதுண்டோ ?

7. புறத்தே தோன்றும் இருளே அகற்றி, நீ உன் கருணே யினுல் காக்கின்ருய்; உள்ளொளியையும் காட்டுகிருய். கதிர வனே ! நீ ஓங்கி உயர்ந்து வாழ்க !

அருஞ்சொற்பொருள்

வெங்கதிர்—வெம்மை மிக்க கதிர், விரைந்து—வேகமாய், ஆல்கிறது—அசைகிறது, விள்ளல்—விளக்கம்

இலக்கணம்

நுண்மை + அறிஞர் = நுண்ணறிஞர்
எழுச்சி—தொழிற்பெயர்
வரைவோர்—வினயாலணேயும் பெயர்
பொருந்தாமை—எதிர்மறைத் தொழிற்பெயர்
உள் + ஒளி = உள்ளொளி

4. நோயற்ற வாழ்வு

நூலாசிரியர் : நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளே. இவரது காலம் 1888 முதல் 1972 வரை. இவரது கவிதைகள் எளிமையானவை. சமூகத்தின் அறியாமையைக் கண்டு நெஞ்சம் நைந்து எழுதுகிருர். நோயற்ற வாழ்வினே மக்கள் மேற்கொள்ள விரும்புகிருர். அவரது உள்ளக் குமுறல்கள் எழுத்திலே வடிவெடுத்துள்ளன.

திரண்ட கருத்து

பாரததேசம் உலகினில் சிறந்தது என்றும், பரப்பளவிலே பெரியது என்றும், ஒப்பில்லா உயர்ந்த யோக சித்தர்கள் நிறைந்திருந்தனர் என்றும், நாடு பல வளங்கள் நிறைந்த தென்றும், பகுத்தறிவிலே பாரத மக்கள் உயர்ந்தவர்கள் என்றும் படித்துள்ளோம்; கேட்டுள்ளோம். அம்மக்கள் இன்று புதுப்புது நோய்களாலே மிக விரைவில் புழுக்கள்போல விழுந்து இறந்துபடுகின்றனர். அதனேக் கண்டும் அந்நோயி லிருந்து விடுபட வழிகள் தேடாமல் விலங்குகளேப்போல

வாழ்ந்து 'விதி' எனத் தர்க்கம்பேசி (வீணர்களாய்) சோம்பேறிகளாய் இருப்பது நல்லதோ ?

நிதமும் வியாதியிலே பிறந்து, அதனையே உட்கொண்டு, கொடிய வியாதியிலேயே வளர்ந்து அவ்வியாதியினால் இறக்கின்றோம். ஆடை ஆபரணங்களினாலே அலங்கரித்துக் கொண்டோமேயன்றி அறிவினாலும், ஒழுக்கத்தினாலும் எவ்விதத்திலும் அழகுபடுத்திக் கொள்ளவில்லை. வேலையிலும் பணத்திலும் மகிழ்ச்சியெல்லாம் இருந்ததுபோல் பழகினோம்; இம்முறையில் நம்மையேன்றி மற்றவர்களையும் பழக்கினோம், துணிவற்றவர்களானோம்; தூய்மையற்றவர்களானோம்; நேர்மையான நடத்தையற்றவர்களானோம். நோய்களைக் களைந்து வாழும் வாழ்க்கையை இனியாவது தொடங்குவோம்.

இலக்கணம்

படித்தனம், கேட்டோம்—தன்மைப்பன்மை வினைமுற்று
வாழக்கை—தொழிற்பெயர், பழகினோம்—தன்வினை,
பழக்கினோம்—பிறவினை

அருஞ்சொற்பொருள்

அருந்தி - உண்டு; வீணர் - பயனற்றவர்; நித்தம் - நாள் தோறும்; சுசிகர நடத்தை - ஒழுக்கமான நடத்தை; ஒப்பு - சமம்; வளம் - செழுமை; துடைக்கும் - ஒழிக்கும்.

5. எந்நாளோ ?

'தமிழர் சமுதாயம் கல்வியும் செல்வமும் பெற்று, கலைகளைப் போற்றி, ஒற்றுமையாக மற்றவர் புகழ வாழ்வது எந்நாளோ' என்று ஏங்கிப் பாடிய 'எந்நாளோ' என்னும் இப்பாடல்கள் 'பாரதிதாசன் கவிதைகள்' என்னும் நூலில் உள்ளன.

நூலாசிரியர்: 'புரட்சிக் கவிஞர்' என்றும், 'பாவேந்தர்' என்றும் போற்றப்படும் பாரதிதாசன். இவரது இயற்பெயர் கனகசுப்பு ரத்தினம் என்பது. இவரது காலம் 1891 முதல் 1964 வரை.

பெற்றோர் கனகசபை முதலியார், இலட்சுமி அம்மையார். பாரதியாரிடம்கொண்ட பேரன்பினால் தம் பெயரைப் 'பாரதிதாசன்' என மாற்றிக்கொண்டார்.

நம் பாடப் பகுதியில் வந்துள்ள பாடல்கள் இந்நூலாசிரியரது கவிதைகளின் தொகுதியில் இடம் பெற்றுள்ளன. இவர் இயற்றிய வேறு நூல்கள் 'அழகின் சிரிப்பு', 'குடும்ப விளக்கு', 'இளைஞர் இலக்கியம்' முதலியன.

இப்பாடல்களால் ஆசிரியரின் நாட்டுப் பற்றும், உள்ளத் துடிப்பும் நன்கு தெரியவருகின்றன.

திரண்ட கருத்து

1. என் அருமையான தமிழ் நாட்டின்கண் வாழும் எல்லோரும் கல்விகற்று, பல அருங்கலை அறிவால், வீரத்தால், அன்பினுல் உயர்ந்த இமயமலையையொத்த நீள்புகழ் அடைந்து இன்பம் அடைந்துள்ளார் என்று கூறக் கேட்கும் நாள்—எந் நாளோ ?

2. தாய்போன்ற அழகு மிகுந்த தமிழை என் தமிழ்ச் சான்றோர்களின் கவிதைகளை, ஆயிரம் மொழிகளிலும் மொழி பெயர்க்கப்படுவதனைக் காண இவ்வுலகம் விரும்புகின்றது என்ற தேன்போன்ற தீஞ்சுவையான சொல், ஆறு போலத் தொடர்ந்து என் செவியில் பாயும் நாள் எந்நாளோ ? யார் இதனை இங்கே கூறுவார்கள் ?

3. தமிழர்கள் கூட்டம், வெள்ளம் பெருக்கெடுப்பதைப் போன்று இருக்கும். அக்கூட்டத்தினர் வீரமுடையவர்கள். அவர்கள் உள்ளத்தினுல் ஒன்றுபட்டு நிற்பவர்கள் உடலினுல் பலராகக் காணப்படுவார்கள். அவர்களை வஞ்சனையால் நெருங்க முடியாது என உலகம் கலங்குவதைக்கண்டு மகிழ்ச்சியால் குதிக்கும் நாள் எந்நாளோ ? உள்ளம் மயங்குகின்ற நாள் எந்நாளோ ?

அருஞ்சொற்பொருள்

பன்னரும் - சொல்லுதற்கரிய; பராக்கிரமம்-வீரம்; கீர்த்தி-புகழ்; இன்புற்ருர் - மகிழ்வெய்தினுர்; இயம்ப - கூற.

எழில் - அழகு; புவி - உலகம்; அவா - விருப்பம்; பகர்வார் - கூறுவார்.

கள்ளம் - வஞ்சனை; வையம் - உலகம்; சொக்கும் - மயக்கும்; உள்ளம் - மனம்

இலக்கணம்

அருந்தமிழ் = அருமை + தமிழ்—பண்புத்தொகை
எழிற்றமிழ் = எழில் + தமிழ். புவி—இடவாகுபெயர்
நெருங்கொணுது = நெருங்க + ஒண்ணுது
வையம்—இடவாகுபெயர்

6. தொழில்

உழவன்

இப்பாடல்கள் 'தமிழமுதம்' என்னும் நூலில் உள்ளன உழவுத்தொழிலின் சிறப்பையும், உழவரின் சிறப்பையும் விளக்குவன.

இந்நூலை இயற்றியவர்—மதுரகவி, வீ. வே. முருகேச பாகவதர். இவர் 1897 ஆம் ஆண்டு பிறந்தவர்.

திரண்ட கருத்து

1. விடியற்காலையில் கோழி கூவியதைக்கேட்டு, மாட்டை முன்னால் ஓட்டி, ஏர்க்கலப்பையைத் தோளில் தூக்கிக்கொண்டு, உழைக்காமல் இருக்கும் சோம்பேறிகள் நாணும்படி, ஆழமாய் உழுவான் உழவன். ஒவ்வொரு நாளும் அன்புநிறைந்த மனைவி கொடுக்கும் கூழினை, காய்ந்த மிளகாயின் துணைகொண்டு சுவைத்துக் குடிப்பான்.

2. அழகிய, கருணையில்லாதவரின் நெஞ்சம்போல் உள்ள கடுமையான பூமியை உழவன் பிளந்து உழுவான். கதிரவன் வெப்பம் விடமென ஏறும் நேரத்தில், ஏழை உழவன் கைகள் வேலைசெய்து சிவந்திடும். இத்துன்பத்தைப் பார்த்துக் கதிரவன் வருந்திப் பெரிய மலையின் பின்னே மறைவான்.

3. வலைபோன்று கூரைவேய்ந்த குடிசைக்கு வந்து சோர்ந்திருப்பான் உழவன். பொம்மைகள்போன்று பிள்ளைகள் அவனை மொய்த்துச் செல்லென அரிக்கும். காய்ந்த தலையினையுடைய மனைவி சோகமாக இருப்பாள். வறுமை நிலையை எண்ணி எண்ணிப் பெருமூச்சு விடுவான் உழவன்.

4. நல்லவர்களிடையே உள்ள கெட்டவர்கள் போன்று, கதிர்களின் இடையே உள்ள புல்லினை நீக்குவான். பறவைகள், விலங்குகள் வாராமல் அல்லும் பகலும் விளைச்சலின் அருகேயே நின்று, சொல்வதற்கரிய பெருமையுடைய விழியைக் காக்கும் இமைபோலப் பயிரினைக் காப்பான்.

5. வாழ்வின் இன்ப ஊற்றாயிருக்கும் நெல் மணிகள், பால் வைத்திருப்பதைக் காண்பான். மனைவி கருப்பமுற்றாள் எனக் கேட்ட கணவன் மகிழ்வது போல, உழவன் மகிழ்வான். மரகதப் பச்சைக் கொடியில் சிவந்த மணி முற்றித் தலைசாய்ந்து நடனம் புரிவதைக் கண்டு நகைப்பான்.

6. உலகில் உள்ள தொழில்களுக்கெல்லாம் உயிர் நாடி போன்றது உழவுத் தொழில். சோம்பல் இல்லா உழவனின் சேவைக்கு ஈடு இணை இல்லை. தோழனாகிய உழவனின் வாழ்விலே நிலவும் வறுமையைச் சிறிது எண்ணிப் பார்த்தால் அது மலையை விடப் பெரியதாகும். அறிவுடையார் இவ்வுண்மையை மறைக்க மாட்டார்.

அருஞ்சொற்பொருள்

மேழி - ஏர்க் கலப்பை; வெய்யோன் - சூரியன்; களைவான் - நீக்குவான்; வீணர் - பயனற்றவர்; காமரு - அழகுபொருந்திய; சேய்கள் - குழந்தைகள்.

இலக்கணம்

பார்த்து பார்த்து, எண்ணி எண்ணி - அடுக்குத் தொடர்
நகைக்கும் - செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று.

செய்யுட் பகுதி

வினு - விடை

I. வாழ்த்து

1. இராமலிங்க அடிகளாரைப் பற்றிக் குறிப்பு வரைக.

இராமலிங்க அடிகள் மருதூரில் கருணீகர் மரபில் பிறந்தவர். 1823 முதல் 1874 வரை வாழ்ந்தவர். இவர் சாதி சமய வேறுபாடின்றிச் சன்மார்க்க நெறியில் எல்லோரும் ஒன்றுபட்டு வாழவேண்டும் என்று விரும்பியவர்; அதற்காக வடலூரில் சத்திய ஞானசபை, சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் ஆகியவற்றை ஏற்படுத்தியவர்; சோதி வழிபாட்டை எங்கும் பரப்பியவர். இவரது பாடல்கள் அடங்கிய நூல் 'திருவருட்பா' என்பதாகும். இவருடைய பாடல்கள் எளிமையும் உருக்கமும் கொண்டவை.

2. இறைவனை வள்ளலார் யாது வேண்டுகிருர் ?

பொய்யே நிறைந்தவனுகிய என் பிழைகளையெல்லாம் பொறுக்கவேண்டுமென்றும், இழிந்தவனுகிய என்னைக் காத்திடல் வேண்டுமென்றும் இறைவனை வேண்டுகிருர்.

3. 'பேரிடர் தவிர்த்த பெம்மானிடம்' அடிகளார் என்ன கூறுகிருர் ?

பேரிடர் தவிர்த்த பெம்மானை நோக்கி அடிகளார், "இறைவா! உம்மைச் சார்பாய் இருக்கும் தாய் என்று கூறுவதா அல்லது தந்தை என்று கூறுவதா ? சிறப்புப் பொருந்திய குருவே என்று உரைப்பதா அல்லது தெய்வமே என்று கூறுவதா ? என்னவென்று உம்மைப் புகழ்வது ? நான் ஒன்றும் அறிந்திலேன்!" என்று ஏங்கிக் கூறுகின்ருர்.

4. பொருள் கூறுக :

கையனேன் — இழிந்தவன், பேரிடர் — பெரிய துன்பம்
தவிர்த்து — நீக்கி, சாருறு — பொருந்திய.

II. நீதிப் பகுதி

1. திருக்குறள்

1. அன்பில்லா வாழ்க்கை எதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது ?

அன்பில்லா வாழ்க்கையானது பாலைவனத்தில் உள்ள பட்டுப்போன மரம் தளிர்த்ததைப் போன்றது. பட்ட மரம் தளிர்க்காது. அன்பில்லா வாழ்க்கை பயனற்றது.

2. என்புதோல் போர்த்த உடம்பு எது ?

அன்போடு கூடிய வாழ்க்கையே இன்பமுடையது. அன்பில்லாதாருடைய வாழ்க்கையானது எலும்பைத் தோல் போர்த்தது போன்றது. அன்போடு பொருந்திய உடம்பே உயிருள்ள உடம்பாகும். அன்பில்லாத உடம்பு உயிரற்ற உடம்பாகும்.

3. எதனினும் எது நன்று என்கிறது குறள் ?

பிறர்செய்த எல்லை கடந்த தீச்செயலைப் பொறுப்பது நல்லது. ஆனால் அக்குற்றத்தினை மனத்தில் கொள்ளாது மறந்து விடுதல் அப்பொறுத்தலினும் நன்று என்கிறது குறள்.

4. சான்றோர் யாரைப் பொன்போல் பொதிந்து வைப்பர் ?

பிறர் செய்த தீமைக்காகத் தண்டிப்பவர்களைச் சான்றோர் மனத்தில் பொருளாகக் கொள்ளமாட்டார். அத்தீமையைப் பொறுத்தவர்களைக் காணின், அவர்களை என்றும் மனத்தில் வைத்துப் பொன்போல் போற்றுவர்

5. 'கள்ளாமை' பற்றி வள்ளுவர் கூறுவதைத் தொகுத்து எழுது.

பிறரது பொருளைக் கள்ளத்தால் கவர்ந்து கொள்வோம் என்று மனத்தால் நினைப்பதும் தீமையைப் பயப்பதாகும். களவினால் பெற்ற செல்வமானது வளர்வது போல் தோற்றமளித்துப்பின் ஒன்றுமின்றி அழிந்து போகும். களவைத் தவிர வேறொன்றினையும் அறியாதவர், தீய நினைவுகளை நினைக்கும்போதே கெடுவர்.

6. நிலைத்து நிற்கும் உடைமையும், நில்லாது நீங்கும் உடைமையும் எவை ?

நிலைத்து நிற்கும் உடைமை ஊக்கம். நில்லாது நீங்கும் உடைமை பொருள். ஊக்கமானது ஒருவனுக்கு இருப்பின் அதுவே ஒரு செல்வம் போன்றது. ஊக்கம் உள்ளத்துப் பண்பாகையால் நிலைத்து நிற்கும். பொருள் நிலையில்லாதது; நீங்கிவிடும் தன்மையது.

7. ஊக்கமுடையானிடம் தேடி வருவது எது ?

அசைவில்லாத ஊக்கமுடையவனைச் செல்வம் வழி தேடிக் கொண்டு வந்தடையும். ஊக்கத்தினைப் பெற்றிருப்பதால் விடாமுயற்சியுடன் செல்வம் தேடுவான்.

8. யானையையும், புலியையும் வள்ளுவர் எதற்கு உவமையாகக் கூறுகிறார் ?

யானை உருவத்தில் பெரியது. புலி உருவத்தில் சிறியது. ஆயினும் யானைக்கு ஊக்கம் இன்மையால், ஊக்கமுடைய புலி தாக்கும் பொழுது அஞ்சுகிறது. பெரிய படையுடன் கூடிய அரசனையும், ஊக்கமுடைய சிற்றரசன் சிறு படையினால்

எதிர்த்து வென்றுவிடுவான். ஊக்கமுடைமைக்குப் புலியையும், ஊக்கம் இன்மைக்கு யானையையும் உவமையாகக் கூறுகிறார்.

9. நாட்டின் இலக்கணம் யாது ?

குறையாத விளைச்சலையும், அதனைச் செய்யும் உழவரையும், சான்றோரையும், செல்வரையும் பெற்றிருப்பதே நாடு. நாட்டில் வாழ்பவர் செல்வத்தை நாடிச் செல்லாமல், அதுவே நாடிவரும் செல்வத்தையுடையது நாடு. பசியும், நீங்காப் பிணியும், அழிவு செய்யும் பகையும் இல்லாத நாடே நல்ல நாடாகும்.

10. பெரியாரைப் பிழைத்தலால் ஏற்படும் தீமைகள் யாவை ?

எரியால் சுடப்பட்டாலும் சில சமயம் தப்பலாம். பெரியோரை மதியாதிருப்பின், அப் பெரியோரால் அவர்க்கு என்றும் துன்பம் விளையும். காத்தற்கு அருமையான விரதங்களை உடையார் சினங்கொண்டால் அரசனும் இடையில் தன் பதவியிழந்து வருந்துவான்.

11. உயிருக்கு ஊறுபாடில்லாத வழி யாது ?

முன் உண்ட உணவு செரித்தபின் தேவையான அளவு உணவு உண்டால் அவன் நீடித்த காலம் வாழ்வான். மாறுபாடில்லாத உணவை, அவன் மனம் விரும்பும் அளவு கொள்ளாமல், அளவறிந்து உண்டால் உயிருக்கு எவ்வித ஊறுபாடும் இருக்காது.

12. பிழையில்லாமல் செய்யவேண்டியது யாது ?

முதலில் நோயை அறிந்து, பின் அது வந்ததற்கான காரணம் அறிந்து, பின் அதனைத் தணிக்கும் வழியைப் பிழையின்றிச் செய்தல் வேண்டும்.

13. பெருமை உடையாரின் சிறப்பியல்புகள் யாவை ?

பெருமையுடையவர்கள் வறுமையுற்றாலும் பிறரால் செய்வதற்கு அருமையான செயல்களைச் செய்யப் பின்வாங்காமல் நிலைத்து உறுதியுடன் நிற்பர். பிறருடைய நன்மையைப் பலர்முன் பாராட்டி, அவர்களின் குற்றத்தை மறைத்து விடுவார்கள். இவைகளே பெருமையுடையவர்களின் சிறப்பியல்புகள் ஆகும்.

14. இல்லாமை ஒருவனுக்கு எப்பொழுது இழிவாகாது ?

சான்றாண்மை என்னும் வலிமையான குணத்தை ஒருவன் பெறின் அவனுக்கு வறுமை இழிவாக இருக்காது. வறுமையினால் அவன் துன்பமடையமாட்டான்.

15. சான்றாண்மைக் குணம்பற்றிக் குறள் கூறுவது யாது?

தவமாவது எந்த உயிரையும் கொல்லாத நல்லறமாகும். அதுபோல, பிறர் செய்யுங் குற்றங்களைப் பலர் அறியச் சொல்லாமையே சால்பு எனப்படும்.

ஒருவர் சால்புடையவர் என்பதனை அறியும் வழி எது என்றால், தமக்கு நிகரில்லாத தாழ்ந்தவரிடத்தும் தோல்வியை ஏற்றுக் கொள்வதே யாகும்.

இத்தகைய சால்பு என்னும் வலிமை ஒருவரிடம் அமைந்திருக்குமானால் வறுமை அவருக்கு இழிவைத் தராது. அவர் வறுமையிலும் செம்மையாக வாழும் முறையறிந்து பெருமையாக வாழ்வார்.

16. கொல்லாமையும் சொல்லாமையும் நலம் பயப்பது எப்படி ?

எவ்வுயிரையும் கொல்லாமல் அன்பு பாராட்டுவது தவத்தின் சிறப்பு. பிறரது குற்றங்களை யெல்லாம் ஒருவரிடமும் சொல்லாமல் இருப்பது சான்றாண்மையின் சிறப்பு. இத்தகைய குணம் பெறின் கொல்லாமையும், சொல்லாமையும் நலம் பயக்கும்.

17. இரவாமையின் சிறப்பினை வள்ளுவர் எப்படிக் கூறுகிறார்?

தாமாகவே மகிழ்ந்து கொடுக்கும் இயல்பினர் இடத்தும் இரந்து செல்வம் பெறுமலிருப்பது உயர்வு. அப்படிப்பட்ட திண்மை சிறப்புடையதாகும். இரந்து செல்வம் பெறுவதைவிட இரவாமல் வறுமையில் உழல்வது சிறப்பு. தான் தொழில் செய்து கிடைத்த செல்வத்தினால் சமைத்த நீர்த்த கூழ் கிடைப்பினும், அவ்வெளிய உணவே உள்ளத்திற்கு இன்பம் பயக்கும். ஆதலின், வள்ளுவர் இரத்தல் மிக இழிவானது என்றும், இரவாமை மிகச் சிறப்பானது என்றும் கூறுகிறார்.

18. பொருள் கூறுக :

ஒறுத்தார்—தண்டித்தார்;	வீவர்—அழிவர்
மிக்கவை—தீயவை ;	முரிந்து—சிதைந்து
அற்றம்—பிறர் குற்றம்;	இளிவு—இழிவு
தேற்றாதவர்—அறியாதவர்;	கரவாது—மறைக்காது

19. பிரித்து எழுதுக:

அன்பகத்தில்லா = அன்பு + அகத்து + இல்லா

பொருளுடைமை = பொருள் + உடைமை

கரவாதுவந்தீயும் = கரவாது + உவந்து + ஈயும்

நெடிதுய்க்கும் = நெடிது + உய்க்கும்

20. **இலக்கணக் குறிப்பு தருக:**

வற்றல்—தொழிற்பெயர்; உறுபசி—உரிச்சொல்
ஒறுத்தார், பெற்றார்—வினையாலணையும் பெயர்கள்
கள்வேம்—தன்மைப்பன்மை வினைமுற்று
வீவர்—பலர்பால் வினைமுற்று
உண்க—வியங்கோள் வினைமுற்று

2. திரிகடுகம்

1. **திரிகடுகம் கூறும் மூவகைச் செல்வங்கள் யாவை?**

பிறர் நம்மை விரும்பிப் புகழும்போது நாணம் அடைதலும், நமமை விருமபாதவர் இகழ்ந்து பேசும்பொழுது அதனைப் பொறுத்தலும், மேகத்தைப் போலக் கைம்மாறு கருதாது உதவுவதும் ஒருவனுக்குச் சிறந்த செல்வங்களாகும்.

2. **நமக்கு நண்பர் ஆகத் தக்கவர் யாவர்?**

நல்ல முயற்சியுடன் கடன்படாது வாழ்பவரையும், வீட்டிற்கு வந்த விருந்தினரை உபசரிக்கும் பண்புடையவரையும், ஆசிரியர் சொல்லியவற்றை மறவாமல் மனத்தில் கொண்டிருக்கும் சிந்தனையாளரையும் நண்பராகக் கொள்வது நல்லது.

3. **செல்வத்தை அழிக்கும் கருவிகள் யாவை?**

தன்னைத்தானே புகழ்ந்து கொண்டு செருக்கடைவதும், வீணாகக் கோபப்படுவதும், பிறர் பொருளைத் தான் பெற வேண்டும் என்று விரும்புவதும் ஆகிய குணங்கள் ஒருவனது செல்வத்தை அழிக்கும் கருவிகளாகும்.

4. **ஒருவனை உயர்வடையச் செய்யும் வழிகள் யாவை?**

இளமைப் பருவத்தில் கல்விகற்று உயர்வடைதலும், பின் தாய் தந்தையரைப் போற்றுதலும், சான்றோர்கள் சென்ற வழியில் சென்று ஒழுக்கமுடன் இருத்தலும் ஒருவனை உயர்வடையச் செய்யும் வழிகளாம்.

5. **அஞ்சுகின்ற மூன்று தன்மைகள் யாவை?**

ஐம்புலன்களையும் அடக்கியாளும் திறமை படைத்தவரிடம் வறுமை வர அஞ்சும். எப்பொழுதும் அறத்தை நினைத்துச் செயல்படுபவரிடம் பாவம் நெருங்க அஞ்சும். உயிர்க்கொலை செய்பவர்களைக் காணின் எல்லா உயிர்களும் அஞ்சும்.

6. **பிரித்து எழுது :**

கோளாளன் = கோள் + ஆளன்
வரவுணர்ந்து = வரவு + உணர்ந்து
பெருநெறி = பெருமை + நெறி
விழுப்பநெறி = விழுப்பம் + நெறி

7. **பொருள் கூறுக:**

ஒழுகல்—நடத்தல்	நல்குரவு—வறுமை
கேளாக—நண்பனாக	அல்பொருள்—அறம் அல்லாத பொருள்
தருக்கல்—செருக்கடைதல்	வெகுளி—கோபம்

8. **இலக்கணக் குறிப்பு தருக :**

திறம்—திறன் என்பதன் ஈற்றுப்போலி.
தூரா—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

3. அறநெறிச்சாரம்

1. **இளமையில் அறம் செய்யும் முறைபற்றி அறநெறிச்சாரம் கூறுவது யாது ?**

இனிய சொல்லையே விளைநிலமாகவும், ஈகைக் குணத்தை அந் நிலத்தில் விதைக்கும் வித்தாகவும் கொண்டு, கொடுஞ் சொல்லாகிய களையைக் களையவேண்டும். பின், வாய்மையாகிய எருவிட்டு, அன்பாகிய நீரை அப் பயிர்களுக்குப் பாய்ச்ச வேண்டும். அறமாகிய கதிரை ஈன, நல்வினையாகிய பசும் பயிரை இளமைப் பருவத்திலேயே செய்தல் வேண்டும் என்று அறம் செய்யும் முறைபற்றி அறநெறிச்சாரம் கூறுகிறது.

2. **அறிவுடையார் ஆராயும் முறை யாது ?**

ஒரு பொருளிடத்து விருப்பு வெறுப்பின்றி அதனை ஆராய்ந்து பார்க்கவேண்டும். ஏனெனில், அப்பொருளிடம் விருப்பம் இருப்பின் அதில் உள்ள குற்றம் தெரியாது; வெறுப்பு இருப்பின் அதனிடத்துள்ள குணம் தெரியாது. சான்றோர் நடுநிலையாக நின்றே பொருளை ஆராய்ந்து பார்ப்பர்.

3. **பலர் கூறினும் உண்மை பொய்க்காது என்பதை முனைப்பாடியார் எவ்வாறு விளக்குகிறார் ?**

நஞ்சினைக் கண்டு பலரும் இதுவே அமிர்தம் என்று கூறினாலும், அமிழ்தினைப் பெற்ற ஒருவன் அதனை நம்ப மாட்டான். பலர் கூறும் கூற்று உண்மையாக இருக்குமோ என்று எண்ணி அமிழ்தத்தை நீக்கி, நஞ்சை உண்ண மாட்டான். ஆதலின் பொய்யைப் பலர் உண்மை என்று கூறிய போதிலும் உண்மையாகி விடாது.

4. **மக்கள் பிறப்பு எப்பொழுது சிறப்படையும் ?**

இளமையில் கற்க வேண்டியவற்றைக் கற்று, அவ்வாறு கற்றவைகளைப் பெரியோர்பால் கேட்டுத் தெளிந்து, பின் தெளிந்தபடி அந்நெறியில் நின்று வாழ்தலுமாகிய குணத்தை ஒருவன் பெற்றால், மக்கள் பிறப்பைப் போல இன்பம் செய்யக் கூடியது வேறில்லை.

5. ஏன் தற்புகழ்ச்சி கூடாது என அறநெறிச்சாரம் கூறுகிறது?

விரிந்த கதிர்களையுடைய சூரிய வெப்பத்தைக் கையில் உள்ள சிறிய குடையும் காக்கின்றது. அதுபோல, பல நூல்களைக் கற்றுத் தெரிந்தவர்களையும் வெல்லக்கூடிய அச்சாணி போன்ற சொற்கள், சில நூல்களையே கற்றவர் களிடமும் உண்டு. ஆதலின் நமக்குத் தெரியாதவை ஒன்றுமே இல்லை எனச் செருக்கு அடைதல் கூடாது என்று அறநெறிச்சாரம் கூறுகிறது.

6. பொருள் கூறுக:

வன்சொல்—கடுமையான சொல்
ஆய்தல்—ஆராய்ந்து பார்த்தல்
காய்தல்—வெறுத்தல்
ஏமாப்பு—செருக்கு

7. எதிர்ச்சொல் கூறுக:

காய்தல் × உவத்தல் அமிர்தம் × நஞ்சு
வன்சொல் × இன்சொல் குணம் × குற்றம்

8. பிரித்து எழுதுக:

இன்சொல் = இனிமை + சொல்
அச்சாணி = அச்சு + ஆணி
தற்புகழ் = தன் + புகழ்
பிறிதில்லை = பிறிது + இல்லை

III. கதைப் பகுதி

1. அரிச்சந்திர புராணம்

1. வாடிய மனமுடையாள் யார்? அவள் மறுகி விழக் காரணம் என்ன?

தளர்ந்த கைகளையும், வாடிய மனத்தையும் உடையவள் அரிச்சந்திரனின் மனைவி சந்திரமதி. விறகு கொண்டு வரக் காட்டிற்குச் சிறுவர்களுடன் சென்ற அவள் மகன் தேவதாசன் நீண்ட நேரமாகியும் திரும்பி வராததைக் கண்டு மருண்டு உடன் சென்ற சிறுவர்களைக் கேட்டாள். பாம்பு கடித்து தேவதாசன் இறந்து விட்டான் என்று அவர்கள் கூறக் கேட்டதும் மூச்சுவிடவும் முடியாமல் மயங்கி வீழ்ந்தாள்.

2. இறந்த மகனைக் காண சந்திரமதி ஏன் உடனே செல்லவில்லை?

தன்னை விலை கொடுத்து வாங்கிய மறையவன் என்ன சொல்வானோ என்று அஞ்சினாள். வேலைகளை யெல்லாம் முடித்த பின்பே கானகம் செல்ல இயலும் என்பதனால் தன்

துக்கத்தை அடக்கிக் கொண்டு வேலைகளை விரைவில் செய்ய முற்பட்டாள்.

3. கானகத்தில் சந்திரமதி தேடிச் சென்ற இடமெல்லாம் எவ்வாறு இருந்தது ?

கானகத்தில் சந்திரமதி தேடிச் சென்ற இடமெல்லாம் கண்ணீரும் உதிரமும் நின்றன. வழியில் உள்ள முட்புதர்கள் அவளைக் கிழித்தமையால் எங்குப் பார்த்தாலும் இரத்தம் சிந்தி நின்றது. மரக் கிளைகளில் எல்லாம் சந்திரமதியின் கூந்தல் சிக்கி அறுபட்டுத் தொங்கிக் கொண்டிருந்தது. நெருங்கிய காடு முழுவதும் அவளுடைய கிழிந்த துணிகள் காணப்பட்டன.

4. தன் மகனைச் சந்திரமதி எந்நிலையில் கண்டாள் ?

சந்திரமதி உடல் கருகி, மனம் உருகி, விறகு வைத்திருந்த ஆலமரத்தின் பக்கம் வந்தடைந்தாள். தன்மகன் உடலைத் தேடினாள். கழுகுகளும், பேய்களும், நரிகளும், குறட் பேய்களும் கூடி அப்பிணத்தைத் தின்னச் சூழ்ந்து கொண்டிருக்கும் கொடிய காட்சியினைக் கண்டாள்.

5. இறந்த மகனைக் கண்டு தாய் புலம்பும் புலம்பலைச் சுருக்கி வரைக.

"பனியில் நனைந்தும், வெயிலில் காய்ந்தும், பசியால் வருந்தியும் இறக்காமல், கொடிய அரவம் தீண்டி இறந்த பாவம் என்னவோ ? விடத்தால் தரைமீது இறந்து கிடக்கும் என் செல்வமே! நானும், என் தலைவனாகிய மன்னனும் இனியாரை நம்பி வாழ்வோம்? உன் தந்தை அறநெறிப்படி செங்கோல் செலுத்தியவர்; யாவரினும் வலிமையுடையவர். அவர் நம்மை மறையவனிடமிருந்து விடுவிக்க வருகின்றபொழுது 'என் ஆசை மகன் எங்கே?' என்று கேட்டால் பாவி யான் என்ன பதிலளிப்பேன்? செல்வமே! செங்கோல் செலுத்தும் மற்றவர் நாட்டை யழித்து அச்சேனையை வைத்தும், நீதியை முழுவதுமாக அறியா அமைச்சரை வைத்தும், தீவினை விளைக்கும் குடிகளை வைத்தும் நாங்கள் அரசு புரியவில்லையே! எங்கட்கு இத்தீவினையை நீ விளைவித்தது முறையோ! இறைவனே!" என்று கூறிப் புலம்பினாள்.

6. இடஞ்சுட்டி விளக்கு:

(அ.) 'அண்டரும் மறுகி ஏங்க வாய்திறந்தரற்றல் உற்றாள்.'

இடம்: சந்திரமதி தன் மகனைக் காட்டில் தேடி அலைந்து தருப்பைப் புதரின் அருகே கண்டு மகனை மடிமீது கிடத்திக் கொண்டு அழுதாள்.

விளக்கம் : தேவர்களும் வருந்தி ஏங்கும்படி வாய்திறந்து அழுதாள். அடக்கிவைக்கப்பட்ட துக்கம் மகனைக் கண்டதும் வீறுகொண்டு எழ அழுகிருள் அக்கானகத்தே.

(ஆ) "எதிரேது சொல்வேன் மகனே?"

இடம் : மகனை மடிமீது வைத்துக்கொண்டு பலவகையாகச் சொல்லி அழுகிருள் அன்னை சந்திரமதி.

விளக்கம் : "உன் தந்தை நம்மை விடுவிக்க எண்ணி ஒரு நாள் வருவார். அப்போது 'என் ஆசை மகன் எங்கே?' என்று கேட்டால் யான் என்ன பதில் கூறுவேன்" என்று கதறி அழுகிருள்.

7. பொருள் கூறுக :

உணங்கி — வருந்தி
அரவு — பாம்பு
தூறு — புதர்
மாழ்கி — மனம் வருந்தி
குசை — தருப்பை
வடம் — ஆலமரம்
முண்டகம் — தாமரை
அண்டரும் — தேவரும்

8. எதிர்ச்சொல் தருக:

செங்கோல் × கொடுங்கோல்
இறந்தான் × பிறந்தான்
அகம் × புறம்
குமரன் × கிழவன்

9. இலக்கணக் குறிப்பு தருக:

வாடிய — பெயரெச்சம்; சால — உரிச்சொல்
உருகி — வினையெச்சம்
அறியேம்—தன்மைப் பன்மை வினைமுற்று

10. பிரித்து எழுதுக :

உயிர்த்திலள் = உயிர்த்து + இலள்
அறிவழிந்துருகி = அறிவு + அழிந்து + உருகி
வடத்தினுக்கருகில் = வடத்தினுக்கு + அருகில்
வாய்திறந்தரற்றும் = வாய் + திறந்து + அரற்றும்

2. குசேலோபாக்கியானம்

1. துளவத்தாமனைக் குசேலன் கண்டவுடன் அவனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை விளக்கு.

வறுமையில் வாடுபவன் புதையலைக்கண்டு மகிழ்ந்தது போலவும், உண்ணும் உணவை இழந்தவன் அமுதத்தைப் பெற்றது போலவும், வெயிலில் அலைகின்றவன் குளிர்ந்த கற்பக மரத்தைக் கண்டது போலவும், நன்மாணாக்கன் உண்மை ஆசிரியனைக் கண்டதுபோலவும் குசேலன் கண்ணனைக் கண்டதும் மகிழ்ச்சியுற்றான்.

2. அன்பு பொங்கப் பொன்னடி வணங்கியவன் யார்? எவ்வாறு வணங்கினான்?

அன்பு பொங்கப் பொன்னடி வணங்கியவன் கண்ணன். குசேலனைக் கண்டவுடன் அணைகடந்த வெள்ளம்போல, வேகமாய்த் தன் பூம்படுக்கையைவிட்டு எழுந்து, குசேலன் முன் சென்றான். மிகுந்த அன்புடன் அவனுடைய பொன்னடியில் வீழ்ந்து, நெற்றித் திலகம் மண்ணில் தோய வணங்கியதோடன்றி உடம்பெல்லாம் சிலிர்க்கத் தழுவிக்கொண்டான்.

3. மலர்தலை யுலகம் கூறும் கூற்று யாது? அதனைக் கண்ணன் எவ்வாறு காத்தான்?

குசேலன் பெருந்தவ மறையோன் என்பதும், கண்ணனுக்கு நெருங்கிய இளமைப் பருவ நண்பன் என்பதும் உலகம் கூறும் கூற்று. மறையவர்களை அரசர்களும் வணங்குவர் என்பதையும், சமநிலையில் இல்லாமல் இருப்பினும் இளமைப் பருவ நண்பனை மறக்கவில்லை என்பதையும் நெற்றிப்பொட்டு நிலத்தில் படிய வணங்கிய செய்கையால் கண்ணன் காத்தான்.

4. வாசுதேவன் தன் நண்பனுக்குச் செய்த உபசாரங்கள் யாவை?

மாளிகையில் மாணிக்கப் பீடத்தில் வேதங்களில் வல்லவனாகிய குசேலனை அமர்த்திப் பொற் குடத்தில் நிரப்பப்பட்ட திருமஞ்சன நீரால் குளிப்பாட்டினான். ஒளிமிகுந்த பொன்னுடையை உடுத்தி, மணம்வீசும் சந்தனம் தடவி, தூபமிட்டு, தேனும் வண்டும் நிறைந்த பூமாலையைச் சூட்டினான். நெய் விளக்கும் மங்கல ஆலத்தியும் சுற்றி, இனிய சுவையுடைய உணவளித்து, குசேலன் வாயையும் கையையும் நீரால் துடைத்தான். பின் வெற்றிலை பாக்கு கொடுத்து, உபசார வார்த்தைகள் கூறிப் பொன்மயமான தன் படுக்கையிலே படுக்கவைத்துத் தன் அழகிய கையால் மெல்ல பொற்சாமரம் வீசினான். குசேலனின் இரு பாதங்களையும் மெல்ல வருடினான் நீலவண்ணன்.

5. வஞ்சகக் கள்வனின் சிந்தை எதன்மீது சென்றது? இதில் உள்ள வஞ்சகம் யாது?

வஞ்சகக் கள்வனின் சிந்தை, குசேலன் கொண்டுவந்திருந்த பொருளில் சென்றது. ஏழ்மை நிலையில் உள்ள நண்பன் கொண்டுவந்திருந்த அற்பப் பொருளில், செல்வத்தில் செழிக்கும் ஒருவனின் சிந்தை செல்லாது. ஆனால், குசேலன் கொண்டுவந்திருக்கும் அவலாகிய பொருளில் தன் மனம் சென்றுவிட்டதுபோலவும், சீக்கிரம் அதனைக் கொடுக்கும்படியும், தின்பதற்கு ஆவலாயிருப்பதுபோலவும் கண்ணன் நடிக்கிறான். குசேலனின் உள்ளம் வருந்தாமல் நிறைந்திருக்கவேண்டி அன்புரை கூறினதால் அவன் செயலை 'வஞ்சகச் செயல்' என்கிறார் ஆசிரியர்.

6. சிறு பொதி பொதிந்துவைத்த பாங்கினை விளக்கு.

வஞ்சகமற்றவனாகிய குசேலன் உடம்பில் போர்த்தியிருந்த மிகப் பழமையான கந்தைத் துணியின் விரிந்த தலைப்பைச் சுருக்கி உறுதியாக முடிந்து வைக்கப்பட்டிருந்தது.அச் சிறு பொதி.

7. அவலின் சிறப்பைக் கண்ணன் எவ்வாறு கூறுகிறான் ?

கந்தையில் முடிந்த அவல் நல்ல வலிமையுள்ளது என்றும் நமக்கிது கிடைத்தது நல்லதே என்றும், தெளிந்த சுவையை யுடையது என்றும், தேவர்க்கும் இது கிடைத்தல் அரிது என்றும, விருப்பமறிந்து ஆசையுடன் வீட்டில் செய்யப்பட்ட தென்றும், விலை மதிக்க முடியாத அவல் என்றும் அவலின் சிறப்பைக் கூறிப் போற்றுகிறான் கண்ணன்.

8. எளிமையான அவலைக் கண்ணன் இவ்வளவு மேன்மைப்படுத்தக் காரணம் என்னவென்று ஆசிரியர் கூறுகிறார் ?

அன்புடன் கொடுக்கப்பட்ட பொருள் சிறியதாயும், தாழ்ந்ததாயும் இருப்பினும் அது மிக உயர்ந்தது. அன்பில்லாமல் கொடுக்கப்படும் பொருள் உயர்ந்ததாயிருப்பினும் அது தாழ்ந்ததே. பல்லோராலும் புகழப்பட்ட தவமுடைய குசேலன் அன்புடன் சிறு பொதியைக் கொடுத்தது கண்ணனுக்கு மேன்மையாக இருந்தது.

9. இடஞ்சுட்டி விளக்கு.

(அ) 'வழிநடந்திளைத்தவே இம்மலரடி'!

இடம்: கண்ணன் குசேலரை வரவேற்று உபசரித்து அழகிய படுக்கையில் படுக்கச் செய்து, தம் கையால் கவரிவீசி மகிழ்வித்தபோது இவ்வாறு கூறினான்.

விளக்கம்: 'என்னைக் காண்பதற்காக இம் மலரடிபோன்ற பாதங்கள் நெடுந்தூரம் நடந்து களைத்துவிட்டனவே' என்று கூறிக் கண்ணன் குசேலரின் பாதங்களைத் தம் கைகளால் வருடினான்.

(ஆ) 'வந்தனை எனக்கென் கொண்டு வந்தனை ?'

இடம்: பலவகையான உபசாரங்கள்செய்து குசேலனின் களைப்பினை நீக்கிய பிறகு கண்ணன் குசேலனை நோக்கிக் கேட்டான்.

விளக்கம்: "பல நாள் கழித்து என்னைக் காண்பதற்காக வந்துள்ளாய். எனக்த என்னகொண்டு வந்துள்ளாய்?" என்று வெண்ணெயை உண்டவன் கேட்டான்.

10. பொருள் தருக :

மிடியன் — வறியன்	மோகம் — அன்பு
கவின் — அழகு	நடலை — வஞ்சனை
அதிர்தர — ஒலிக்க	தொங்கல் — மாலை

11. பிரித்து எழுது :

அருந்துணவு = அருந்து + உணவு
பொன்னடி = பொன் + அடி; பற்பல = பல + பல
திகழ்ந்த பொன்னுடை = திகழ்ந்த + பொன் + ஆடை
அணையுடைத்தெழும் = அணை + உடைத்து + எழும்

12. இலக்கணக் குறிப்பு தருக :

உலகம்—இடவாகுபெயர்
பொதி—தொழிற்பெயர்; கழிமகிழ்—உரிச்சொல்

3. கயவன் கல்வி அருமை அறிதல்

1. 'எல்லன் என்றியம்பும் பேரோன்' எத்தகையவன் ?

எல்லன் திருநின்ற ஊரில் வாழும் செல்வன். நீர் மிகுந்த நிலங்களையும், பல ஏர்களையும் நிரம்பப் பெற்றவன். மிகுந்த எருமையுடன், கால்நடைகளையும், அழகிய பெரிய இல்லத்தினையும் சொந்தமாகப் பெற்றவன்.

2. எல்லன் தன் மகனுக்குக் கல்வி கற்பிக்க ஏன் விரும்பவில்லை ?

கற்பதால் செல்வம் நாசமாகும். கல்வி கற்கச்சென்ற முப்பாட்டனின் மகன் அன்றே மிகுந்த காய்ச்சலால் இறந்துவிட்டான். ஆதலின், அவன் தன் மகனையும் அவ்வாறு இழக்க விரும்பவில்லை. பிரம்படி பட்டுக்கொண்டும் சுவடிகளைத் தூக்கிக்கொண்டும், முள்போன்ற ஆணியால் எழுதிக் கொண்டும் தன் மகன் துன்பப்பட வேண்டாம் என்று கருதினான். தந்தை படிக்காமையால் மகனையும் படிக்கவைக்க விரும்பவில்லை.

3. படிப்பிற்காகும் செலவினைக்கேட்டு எல்லன் கூறியது யாது ?

'மகன் படிப்பிற்காக இருபது வராகன் செலவாகும்' என்று ஆசிரியர் கூறக்கேட்ட எல்லன், "அந்த இருபது வராகன் இருப்பின் ஒரு கடா வாங்கி, ஏரில்பூட்டி விளைச்சலை அதிகப் படுத்தலாம். செலவழியும் அப் பணத்திற்கு ஈடாக வண்டியோ, மாடோ, மணியோ கிடைக்கப் போவதில்லை. எதற்கும் உதவாத எழுத்தன்றோ வரப்போகிறது ! தலையெழுத்தை யாரால் அழிக்க முடியும்?" என்று வெறுத்துக் கூறினான்.

4. எல்லன் கூறிய மொழிகேட்டு ஆசிரியர் இழித்துக் கூறியது என்ன?

"முதிர்ந்த கிழவரே! பொன்னைப் பெரிதாக மதித்ததோடு அன்றிப் புத்தியைச் சிறிதாகக் கருதிவிட்டீர். செலவழியும் அப்பொருளைக்கொண்டு பெருங்கடா ஒன்று வாங்குவீராயின் அப்போது உம்மிடம் கடா இரண்டு இருக்கும். உம் மகனையும்

கடாவையும் சேர்த்து ஏரில்பூட்டி உழுங்கள். நல்ல பலன் கிடைக்கும்'' என்று ஆசிரியர் கூறினர்.

5. கல்வியின் சிறப்புப்பற்றி ஆசிரியர் கூறுவனவற்றைச் சுருக்கி வரைக.

''கல்வி இல்லாத மக்கள் விலங்கினைப் போன்றவர்கள்; புல்லைப்போல் அற்பமானவர்கள். செல்வம் கருத்தை மயக்கும். கல்வி உண்மையை அறிய உதவும். கற்காத மாந்தர் கண் கெட்டவரே ஆவர். உலகுக்கு அவர்கள் சுமையாக இருப்பார்கள். கல்வி மாந்தரின் மடமையை நீக்கி ஒளிபெறச் செய்யும்'' என்று கல்வியின் சிறப்புப்பற்றி ஆசிரியர் கூறினர்.

6. பொருள் தருக:

கண்காணித்து — மேற்பார்வையிட்டு	இறும்பூது — வியப்பு
சூது — வஞ்சனை	புல்லர் — அற்பர்
	மன்னிய — நிலைபெற்ற

IV. மறுமலர்ச்சிப் பாடல்கள்

1. தீண்டாமைப் பேய்

கடலில் தள்ளவேண்டியது எது? ஏன்?

கடலில் தள்ளவேண்டியது தீண்டாமை என்னும் பேயினையாம். அப்பேய் பல குறும்புகள் செய்யும். நீதிநெறியைக் காணு து உலவும். எவரையும் கூடியிருக்கவொட்டாது. வீட்டுத் திண்ணையில் உட்காரவிடாது. காப்பிக் கடைகளை எட்டிப் பார்க்கவும் அனுமதியாது. கப்பல், புகைவண்டி போன்ற சில இடங்களில் மட்டும் அப்பேய் ஒடுங்கிக் கிடக்கும். ஆதலின் இதனைக் கடலில் தள்ளிக் கொன்று விடுவோம் எனக் கூறுகிருர் ஆசிரியர்.

2. பெண்மை

அக்காலப் பெண்கள் நிலைபற்றிப் பாரதியார் கூறுவன யாவை?

ஏட்டினைப் பெண்கள் தொடுவது தீமையென்றிருந்தது. வீட்டுக்குள்ளே பெண்களைப் பூட்டிவைத்திருந்தனர். மாட்டினை மடக்கித் தொழுவிலே கட்டுவதுபோல, வீட்டிலும் பெண்களைக் கசக்கிப் பிழிந்து வந்தனர். இந்நிலையில் பெண்களை அக்காலத்தில் வைத்திருந்தனர் எனப் பாரதியார் கூறுகிருர்.

3. இயற்கை

திரு. வி. கல்யாணசுந்தரனார் கதிரவனின் பெருமைகளை எங்ஙனம் கூறுகிறார் ?

நீலக்கடல் விளிம்பிலே விரைந்தெழும் கதிரவனின் கூத்தசைவையும், பசுங்கடலில் கதிரவனின் சிவப்பு ஒளிபடுவதையும், பொதுமையில் அமிழ்தம் பொழிவதையும், அணுக்களிலெல்லாம் அவனுடைய அருளொளி பரவுதலையும் இருளினை அகற்றிக் கருணையால் காப்பதையும்கண்டு உள்ளம் உவந்து கதிரவனின் பெருமைகளைச் சிறப்பாகக் கூறுகிறார்.

4. நோயற்ற வாழ்வு

இராமலிங்கம் பிள்ளை எத்தகைய வாழ்க்கையைத் தொடங்க வேண்டுமென்கிறார் ?

அணியிலும் ஆடையிலும் உடலை அலங்கரித்தோமேயன்றி அறிவிலும் ஆசாரத்திலும் அழகு செய்யவில்லை. துணிவுடனும், தூய்மையுடனும், ஒழுக்கமுடனும் வாழ்க்கையைத் தொடங்க வேண்டுமென்கிறார்.

5. எந்நாளோ !

ஆசிரியர் பாரதிதாசனாரின் ஏக்கம் யாது ?

தமிழ்நாட்டில் எல்லோரும் கல்விகற்றுக் கலையிலும், வீரத்திலும், அன்பிலும் இமயம்போல் உயர்ந்து இன்புறுரா எனக் கேட்க விழைகிறார். தமிழ்க் கவிதைகளைப் பன்மொழியிலும் காண மக்கள் விரும்புகிறார்கள் என்னும் இனிமையான சொல்லைக் கேட்க விரும்புகிறார். தமிழர் உடலால் பலராகவும் உள்ளத்தால் ஒருவராகவும் இருப்பர். அவர்களை நெருங்க இயலாது என உலகம் அஞ்சுவதைக் காண விழைகிறார். ஆகாயத்திலே விண்ணூர்தியைச் செலுத்தி உலகைக் கலக்கவும், இசையுடன் தமிழைச் சேர்த்து உலகினை மயக்கவும், வாள் ஏந்திப் பகைவரை மாய்க்கவும் எண்ணற்ற தமிழர் உள்ளனர் என்பதனையும் கேட்க விழைகிறார் ஆசிரியர் பாரதிதாசனார்.

6. தொழில்

1. உழவனின் செயல்கள் யாவை ?

உழவன் கோழி கூவியவுடன் எழுந்திருந்து ஏரினைத் தோளில்மாட்டி, எருதுகளை ஓட்டிக்கொண்டு ஆழமாய் உழ விரைவான். கருணையிலாக் கடினமான நெஞ்சம்போன்றிருக்கும் பூமியைப் பிளந்து உழுவான். உச்சிவேளையில் உழவனின்

கைகள் சிவந்துவிடும். கதிரவனும் உழவனின் துன்பம் பார்த்துப் பொறுக்கமுடியாமல் மேற்கே மறைவான்.

2. உழவன் நெடுமூச்சுவிடக் காரணம் என்ன ?

வலைபோன்று, ஓலையால் வேயப்பட்டிருக்கும் குடிசைக்கு மாலையில் சோர்ந்து திரும்பி வருவான். பொம்மைகளைப்போல் நிற்கும் அவனுடைய குழந்தைகள் அவனைச் சூழ்ந்துகொண்டு தங்களுக்குத் தேவையானவற்றைக் கேட்டு அரிக்கும். வாட்ட முற்ற முகத்தினையுடைய மனைவியைக் காண்பான். வறுமையின் துன்பத்தினை எண்ணி நெடுமூச்சுவிடுவான்.

3. 'விழியைக் காக்கும் இமையென'க் காப்பது யார்? எவ்வாறு காப்பர்?

விழியைக் காக்கும் இமையெனக் காப்பவர் உழவர். நிலத்திலுள்ள பயிரைத் தம் குழந்தையைப் பராமரிப்பதுபோலப் பார்த்துக் கொள்வர். நல்லவரிடையே இருக்கும் கெட்டவர் போலப் பயிரிடையே இருக்கும் களைகளை நீக்குவர். பறவைகள், விலங்குகள் முதலியன பயிரினை அழித்திடாமலிருக்க அல்லும் பகலும் விழியை இமைகாப்பதுபோல் காப்பர்.

4. 'புதுநடம் புரிவது' எது ? அதன் அழகினைக்கண்டு உழவன் எவ்வாறு மகிழ்வான் ?

புதுநடம் புரிவது நெற்கதிர்கள். வாழ்வின் இன்பத்தில் கருப்பமுற்றிருக்கும் மனைவியைக்கண்டு மகிழும் கணவன் போல், கதிர்கள் முற்றிப் பால் வைத்திருப்பதைக்கண்டு மகிழ்வான் உழவன். மரகதம்போன்ற பச்சைக்கொடியில், சிவப்பான மணிகள்போன்று, நெல்மணிகள் முற்றிப் பயிர்கள் தலைசாய்ந்து நடனம் ஆடும் அழகினைக்கண்டு மகிழ்வான்.

5. 'மலையினும் பெரிதே'யென ஆசிரியர் எதைக் கூறுகிறார் ? அவ்வாறு கூறக் காரணமென்ன ?

உலகில் காணப்படும் தொழில்களிலெல்லாம் உழவுத் தொழிலே சிறப்பு வாய்ந்தது என்றும், உழவனது சேவைக்கு நிகரானது வேறில்லை என்றும் பலர் சொல்லுகின்றார்கள். ஆனால், அவனுடைய குடும்பமோ வறுமையில் உழன்று தாழ்ந்த நிலையில் இருக்கின்றது. அவனது தாழ்வை எண்ணிப் பார்த்தால் அத்தாழ்வு மலையைவிடப் பெரிதாயிருக்கிறது என ஆசிரியர் கூறுகிறார்.

———

உரைநடைப் பகுதி

1. சர்தார் வல்லபபாய் பட்டேல்

அருஞ்சொற்பொருள்

நனி — மிகுதி
துறந்து — கருதாது (நீங்கி)
வேளாண்மை — விவசாயம்
நீத்தார் — நீங்கினார்
கசடற — குற்றமில்லாது
பராபரம் — மேலானபொருள் (கடவுள்)
அல்லல் — துன்பம்
அரிய — கடினமான
இடையூறு — தடங்கல்
மாண்பு — பெருமை
இணைத்து — சேர்த்து
அயராது—சோர்வடையாது
அல்லும்—இரவும்
குன்றியது—குறைந்தது
குறிக்கோள் — இலட்சியம்

I. வினா - விடை

1. பட்டேலின் பெற்றோர் யாவர்? அவர் மேற்கொண்ட தொழில் யாது?

பட்டேலின் தந்தை ஜாவெர்பாய் பட்டேல், தாயார் இலாத் பாய் அம்மையார். தந்தை வேளாண்மைத் தொழிலை மேற் கொண்டிருந்தார்.

2. காந்தியடிகளாரின் சந்திப்பினால் பட்டேலிடம் ஏற்பட்ட மாறுபாடு யாது?

காந்தியடிகளாரின் சந்திப்பு பட்டேலைச் சிறந்த தேசபக்தராக மாற்றியது. பட்டேலும் அடிகளைப் போலவே எளிய வாழ்க்கையை மேற்கொண்டார். ஆங்கிலேயர்போல் ஆடை அணிந்து வந்த ஆடம்பர வாழ்க்கையை வெறுத்தார். தூய கதர் ஆடையை அணியத் தொடங்கினார். காந்தியடிகளின் சீடராகி அவர் காட்டிய வழியில் நாட்டுக்கு உழைக்கலானார்.

3. வல்லபபாய் பட்டேல் ஆற்றிய பொதுநலப் பணிகள் யாவை?

பட்டேல் நலிந்தோர்க்கும், மெலிந்தோர்க்கும் தம்மாலான தொண்டுகளைச் செய்தார். பஞ்சத்தால் ஏற்பட்ட துயர்துடைக்க ஆமதாபாத் நகராட்சி மன்றச் சார்பில் பாடுபட்டார். குவெட்டாவிலும், பீகாரிலும் நில நடுக்கத்தால் உண்டாகிய துன்பங்களைப் போக்க உழைத்தார். அயல் நாடுகளில் வாழும் இந்திய மக்களின் நல்வாழ்வுக்காகவும் சிறந்த சேவைகள் செய்தார். பர்தோலி என்னும் இடத்தில் உழவர்கள் நடத்திய வரிகொடா இயக்கத்தில் பங்கேற்று உழவர்களுக்காக உழைத்தார்.

4. பர்தோலி வரிகொடா இயக்கம் பற்றிக் குறிப்பு எழுதுக.

பர்தோலி என்னுமிடத்தில், ஆங்கிலேயருக்கு எதிராக உழவர்கள் வரிகொடா இயக்கம் நடத்தினர். அவ்வியக்கத்

துக்கு வல்லபபாய் பட்டேல் தலைமை தாங்கி வெற்றியைத் தேடித் தந்தார். இவ்வியக்கம் பின்னர் நடந்த உரிமைப் போர் களுக் கெல்லாம் வழிகாட்டியாய் அமைந்தது.

5. வல்லபபாய் பட்டேல் செய்த செயற்கரிய செயலை விளக்கு.

நம் நாடு உரிமை பெற்றதும், சர்தார் பட்டேல் துணைப் பிரதமராகவும் உள்நாட்டு அமைச்சராகவும் நியமனம் பெற்றார். அச்சமயம் நம் நாட்டில் நூற்றுக்கு மேற்பட்ட இராச்சியங்கள் சிற்றரசர்களால் ஆளப்பட்டு வந்தன. நாட்டின் ஒற்றுமைக்கு இப்பிரிவுகள் இடையூறாகும் எனக் கருதினார். அதனால் இராச்சி யங்கள் அனைத்தையும் இந்திய அரசுடன் இணைத்து ஒன்று பட்ட இந்தியாவை உருவாக்கினார். இதுவே அவர் செய்த செயற்கரிய செயலாம்.

6. 'இரும்பு மனிதர், சர்தார்' என்னும் சிறப்புப் பெயர்கள் வல்லபபாய் பட்டேலுக்கு எவ்வாறு பொருந்தும்?

பட்டேல் எண்ணித் துணியும் இயல்பு உடையவர். எத்தகைய இடையூறு நேரினும் எடுத்த செயலை உறுதியுடன் முடித்தே தீருவார். இதனால் மக்கள் அவரை 'இந்தியாவின் இரும்பு மனிதர்' எனப் புகழ்ந்தனர்.

பர்தோலி வரிகொடா இயக்கத்தில் உழவர் சார்பாக நின்று அவ்வியக்கத்துக்குத் தலைமை தாங்கி வெற்றிபெற்றார். அதனால் காந்தியடிகள் அவரைப் பாராட்டி 'சர்தார்' என்ற பட்டம் வழங் கினார். அன்றுமுதல் அவர் பெயர் 'சர்தார் வல்லபபாய் பட்டேல்' என வழங்கப்படுகிறது.

7. சர்தார் வல்லபபாயின் குணநலன்களை எழுது.

சர்தார் சிறந்த தேசபக்தர்; நாட்டுத் தலைவர். மேல் நாட் டிற்குச் சென்று பட்டம் பெற்று ஆமதாபாத் நகர நீதிமன்றத் தில் வழக்கறிஞராகத் திகழ்ந்தார். எனினும் காந்தியடிகளின் நட்பினால் எளிய வாழ்க்கையை மேற்கொண்டார். எச்செயலை யும் எண்ணித் துணியும் இயல்பு பெற்றவர். மலை கலங்கினு லும் நிலைகலங்காத மாண்பு உடையவர். நலிந்தோருக்கும், மெலிந்தோருக்கும் தம்மாலான தொண்டுகளைத் தளராமல் செய்தார். அயல் நாடுகளில் வாழும் இந்திய மக்களின் நல்வாழ்வுக்குச் சிறந்த சேவைகள் செய்தார்.

உள் நாட்டு அமைச்சராக இருந்த பொழுது நாட்டு முன்னேற்றத்துக்கு வேண்டிய பல திட்டங்களைச் செயல் படுத்தினார். அல்லும், பகலும் அயராது உழைத்தார். மன உறுதியும், அஞ்சா நெஞ்சமும், செயல்திறனும் பெற்றவர்.

II. பிரித்தெழுது :

பொன்னாடு = பொன் + நாடு
நற்பணி = நன்மை + பணி

பன்முறை = பல + முறை
செயற்கரிய = செயற்கு + அரிய

III. சேர்த்தெழுது :

சீடர் + ஆனர் = சீடரானர்
நிலம் + நடுக்கம் = நிலநடுக்கம்
வழக்கு + அறிஞர் = வழக்கறிஞர்
இடையூறு + ஆகும் = இடையூருகும்
பட்டு + ஒளி = பட்டொளி

IV. வாக்கியங்களில் அமைத்து எழுது.

சீராட்டிப் பாராட்டி, வித்திட்ட, செயற்கரிய, முன்னின்று

கந்தனை அவன் தாய் **சீராட்டிப் பாராட்டி** வளர்க்கிருள்.

முதல் முதலாக மக்களிடையே சுதந்திர உணர்ச்சிக்கு **வித்திட்டவர்** பால கங்காதர திலகர்.

பெரியோர்கள் **செயற்கரிய** செயலையே செய்வர்.

என் அண்ணன் திருமணத்தை **முன்னின்று** நடத்தியவர் என் மாமா.

V. எதிர்ச்சொல் எழுது :

தனித்து × சேர்ந்து
வெற்றி × தோல்வி
இணைத்து × பிரித்து
எளியவாழ்க்கை × ஆடம்பர வாழ்க்கை
செயற்கரிய × செயற்கெளிய

2. தாய்மொழிப் பற்று

அருஞ்சொற்பொருள்

பேணி - விரும்பி
மொழியின்மாட்டு - மொழியின் இடத்து
சான்ருேர் - நற்பண்புகள் நிறைந்த மேலோர்
துயின்ற - உறங்கிய
விடையிறுத்தார் - விடை அளித்தார்
சீர்இளமை - சிறந்த இளமை
புரலவர் - குடிமக்களைக்காக்கும் அரசர்
வளம் பெருகி - வளம்மிகுந்து
தொன்று தொட்டு - பழங்காலம் முதல்

I. வினு - விடை

1. தாய் எத்தன்மையள்? தாய்க்கு இணையாக மதிக்கப்படுபவை எவை?

பத்து மாதஞ் சுமந்து நம்மைப் பெற்றெடுத்துப் பேணி வளர்ப்பவள் தாய். உலகில் உள்ள உறவினர் எல்லோரையும் விட உயர்ந்தவள். நம்மிடம் பேரன்பு செலுத்துவாள். அந்தத் தாய்க்கு இணையாக, பிறந்த நாட்டையும் பேசும் மொழியையும்

மதித்து வருகிறோம். பிறந்த நாட்டைத் தாய்நாடு என்றும் பேசும் மொழியைத் தாய்மொழி என்றும் கூறிப் பெருமை அடைகிறோம்.

2. தாய்மொழிப் பற்று பற்றித் திரு.வி.க. கூறுவது யாது?

தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்கள் 'பெற்ற தாயின் அன்புக்கும் பிறந்த நாட்டின் பற்றுக்கும் ஊற்றாய் இருப்பது பேசும் மொழியே ஆகும். தாய் மொழியிடம் அன்பில்லா ஒருவன் தாயையும் நாட்டையும் பழித்தவன் ஆவான்' என்று கூறுகிறார்.

3. ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ள கடமை யாது?

ஒவ்வொருவரும் தாயை விரும்புதல்போல, தாய்மொழியை விரும்ப வேண்டும். தாயைக் காப்பதுபோல் மொழியைக் காக்க வேண்டும். இதுவே ஒவ்வொருவரின் முதற் கடமையாகும்.

4. 'பன்மொழிப் புலவர்களாய்த் திகழ்ந்தவர்களும் இன்றியமையாத நூல்களைத் தாய்மொழியிலேயே எழுதினார்கள்' என்பதை விளக்கு.

கவியரசர் இரவீந்திரநாத தாகூர் ஆங்கில மொழியில் வல்லவர். ஆயினும், 'கீதாஞ்சலி' என்னும் நூலைத் தம் தாய் மொழியாகிய வங்க மொழியில் எழுதினார். இந்திய நாட்டின் விடுதலைக்காக ஓயாதுழைத்த பாலகங்காதர திலகர் தாய் மொழியாகிய மராட்டிய மொழியில் 'கீதா ரகசியம்' என்னும் நூலை இயற்றினார். காந்தியடிகள் 'சத்திய சோதனை' என்னும் நூலைத் தம்தாய் மொழியான குஜராத்தி மொழியில் எழுதினார்.

5. பழந்தமிழ் மன்னரின் மொழிப்பற்றை விவரி.

தமிழ் நாட்டு மன்னர்கள் மொழிப்பற்று மிக்கவர்கள். அவர்கள் புலவர்களைப் பேணிப் போற்றி, விரும்பும் பொருளை அளித்துச் சிறப்பித்தார்கள். சேரமன்னன் பெருஞ் சேரல் இரும்பொறை என்பவன், முரசுக் கட்டிலில் துயின்ற மோசிகீரனார் என்ற புலவரைக் கொல்லாது அவருக்குக் கவரிவீசி நின்றான்.

நீண்டநாள் வாழச் செய்யும் நெல்லிக் கனியை, அரிதின் பெற்ற அதியமான், அதனை ஔவையாருக்கு அளித்தமைக்கு மொழிப்பற்றே காரணம். பட்டினப்பாலை என்னும் அரிய நூலைப் பாடிய கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்னும் புலவருக்குக் கரிகாற்சோழன் பதினாறு கால் மண்டபத்தை அளித்திருந்தான். படை எடுத்துவந்த மாறவர்மன் அதனை மட்டும் அழிக்காமல் விட்டான். இச் செயல்கள் யாவும் தமிழ் மன்னரின் மொழிப்பற்றை விளக்குகின்றன.

6. தமிழர் தமிழை எவ்வாறு போற்றினர்?

தமிழ் மொழிப் பற்றால் தமிழர் தமிழைத் தெய்வமாகக் கருதினர். பாவேந்தர் பாரதிதாசன்,

"தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய்" என்றும்,

"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" என்றும்,

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு" என்றும் கூறித் தம் மொழிப்பற்றை விளக்கியுள்ளார்.

7. தமிழ் வளம் பெறச் செய்யும் வழிகள் யாவை?

தமிழர் தம் தொண்டினுல் தமிழை வளர்க்க வேண்டும். "எட்டுத் திக்கும் சென்று கலைச் செல்வங்கள் யாவையும் கொண்டுவந்து சேர்ப்பீர்" என்று சுப்பிரமணிய பாரதியாரின் மொழிவழி உழைக்க வேண்டும். தமிழுக்குத் துறைதோறும் தொண்டு செய்ய வேண்டும். இவ்வாறு செய்யின் தமிழ் வளம் பெறும்; தமிழர் நலம் பெறுவர்.

8. தமிழ் இன்னும் சீரிளமைத்திறம் உடையதாய்த் திகழக் காரணம் யாது ?

பழந்தமிழ் மன்னர்கள் தாய்மொழியாகிய தமிழை உயிரினும் மேலாகப் போற்றினர். தமிழ்ப் புலவர்களை ஆதரித்தனர். மக்களும் தாய்மொழிப் பற்று நிரம்பப் பெற்றவராய்த் திகழ்ந்தனர். அதனுல் தமிழ் இன்றும் சீரிளமைத்திறம் உடையதாய்த் திகழ்கிறது.

9. தாய் நாடு, தாய்மொழி என்பன யாவை? அவற்றுள் சிறந்தது எது?

ஒருவர் பிறந்த நாடு அவருக்குத் தாய்நாடாகும். ஒருவர் பிறந்தது முதல் அறிந்து பேசிவரும் மொழி அவர்க்குத் தாய் மொழியாகும். இவற்றுள்ளும் தாய்மொழியே சிறந்ததும் இன்றியமையாததும் ஆகும்.

10. மாறவர்மன் சுந்தர பாண்டியனின் தாய்மொழிப் பற்றை விளக்குக.

சோழ நாட்டின்மீது படை எடுத்துச் சென்ற மாறவர்மன் சுந்தர பாண்டியன், அந்நாட்டில் இருந்த கட்டடங்களை எல்லாம் இடித்துத் தரைமட்டம் ஆக்கினுன். ஆனுல், பட்டினப்பாலை பாடிய உருத்திரங் கண்ணனுர்க்குக் கரிகாற்சோழன் பரிசாக அளித்திருந்த பதினுறு கால் மண்டபத்தை மட்டும் அழிக்காமல் விட்டுவிட்டான். இதனுல் அவனது மொழிப்பற்று நன்கு விளங்குகிறது.

II. பிரித்தெழுது :

பழித்தவனுவான் – பழித்தவன் + ஆவான்
ஒவ்வொரு = ஒரு + ஒரு; பழந்தமிழ் = பழமை + தமிழ்
மூவேந்தர் = மூன்று + வேந்தர்
பிற்காலம் = பின் + காலம்
கொணர்ந்திங்கு = கொணர்ந்து + இங்கு

III. சேர்த்தெழுது :

மொழி + பற்று = மொழிப்பற்று; கலை + பற்று = கலைப்பற்று
இடம் + பற்று = இடப்பற்று
இளமை + திறம் = இளமைத்திறம்

IV. வாக்கியங்களில் அமைத்து எழுது.

தொன்று தொட்டு, அரிதின் முயன்று, எல்லையற்ற.

தமிழர் தொன்று தொட்டு வந்த பழங்குடியினர்.

அதியமான் அரிதின் முயன்று பெற்ற நெல்லிக்கனியை ஔவையாருக்கு ஈந்தான்.

நம் இந்திய நாடு எல்லையற்ற செல்வ வளங்களைக் கொண்டுள்ளது.

V. தவறுகளைத் திருத்துக :

(1) எவ்வளவு மாம்பழம் வாங்கினுய்?
(2) எத்தனை நெல் விளைந்தது?
(3) உன் வகுப்பில் எவ்வளவு மாணவர்கள் உள்ளனர்?
(4) எத்தனை அரிசி சமைத்தாய்?

விடை: (1) எத்தனை மாம்பழம் வாங்கினுய்?
(2) எவ்வளவு நெல் விளைந்தது?
(3) உன் வகுப்பில் எத்தனை மாணவர்கள் உள்ளனர்?
(4) எவ்வளவு அரிசி சமைத்தாய்?

3. வேளாண்மை

அருஞ்சொற்பொருள்

சீரை - சிறப்பை
களர்நிலம் - உவர்நிலம்
மாளாது - முடியாது
வீரியமுள்ள - சிறந்த ஆற்றல் உள்ள
மேழிச்செல்வம் - உழவுச் செல்வம்
கோழைபடாது - குறைவு அடையாது
மேழி - கலப்பை
வையம் - பூமி
கைமடங்கின் - உழவுத் தொழிலைவிட்டால்
ஆன்ருேர் - அறிவிற் சிறந்த பெரியோர்
விழைவதூஉம் - விரும்புவதும்
நெளிந்த இடம் - பள்ளமான இடம்
தொழுதுண்டு - வணங்கி ஏவல் செய்துண்டு

I. வினு - விடை

1. உழவுத் தொழிலின் உயர்வை விளக்குக.

உலகத் தொழில்களில் உயர்ந்தது உழவுத் தொழில். 'உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை' என்பர் பெரியோர்.

சிறப்பாக வாழ உழவுத் தொழிலைச் செய்யவேண்டும் என்பதைக் 'கொன்றை வேந்தன்' என்னும் நூல் 'சீரைத் தேடின் ஏரைத்தேடு' என்று கூறுகிறது. வள்ளுவரும் உழவுத் தொழிலின் சிறப்பை விளக்கிப் பத்துப் பாடல்களை இயற்றியுள்ளார். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்றும், உழவர் தம் தொழிலைச் செய்யாவிடின் பற்றற்ற துறவிகளுக்கும் இவ்வுலகில் வாழ்வில்லை என்றும் உழவின் சிறப்பைக் கூறுகிறார் வள்ளுவர்.

2. பழந் தமிழகத்து உழவுத் தொழிலின் சிறப்பு யாது ?

உழவுத்தொழிலை வேளாண்மைத் தொழில் எனக் கூறுவர். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நம் இந்தியநாடு உழவுத் தொழிலில் மேன்மையுற்று இருந்தது. உழவுத் தொழிலைச் செம்மையாகச் செய்ததால் நம் நாடு செல்வமும் சிறப்பும் பெற்றிருந்தது. தமிழ் மன்னர்கள் நீர்நிலைகளைப் பெருக்கி உவர் நிலத்தைப் பண்படுத்தி விளைநிலமாக்கினர். கழனி புகுந்து மேயும் களிற்றை மறைக்கும் அளவுக்குப் பயிர் ஓங்கி வளர்ந்திருந்தது. நெற்கதிர்களை யானைகட்டிப் போரடித்தார்கள். ஏர் முனையில் பெற்ற வெற்றியால் வேந்தன் போர் முனையிலும் வெற்றி பெற்றான்.

3. ஔவையார் 'வரப்புயர' என்று வாழ்த்தியது ஏன் ?

உழவுத் தொழிலில் மேன்மை பெறாத நாடு, பிற தொழில்களைப் பெற்றிருந்தாலும் உயர்வுபெற இயலாது என்பதை உணர்த்தவே ஔவையார் 'வரப்புயர' என்று மன்னனை வாழ்த்தினார். "வரப்புயர நீர் உயரும், நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும், குடி உயரக் கோல் உயரும், கோல் உயரக் கோன் உயர்வான்" என்பது ஔவை வாக்கு. இதனால் வேளாண்மைத் தொழிலே உலகின் உயிர் நாடி என்பது தெரிய வருகிறது.

4. வேளாண்மைத் துறையினர் உழவுத் தொழிலுக்குச் செய்யும் உதவிகள் யாவை ?

பூச்சிகளால் பயிர் அழியாமல் காக்கவும், காலத்திற்கேற்ப நீர்வளத்தைப் பெருக்கவும், விளைச்சலைப் பன்மடங்காக்கவும் முயற்சிகள் நடைபெறுகின்றன. நல்ல விளைச்சலுக்கு வீரியமுள்ள விதையையும், நோய் தாக்காத விதைகளையும் கண்டுபிடித்துள்ளனர். ஊராட்சி ஒன்றியங்கள் வாயிலாக இவை உழவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

5. புதுவகையான நெல்வகைகளை விளக்கு.

குறைந்த காலத்தில் நிறைந்த விளைச்சலைத் தரக்கூடியவை ஆடுதுறை 27, ஐ. ஆர். 8 என்னும் நெல் வகைகள். ஆடுதுறை 27 நெற்பயிர் உயரமாய் வளரும். அதன் நெல்மணிகள் குண்டு

குண்டாகவும் அழகாகவும் இருக்கும். ஐ. ஆர். 8 குட்டையான நெற்பயிர். நெல்லின்மணி நிறைந்து தோன்றும். நல்ல விளைச்சல் தரும். கருணு என்னும் புதுவகையான நெல்லும் இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதுவும் நிறைந்த விளைச்சலைத் தரும்.

II. பிரித்தெழுது :

உழுதுண்டு = உழுது + உண்டு

ஏர்த்தொழில் = ஏர் + தொழில், நெற்பயிர் = நெல் + பயிர்

பல்லாயிரம் = பல + ஆயிரம், பற்றற்ற = பற்று + அற்ற

III. சேர்த்தெழுது :

செய்ய + தக்கது = செய்யத்தக்கது

ஏரை + தேடி = ஏரைத்தேடு, போய் + பார் = போய்ப்பார்

பயிர் + அழியாமல் = பயிரழியாமல்

மேழி + செல்வம் = மேழிச்செல்வம்

IV. எதிர்ச்சொல் கூறுக :

விரும்புவோர் × வெறுப்போர், வெற்றி × தோல்வி,

பெருக்குதல் × சுருக்குதல், குறைந்த × நிறைந்த

V. தவறுகளைத் திருத்துக :

1. நண்பர்களுடன் நான் கடற்கரையில் வீற்றிருந்தேன்.
2. தலைவர் மேடையில் உட்கார்ந்திருந்தார்.

விடை :

1. நண்பர்களுடன் நான் கடற்கரையில் **உட்கார்ந்திருந்தேன்.**
2. தலைவர் மேடையில் **வீற்றிருந்தார்.**

4. உயிர்களிடத்து அன்பு வேண்டும்

(உரையாடல்)

அருஞ்சொற்பொருள்

தன்னிச்சையாக - தன்விருப்பப்படி

ஆருயிர் - பெறுதற்கரிய உயிர்

அகிலம் - உலகம்

பறிப்பது - அபகரிப்பது

வயப்படுத்தல் - வசப்படுத்தல்

இன்னல் - துன்பம்

I. வினா - விடை

1. கிளியைக் கூண்டில் அடைப்பதுபற்றிப் பாண்டியன் கொண்ட கருத்து யாது ?

"கிளியைக் கூண்டில் அடைத்து அதற்குப் பாலும் பழமும் கொடுத்தால் அவற்றைக் கிளி உண்டு இன்பமாக வாழும். அதனோடு பேசி மகிழலாம்" என்று எண்ணினன்.

2. தந்தையார் பாண்டியனுக்குக் கூறிய அறிவுரை யாது ?

"கிளியைக் கூட்டில் அடைத்தால் அது வருந்தும். தன்னிச்சையாய்ப் பறப்பதை விலக்கிச் சிறைப்படுத்திஞல் அது துன்புறும். அதைக் கூண்டில் அடைத்துவிட்டுப் பாலும் பழமும் தந்தால் இன்பம் அடையாது. நீ தரும பாலேயும பழத்தையும்விட அது தன் இச்சைப்படி திரிந்துபெறும் சிறு நெல் மணியே உயர்ந்தது. உன்ஊ ஓர் அறைக்குள் அடைத்து வைத்து உனக்குப் பல்சுவை உணவை வழங்கிஞல் அவற்றை நீ விரும்புவாயா ? அதுபோல், கிளியும் சிறைப்படுவதை விரும்பாது" என்று தந்தையார் பாண்டியனுக்கு அறிவுரை கூறிஞர்.

3. உயிர்களிடத்து அன்பு செலுத்தவேண்டும் என்பதைத் தந்தையார் எவ்வாறு விளக்கிஞர் ?

"சிறுவர்கள் சிலர் அறியாமையால் நாயைக் கல்லால் அடித்தல், தவஊயைக் கல்லால் அடித்தல், பறவைகஊ அடித்தல் போன்ற செயல்கஊச் செய்கிருர்கள். அவர்கஊப் பிறர் அடித்தால் எவ்வாறு துன்பப்படுவார்களோ அப்படியே பிற உயிர்களும் துன்புறும் என்பதை அவர்கள் உணரவேண்டும். இராமலிங்க அடிகள், பறவை, விலங்கு மட்டுமின்றி, பயிர்கள் வாடியபோதும் அவற்றைக் கண்டு வாடிஞர். 'ஆருயிர்கட்கெல்லாம் அன்பு செயல்வேண்டும்' என்று இறைவஊ வேண்டிக்கொண்டார். ஆதலின், எவ்வுயிர்களிடத்தும் அன்பு செலுத்தவேண்டும்" என்று விளக்கிஞர்.

4. தேவதத்தன் சான்ருேர்முன் கொண்டு சென்ற வழக்கு யாது ?

தேவதத்தன் ஓர் அன்னப் பறவையை அம்பு எய்து வீழ்த்திஞன். அடிபட்ட அன்னத்தைச் சித்தார்த்தர் எடுத்து அஊத்துப் புண்ணுக்கு மருந்திட்டார். தேவதத்தன் தான் அடித்த அன்னத்தைத் தன்னிடமே கொடுக்கும்படி கேட்டான். சித்தார்த்தர் கொடுக்க மறுத்தார். வீழ்த்தப்பட்ட அன்னம் தனக்கே உரியது என்று வாதாடிஞன் தேவதத்தன். அன்னத்தைக் கொடுக்க மறுத்த சித்தார்த்தரும், தேவதத்தனும் அவ்வழக்கைச் சான்ருேர்முன் கொண்டு சென்றனர்.

5. சான்ருேர் வழக்கிஊ எவ்வாறு தீர்த்து வைத்தார் ?

சான்ருேர் அடிபட்ட அன்னத்தைக் கீழே விடுமாறு கூறிஞர். பின் தேவதத்தஊ நோக்கி "தரையில் உள்ள அன்னத்தை உன்னிடம் வரும்படி அழை. அது உன்ஊ நாடி வந்தால் அவ்வன்னம் உனக்கே உரியதாகும்" என்று கூறிஞர். தேவதத்தன் பலவாறு அழைத்தும் அன்னம் அவனிடம் வரவில்ஊ. சித்தார்த்தர் கனிவாக அன்புக் குரலில் அன்னத்தைத் தம்மிடம் வருமாறு அழைத்தார். தாயை நோக்கி ஓடும் சேயைப் போல, அன்னம் அவர் மடியில்சென்று அமர்ந்து கொண்டது.

அதனைக்கண்ட சான்றோர் அன்னத்தை சித்தார்த்தரிடமே கொடுத்து வழக்கினைத் தீர்த்து வைத்தார்.

II. பிரித்தெழுது :

பேரன்பு = பெருமை + அன்பு

தடுத்திருந்தேன் = தடுத்து + இருந்தேன்

இன்பமாக = இன்பம் + ஆக, பன்மடங்கு = பல + மடங்கு

ஆருயிர்கட்கெல்லாம் = அருமை + உயிர்களுக்கு + எல்லாம்

III. சேர்த்தெழுது :

சிறை + படுவது = சிறைப்படுவது

ஆடு + குட்டி = ஆட்டுக்குட்டி, அறிவு + உரை = அறிவுரை

மருந்து + இட்டார் = மருந்திட்டார்

IV. எதிர்ச்சொல் தருக :

காக்க × அழிக்க, வாடிய × செழித்த

V. வாக்கியத்தில் அமைத்தெழுது :

தன்னிச்சையாக, அருள் உள்ளம்

சிறுவர்கள் **தன்னிச்சையாக** நடவாமல் பெற்றோர் சொற்படி நடக்கவேண்டும்.

புத்தர்பிரான் **அருள் உள்ள**ங்கொண்டவர்.

VI. தவறுகளைத் திருத்து :

1. நாளைக்கு என்றால் பள்ளிக்கு வரமுடியாது.
2. உன்னால் விளையாட வரமுடியுமா ?

விடை :

1. நாளைக்கு என்றால் பள்ளிக்கு வர **இயலாது**.
2. உன்னால் விளையாட வர **இயலுமா ?**

5. பழந்தமிழர் பண்பாடு

அருஞ்சொற்பொருள்

சீரியது - சிறப்புடையது

இரப்பது - பிச்சை எடுப்பது

உறையுள் - வசிக்கும் இடம்

இலக்கு - குறிக்கோள்

விழுப்பம் - மேன்மை

மேம்பாடு - உயர்வு

இன்னாதது - துன்பம் தருவது

இழுக்கு - குற்றம்

வடக்கிருத்தல் - உண்ணா நோன்பு மேற்கொண்டு வடக்கிருந்து உயிர்விடுதல்

I. வினா – விடை

1. நாகரிகத்தையும் பண்பாட்டையும் விளக்கு.

நாகரிகம் நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம், காலத்துக்குக் காலம் மாறுபடும் இயல்புடையது. உடை, உணவு,

உறையுள், அணிகள் முதலான புறத் தேவைகளின் சிறப்பினை நாகரிகம் என வழங்குவர்.

பண்பாடு என்பது, உள்ளத்தின் சிறப்பாகும். எல்லோர்க்கும் என்றும் பொதுவாய் அமைவது. அது பேசுவதன் மூலமும், செயலின் மூலமும் வெளிப்படுவது.

2. நாகரிகத்துக்கும் பண்பாட்டுக்கும் உள்ள வேற்றுமை யாது ?

நாகரிகம் நாட்டிற்கும், காலத்திற்கும், இனத்திற்கும் தக்கபடி, மக்களின் விருப்பு வெறுப்பிற்கு ஏற்றபடி மாறக் கூடியது. சங்க காலத் தமிழர் உடுத்த உடையையும், உண்ட உணவையும் நாம் மேற்கொள்வதில்லை. ஆனால், அக் காலத் தமிழரின் ஒழுக்கத்தை இன்றும் நாம் பின்பற்றி வருகின்றோம்; பின்பற்றவேண்டும் என்று வற்புறுத்துகிறோம். மக்களை மேன்மையுறச் செய்வது பண்பாடு. இஃது ஒழுக்கத்தையும் குணத்தையும குறிக்கும்.

எனவே, நாகரிகம் என்பது நிலையில்லாதது. பண்பாடு என்றும் நிலையானது.

3. கல்வியின் சிறப்பு யாது ?

பண்பாட்டினைத் தருவது கல்வியே. அது செல்வத்தினும் சிறப்புடையது. தாய், தான்பெற்ற மக்களுள் கற்றவனையே பெரிதும் விரும்புவாள். சமுதாயத்தில் கற்றவன் தாழ்நிலையில் இருப்பினும், மேல்நிலையில் உள்ளவனும் கல்வி கற்க அவனை நாடி வருவான். அரசனும் கற்றவன் சொற்கேட்டு அதன்வழி நிற்பான்.

4. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியின் பெருமையாகக் கூறுவது யாது ?

(மூன்றாம் வினாவுக்குரிய விடையே இதற்கும் விடையாகும்.)

5. தமிழரின் விருந்தோம்பலையும், ஈகையையும் விளக்குக.

தமிழர் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்பர். அகமலர்ச்சியோடு உபசரிப்பர். விருந்தினர் புறத்தே இருக்க அமிழ்தம் ஆயினும் தாம்மட்டும் தனித்து உண்ணார்.

'மேல் உலகம் கிட்டாதாயினும் ஈவது நன்று: இரப்பது தீது' என்ற கொள்கையை உடையவர். இரப்பவனுக்கு இல்லை என்று சொல்வதைவிட இறப்பதை மகிழ்ச்சியாகக் கொண்டனர். ஈதலும், இசைபட வாழ்தலும் அவர்களுடைய இலட்சியங்கள் ஆகும்.

6. தமிழரின் ஒழுக்கம், மானம் பற்றி நீ அறிவன யாவை ?

தமிழருக்கு ஒழுக்கம் உயிரினும் சிறந்தது. கல்வியை மறந்தாலும் பின்னர்க் கற்றறியலாம். ஒழுக்கம் தவறினால்

அதனால் வரும் இழுக்கைத் துடைப்பது அரிது. ஒழுக்கத்தால் உயர்வடையலாம்.

தமிழரின் பண்பாட்டில் தலைசிறந்தது மானம். தம் நிலையிலிருந்து தாழாமல் இருத்தலும், தாழ்வு வரும்போது உயிர் வாழாமையும் மானம் ஆகும். மயிர் நீத்தால் வாழாக் கவரிமான்போல், அவர்கள் மானம் நீங்கின் உயிர் வாழார்.

7. மானங்காத்த மன்னர்கள் யாவர் ? அவர்கள் தங்கள் மானத்தை எவ்வாறு காப்பாற்றினர் ?

சேரமான் கணைக்கால் இரும்பொறை, பெருஞ்சேரலாதன் ஆகிய இரு மன்னர்களும் மானங்காக்க உயிரை விட்டவராவர்.

சேரமான் கணைக்கால் இரும்பொறை மானம் அழியப் பெற்ற நீரைப் பருகாது தன்னிலைக்கு நாணி உயிரை விட்டான்.

பெருஞ்சேரலாதன் கரிகாற்சோழனோடு போர் புரிந்தான். சோழன் எறிந்தவேல், சேரன் மார்பில் நுழைந்து, முதுகுவழி வெளிப்பட்டமையால், முதுகில் புண் ஏற்பட்டது. அதைப் புறப் புண்ணாகக் கருதிச் சேரலாதன் வடக்கிருந்து உயிர்விட்டு மானத்தைக் காத்தான்.

8. குறமகள் இளவெயினி கூறும் பண்பாட்டின் கூறுகள் யாவை ?

குறமகள் இளவெயினி என்னும் பெண்பாற் புலவர் பாடிய பாடல் ஒன்று, தமிழர் பண்பாட்டினை விளக்குகிறது. தம்மைச் சார்ந்தோர் தவறுசெய்யின் அதைப் பொறுத்துக் கொள்வதும், பிறரது வறுமை நிலைக்குத் தாம் நாணம் அடைவதும், படைக்குப் பழி தாராத வீரம் பெற்றிருப்பதும் தமிழர் பண்பாடு என்கிறார்.

9. சான்றோர் என்பவர் யாவர் ? அவர் பண்புகள் யாவை ?

பண்பாடு அமையப்பெற்றவர் 'சான்றோர்' எனப்படுவர். தேவர்க்குரிய அமிழ்தம் கிடைப்பினும் அதனைத் தாம்மட்டும் தனித்து உண்ணார். பிறர் துன்பத்திற்குத் தாமும் அஞ்சி அதைத் தீர்ப்பதற்கு முயல்வர். புகழ்வந்தெய்தும் செயலாயின் தம் உயிரையும் தருவர். பழிவரும் செயலாயின் உலகமே கிடைப்பினும் அதனைச் செய்யார். கவலையற்றவர்; தமக்கென முயலாமல் பிறர்க்கென முயல்வார். இத்தகையோர் இருப்பதாலேயே உலகம் அழியாமல் இருக்கிறது.

10. சான்றோர் இயல்புகளாகக் கடலுள் மாய்ந்த இளம் பெருவழுதி கூறியன யாவை ?

(9ஆம் வினாவுக்குரிய விடையே இதற்கும் விடையாகும்.)

11. சான்றோர் இயல்பு பற்றி வள்ளுவர் செய்யும் எச்சரிக்கை யாது ?

"சான்றோர் தம் சான்றாண்மையிலிருந்து தவறிவிட்டால், அதனை இவ்வுலகம் பொறுத்துக்கொள்ளாது" என்று வள்ளுவர் எச்சரிக்கை செய்துள்ளார்.

12. தமிழர் பண்பாட்டினைப் பற்றிச் சுருக்கி வரைக.

அனைத்திலும் அறம்போற்றுவதும், என்றும் யாருக்கும் தீங்கு நினையாமையும், தம் நிலையில் தாழாமையும், அனைவரி டத்தும் அன்பு பாராட்டலும் தமிழர் பண்பாடாகும்.

II. பிரித்தெழுது :

உண்பதில்லை = உண்பது + இல்லை
கல்விக்காக = கல்விக்கு + ஆக
ஒழுக்கமற்ற = ஒழுக்கம் + அற்ற
கிடைப்பதாயினும் = கிடைப்பது + ஆயினும்

III. சேர்த்தெழுது :

விரும்பி + கற்க = விரும்பிக்கற்க
தேடி + போனுர் = தேடிப்போனுர்
வர + சொன்னுர் = வரச்சொன்னுர்
சுருங்க + சொன்னுல் = சுருங்கச்சொன்னுல்
போய் + பார்த்தார் = போய்ப்பார்த்தார்
பேசுவதாக + கூறினுர் = பேசுவதாகக்கூறினுர்

IV. எதிர்ச்சொல் கூறுக.

இனியது × இன்னுதது, கிட்டுவது × கிட்டாதது
தாழ்வு × உயர்வு, பெரும்பான்மை × சிறுபான்மை

V. வாக்கியத்தில் அமைத்து எழுது:

முகமலர்ச்சி, மேம்பாடு, கடைப்பிடித்தல்.
முகமலர்ச்சியுடன் விருந்தினரை உபசரிப்பது நன்று.
காந்தியடிகள் தம் தியாகத்தால் **மேம்பாடடைந்**தார்.
சான்றோர் ஒழுக்கத்தைக் **கடைப்பிடித்து** வாழ்ந்தனர்.

6. தங்கப்பன் உணர்ந்த தவறு

அருஞ்சொற்பொருள்

குடிகொண்டது - நிலவியது	**மாசற்றவன்**- குற்றமில்லாதவன்
செயலற்று - ஒன்றும் செய்யாமல்	**உறுதிகள்** - நன்மைகள்
	நாணம் - வெட்கம்
ஆண்மை - வீரம்	**தணல்** - நெருப்பு
உழைப்பு - முயற்சி	**விமரிசனம்** - ஆராய்ந்த கருத்துரை
கூசியது - வெட்கியது	
திங்கள் - மாதம்	

I. வினு – விடை

1. 'அடுத்தது நம் விடைத்தாளாய் இருக்குமோ' என்று எண்ணித் தங்கப்பன் துன்புற்றது ஏன் ?

தேர்வு எழுதிய முறையை எண்ணியே தங்கப்பன் துன்புற்றுன். தமிழாசிரியர் ஒவ்வொரு மாணவனுக்கும்

விடைத்தாளைக் கொடுத்துவரும்போது, 'அடுத்தது தன் விடைத் தாளாய் இருக்குமோ' என்று எண்ணித் தணலில் அமர்ந்தவன் போலத் தவித்தான். அவன் தேர்வு எழுதும் போது அவன் படித்திருந்த வினக்களுள் ஒன்றுகூட வினுத் தாளில் இல்லை. சிறிது நேரம் திகைப்போடு உட்கார்ந்திருந் தான். மெல்ல இரு பக்கமும் திரும்பிப் பார்த்தான். இடப் பக்கம் இருந்த அழகனும், வலப் பக்கம் இருந்த முத்துவும் விரைந்து விடைகளை எழுதிக்கொண்டிருந்தனர். தங்கப்பன், ஆசிரியரோ, மாணவரோ அறியாதவாறு அவர்கள் எழுதிய விடைகளைப் பார்த்து எல்லா வினக்களுக்கும் சரியான விடை களை எழுதி முடித்தான். உறுதியாகத் தேர்ச்சிக்குரிய மதிப் பெண் கிடைக்குமென எண்ணினுன். ஆயினும் தான் பார்த்து எழுதியதை ஆசிரியர் கண்டுபிடிப்பாரோ என்ற கவலையினுல், தங்கப்பன் வகுப்பில் கலங்கிய நிலையில் இருந்தான்.

2. தங்கப்பனைத் தமிழாசிரியர் முதலில் எவ்வாறு பாராட்டினுர் ?

ஆசிரியர் தங்கப்பனைப் பார்த்து "நீ எப்பொழுதும் **30, 35** என்று குறைவாகவே மதிப்பெண் பெறுவாய். முயன்று படி என்றேன். அதன்படி படித்துச் சிறந்த மதிப்பெண்ணைப் பெற்றுள்ளாய். உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை. முயன்ருல் எதுவும் முடியும் என்னும் முதுமொழிக்கிணங்க நீ இன்று விளங்குகிருய்" என்று பாராட்டினுர்.

3. தங்கப்பன் உண்மையை ஏன் உரைத்தான்?

ஆசிரியர், "வழக்கமாகக் குறைந்த மதிப்பெண் பெறும் தங்கப்பன் இன்று முயன்று படித்தமையால் ஐம்பது மதிப் பெண் பெற்றுள்ளான். உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை. முயன்ருல் முடியாதது இல்லை என்னும் பழமொழிக்கு எடுத்துக்காட்டாய் உள்ளான்" எனப் புகழ்ந்தார். ஆசிரியரின் புகழுரை அவன் உள்ளத்தை வாட்டியது. தவறு செய்த எனக்குப் பாராட்டா? என்று எண்ணி நாணினுன். தகுதி யில்லாத தனக்குப் புகழுரை கூடாது என்று எண்ணினுன். அவன் மனம் அவனை இடித்துக் காட்டியது. அதனுல் அவன் உண்மையை உரைத்தான்.

4. தங்கப்பன் செய்த தவற்றை அறிந்தும், ஆசிரியர் அவனைப் பாராட்டியது ஏன் ?

தங்கப்பன் உண்மையைப் பலர் முன்னிலையிலும் கூறித் தன் தவற்றிற்கு மன்னிப்புக் கேட்டது ஆசிரியரின் உள் ளத்தை உருக்கியது. தவறுசெய்ததை அறிந்து, மன்னிப்புக் கேட்டதோடன்றி 'இனிமேல் தவறு செய்யமாட்டேன்' எனக் கூறியதைக்கேட்டுப் பெருமையடைந்தார். அவன் திருந்திய

தையும், குற்றத்தைப் பலர் முன் ஒப்புக்கொள்ளும் ஆண்மையையும் கண்டு வியந்து பாராட்டினர்.

5. தமிழாசிரியர் படிப்பில் ஊக்கம் கொள்ள என்ன செய்தார் ?

தமிழாசிரியர் மாணவர்கள் எழுதிய விடைத் தாள்களை வகுப்புக்குக் கொண்டுவந்தார். ஒவ்வொரு தாளாக எடுத்து அதனை எழுதியவன் பெயரைப் படித்தார். அம் மாணவன் எழுந்து நின்றதும் அவன்பெற்ற மதிப்பெண்ணை அறிவித்து, குறைவான மதிப்பெண்பெற்ற மாணவர்களுக்கு அறிவுரை கூறி மேலும் நன்ருகப் படிக்குமாறு ஊக்கம் ஊட்டினர். நிறைந்த மதிப்பெண்பெற்ற மாணவர்களைப் புகழ்ந்தார். இங்ஙனம் ஆசிரியர் மாணவர் படிப்பில் ஊக்கம் கொள்ளச் செய்தார்.

6. தவறுணர்ந்து திருந்திய தங்கப்பனை ஆசிரியர் எவ்வாறு பாராட்டினர் ?

"தங்கப்பா, காந்தியடிகள் என்ன கூறியிருக்கிருர் தெரியுமா? 'தவறு செய்வதில் பிழையில்லை; ஆனல், தவறு செய்ததை அறிந்துகொண்ட பிறகு அதைத் திருத்திக்கொள்ளாமல் இருப்பது தவறு' என்பது அவரது அறிவுரை.

நீ செய்த தவற்றினை என்னிடம் தனியாகக் கூருமல் அனைவரும் அறிய வகுப்பிலேயே கூறினய். அந்த ஆண்மையைப் பாராட்டுகிறேன். நீ தணலில் இட்ட தங்கம்போல, மாசற்றவனய் மாறிவிட்டாய். இனி எப்போதும் தவறு செய்யாதே. உன் மதிப்பெண் இப்போதும் ஐம்பதே! இந்த மதிப்பெண் உன் பாடத்துக்கன்று. உன் பண்புக்கு" என்று கூறித் தங்கப்பனைப் பாராட்டினர்.

II. பிரித்தெழுது :

கூறியவாறு = கூறிய + ஆறு, மதிப்பெண் = மதிப்பு + எண்
அதற்குரிய = அதற்கு + உரிய, இவ்வாறே = இ + ஆறே

III. சேர்த்தெழுது :

தலை + அணை = தலையணை, விட + இல்லை = விடவில்லை
அறியாத + ஆறு = அறியாதவாறு, எ + ஆறு = எவ்வாறு

IV. வாக்கியத்தில் அமைத்து எழுது :

சலசலப்பு, உடலும் உள்ளமும், செம்மையாக, மளமளவென்று

காற்றடித்தால் மரங்களிடையே **சலசலப்பு** ஏற்படும்.
மகனை இழந்த தாய் **உடலும் உள்ளமும்** சோர்ந்திருந்தாள்.
பாடங்களை எப்பொழுதும் **செம்மையாகப்** படிக்கவேண்டும்.
மரம் **மளமளவென்று** வளர்ந்தது.

7. ஒருமைப்பாடு

அருஞ்சொற்பொருள்

மொய்ம்பு - வலிமை	ஒருமைப்பாடு - ஒற்றுமை
சிந்தனை - எண்ணம்	ஊறு - துன்பம்
பல்லாற்றானும் - பலவழிகளாலும்	அடிமைத்தளை - அடிமையாகிய கட்டு
திலகம் - நெற்றியில் அணியும் பொட்டு	பேணி - விரும்பி

I. வினா - விடை

1. பண்டைக்கால இந்தியரின் ஒருமைப்பாட்டு உணர்வை விளக்கு.

பண்டைக்காலத்தில் இந்தியா பல நாடுகளாகப் பிரிந்திருந்தது. இந்தியர் அனைவரும் ஒரு நாட்டினர் என்னும் உணர்வு பெறவேண்டும் என்பதைச் சான்றோர் வற்புறுத்தினர். ஆதிசங்கரர் இந்தியா முழுமையும் தம் மடங்களை அமைத்தார். புனிதப் பயணம்செய்யும் மக்கள் காசி முதல் இராமேசுவரம் வரை சென்றனர். கலையாலும் பண்பாட்டாலும் இந்தியா ஒரு நாடாகக் கருதப்பட்டது. இந்தியர் என்ற ஒருமைப்பாடு இருந்தது.

2. 'பாரதியார் ஒருமைப்பாட்டை எவ்வாறு விளக்குகிறார்'?

"பாரதத்தாய் முப்பது கோடி முகம் உடையவள்; ஆனால், அவளுக்கு உயிர் ஒன்று. பதினெட்டு மொழிகளை உடையவள்; எனினும், அவளுடைய சிந்தனை ஒன்றேதான்" என்று பாரதியார் பாரதத்தின் ஒருமைப்பாட்டைப் பெருமையாகப் பாராட்டுகிறார்.

3. நாட்டின் நலத்துக்கு ஏற்றது எது ?

ஒவ்வொரு மாநிலத்தாரும் தத்தம் மாநிலம் வளம்பெற்று முன்னேற உழைக்கவேண்டும். தம் மொழியையும் மாநிலத்தையும் உயர்த்தும் முயற்சியால் இந்திய ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளைவித்தல் கூடாது. வேற்று நாட்டினர் நம் நாட்டின் மீது படை எடுத்தபொழுது இந்தியர் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து எதிர்த்தனர். பல்வேறு அரசியல் கட்சிகளும் ஒன்று பட்டு நின்றன. போர்க் காலத்தில் தோன்றிய அவ்வொற்றுமை உணர்வு அமைதியான காலத்திலும் நிலவுதலே நாட்டின் நல்வாழ்வுக்கு ஏற்றதாகும்.

4. இந்தியா இந்தியரின் உடைமை என்பதை விளக்கு.

இந்தியன் ஒருவன் இந்தியாவின் எம்மாநிலத்திலும் வாழலாம். இந்தியா இந்தியரின் உடைமை. அதைப் போற்றிக் காப்பது ஒவ்வொரு இந்தியனின் கடமை. மொழியாலும் மாநிலத்தாலும் தமிழராயிருப்பினும் நாட்டால் நாம் இந்தியர்; நாம் பாரதத் தாயின் மக்கள். இதனை நாம் என்றும் மனத்தில் கொள்ளவேண்டும்.

5. இந்தியா எப்போது முன்னேறும் ?

ஒரு மாநிலத்தார் தம் மாநிலத்தைமட்டும் வளப்படுத்தல் போதுமென்றோ, தாம் மட்டும் எல்லாத் துறையிலும் சிறந்திருத்தல்போதும் என்றோ எண்ணுதல்கூடாது. நம் மாநிலமும் முன்னேறவேண்டும், பிற மாநிலமும் முன்னேற வேண்டும் என்றே யாவரும் நினைத்துச் செயலாற்றவேண்டும். அப்போது தான் இந்தியா முன்னேறும்.

6. ஒரே இந்தியா எப்போது உருவானது ?

ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்டபோதுதான் இந்தியா முழுவதும் ஓராட்சியின்கீழ் அமைந்தது. ஆங்கிலேயரின் ஆட்சி அகன்று அடிமைத்தளை அறுந்து நாம் உரிமைபெற்ற போது, சிறுசிறு சமஸ்தானங்களும் இந்தியக் குடியரசில் இணைந்துவிட்டன.

II. பிரித்தெழுது:

முகமுடையாள் = முகம் + உடையாள்

மொய்ம்புற = மொய்ம்பு + உற

நீரதன் = நீர் + அதன், நற்றமிழர் = நன்மை + தமிழர்

III. சேர்த்தெழுது :

ஓர் + ஆட்சி = ஓராட்சி

ஒருமைப்பாடு + உணர்வு = ஒருமைப்பாட்டுணர்வு

ஒருமைப்பாட்டிற்கு + ஊறு = ஒருமைப்பாட்டிற்கூறு

IV. வாக்கியத்தில் அமைத்து எழுது:

ஊறு, இமயம் முதல் குமரி வரை, சூழ்ந்து.

எவ்வுயிர்க்கும ஊறு விளைவித்தல்கூடாது.

கரிகாற் சோழன் புகழ் இமயம் முதல் குமரி வரை பரவிற்று.

காந்தியடிகள் தமிழ்நாட்டிற்கு வந்தபோது அவரை மக்கள் சூழ்ந்து கொண்டனர்.

8. இராசராசன்

அருஞ்சொற்பொருள்

தார் வேந்தன் – மாலையை அணிந்த அரசன் (சோழனுக்குரிய மாலை ஆத்தி மாலை)

அவண் - அங்கு

அகவற்பா - நால்வகைப் பாக்களுள் ஒன்று, மற்றவை வெண்பா, வஞ்சிப்பா, கலிப்பா என்பவை

மெய்க்கீர்த்தி - உண்மையான புகழ்

சமயப்பொறை - பிறசமயங்களை வெறுக்காமல் பொறுத்தல்

பள்ளிச்சந்தம் - சமண, பௌத்தக் கோயில்களுக்கு வரியில்லாமல் வழங்கப்படும் நிலம் அல்லது ஊர்

உய்யக் கொண்டான் - பிறர் பிழைக்குமாறு அருள் செய்தவன்

பராக்கிரமன் - பெருவீரன்

தோற்றப்பொலிவு - வடிவழகு

I. வினா - விடை

1. முதலாம் இராசராசன் என்னும் பெயரை விளக்கு.

இராசராசனது இயற்பெயர் அருண்மொழிவர்மன். குறுகிய காலத்தில் பெருவெற்றிகளைப் பெற்றுச் சிறப்புற்றமையால், 'அரசர்க்கரசன்' எனப் பொருள்படும் இராசராசன் என்னும் சிறப்புப் பெயரைப் பெற்றான். அப்பெயரே அவனது இயற்பெயர் போல வழங்கி நிலைத்து விட்டது.

அவனுக்குப் பின்னர், 'இராசராசன்' என்னும் பெயரோடு சோழமன்னர் சிலர் ஆண்டமையால், அவனை முதலாம் இராசராசன் என்று வரலாற்று ஆசிரியர் வழங்கினர்.

2. பிற்காலச்சோழர் என்று எவருக்குப் பெயர்? அவர்களுள் முக்கியமானவர் யார்?

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழநாட்டை ஆண்ட விசயாலயச் சோழன் வழிவந்தோர் 'பிற்காலச் சோழர்' எனப் பட்டனர். அவர்களுள் புகழ்பெற்றவன் இராசராச சோழன்.

3. இராசராசனின் பெற்றோர் யார்? அவன் எப்போது அரியணை ஏறினான்?

இராசராசன் தந்தைபெயர் இரண்டாம் பராந்தகன்; தாயின் பெயர் வானவன் மாதேவி. பராந்தகச் சோழன் இறந்த பிறகு, அவன் மகனை இராசராசன் அரியணையில் அமரவில்லை. அவனுக்குச் சிறிய தந்தையான உத்தமச்சோழன் அரசனானான். உத்தமச் சோழன் மறைந்த பின்னர் கி. பி. 985இல் இராசராசன் சோழ நாட்டிற்கு அரசனானான்.

4. இராசராசன் சேரனுடன் போரிட்டது ஏன்? அப்போரின் விளைவுகள் யாவை ?

இராசராசன் அனுப்பிய தூதன் ஒருவனைச் சேரமன்னன் அவமதித்துச் சிறையிலிட்டான். அதனைக் கேள்வியுற்ற இராசராசன் சினந்து சேரனோடு போரிட்டான். அப்போரில் கடற்கரைப் பட்டினமான காந்தளூர்ச்சாலையில் சேரனுக்குரிய கலங்களைச் சிதைத்தான். அதனால் 'காந்தளூர்ச்சாலை கலம் அறுத்தருளியவன்' என்னும் புகழ்பெற்றான். தன் தூதன் சிறை வைக்கப்பட்டிருந்த வலிமை மிக்க உதகை என்னும் ஊரைத் தாக்கி, அதன் அரண்களைத் தகர்த்துச் சிறை வைக்கப்பட்டிருந்த தூதனை விடுவித்தான்.

5. இராசராசன் பெற்ற வெற்றிகளை விளக்கு.

சேரனுடன் போர் செய்து காந்தளூர்ச் சாலையில் கலம் அறுத்தருளினான். உதகை என்னும் ஊரைத் தாக்கி அரண்களைத் தகர்த்தான். பாண்டிய மன்னனான அமரபுயங்கனுடன் போரிட்டு வென்றான். குடமலை நாடு, கங்கபாடி, நுளம்பபாடி, தடிகைப்பாடி, மேலைச்சளுக்கிய நாடு, தெலுங்குச் சோழர்க்குரிய சீட்புலி நாடு உள்ளிட்ட பல்வேறு நாடுகளை வென்றான். கப்பற்படை துணைகொண்டு, ஈழநாட்டையும் வென்று, அதற்கு 'மும்முடிச் சோழமண்டலம்' எனப் பெயரிட்டுத் தன்னாட்சியின்கீழ்க் கொணர்ந்தான். அரபிக்கடலில் உள்ள முந்நீர்ப்பழந்தீவு பன்னீராயிரம் எனவழங்கும் மாலைத்தீவுகளையும் வென்றான். அதனால் இராசராசனது ஆட்சி தமிழ்நாட்டிற்கு வெளியிலும் கடல்கடந்து பரவியிருந்தது.

6. இராசராசன் காலத்தில் சோழநாடு எவ்வாறு திகழ்ந்தது ?

இராசராசன் போரில்மட்டும் ஆர்வம் கொண்டவன் அல்லன். நாடு செழிக்கவும், மக்கள் நல்வாழ்வு வாழவும் பாடுபட்டான். போர்க் காலத்திலும் அவன் நாடுவளமுடன் இருந்தது. மக்கள் மகிழ்ச்சியும், மனநிறைவும் பெற்றுவிளங்கினர். மொழி செழித்தது. கலைகள் வளர்ந்தன. சிற்பமும் ஓவியமும் சிறந்தன.

7. வரலாற்று ஆசிரியர்க்கு இராசராசன் எவ்வாறு துணை செய்தான் ?

கல்வெட்டுகளில் தன் ஆட்சியில் நிகழ்ந்த வரலாற்று உண்மைகளை இனிய அகவற்பாவில் அமைத்துப் பொறித்தான். கல்லில் பொறிக்கும் பழக்கம் இவன் காலத்திலேயே ஏற்பட்டது. அதற்கு 'மெய்க்கீர்த்தி' என்பது பெயர். இவன் செயலை எல்லோரும் பின்பற்றினர். கல்வெட்டுகள் அழியாமல் இருந்ததால் அரசர்களுடைய சிறப்புகளை வரலாற்று ஆசிரியர்களால் தெளிவாகத்தெரிந்து கொள்ளமுடிந்தது.

8. இராசராசன் சைவ சமயத்திற்குச் செய்த பணிகள் யாவை ?

இராசராசனின் பாட்டி செம்பியன் மாதேவியும், அவன் தமக்கை குந்தவையும் அவனைச் சமயநெறியில் ஊக்கினர். அதனால் இராசராசன் பல்வேறு கோயில் திருப்பணிகளைச் செய்தான். அவற்றுள் மிகச் சிறந்தது, தஞ்சாவூரில் அவன் எழுப்பிய கோயில். அது பெரிய கோயில் என வழங்கப்படுகிறது. அக்கோயிலுக்கு 'இராசராசேச்சுரம் என்றே பெயரிட்டான். அக்கோயிலுக்குப் பெரும் பொருளையும், அதிக வருவாய் தரும் ஊர்களையும் அளித்தான்.

அவன் காலத்திருந்த நம்பியாண்டான் நம்பி என்னும் அடியவரைக் கொண்டு தேவாரத் திருமுறைகளையும் தொகுக்கச் செய்தான்.

9. சமயப்பொறை அமையப்பெற்றவன் இராசராசன் என்பதை விளக்கு.

இராசராசன் பெங்களூரைச் சேர்ந்த மணலூரிலும், தலைக்காட்டிற்கு அருகேயும் திருமாலுக்குக் கோயில் கட்டினான். நாகப்பட்டினத்தில் கடாரத்தின் அரசனான சூளாமணிவர்மனால் கட்டி முடிக்கப்பட்ட புத்தவிகாரத்திற்கு 'இராசராசப் பெரும்பள்ளி' எனப் பெயர்சூட்ட இசைந்தான். அப்பள்ளிக்கு ஆனைமங்கலம் என்னும் ஊரைப் பள்ளிச்சந்தமாக அளித்தான்.

10. இராசராசன் மனைவி மக்களைப்பற்றி நீ அறிவன யாவை ?

இராசராசனின் பட்டத்தரசியின் பெயர் உலகமாதேவி. இராசராசன் மக்கள் மூவரைப் பெற்றுப் பெருமையுற்றான். அவர்களுள் இருவர் மகளிர்; ஒருவன் ஆடவன். மூத்த மகளின் பெயர் மாதேவடிகள். இளையமகள் பெயர் குந்தவை. இவள் சிறிய குந்தவை என்றழைக்கப்பட்டாள். மகன்பெயர் இராசேந்திரன். அவனே பின்னர்க் 'கங்கை கொண்ட சோழன்' என்னும் சிறப்புப் பெயர் பெற்றவன்.

11. இராசராசன் பெற்ற சிறப்புப் பெயர்கள் சிலவற்றை எழுது.

'காந்தளூர்ச்சாலை கலம் அறுத்தருளியவன், உய்யக்கொண்டான், மும்முடிச்சோழன், நிகரிலி சோழன், சனநாதன், கீர்த்திபராக்கிரமன்' ஆகியவை இராசராசனின் சிறப்புப் பெயர்கள்.

II. பிரித்தெழுது :

நூற்றாண்டு = நூறு + ஆண்டு
பொற்காலம் = பொன் + காலம்
இயற் பெயர் = இயல் + பெயர்
அரியணை = அரி + அணை
சிறப்புற்று = சிறப்பு + உற்று

III. சேர்த்தெழுது :

சிறப்பு + பெயர் = சிறப்புப் பெயர்
கப்பல் + படை = கப்பற்படை
தோற்றம் + பொலிவு = தோற்றப்பொலிவு
அகவல் + பா = அகவற்பா

IV. எதிர்ச்சொல் கூறுக :

முற்காலம் × பிற்காலம், பெருமை × சிறுமை

9. காஞ்சியும் காசியும்

அருஞ்சொற்பொருள்

வளநகரம் - செழிப்பான நகரம்	**தழைத்து** - செழித்து
பதி - இடம், ஊர்	**அண்மை** - அருகே
குன்று - சிறியமலை	**பாசுரம்** - பாடல்
இதிகாசம் - பழமையான வரலாறு	**இயங்கி** - செயல்பட்டு

I. வினா - விடை

1. காஞ்சி நகரம் என்னென்ன பெயர்களால் வழங்கப்படுகிறது ?

காஞ்சிபுரம், கச்சி, கச்சிப்பேடு, காஞ்சி எனப் பல பெயர்களால் காஞ்சி நகரம் அழைக்கப்படுகிறது.

2. காஞ்சியையும் காசியையும் ஆற்றங்கரை நகரங்கள் என்று அழைப்பது ஏன் ?

காஞ்சிபுரம் பாலாற்றங்கரையில் அமைந்துள்ளது. காசி கங்கையாற்றங்கரையில் அமைந்துள்ளது. ஆகவே, இவ்விரு நகரங்களையும் ஆற்றங்கரை நகரங்கள் என்று கூறுவர்.

3. காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு ஆண்ட மன்னர்கள் யார், யார்?

சங்க காலத்தில் தொண்டைமான் இளந்திரையன் என்னும் பெருமன்னன் காஞ்சியைத் தலைநகராகக்கொண்டு ஆண்டான். பல்லவர் காலத்தில் மகேந்திரவர்மன், நரசிம்ம வர்மன், நந்தி வர்மன் என்பவர்கள் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆண்டனர்.

4. காஞ்சிக்கு வருகை புரிந்த சீன அறிஞர் யார் ? அவர் கூறிய குறிப்பு யாது ?

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் காஞ்சிக்கு வந்த சீன அறிஞர் யுவான்-சாங்கு என்பவர். இவர் அசோக மன்னரின் கற்றூண் ஒன்று காஞ்சியில் காணப்பட்டது என்று குறிப்பு எழுதியுள்ளார்.

5. காசியின் சிறப்பைக் கூறுக.

பழமையும் பெருமையும் வாய்ந்த வள நகரங்களில் காசி ஒன்று. முத்தி தரும் ஏழு நகரங்களில் இது ஒன்று. கல்வியிலும், சமயத்திலும் இந்நகரம் சிறப்புற்று விளங்குகிறது. பழங் காலத்திலிருந்தே பல்வேறு கலைகளுக்கும், பண்பாடுகட்கும் இருப்பிடமாய் இருந்து வருகிறது. உத்தரபிரதேசத்தின் இரண்டாவது பெரிய நகரம் காசி. கங்கையாற்றங் கரையில் அமைந்துள்ள இந்நகரம் புனித யாத்திரைத் தலமாக இருக்கிறது.

வேதகாலந் தொடங்கியே காசி புகழ்பெற்று விளங்குகிறது. இதிகாசங்களில் காசியின் பெருமை கூறப்படுகிறது. கி. மு. ஏழாம் நூற்றுண்டில் காசியில் குடியரசு ஆட்சி நிலவியதாகக் கூறுவர். மௌரிய, குப்தப் பேரரசுகளின் வாணிக நிலையமாகக் காசி விளங்கியது.

தென்னுட்டில் பிறந்த சங்கராச்சாரியார் காசியில் பலநாள் தங்கிச் சமய போதனைகள் செய்துள்ளார். இவர் நிறுவிய 'காஞ்சி காமகோடி பீடம்' என்னும் மடம் அங்குள்ளது. சைவப் பெரியாராகிய குமரகுருபரர் சைவமடம் ஒன்று நிறுவியுள்ளார். நெசவுத் தொழிலுக்கு இந்நகர் பெயர் பெற்றது. இங்கு 'இந்துப் பல்கலைக் கழகம்' சிறப்புடன் இயங்கி வருகிறது. அதிவீரராம பாண்டியர் 'காசிக் காண்டம்' என்ற தலபுராணம் இயற்றியுள்ளார்.

6. காஞ்சிமா நகரின் சமயச் சிறப்புகளை விளக்குக.

முத்திதரும் நகரங்கள் ஏழில் காஞ்சியும் ஒன்று. காஞ்சி மாநகரில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம் என்னும் சமயங்கள் தழைத்தோங்கின. அதனுல் அது சிவ காஞ்சி, விஷ்ணு காஞ்சி, சமண காஞ்சி, பௌத்த காஞ்சி என்னும் பிரிவுகளைக் கொண்டதாகத் திகழ்கிறது. தேவாரம் பாடிய மூவரும் இந்நகரிலுள்ள ஏகாம்பரநாதரைப் பாடியுள்ளனர். பொய்கையாழ்வாரும், பிற ஆழ்வார்களும் திருமால்மீது பல பாசுரங்கள் பாடியுள்ளனர். சைன, பௌத்த மதங்கள் ஓங்கியிருந்த காலத்தில் அம்மதப் பெரியார்கள் இங்குத் தங்கிப் பல நூல்கள் இயற்றியுள்ளனர். மணிமேகலை இந்நகர் போந்து சமய உண்மைகளைக் கேட்டறிந்தாள்.

7. காசிக்குச் சென்று சைவப் பெருமைகளை எடுத்துரைத்த பெரியார் யார்? அவருடைய தொண்டுகளைக் குறிப்பிடுக.

காசிக்குச் சென்று சைவ சமயப் பெருமைகளை எடுத்துரைத்த பெரியார் குமர குருபரர். இவர் காசியில் சில காலம் தங்கி, இந்துஸ்தானி மொழியைக் கற்றுர். பின் அங்குள்ளவர்

களுக்குச் சைவ சமயப் பெருமைகளை எடுத்துரைத்தார். சைவ மடம் ஒன்றையும் நிறுவியுள்ளார். அம்மடம் அவர் பெயரால் இன்றும் அழைக்கப்படுகிறது.

8. காசி இந்துக் கல்லூரியும், காஞ்சியின் கல்வி நிறுவனங்களும் எவ்வெவரால் நிறுவப்பட்டன ?

அன்னிபெசண்டு அம்மையாராலும், பண்டித மதன் மோகன மாளவியா முதலியோர் முயற்சியினாலும் காசி இந்துப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது.

காஞ்சி கல்வி நிறுவனங்கள் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த காஞ்சி பச்சையப்பர் நிறுவிய அறக்கொடையால் நிறுவப்பட்டு, சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

9. காஞ்சியைப் பற்றிக் கூறும் தமிழ் இலக்கியங்கள் யாவை ?

காஞ்சி புராணமும், கந்த புராணமும் இந்நகர் பற்றிய பெருமைகளைக் கூறுகின்றன. அதிவீரராம பாண்டியர் இயற்றிய காசிக் காண்டமும் காஞ்சியைப் பற்றிக் கூறுகிறது. அந்தாதி, கலம்பகம், உலா போன்ற சிறு நூல்களும் காஞ்சி யின் பெருமையை எடுத்துரைக்கின்றன.

10. காஞ்சியின் சிறப்புகள் யாவை ?

இதுவும் முத்திதரும் நகரங்களில் ஒன்று. காஞ்சிபுரம் கலை, கல்வி, சமயம், நெசவுத் தொழில் முதலியவற்றால் சிறப் புற்று விளங்குகிறது. தொண்டைமான் இளந்திரையனும், பல்லவ மன்னர்களும் இந்நகரினைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டனர். காஞ்சியில் உள்ள கோவில்கள் சிற்பக் கலை யழகு செறிந்தவை. இங்கு தமிழும் வடமொழியும் சிறந்து விளங்கின. புகழ்பெற்ற காஞ்சி காமகோடி பீடம் என்னும் திருமடமும் காஞ்சியில் உள்ளது. இங்குப் பட்டு நெசவு சிறப் புற்று விளங்குகிறது.

II. பிரித்தெழுது :

பாலாற்றங்கரை = பாலாறு + அம் + கரை
கற்றூண் = கல் + தூண், இந்நகர் = இ + நகர்
தேவாரம் = தே + வாரம் ; தே + ஆரம்
சிற்றிலக்கியம் = சிறு + இலக்கியம

III. சேர்த்தெழுது :

பல்கலை + கழகம் = பல்கலைக்கழகம்
அறம் + கொடை = அறக்கொடை
முன் + நாள் = முன்னாள்
பெருமை + மன்னன் = பெருமன்னன்

IV. **எதிர்ச்சொல் எழுது :**

பழமை × புதுமை
அண்மை × சேய்மை
புகழ்தல் × இகழ்தல்
தென்னாடு × வடநாடு

V. **வாக்கியத்தில் அமைத்தெழுது :**

செப்பனிட்டு, புகழ்பெற்ற, தழைத்தோங்கி, எடுத்துக்காட்டு

கந்தன் தன் வீட்டைப் பழுது பார்த்துச் **செப்பனிட்டான்.**
தஞ்சையில் **புகழ்பெற்ற** கோயில் உள்ளது.
முருகனின் நிலத்தில் பயிர் **தழைத்தோங்கியது.**
மதுரைக் கோயில் சிற்பக் கலைக்கு ஓர் **எடுத்துக்காட்டாகும்.**

10. இராசா ராம்மோகன் ராய்

அருஞ்சொற்பொருள்

பட்டறிவு - அனுபவ அறிவு
இதழ் - பத்திரிகை
மேதை - அறிஞர்
கைம்பெண்டிர் - கணவனை இழந்தவர்
மாவட்டம் - ஜில்லா

I. வினா - விடை

1. இராம்மோகன் ராய் பெற்றோர் யாவர்? அவர் எத்தன்மையவர்?

இராம்மோகன் தந்தையார் இராமகாந்தர், தாயார் புல்தாகு ராணி என்பவராவர்.

அவர் குடும்பம் பழமையில் மிகுந்த பற்றுக்கொண்டது. சடங்குகள், வழிபாட்டு முறைகள், பிற பழக்கவழக்கங்கள் ஆகியவற்றுள் எதையும்விடாமல் பின்பற்றி வாழ்பவர்கள்.

2. இராம்மோகன் இளமைப் பருவத்தை விளக்கு.

இராம்மோகன் இளமையிலேயே ஆழ்ந்து சிந்தித்துத் தெளியும அறிவு பெற்றிருந்தார். அதனால், இளமையிலேயே புதுமையான பல கருத்துகளை எடுத்துக் கூறுவார். அக் கருத்துகளை நூலாக எழுதும் முயற்சியிலும் ஈடுபட்டார். ஒன்றே தெய்வம் என்னும் உண்மையை ஏற்றுக்கொண்டார். உருவ வழிபாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. உருவ வழிபாட்டை எதிர்த்து மகன் நூல் எழுதுவதை அறிந்த இராமகாந்தர் சினங்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறச் சொன்னார். அவர் சிறிதும் தயங்காமல் வீட்டைவிட்டு வெளியேறினார். இந்தியாவின் பல மாநிலங்களிலும், திபெத்திலும் சுற்றித் திரிந்தார்

அவ்விடங்களில் எல்லாம் தம் கொள்கையை விளக்கிக் கூறினார். பல துன்பங்களுக்கு ஆளானார். எனினும், அவர் பட்டறிவையும், பல சமய உண்மைகளையும் பெற்றவராய் வீடு திரும்பினார்.

3. இராம்மோகன் கல்வி கற்ற முறையை எழுது.

இராம்மோகன் முதலில் பாடலிபுத்திரத்தில் படித்தார். வீட்டைவிட்டு வெளியேறித் திரும்பி வந்தபின் காசியில் படித்தார். வேதங்களையும் உபநிடதங்களையும் கற்றும் அவரது கொள்கை மாறவில்லை. இராம்மோகன் கல்வியில் வல்லவர். வங்கமொழியில் தனிப் புலமை பெற்றதோடு, பாரசீகம், அரபு, எபிரேயம், கிரேக்கம். இலத்தீன், ஆங்கிலம், பிரெஞ்சு முதலிய மொழிகளிலும் தேர்ந்தவர்.

4. இதழ்களுக்கு இராம்மோகன் ஆற்றிய பணி யாது ?

இராம்மோகன், தன் கருத்துகளைப் பரப்பப் பல இதழ்களைத் தொடங்கி நடத்தினார். அவற்றில் அரசியல்பற்றிய கட்டுரைகளையும் வெளியிட்டார். அப்போது ஆண்ட ஆங்கிலேயர், இந்திய இதழ்களின் உரிமையைப் பறிக்க முயன்ற போது அவர் அதை எதிர்த்துப் போரிட்டார். அதனால் பல இன்னல்கள் ஏற்பட்டாலும் பின்னர் இந்திய இதழ்களுக்கு நன்மை ஏற்பட்டது.

5. இராம்மோகனின் வங்கமொழிப் புலமையையும், தாய்மொழிப் பற்றையும் விளக்கு.

இராம்மோகன் வங்கமொழியில் நிகரற்ற புலமை பெற்றவர். அம்மொழியில் பலபாடல்களை இயற்றியுள்ளார். வங்க மொழியில் எழுதிய உரைநடை, எளிமையும் இனிமையும் இணைந்து கற்போர்க்கு இன்பம் அளித்தது. அவரே வங்க மொழியின் உரைநடைக்கு வழிகாட்டியவர். அதனால், 'வங்க மொழி உரைநடையின் தந்தையார்' என்று அவர் புகழப் பட்டார்.

இராம்மோகன் பல மொழிகளையும் கற்றவர். இந்தியர் ஆங்கிலம் கற்கவேண்டும் என்று வற்புறுத்தியவர். எனினும், அவர் தாய்மொழியாகிய வங்கமொழியில் மிகப் பற்றுடையவராக இருந்தார். தாம் தொடங்கிய ஆங்கில உயர்நிலைப் பள்ளியில் அறிவியலைத் தாய்மொழியாகிய வங்கமொழியில் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்தார்: இதனால் அவருடைய தாய்மொழிப்பற்றை அறியலாம்.

6. கல்வித்துறையில் இராம்மோகன் செய்த தொண்டு யாது ?

இராம்மோகன் ஆங்கிலமொழி மூலம் இந்திய மக்கள் பல நன்மைகள் அடையலாம் என நம்பினார். இந்தியர்க்கு ஆங்கில

மொழி அறிவை அளிப்பதற்காக ஆங்கிலப் பள்ளியைத் தம் சொந்தச் செலவில் தொடங்கினர். ஆங்கிலமொழிக் கல்வியை இந்தியர்க்கு அளிக்கவேண்டும் என்று அரசினரையும் வற்புறுத்தினர். இவர் இந்தியாவில் ஆங்கிலக் கல்வியைப் பரப்ப முயன்றமையாலேயே இந்தியர் விடுதலை உணர்வும் அறிவியல் திறனும், பல்வேறு கலைகளில் புலமையும் பெற முடிந்தது. இன்றேல் நம் மக்கள் கல்வியில் இவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்க முடியாது.

7. பெண்ணினத்துக்கு இராம்மோகன் செய்த தொண்டு யாது ?

இராம்மோகன் வாழ்ந்த காலத்தில் பெண்டிரை மக்கள் இழிவுபடுத்தினர்கள். அவர்களுக்கு மதிப்பும் உரிமையும் அளிக்கவில்லை. அக் காலச் சமுதாயத்தில் உடன்கட்டை ஏறும் மிகக் கொடுமையான வழக்கம் இருந்தது. அக் கொடுமையை நீக்க இராம்மோகன் மிகவும் பாடுபட்டார். பேச்சாலும் எழுத்தாலும், அக் கொடிய வழக்கத்தைக் கண்டித்தார். அதனுல், அப்போது அரசப்பிரதிநிதியாக இருந்த வில்லியம் 'பெண்டிங்கு பிரபு' உடன்கட்டை ஏறுவதைத் தடை செய்தார். அதோடு இளம் கைம்பெண்டிர் மறுமணம் செய்து கொள்ளலாம் என்றும், குடும்பச் சொத்தில் பெண்டிர்க்கும் உரிமை அளிக்கவேண்டும் என்றும் வாதாடினர்.

8. இராம்மோகனின் இறுதிக் காலத்தைப்பற்றி நீ அறிவன யாவை ?

இராம்மோகன் 1830ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்ருர். அப்போது தில்லி அரசர் அவருக்கு 'இராசா' என்னும் பட்டம் அளித்தார். அதுமுதல் அவர் இராசா ராம்மோகன் ராய் என வழங்கப்பட்டார். இங்கிலாந்தில் தம் கொள்கைகளைப் பரப்பிப் பெரும்புகழ் பெற்ருர். அங்கிருந்து பிரான்சு நாட்டிற்குச் சென்று மீண்டும் இங்கிலாந்திற்குத் திரும்பினர். இங்கிலாந்தில் பிரிஸ்டல் நகரை அடுத்துள்ள சிற்றூர் ஒன்றின் இயற்கைச் சூழலில் தங்கினர். 1833ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 27ஆம் நாள் இயற்கை எய்தினர்.

9. இராம்மோகன் தொடங்கிய கழகம் யாது? அதன் நோக்கம் என்ன?

இராம்மோகன் தொடங்கிய கழகம் 'பிரமசமாஜம்' என்பதாகும். 'ஒருவனே இறைவன்' என்னும் கொள்கையைப் பரப்புவதே அதன் நோக்கமாகும். பிரமசமாஜத்தின் கிளைகள் இன்று நாடெங்கும் தோன்றியுள்ளன. அவை அவர் தொடங்கிய தொண்டைத் தொடர்ந்து செய்துவருகின்றன.

10. சதி என்றல் என்ன ? இராம்மோகன் சதியை வெறுக்கக் காரணம் யாது ?

கணவன் இறந்தால் அவன் உடல் எரிக்கப்படும்போது அவன் மனைவியும் அத்தீயில் வீழ்ந்து இறக்கவேண்டும்.

இதனை சதி என்றும், உடன்கட்டை ஏறுதல் என்றும் கூறுவர். மனைவி இறக்க விருப்பாவிட்டாலும் உறவினர் அவளைத் தீயில் தள்ளி இறக்கச் செய்வர்.

இராம்மோகனின் தமையனுர் இறந்தபோது அவருடைய அண்ணியார் உடன்கட்டை ஏற விரும்பவில்லை. உறவினர் கட்டாயமாக அண்ணியாரை உடன்கட்டை ஏற்றிக் கொன்றனர். அதனை நேரிற்கண்டு நெஞ்சம் பதைத்தார். அக் கொடுமையை ஒழிக்கப் பாடுபட்டார்.

11. **இராம்மோகனின் குணநலன்களைச் சுருக்கி எழுது.**

இளமையில் ஆழ்ந்து சிந்திக்கும் அறிவுடையவராய் இருந்தார். தமக்குச் சரி என்று பட்டதை அஞ்சாமல் எடுத்துக் கூறும் வீரமுடையவர். தெய்வ நம்பிக்கை உடையவர். ஆனுல், உருவ வழிபாட்டை வெறுத்தார். பல துன்பங்களுக்கிடையிலும் தம் கொள்கையைப் பரப்பி வந்தார். பிரமசமாஜ கழகத்தை ஏற்படுத்தினுர். தாய்மொழிப் பற்றுடையவர். பல பாடல்களையும், உரைநடை நூல்களையும் தம் மொழியாகிய வங்காளியில் எழுதியுள்ளார். அவர் தம் வாழ்நாள் முழுவதும் பொதுத்தொண்டு செய்து புகழ் பெற்ருர். ஆங்கிலக் கல்வி பரவப் பாடுபட்டார். உடன்கட்டை ஏறும் கொடிய பழக்கத்தை ஒழித்தார்.

II. பிரித்தெழுது :

வேரூன்றி = வேர் + ஊன்றி, நிகரற்ற = நிகர் + அற்ற
அவ்வங்காளம் = அ + வங்காளம்
அம்மொழியில் = அ + மொழியில்
நாடெங்கும் = நாடு + எங்கும்

III. சேர்த்தெழுது :

பணி + ஆற்றினுர் = பணியாற்றினுர்
அறிவு + இயல் = அறிவியல்
அரசியல் + செய்தி = அரசியற் செய்தி

IV. வாக்கியத்தில் அமைத்து எழுது :

புதுமையான, இன்னல், புனைந்து, பட்டறிவு.

இராம்மோகன் பல **புதுமையான** கருத்துகளைக் கொண்டவர்.

காந்தியடிகள் நாட்டின் விடுதலைக்காகப் பல இன்னல்களை அடைந்தார்.

சேக்கிழார் பல பாடல்களைப் புனைந்துள்ளார்.

பல பெரியோர்களோடு பழகுவதால் ஒருவருக்குப் பட்டறிவு உண்டாகும.

V. எதிர்ச்சொல் தருக :

இளமை × முதுமை, மேதை × பேதை
இறந்தார் × பிறந்தார், பேரூர் × சிற்றூர்
உருவம் × அருவம், உயர்வு × இழிவு

11. புலி

தாயகம் - பிறப்பிடம்
ஆற்றல் - வலிமை
தட்பவெப்பநிலை - சீதோஷ்ண நிலை
கழிமுகப் பகுதி - ஆறும் கடலும் கலக்கும்பகுதி
கிலி - பயம்
சங்க இலக்கியம் - இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் எழுதிய பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய நூல்கள்

I. வினா - விடை.

1. 'புலி, பூனை இனத்தைச் சேர்ந்தது' என்பதை விளக்கு.

புலி, வடிவில் பூனையைப் போன்றது. பூனையைப் போன்று மென்மையான தோலும், சதைப்பற்று மிக்க மெத்தென்ற கால்களும், நேராக நிற்கும் வெள்ளை மீசையும், முரட்டு நாவும் பெற்றது. பூனைக்குரிய கூரிய பார்வையும், சீரிய மோப்பத் திறனும், மெல்லிய ஓசையையும் தெளிவாகக் கேட்கும் ஆற்றலும் புலிக்கு உண்டு. ஆதலின் புலி, பூனை இனத்தைச் சேர்ந்தது என்று கூறுவர்.

2. புலியின் உருவ அமைப்பு எத்தகையது ?

புலி வலிய உடல் உடையது. அதன் முன்னங்காலில் கூரிய நகங்கள் ஐந்தும், பின்னங்காலில் நான்கும் உள்ளன. கண்கள் கொள்ளிக்கட்டையைப் போன்ற ஒளி பெற்றவை. அதனால் இரவிலும் புலி தெளிவாகப் பார்க்கும். புலியின் உடலில் கரிய குறுக்குப் பட்டைகள் உண்டு. புலிக்குப் பிடரி மயிரும், வாலில் குஞ்சமும் இல்லை. அதன் நிறமும் உடலில் உள்ள குறுக்குக் கோடும் புதரில் தன்னை மறைத்துக் கொள்ள வசதியாக உள்ளன.

3. புலியின் தாயகம் எது? இந்தியாவில் அது வாழும் இடங்கள் எவை?

புலியின் தாயகம் வடக்கு இரஷ்யா. புலி பர்மாவிலிருந்து இந்தியாவில் நுழைந்து இமயம்முதல் குமரிவரை உள்ள பல்வேறு மாநிலங்களிலும் பரவி வாழ்கிறது. இமயத்தின் அடிவாரத்திலும், அசாம், கேரளம், தமிழகம் முதலிய இடங்களிலும், கங்கையின் கழிமுகப் பகுதியிலும் வாழ்கிறது.

4. புலி எவ்வாறு வேட்டையாடும்?

புலி இரவில் வெளிவரும். மழை பொழியும் குளிர் நிறைந்த காலத்தில் பகலிலும் வெளிவரும். அது தனித்து வேட்டையாடும். புலி தன் இரையைத் தொடர்ந்துசென்று நன்கு நெருங்கிய பின்னரே பாய்ந்து, அதன் கழுத்தின் பின்புறத்தையோ தொண்டையையோ முதலில் தாக்கும்.

5. புலியின் இரையைப்பற்றி நீ அறிவன யாவை?

புலி எல்லா விலங்குகளையும், கோழி முதலிய பறவைகளையும், நீரில் வாழும் மீன்களையும் தின்னும். இறந்துகிடக்கும் விலங்கையும் தின்னும். பெண்யானை, யானைக்கன்று, காட்டு எருமை, காட்டுப்பன்றி, மான், கரடி போன்றவை அதற்கு விருப்பமான இரைகளாகும். மனிதனைச் சுவைத்து விட்டால் பின் அவனைவிடாது வேட்டையாடும்.

6. புலி குட்டி போட்டு வளர்க்கும் முறையை விளக்கு.

புலி ஒருமுறைக்கு இரண்டு மூன்று குட்டிகளை ஈனும். குட்டிகளைக் குகைக் குள்ளோ, மரப்பொந்துகளிலோ மறைத்து வைக்கும். அவற்றின் பிடரியை வாயினால் கவ்வி வேறு இடத்திற்கு எடுத்துச் செல்லும். குட்டிகளின் அருகில் யாரும் அணுகாதவாறு பார்த்துக் கொள்ளும். ஐந்தாறு மாதம் தாய் வாழும் இடத்திலேயே குட்டிகள் உலவும். பின் தாயுடன் சென்று வேட்டையாடப் பழகும்.

7. புலியைப்பற்றிய தவறான கருத்துகள் யாவை?

புலிக்கு மரம் ஏறத் தெரியாது என்றும், நீரில் நீந்தத் தெரியாது என்றும் தவறாகக் கருதப்படுகிறது. ஆபத்துக் காலத்தில் புலி மரத்தில் தாவி ஏறிக்கொள்ளும்; காட்டில் வெள்ளம் ஏற்படும் போதும் நீந்திச் சென்று மரத்தில் ஏறும்.

8. புலியின் ஆற்றலை மனிதர் மதிப்பதை எவற்றால் அறியலாம்?

புலியின் ஆற்றலை மனிதர் மதிக்கின்றனர். ஒரு துறையில் நிகரற்ற திறம் பெற்றவரை 'புலி' எனப் போற்றிப் புகழ்வர்.

வெண்பாப் பாடுவதில் வல்லவரை 'வெண்பாப் புலி' என்றும், கணக்கில் வல்லவரை 'கணக்குப் புலி' என்றுஞ் சிறப்பிப்பர்.

9. புலியின் பெருமையைப் புலப்படுத்தும் பழமொழிகள் நான்கு எழுது.

'பார்த்தால் பூனை பாய்ந்தால் புலி; புலிக்குப் பிறந்தது பூனை ஆகுமா?; புலிக்குத் தன்காடு பிறர்காடு என்பதில்லை; புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது' என்பன புலியின் பெருமையை விளக்கும பழமொழிகளாகும்.

10. புலி நமது தேசிய விலங்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விதத்தினை விளக்கு.

நம் இந்திய நாட்டில் கடந்த நூற்றாண்டில் நாற்பதாயிரம் புலிகள் இருந்ததாகக் கணக்கிடப்பட்டிருந்தது. இவ் வெண்ணிக்கை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து, 1972 ஏப்ரல் திங்களில் 1823 க்குக் குறைந்தது. புலிகளைக் காக்கும் திட்டம் வகுக்க 1972 நவம்பர்த் திங்களில், இந்திய வனவிலங்கு வாரியக் கூட்டம் நடைபெற்றது. அதில், வலிவும் வீரமும் மிக்க புலியை இந்தியாவின் தேசிய விலங்காகத் தேர்ந்தெடுத்தார்கள். புலியைப் பாதுகாப்பதற்காக நாட்டில் ஏழு இடங்களில் புலிகளுக்கான புகலிடங்களை நிறுவும் திட்டமும் வகுக்கப்பட்டது.

II. பிரித்தெழுது :

வெண்ணிறம் = வெண்மை + நிறம்
கிழக்காசியா = கிழக்கு = ஆசியா
ஐந்தாறு = ஐந்து + ஆறு; புகலிடம் = புகல் + இடம்

III. சேர்த்தெழுது :

ஏற + தாழ = ஏறத்தாழ; மேல் + புறம் = மேற்புறம்
வெளி + புறம் = வெளிப்புறம், என்பது + இல்லை = என்பதில்லை.

IV. வாக்கியத்தில் அமைத்து எழுது.

தட்ப வெப்பம், அணுகாத, பண்டுதொட்டே

நாட்டின் **தட்ப வெப்பத்திற்குத்** தக்கபடி உடை உடுக்க வேண்டும்.

மன்னர்களிடம் மிக அருகே **அணுகாதபடி** பழக வேண்டும்.

திருமணத்திற்கு முன்பு தங்கள் குலதெய்வத்தை வழிபடுவது **பண்டு தொட்டே** இருந்து வரும் வழக்கம்.

12. சங்ககால மகளிர்

அருஞ்சொற்பொருள்

இற்றைக்கு – இன்றைக்கு
காக்கை பாடினியார் – காக்கையைப்பற்றி இனிய பாடலைப்பாடிய அம்மையார்
பதிற்றுப் பத்து – (10 × 10) நூறு பாடல்களைக் கொண்ட ஒருநூல்
படைக்கலக் கொட்டில் – போர்க் கருவிகள் வைக்கும் இடம்
ஐயம் – சந்தேகம்
அற – அற்றுப்போக
திரிபு–ஒன்றை மற்றென்றாகக் கருதி மயங்கும் மயக்கம்
விழைந்து – விரும்பி
செறிந்த – நிறைந்த
ஐம்பெருங் காப்பியங்கள் – சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி
மெல்லியலார் – மென்மைத் தன்மை வாய்ந்தவர்

I. வினா - விடை

1. சங்க கால மகளிரின் கல்விச் சிறப்பை விளக்கு.

சங்க காலத்தில் மகளிர் கல்வியறிவில் சிறந்து விளங்கினர். காலத்தை வெல்லும் கவிதை புனையும் ஆற்றல் மிக்கவராய்த் திகழ்ந்தனர். அரசர்கள் பெண்பாற் புலவரையும் வரவேற்றுச் சிறப்பித்தனர். காக்கைபாடினியார் நச்செள்ளையார், ஔவையார் போன்ற பெண்பாற் புலவர்கள் மக்களால் புகழ்ந்து போற்றக்கூடிய வகையில் சிறப்புற்று விளங்கினர்.

2. சங்க கால மகளிரின் வீரத்தை விளக்கு.

சங்க காலம் வீரம் மிக்க காலம். மகளிர் மறம் மிகுந்தவராய் விளங்கினர். சங்க காலத் தாய் 'மகனைப்பெறுவது எனது கடமை, போரின் கண் களிற்றைக் கொன்று மீளுதல் மகன் கடன்' என்று கூறியிருக்கிறாள். நாட்டைக் காப்பதே மகனது கடமை என்று கூறும் தாயின் வீரப் பண்பு தலைசிறந்தது. மற்றொருத்தி, நாட்டைக்காக்க நடந்தபோரில் முதல் நாள் தன் தந்தையை இழந்தாள்; அடுத்த நாள் போரில் தன் கணவனை இழந்தாள்; மூன்றாம் நாளிலும் சிறிதும் கலங்காமல், ஒரே மகனான சிறுவனிடம் வேல்கொடுத்துப் போருக்குச் செல்லுமாறு அனுப்பிவைத்தாள்.

3. ஔவையார் செய்த அரசியல் தொண்டு யாது ?

தகடூர் மன்னன் அதியமானுக்கும், தொண்டை நாட்டு மன்னன் தொண்டைமானுக்கும் பகைமை ஏற்பட்டது. அதனால் போர் நிகழக் கூடும் என்பதையும், அதனால் ஆயிரக் கணக்கான மக்கள் இறக்க நேரிடும் என்பதையும் உணர்ந்த

அதியமான், அப்போரைத் தடுக்க அருந் தமிழ் வல்ல ஔவை யாரைத் தூதாக அனுப்பினன். தூது சென்ற ஔவையார் தொண்டைமானின் படைக்கலக் கொட்டிலைக் கண்டார். அவனைப் புகழ்வது போலவும், தன் தலைவனாகிய அதியமானை இகழ்வது போலவும் கூறி, குறிப்பாக அதியமான் பேராற்றல் வாய்ந்தவன் என்பதை விளக்கினர். அதனால், தொண்டை மான் உண்மை உணர்ந்து போர் புரியும் எண்ணத்தை விட்டு விட்டான். நடக்க இருந்த பெரும் போரைத் தடுத்து நிறுத்தி யது, ஔவையாரின் அரசியல் அறிவேயாகும். ஔவையாரின் அரசியல் தொண்டு பாராட்டற்கு உரியது.

4. மணிமேகலை ஆற்றிய சமயப் பணியை விளக்கி எழுது.

கலையரசி மாதவி மகள் மணிமேகலை உலக வாழ்வில் பற்றற்று, உயர்ந்த வாழ்வு பெற விழைந்து புத்த சமயத் துறவியானள். சமய உண்மைகளை ஐயந்திரிபின்றிக் கற்றுத்தேர்ந்து, பிற சமயத்தாரோடு வாதிட்டு வெற்றி பெற்ருள். சமயவாதிகளை வென்று புத்த சமயத்தின் புகழைப் பரப்பினள். அமுதசுரபி என்னும் பிச்சைப் பாத்திரத்தின் உதவியால் பசித்தவர்க்கெல்லாம் உணவளித்து, சிறைச் சாலையை அறச்சாலையாக மாற்றினள்.

5. காக்கை பாடினியார் என்னும் புலவரின் பெருமையை எழுது.

நச்செள்ளையார் என்னும் பெண்பாற் புலவர் ஒருவர் இருந் தார். அவர் காக்கையைப் பற்றி அழகிய பாடலைப் பாடியதால் காக்கை பாடினியார் நச்செள்ளையார் என வழங்கப்பட்டார். அவர் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்னும் மன்னனைப் பாடி நூருயிரம் பொற்காசுகளைப் பரிசாகப் பெற்ருர். அணிகலன் செய்துகொள்ளப் பெரும் பொன்னும் பெற்ருள். அவர் பாடிய பாடல்கள் 'பதிற்றுப் பத்து' என்னும் சங்க இலக்கி யத்தில் இடம் பெற்றுள்ளன.

6. மாதவியைப் பற்றிக் குறிப்பு வரைக.

மாதவி சங்க காலத்தில் வாழ்ந்தவள். அவள் கலைகள் பலவற்றில் வல்லவள், ஆடல் பாடல்களில் நிகரற்றவள். ஓவியக் கலையிலும் தேர்ச்சி பெற்றவள். அதனுல் அவள் கலை அரசியாகக் கொண்டாடப் பெற்ருள்.

II. பிரித்தெழுது :

நூருயிரம் = நூறு + ஆயிரம்
பதிற்றுப்பத்து = பத்து + பத்து
கலையரசி = கலை + அரசி
பொற்காசு = பொன் + காசு
அரசியற்பணி = அரசு + இயல் + பணி

III. சேர்த்தெழுது :

ந + செள்ளை = நச்செள்ளை
சேரல் + ஆதன் = சேரலாதன்
வீர + உணர்வு = வீரவுணர்வு
ஓவியம் + கலை = ஓவியக்கலை
அறம் + சாலை = அறச்சாலை

IV. வாக்கியத்தில் அமைத்து எழுது :

செறிந்த, ஆடல் பாடல், விழைந்து

பெருங்காடுகளில் மரங்கள் **செறிந்துள்ளன**.

மாதவி **ஆடல்பாடல்**களில் வல்லவளாக இருந்தாள்.

திருக்குறளை நாம் **விழைந்து** கற்க வேண்டும்.

13. செஞ்சிலுவைச் சங்கம்

அருஞ்சொற்பொருள்

அவலநிலை - பரிதாபமான நிலை	**பணி** - வேலை
நீர் வேட்கை - தண்ணீர்த் தாகம்	**இணைக்க** - சேர்க்க
போர்க்களம் - போர் செய்யும் இடம்	**சின்னம்** - அடையாளம்
	கேளிர் - உறவினர்
பேரின்னல் - பெருந்துன்பம்	**உருவாக்கல்** - ஏற்படுத்தல்

I. வினா – விடை.

1. போர்க் களத்தில் துனாண்டு கண்டவையும், செய்தவையும் யாவை?

போர்க்களத்தில் போரிட்டு இறந்தவர்களைத் தவிர இறக்கும் நிலையில் உள்ள வீரர் சிலரைத் துனாண்டு கண்டார். அவர்களுள் சிலர் அருந்தத் தண்ணீர் வேண்டியும், சிலர் உடலில் ஏற்பட்ட காயங்களுக்குத் தகுந்த மருந்து வேண்டியும் கதறிய நிலையைக் கண்டு உளம் பதைத்தார். அவர் உடனே ஊருக்குள் சென்று சிலரைத் தம்முடன் அழைத்து வந்து, தாக முற்றவர்களுககு நீர் அளித்தார்; காயமுற்றவர்களின் புண்ணுக்குத் தக்க மருந்தும் இட்டார்; அவர்தம் கண்ணீரைத் துடைத்துக் கவலையைக் குறைத்து நம்பிக்கை ஊட்டினார்.

2. 'சால்பெரீனோ நினைவுகள்' என்னும் நூல் யாது கூறியது ? அதன் விளைவு என்ன ?

'சால்பெரீனோ நினைவுகள்' என்னும் நூலை எழுதியவர் ஹென்றி துனாண்டு என்ற சுவிட்சர்லாந்து நாட்டவர். சால்பெரீனோ நினைவு நூலில் போர்க் களக் கொடுங் காட்சிகளை

விளக்கினர். 'போரில் காயமடைவோர்க்கு உதவிபுரிந்து துன்பம் துடைக்கும் ஓர் அமைப்பை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு நாட்டிலும் அத்தகைய அமைப்பை ஏற்படுத்தவும், அவ்வாறு அமைக்கப்படும் தேசிய சங்கங்கள் அனைத்தையும் இணைக்கவும் ஒரு திட்டம் இருக்கவேண்டும்' என்று விளக்கினர். இந்நூல் எங்கும் பரவியது. செஞ்சிலுவைச் சங்கம் தோன்றவும் காரணமாய் இருந்தது.

3. 'முதல் ஜெனீவா உடன்படிக்கை' என்பது யாது? அது எப்போது ஏற்பட்டது?

துறண்டைச் செயலாளராகக் கொண்ட ஐவர் குழு அவரது எண்ணத்தைச் செயலாற்ற ஜெனீவாவில் நிறுவப் பட்டது. அவரது விடாமுயற்சியால் 1863ஆம் ஆண்டில் பதினறு நாடுகளின் சார்பில் முப்பதின்மர் கலந்துகொண்ட மாநாடு ஒன்று கூடியது. அது இக்குழுவின் கருத்தை ஏற்றது. 1864ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்து அரசு ஓர் அரசியல் மாநாட்டைக் கூட்டியது. அம் மகாநாட்டில் அமெரிக்க ஐக்கிய நாடும், பதின்மூன்று ஐரோப்பிய நாடுகளும் கலந்துகொண்டன. இதன் விளைவாகப் பிறந்ததே ஜெனீவா உடன்படிக்கை. அதன்படி, போர் வீரர்களுள் தம்மவர், அயலார் என்னும் வேறுபாடின்றி நோயுற்றோர்க்கும், காய முற்றோர்க்கும் மருத்துவ உதவி அளிக்கவேண்டும். இராணுவ மருத்துவ மனைகளையும், மருத்துவர்களையும் தாக்குதல் கூடாது. இத்தொண்டின் அடையாளமாக வெண்ணிறத் துணியில் செஞ்சிலுவை பொறிக்கப்பட்ட சின்னத்தைக் கொள்ளவேண்டும் என்று முடிவாயிற்று. இதுவே செஞ்சிலுவைச் சங்கத்தின் தோற்றமாகும். இவ்வுடன்படிக்கை 1864ஆம் ஆண்டு ஏற்பட்டது.

4. செஞ்சிலுவைச் சங்கத்தின் கொடியைப் பற்றி விளக்கு.

சுவிட்சர்லாந்து, செந்நிறத் துணியில் வெண்ணிறச் சிலுவை பொறிக்கப்பட்ட கொடியைத் தனது தேசியக் கொடியாகக் கொண்டிருந்தது. ஐவர் குழுவில் அங்கம் வகித்தவர் ஐவரும் சுவிட்சர்லாந்து நாட்டவராவர். அவ்வைவரும் தங்கள் நாட்டிற்குச் சிறப்பளிக்கும் முறையிலும், அதன் தேசியக் கொடியை நினைவு கொள்ளும் முறையிலும் தேசியக்கொடியின் நிறத்தை மாற்றி, வெண்ணிறத் துணியில் செந்நிறச் சிலுவை பொறித்த கொடியை அச்சங்கத்தின் சின்னமாகக் கொண்டனர். அதனாலேயே அச்சங்கம் 'செஞ்சிலுவைச் சங்கம்' என்னும் பெயர் பெற்றது.

5. செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகள் யாவை?

போர்க் காலங்களில் நோயுற்றோர்க்கும், காயமுற்றோர்க்கும் சிகிச்சை அளித்தல், போரில் ஈடுபடாத மற்றவர்க்கும், சிறைப்

பட்ட கைதிகளுக்கும் பாதுகாப்பளித்தல், அமைதியான காலத்தில் அந்தந்த நாட்டு மக்களின் நல்வாழ்வைப்பேணுதல், நோயைத் தடுத்தல், புயல், வெள்ளம், நிலநடுக்கம் முதலியவை ஏற்படுங்கால் துன்புறுவோர்க்குத் துணை செய்தல் ஆகியவை செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகளாகும்.

6. இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தினைப் பற்றி நீ அறிந்தவற்றை எழுது.

1920ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம் இயற்றி 'இந்தியச் செஞ்சிலுவைச் சங்கம்' அமைத்தது. இதன் கிளைகள் மாநிலந்தோறும் இயங்குகின்றன. பல்லாயிரவர் உறுப்பின ராயுள்ளனர். இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் நம் குடியரசுத் தலைவர் ஆவார். இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவில் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் இயங்கி வருகிறது. சிறுவர்களின் உள்ளத்தில் இச்சங்கத்தின் சீரிய கொள்கைகளைப் புகுத்துவதே இவ்வமைப்பின் முக்கிய நோக்கம். பள்ளிகளில் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் சீரிய முறையில் அமைதியாகப் பணியாற்றி வருகிறது.

7. செஞ்சிலுவைக் கொடியில் மாற்றம் செய்த நாடுகள் யாவை ?

சிலுவை கிறித்தவ மதச் சின்னமாக இருந்ததால் இசுலாமிய நாடுகள் சில வெண்ணிறத் துணியில் சிலுவைக்குப் பதிலாகப் பிறைபொறித்த கொடியை அடையாளமாகக் கொண்டன.

8. இத்தாலியப் போர் யார் யாருக்கு நடந்தது ?

இத்தாலியில் சால்பெரினோ என்னும் ஊருக்கருகே 1859ஆம் ஆண்டில் பெரும்போர் நடந்தது. பிரான்சு மன்னர் மூன்றாம் நெப்போலியனும், ஆஸ்திரியா அரசர் பிரான்சிஸ் ஜோசப்பும் தம் படைகளுடன் சேர்ந்து போரிட்டனர்.

II. பிரித்தெழுது :

காயமுற்றோர் = காயம் + உற்றோர்
நோயுறுவோர் = நோய் + உறுவோர்
வேறுபாடின்றி = வேறுபாடு + இன்றி

III. சேர்த்தெழுது :

குறு + உயிர் = குற்றுயிர்
போர் + களம் = போர்க்களம்
இருபது + ஆறு = இருபத்தாறு
செம்மை + நிறம் = செந்நிறம்

IV. கோடிட்ட இடங்களை தக்க சொற்களால் நிரப்புக.

(விடைகள் அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ளன.)

1. செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைமைச் செயலகம் ——— உள்ளது. (ஜெனீவாவில்)
2. ——— இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஆவார். (நம் குடியரசுத் தலைவர்)

V. எதிர்ச்சொல் தருக :

தோற்றம் × அழிவு, தண்ணீர் × வெந்நீர்,
இன்பம் × துன்பம், முடிவு × தொடக்கம்.

14. ஓவியக் கலை

அருஞ்சொற்பொருள்

உறையுள் - இருப்பிடம்
அண்மைக் காலம் - சமீபகாலம்
பண்டு - பழைய
கவின்கலை - அழகுக்கலை
பண்பட்ட - பக்குவப்பட்ட
விழைவு - விருப்பம்
இறைச்சி - புலால்
எழில் - அழகு
தூரிகை - ஓவியம் எழுதுங் கோல்

I. வினா - விடை

1. தொடக்கக் கால மனிதர்க்கும், நாகரிகம் பெற்ற மனிதர்க்கும் என்ன வேறுபாடு?

தொடக்கக் கால மனிதர் விலங்குபோல் வாழ்ந்தனர். பச்சைக் காய் கனிகளையும், பச்சை இறைச்சியையும் தின்றனர். விலங்குபோல மரத்தடியிலும், மலைக் குகைகளிலும் தங்கினர். விலங்குபோலவே ஆடையின்றியும் வாழ்ந்தனர்.

நாகரிகம்பெற்ற மனிதர், காய் கனிகளைப் பதப்படுத்தி உண்கின்றனர். தன் பகுத்தறிவைப் பயன்படுத்தி உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைச் செம்மையாக அமைத்துக் கொண்டனர். கல்வியும் செல்வமும் சேர்த்து வளமாக வாழத் தொடங்கினர். இவையே தொடக்கக் கால மனிதருக்கும் நாகரிகம் பெற்ற மனிதருக்கும் உள்ள வேறுபாடுகள்.

2. நுண்கலைகளின் சிறப்பை விளக்கு.

ஓவியம், சிற்பம் போன்றவை நுண்கலைகள். மனிதரின் உணர்வைத் தூண்டிக் கற்பனையை வளர்க்கின்றன. பயனுள்ளவகையில பொழுதினைக் கழிக்கப் பயன்படுகின்றன. அவற்றைக் கவின்கலைகள் என்றும் கூறுவர்.

3. நுண்கலைகள் எத்தனை வகை? அவை யாவை?

இன்பந் தரும் நுண்கலைகள் ஐந்து வகைப்படும். அவை கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை, காவியக்கலை என்பவை. இக்கலைகள் எல்லாவற்றிலும் சிறந்தது காவியக்கலை. மிக நுட்பமானது ஓவியம்.

4. ஓவியத்தைப் 'படம்' என்று வழங்குவது ஏன்?

படம் என்ற சொல்லுக்குத் துணி என்பது பொருள். அதனைப் படாம் என்றும் வழங்கினர். துணியில் ஓவியம் வரைவது வழக்கம். ஆதலால், ஓவியத்திற்குப் 'படம்' என்னும் பெயர் ஏற்பட்டது. காகிதம் கண்டறியப்பட்டபின், அதில் வரையும் ஓவியத்திற்கும் படம் என்னும் பெயரே வழங்கி வந்தது.

5. வட்டிகைச் செய்தி, வட்டிகைப் பலகை, புனையா ஓவியம், கண்ணுள் வினைஞர்—இவற்றை விளக்கு.

வட்டிகைச் செய்தி என்பது ஓவியத்தைக் குறிக்கும். ஓவியம் எழுதுவதற்கு வண்ணங்கள் குழைக்கும் பலகை 'வட்டிகைப் பலகை' எனப்படும்.

வண்ணம் தீட்டாமல் வரைந்த ஓவியம் 'புனையா ஓவியம்' எனப்படும்.

ஓவியர்களுக்குக் 'கண்ணுள் வினைஞர்' என்பது பெயர். காண்பவர் கண்களின் வாயிலாக அவருடைய உள்ளத்தில் ஓவியர் தம் கைத் திறத்தின் சிறப்பை நிலைநிறுத்துவதால் கண்ணுள் வினைஞர் என்று அழைக்கப்பட்டார். வட்டிகை என்னும் சொல் ஓவியம் எழுதும் கருவியைக் குறிக்கும்.

6. நெடுநெல்வாடையும், பரிபாடலும் தெரிவிக்கும் ஓவியச் செய்திகளை எழுது.

'ஓவியம் நிறைந்த மாளிகையைச் சித்திரமாடம் என வழங்கினர். பாண்டியனது அரண்மனையில் செம்பினால் செய்ததைப் போன்ற நெடுஞ்சுவரில் பல மலர்களைக்கொண்ட ஒப்பில்லாத ஒரு கொடி எழுதப்பட்டிருந்தது' என்னும் குறிப்பு 'நெடுநல்வாடை' என்னும் நூலிலுள்ளது.

'திருப்பரங் குன்றத்தில் உள்ள ஓவிய மண்டபத்தில் புராணக் கதைகளை விளக்கும் ஓவியங்கள் இருந்தன. வருபவருக்கு விளக்கம் சொல்பவரும் இங்கிருந்தனர்' என்று 'பரிபாடல்' கூறுகிறது.

7. தென்னிந்திய ஓவிய மரபைச் சார்ந்த ஓவியங்களை எங்குக் காணலாம்?

தென்னிந்திய ஓவிய மரபைச் சார்ந்த ஓவியங்கள், தனிச் சிறப்புப் பெற்றவை. அஜந்தாக் குகை ஓவியங்கள், காஞ்சி கைலாசநாதர் கோவில் ஓவியங்கள், வட ஆர்க்காடு மாவட்

8

டத்தில் உள்ள பனைமலைக் கோயில் ஓவியங்கள், புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள சித்தன்னவாசல் ஓவியங்கள், தஞ்சை பெரிய கோயில் ஓவியங்கள், இலங்கையிலுள்ள சிகிரியாமலை ஓவியங்கள் ஆகியவை தென்னிந்திய ஓவிய மரபைச் சேர்ந்தவை.

8. சித்தன்னவாசல் ஓவியத்தை விளக்கு.

சித்தன்னவாசல் குகைக்கோயிலை அமைத்தவன் 'சித்திரக் காரப் புலி' என்னும் முதலாம் மகேந்திரவர்மன். அங்குள்ள நடனமாதர் இருவர் ஓவியமும், தாமரை மலர்கள் நிறைந்த நீர் நிலையின் ஓவியமும், மகேந்திரவர்மன், அவன் மனைவி ஆகியவர்களின் ஓவியங்களும் குறிப்பிடத்தக்கவை.

9. தஞ்சைப் பெரிய கோயில் ஓவியம்பற்றி ஒரு குறிப்பு வரைக.

தஞ்சைப் பெரிய கோயிலில் சோழர்காலத்து ஓவியங்கள் உள்ளன. சோழர் காலத்து ஓவியங்களின்மேல், அறு நூறு ஆண்டுகளுக்குப் பின் வந்த நாயக்க மன்னர் புதிய ஓவியங்களை வரையச் செய்தனர். நெடுங்காலமாக மறைக்கப்பட்ட சோழர் கால ஓவியங்கள் சில ஆண்டுகளுக்கு முன்பு வெளிப்படுத்தப் பட்டன. அவை சுந்தரமூர்த்தி நாயனர் வரலாற்றைக் கூறும் ஓவியங்களாகும். முதலாம் இராசராசன், கருவூர்த் தேவர் உள்ளிட்ட சிலருடைய ஓவியங்களும் உள்ளன.

II. பிரித்தெழுது:

பகுத்தறிவு = பகுத்து + அறிவு
காணவில்லை = காண + இல்லை
வரையப்பட்டிருந்தன = வரையப்பட்டு + இருந்தன
காவியக்கலை = காவியம் + கலை

III. சேர்த்தெழுது:

ஒன்று + இருந்தது = ஒன்றிருந்தது
முதுமை + மொழி = முதுமொழி
மறத்தல் + ஆகாது = மறத்தலாகாது
நுண்மை + கலை = நுண்கலை

15. மேரி கியூரி

அருஞ்சொற்பொருள்

I. வினா – விடை

செயற்கரிய - செய்தற்கரிய செயல்கள்
மாசுறுத - குற்றம் அடையாத
ஆய்வு - ஆராய்ச்சி
தனிமம் - தனிப்பொருள் (Element)
மாண்பு - பெருமை
வாய்மொழி - உண்மையான மொழி
பகிர்ந்தளித்தல் - பிரித்துக் கொடுத்தல்
சோகைநோய் - இரத்தக் குறைவு நோய்
தாது - உலோகம் (Mineral)

1. **மேரி கியூரி எத்தன்மையவர் ?**

'தோன்றிற் புகழோடு தோன்றுக', 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கு ஏற்பப் புகழோடு தோன்றி, பிறர் செய்வதற்கரிய பெருஞ்செயல் புரிந்து, ஆடவரும் அடைய முடியாத தனிச் சிறப்புப்பெற்ற அம்மையார் மேரி கியூரி. 'பெருஞ் சிறப்புப் பெற்றவர்களுள் புகழால் மாசுறாத மாண்பு பெற்றவர் மேரி கியூரி' என்று ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் அவர்களே வியந்து பாராட்டும் நற்குணம் பெற்றவர். பெண்ணினத்துக்கு ஒப்பற்ற பெருமையைப் பெற்றுத் தந்தவர். பார் வியக்கும் பரிசுகளும், பாராட்டும் பெற்றபோதும் அடக்கமே உருவமாயமைந்தவர்.

2. **மேரி கியூரி தம் தமக்கையாருடன் செய்துகொண்ட ஒப்பந்தம் யாது ?**

இவருடைய பெற்றோர் வறுமையில் உழன்றவர்கள். மேரி கியூரி மேற்படிப்புப் படிக்கப் பிரான்சு செல்ல விரும்பினர். ஏழ்மை காரணமாக இயலவில்லை. அவருடைய தமக்கையார் மேற்படிப்பிற்கு பிரான்சு செல்லவிரும்பியபோது இருவரும் ஓர் உடன்பாடு செய்துகொண்டனர். தமக்கை முதலில் சென்று படிப்பது என்பதும், அவள் செலவிற்கு ஆகும் பணத்தை மேரி கியூரி வேலைசெய்து அனுப்புவது என்பதும், தமக்கை தன் படிப்பை முடித்த பிறகு வேலைசெய்து பணம் அனுப்பி தங்கையைப் படிக்கவைக்க வேண்டும் என்பதும் அவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தமாகும்.

3. **மேரி கியூரி ரேடியம் கண்டுபிடித்த வரலாற்றை எழுது.**

மேரி கியூரியும், அவரது கணவனும் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டு உழைத்து வந்தனர். அப்போது ஹென்றி பெக்கரேல் என்னும் விஞ்ஞானி யுரேனியம் என்னும் தனிப் பொருளைக் கண்டுபிடித்தார். யுரேனியத்தைக் காட்டிலும் பிட்சு பிளெண்டு அதிகக் கதிரியக்கத் தன்மை உடையது என்பதை மேரி கியூரி கண்டறிந்தார். எனவே, யுரேனியத்தைத் தவிர வேறோர் ஆற்றல் வாய்ந்த கதிரியக்கத் தனிமமும் அந்தத் தாதுவில் இருக்கவேண்டும் என்று முடிவு செய்தார். தம் கணவரோடு சேர்ந்து சோர்வில்லாமல் உழைத்து, 1898ஆம் ஆண்டில் அந்தப் புதிய பொருளைப் பிரித்தெடுத்தார். அதற்கு ரேடியம் என்று பெயரிட்டார்.

4. **கியூரி தம்பதியினர் பொருளாசை அற்றவர் என்பதை விளக்கு.**

மேரி கியூரி கண்டுபிடித்த ரேடியம் விலை மதிப்பு மிக்கது. புற்றுநோயைக் குணப்படுத்தவல்லது. எனவே, ரேடியத்தைப் பிரித்து எடுக்கும் முறையை அவர்கள் தங்களுக்கே உரிமையாக்கிக்கொண்டால், பெரும் பொருள் கிடைக்கும் என நண்பர்

சிலர் கூறினர். ஆனால், கியூரி தம்பதியினர் 'ரேடியம் அருமையான ஒரு கருவி. அது உலகத்துக்கே உரியது' எனக் கூறிவிட்டனர். இதனால் அவர்கள் பொருளாசை அற்றவர் என்பது தெரிகிறது.

5. **மேரி கியூரியின் நாட்டுப்பற்றை விளக்கு.**

மேரி கியூரி தாய்நாட்டுப் பற்றுடையவர். அவர் தொடர்ந்துசெய்த ஆராய்ச்சியால் மற்றொரு தனிமத்தைக் கண்டுபிடித்தார். பியெர் கியூரி தன் மனைவியாரிடம் 'இதற்கு நீயே ஒரு பெயரிடு' என்று கூறினார். மேரி கியூரி, தம் நாடான போலந்து நாட்டின் பெயரை நினைவுகூரும் வகையில் அதற்குப் **பொலோனியம்** என்று பெயரிட்டார்.

6. **மேரி கியூரி எவ்வெத்துறையில், எவ்வெப்போது நோபெல் பரிசு பெற்றார்?**

மேரி கியூரி 1902ஆம் ஆண்டில் பௌதிகத்திற்கான நோபெல் பரிசு பெற்றார். 1911ஆம் ஆண்டு இரசாயனத்துறைக்கான நோபெல் பரிசைப் பெற்றார்.

7. **மேரி கியூரியின் மகளாரைப்பற்றி எழுது.**

முதல் உலகப் போரில் மேரி கியூரி தம் மகள் ஐரீன் கியூரியின் துணையோடு பணியாற்றிக் கதிரியக்கத்தின்மூலம் எலும்பு முறிவுகளைக் கண்டுபிடித்தார்.

8. **மேரி கியூரியின் இறுதிக் காலத்தைப்பற்றி எழுது.**

கதிரியக்கமுடைய தனிப்பொருள்களைப் பல்லாண்டு காலமாக ஆராய்ந்து வந்ததால், கதிரியக்கத்தின் தீய விளைவுக்கு ஆளாகி, சோக நோயடைந்து அவர் உயிரிழந்தார்.

II. பிரித்தெழுது :

மாசுறுத = மாசு + உறுத; ஒப்பற்ற = ஒப்பு + அற்ற
நற்குணம் = நன்மை + குணம்; பின்னாளில் = பின் + நாளில்

III. சேர்த்தெழுது :

விளைவுகளுக்கு + ஆளாகி = விளைவுகளுக்காளாகி
பகிர்ந்து + அளிக்கப்பட்டது = பகிர்ந்தளிக்கப்பட்டது
பொருள் + செலவு = பொருட்செலவு

16. வழிவழி வரும் வீரம்

அருஞ்சொற்பொருள்

விழுப்புண் - சிறந்தபுண்	**வெகுளி** - கோபம்
குருதி - இரத்தம்	**அகதிகள்** - ஆதரவற்றவர்கள்
மறச்செயல் - வீரச்செயல்	**தியாகம்** - தன்னலம் கருதாமை
செரு - போர்	**கானம்** - காடு

I. வினு - விடை

1. விழுப்புண் என்பது எது? அதன் சிறப்பு யாது?

போரில் ஈடுபட்டு மார்பிலும் முகத்திலும் உண்டாகும் புண் விழுப்புண் எனப்படும். அதனைச் சிறப்பாகக்கொண்டனர் தமிழர். முதுகிலே படும் புண்ணை இழிவாகக் கருதினர்.

2. ஆங்கில ஆட்சியை எதிர்த்துப் போரிட்ட இந்தியருள் அறுவரைக் குறிப்பிடுக.

ஆங்கில ஆட்சியை எதிர்த்துப் போரிட்ட இந்தியருள் அறுவர் கட்டபொம்மன், வேலுத்தம்பி, ஜான்சி ராணி இலட்சுமிபாய், பகத்சிங், திருப்பூர் குமரன், சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோர் ஆவர்.

3. 1965, 1971 ஆகிய ஆண்டுகளில் பாக்கிஸ்தான் நம்மீது போர் தொடுத்தது ஏன்?

இந்தியா விடுதலை அடைந்ததும் காஷ்மீரம் நம் நாட்டுடன் இணைந்தது. இதனால் சினம்கொண்ட பாக்கிஸ்தான் அடிக்கடி தொல்லை கொடுக்கத் தொடங்கியது. 1965ஆம் ஆண்டு பாக்கிஸ்தான் நம்மீது போர் தொடுத்தது. இந்தியப்படை வீரத்துடன் போரிட்டு வெற்றிபெற்றது.

பாக்கிஸ்தானின் ஒரு பகுதியான கிழக்குப் பாக்கிஸ்தான் 1971ஆம் ஆண்டு யாகியாகானின் அடக்குமுறையை எதிர்த்துப் போரிட்டது. கிழக்குப் பாக்கிஸ்தானியர் அகதிகளாய் நம்நாடு வந்தபொழுது, அவர்களுக்கு வேண்டிய பொருள் அனைத்தையும் நம்நாட்டு அரசு அளித்துப் பாதுகாத்தது. இதனால் சினம்கொண்ட பாக்கிஸ்தான் நம்மீது போர் தொடுத்தது.

4. அப்துல் அமீதின் வீரச்செயல் யாது?

1965ஆம் ஆண்டு நமக்கும் பாக்கிஸ்தானுக்கும் இடையே நடந்த போரில் அப்துல் அமீத் பங்கு பெற்றார். அவர் தமது பொறுப்பில் இருந்த பகுதியில் எதிரிகள் நுழையாதவாறு காவல்காத்து வந்தார். ஒரு ஜீப் வண்டியில் வீரர் சிலருடன் அப்பகுதியைச் சுற்றி வரும்போது தூரத்தில் பகைவர்களின் டாங்கிகள் வருவதைக் கண்டார். தம் நண்பர்களுடன் மறைந்திருந்து டாங்கிகள் அருகே வந்ததும் குறி தவறாது சுட்டார். மூன்று டாங்கிகள் வீழ்ந்தன. நான்காவது டாங்கியைக் குறி வைத்தபோது பகைவர் குண்டு அமீதின் உடலில் பாய்ந்தது. குருதி சொரியச் சாயும் நிலையிலும் 'பகைவர்களை அழித்து வெற்றி பெறுங்கள்' என்று கூறியவாறு உயிர் துறந்தார்.

5. திரிக்பால் சிங்கின் வீரத்தை விளக்கு.

1971ஆம் ஆண்டு நடந்த போரில் வெற்றிக்கு வித்திட்டவர் திரிக்பால் சிங். இவர் இளைஞர்; அஞ்சா நெஞ்சினர்.

இவர் தலைமையிலிருந்த படை தளர்ச்சியடைந்திருந்தது. இரண்டு பதுங்குமிடங்களிலிருந்து பகைவர் இயந்திரத் துப்பாக்கியால் தொடர்ந்து சுட்டுத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தனர். அந்த இயந்திரத் துப்பாக்கிகளைச் செய லற்றவையாக்க விரும்பினார் சிங்.

வீரர் இருவரோடு வெடி குண்டுகளை எடுத்துக்கொண்டு தவழ்ந்துசென்று, பகைவரின் முதற் பதுங்குமிடத்தின்மீது ஒரு குண்டைக் குறிபார்த்து எறிந்தார். குண்டு வீழ்ந்ததும் பகைவர் பதுங்குமிடம் நாசமடைந்தது. இயந்திரத் துப்பாக்கி யின் இயக்கம் நின்றது.

இரண்டாவது பதுங்குமிடத்திற்குத் தவழ்ந்து செல்லும் போது பகைவர் இவரைக் கண்டுவிட்டனர். உடனே அவர்கள் சுட்டனர். இவரது இடது தோளில் குண்டு பாய்ந்து குருதி பெருக்கெடுத்தது. அதைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து தவழ்ந்துசென்று வெடிகுண்டு வீச முயன்றபோது, பகைவர் மறுமுறையும் சுட்டதால் குண்டு மார்பில் பாய்ந்து வீரமரணம் அடைந்தார்.

6. நம் நாட்டில் வீரர்கள் எவ்வாறு மதிக்கப்பட்டனர் ?

வீரமற்றவனை நம்நாட்டில் எவரும் ஆடவன் என மதிக்க மாட்டார்கள். மகளிரும் சிறந்த வீரம் மிக்க ஆடவரையே விரும்பி மணப்பர். அதனால் நம் நாட்டு ஆடவர் ஆண்மை மிக்கவராய் இருந்தனர். அவர்கள் பொழுதுபோக்காக மேற் கொள்ளும் விளையாட்டுகளிலும் அவர்கள் வீரத்தையே காட்டுவர். போரில் ஈடுபட்டு முகத்திலும் மார்பிலும் புண்படு வதை மக்கள் பெருஞ் சிறப்பாகக் கருதினர்.

7. பண்டைக் காலத்தில் சிறந்து விளங்கிய வீரவேந்தர்கள் யார் ?

சேரன் செங்குட்டுவன், சோழன் கரிகாலன், தலையாலங் கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன், சந்திர குப்த மௌரியர், பிம்பிசாரர், ஹர்ஷர் முதலிய வேந்தர்கள் பண்டைக் காலத்தில் சிறந்து விளங்கியவர்கள்.

II. பிரித்தெழுது :

மதிப்பதில்லை = மதிப்பது + இல்லை
நிகரற்றவர் = நிகர் + அற்றவர்
தொண்ணூற்றாறு = தொண்ணூறு + ஆறு
அந்நிலையிலும் = அ + நிலையிலும்
குறைந்ததன்று = குறைந்தது + அன்று

III. சேர்த்தெழுது :

விழு + புண் = விழுப்புண்
விமானம் + படை = விமானப்படை
பொருள் + படுத்தாது = பொருட்படுத்தாது

இலக்கு + தவருமல் = இலக்குத்தவருமல்
இந்தியா + படை = இந்தியப்படை
சிறப்பாய் + கருதினர் = சிறப்பாய்க்கருதினர்

17. உதயணனும் யூகியும்

அருஞ்சொற்பொருள்

கொழிக்கும் - பெருகும்	**கட்டுத்தறி** - யானையைக் கட்டி வைக்கும் தூண்
ஒப்பார் - சமமானவர்	**கோடவதி** - ஒருவகை வீணை
மிக்கார் - மேற்பட்டவர்	**சூளுரை** - சபதம்
கப்பம் - திறை	**கோரினன்** - வேண்டினன்
வஞ்சினம் - சபதம்	

I. வினு – விடை

1. உதயணன் என்பவன் யாவன்? அவன் பண்புகள் யாவை?

வடஇந்தியாவில் வளங்கொழிக்கும் வத்தவ நாட்டை ஆண்ட மன்னன் உதயணன்.

அரசர்க்குரிய போர்க் கலைகள் யாவற்றிலும் வல்லவன்; யாழ் இசைப்பதிலும் வல்லவன். அவன் யாழிசையின் முன் யானையும் அடிபணியும். உதயணனிடம் தெய்வத் தன்மை வாய்ந்த யானை ஒன்றும் இருந்தது. அது அவனுக்குக் குற்றேவல் செய்து வந்தது. அதற்கு இரையிட்ட பின்பே தான் உண்பான்.

2. யூகி என்பவன் யாவன்? அவன் தன்மைகள் யாவை?

உதயணனுக்கு உற்ற நண்பன் யூகி. அவன் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்தவன். உதயணனைத் தன் உயிரெனக் கருதி வந்தான். உதயணன் அவனைச் சேதி நாட்டுக்கு அரசன் ஆக்கினன்.

3. பிரச்சோதனன், உதயணனைச் சிறைப்பிடிக்க விரும்பியது ஏன்?

வத்தவ நாடும் சேதி நாடும் அவந்தி நாட்டுக்கு அடங்கிக் கப்பங்கட்டி வாழ்ந்த நாடுகள். ஆனல் உதயணனும் யூகியும் அவந்தி நாட்டுக்குக் கப்பங் கட்டவில்லை. அதனல் கோபங் கொண்ட அவந்தி நாட்டரசன் பிரச்சோதனன் உதயணனைச் சிறைப் பிடித்துத் தண்டிக்க விரும்பினன்.

4. சாலங்காயன் உதயணனை எவ்வாறு சிறைப்படுத்தினன்?

ஒருநாள் உதயணன் தன்னிடம் இருந்த தெய்வ யானைக்கு உணவளிக்காமல் உண்டுவிட்டதால், யானை அவனை விட்டு நீங்கியது. அதனைத் தேடிக் காட்டில் அலைந்துகொண்டிருந்தான். அதையறிந்து சூழ்ச்சியில் வல்லவனுன சாலங்காயன்

உதயணனின் தெய்வ யானையைப் போன்று ஓர் இயந்திர யானையை உருவாக்கி, அதனுள் வீரர் சிலரை மறைந்திருக்கச் செய்தான். அந்த யானையுடனும் சேனையுடனும் காட்டில் சென்று, யானையை ஓரிடத்தில் விட்டுவிட்டு மறைந்து இருந்தான். அந்த யானையைக் கண்ட உதயணன் தனது தெய்வ யானையே இது என எண்ணி அருகே வந்தபோது, யானைக்குள் இருந்த வீரர்கள் வெளிப்பட்டு அவனைச் சூழ்ந்து கொண்டனர். உடனே சிறிது தூரத்தில் மறைந்திருந்த சாலங்காயன் சேனையுடன் வந்து உதயணனைச் சிறைப்படுத்தினான்.

5. யூகி என்பான் யாவன்? அவன் கூறிய வஞ்சினம் யாது?

சேதி நாட்டு அரசன் யூகி என்பவன் உதயணனின் உற்ற நண்பன். உதயணன் சிறைப்பட்டதை அறிந்து வருந்தினான். "கள்ள யானையால் வஞ்சித்துக் கைது செய்யப்பட்ட மன்னனை நானும் ஒரு யானையாலேயே மீட்பேன்; பிரச்சோதனன் மகளை அவனறியாமல் உதயணனுக்கு மணம் முடித்து, அவந்தி நாட்டைத் தீக்கிரையாக்குவேன்'' என்று வஞ்சினம் கூறினான்.

6. யூகி தன் வஞ்சினத்தை எவ்வாறு முடித்தான்?

உதயணன் பிரிவால் யூகி இறந்தான் என்னும் பொய்ச் செய்தியைப் பரப்பிவிட்டு மாறுவேடத்துடன் யூகி உச்சயினி வந்தான். பிரச்சோதனின் பட்டத்து யானையாகிய நளகிரிக்கு மருந்தும் அகிற் புகையும் இட்டு மதம் பிடிக்கச் செய்தான். மதம் பிடித்த யானை கட்டுத் தறியை முரித்துக்கொண்டு நகருள் புகுந்து மிகுந்த துன்பத்தை விளைவித்தது. மதம் பிடித்த யானை கடைசியில் உதயணனின் யாழிசைக்குக் கட்டுப்பட்டு அடங்கியது.

அதனால் மகிழ்ச்சியடைந்த பிரச்சோதனன் நீர் விழாவிற்கு ஏற்பாடு செய்தான். அவ்விழாவிற்குச் செல்ல உதயணனுக்கு 'பத்திராபதி' என்னும் பெண் யானையைக் கொடுத்தான். ஆற்று நீரில் மக்கள் எல்லோரும் நீராடும் பொழுது, யூகியின் ஆணைப்படி அவன் வீரர்கள் உச்சயினி நகருக்குத் தீயிட்டனர். வாசவதத்தையை அழைத்துக்கொண்டு தன்னுடு போய்ச் சேரும்படி உதயணனுக்கு யூகி கூறினான். இவ்வாறு யூகி தன் வஞ்சினத்தை நிறைவேற்றினான்.

7. உதயணனை யூகி எவ்வாறு விடுவித்தான்?

பட்டத்து யானையாகிய நளகிரியை மதம் பிடிக்குமாறு யூகி செய்தான். அது நகருக்குள் புகுந்து மிகுந்த துன்பத்தை விளைவித்தது. பிரச்சோதனன் உதயணனைச் சிறையில் இருந்து விடுவித்து அதனை அடக்கவேண்டினான். உதயணன் கோடபதி என்னும் யாழை இசைத்து நளகிரியை அடக்கினான். இவ்வாறு யூகி உதயணனை விடுவித்தான்.

II. **பிரித்தெழுது :**

தீக்கிரையாக்குவேன் = தீக்கு + இரை + ஆக்குவேன்
தீங்கின்றி = தீங்கு + இன்றி
எத்துன்பமும் = எ + துன்பமும்
அகிற்புகை = அகில் + புகை

III. **சேர்த்தெழுது :**

தீ + பற்றி = தீப்பற்றி, கட்டு + தறி = கட்டுத்தறி
பூ + பறி = பூப்பறி, தயிர் + குடம் = தயிர்க்குடம்
ஏற்றி + கொண்டு = ஏற்றிக்கொண்டு

18. கல்வியும் ஒழுக்கமும் (சொற்போர்)

அருஞ்சொற்பொருள்

சொற்போர் - ஒரு பொருள் குறித்து வாதிடுவது

ஒல்கா - குறையாத

முப்பால் - அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என்னும் மூன்று பகுதி களைக் கொண்ட திருக்குறள்

குறிஞ்சிப் பாட்டு - பத்துப் பாட்டில் ஒன்று

பிணக்கன் - சண்டையிடுபவன்

சொன்மாரி - சொல்லாகிய மழை

பேச்சாற்றல் - சொல்வன்மை

இன்னல் - துன்பம்

I. வினா – விடை

1. பொன்னரசன் 'கல்வியே ஒழுக்கத்திலும் சிறந்தது' என்பதற்குக் கூறிய காரணங்கள் யாவை ?

தொல்காப்பியரும், வள்ளுவரும், கபிலரும், கம்பரும் கல்வியில் சிறந்தவர்களாய் இருந்ததால்தான் அவர்களை மறக்காமல் இருக்கிறோம். கல்விச் செல்வத்தைப் பெற்றிருந்த அவர்கள் நல்ல இலக்கியங்களை நமக்கு அளித்துள்ளார்கள். நாமும் கற்றவர்களாய் இருப்பதால்தான் அவ்விலக்கியத்தின் கவிதைகளைச் சுவைக்க முடிகிறது. வள்ளுவர் கல்லாதவனை விலங்கு என்றும், கண் இல்லாதவன் என்றும் இகழ்கின்றார். கல்வி வெள்ளத்தால் போகாது; வெந்தணலால் வேகாது; வேந்தரால் கொள்ள இயலாது; கொடுத்தாலும் குறையாது. ஒழுக்கத்தைப் பற்றி அறநூல்கள் கூறுகின்றன. அவற்றை அறியக் கல்வி இன்றியமையாதது. கல்வியே சிறந்தது என்பதால்தான் நானும் நீங்களும் பள்ளிக்கு வந்து படிக்கின்றோம். இக்காரணங்களால் கல்வியே ஒழுக்கத்திலும் சிறந்தது என்று பொன்னரசன் கூறினான்.

2. மாணிக்கம் 'ஒழுக்கமே கல்வியினும் உயர்ந்தது' என்பதை எவ்வாறு விளக்கினுன் ?

கல்வி இன்றியமையாதது. அக்கல்வியை ஒழுங்காகப் பள்ளிக்கு வராமல் பெறமுடியாது. கல்வியறிவு பெறவும் ஒழுக்கமே அடிப்படையாக உள்ளது. புலவர் பெருமக்கள் ஒழுக்கமற்றவராய் இருந்தால் காலத்தைவெல்லும் கவிதையை இயற்றமுடியாது. ஒழுக்கமற்றவன் கற்ற கல்வி, கொடியவன் கையில் சிக்கிய வாளாகிப் பலருக்கு இன்னல் விளைவிக்கும். ஒழுக்கம் உயிரினும் மேம்பட்டது என்கிருர் வள்ளுவர். உயிரின்றி நம்மால் வாழமுடியுமா? நாயிடம் செய்ந் நன்றி மறவாத ஒழுக்கம் இருப்பதால்தான் அதனைப் பாராட்டுகிருேம். கல்வி இல்லாதவன விலங்கென்ருல் ஒழுக்கம் இல்லாதவன் நடைப்பிணமாவான். கல்வியைக் கண் என்ற வள்ளுவர், ஒழுக்கத்தை உயிர் என்ருர். கண்ணின்றி வாழலாம். ஆனல் உயிர் இன்றி வாழமுடியாது.

3. தலைவர் கூறிய தீர்ப்பு யாது ?

கல்வியைவிட ஒழுக்கமே சிறந்ததென்று தலைவர் தீர்ப்புக் கூறினுர்.

கல்லாதவர் நல்லொழுக்கம் உடையவராளுல் அவரை நாம் புகழ்கிருேம். கற்றிருந்தும் ஒழுக்கமில்லாதவரை இகழ்கின்ருேம். காந்தியடிகளையும், ஆப்பிரகாம் லிங்கனையும், கென்னடியையும் கொன்றவர்கள் கல்வி கற்றவரே. ஒழுக்கமில்லாதவனல் சமுதாயத்திற்குத் தீங்கு. கல்லாதவர் வாழும் ஊரில் வாழலாம்; ஆனல் பொல்லாதவர் வாழும் ஊரில் அச்சமின்றி வாழ இயலாது. ஒழுக்கமற்றவன் பெற்ற கல்வி பயனற்றுப்போகும். ஆதலின் உயிர் போன்ற ஒழுக்கம் சிறந்தது. கண்களில்லாமல் உயிர் வாழலாம்; உயிரின்றி வாழமுடியாது. ஒழுக்கம் உயிர்; கல்வி கண். உயிர் இல்லாத உடலில் கண் ஒளியற்றுப் போவதுபோல, ஒழுக்கமில்லாத ஒருவன் கற்ற கல்வியும் பயனற்றுப்போகும்.

ஆதலின் கல்வியினும் ஒழுக்கமே சிறந்தது என்று தலைவர் தீர்ப்புக் கூறினுர்.

4. தொல்காப்பியம், திருக்குறள், கம்ப ராமாயணம், குறிஞ்சிப்பாட்டு இவற்றின் சிறப்புகளாகப் பொன்னரசன் குறிப்பிட்டன யாவை ?

ஒல்காப்புகழ் பெற்ற தொல்காப்பியம் என்று தொல்காப்பியத்தையும், எப்பாவலரும் போற்றும் முப்பாலென்று திருக்குறளையும், ஆரிய அரசனுக்குத் தமிழ்ச் சுவை உணர்த்திய சிறப்புடையது குறிஞ்சிப் பாட்டென்றும் கற்ருர் இதயத்தைக் களிக்கச் செய்வது கம்பராமாயணம் என்றும் அவற்றின் பெருமைகளைப் பொன்னரசன் குறிப்பிட்டான்.

5. நன்னூலாசிரியர் மாணுக்கர்க்குக் கூறும் இலக்கணம் யாது ?

'சினமுடையவர், சண்டை போடுவோர், கள்வர் முதலி யோர் கற்றற்கு உரிய மாணுக்கர் ஆகார்' என்று நன்னூலாசிரியர் கூறுகிருர்.

II. பிரித்தெழுது :

கண்ணில்லாதவன் = கண் + இல்லாதவன்
பேச்சாற்றல் = பேச்சு + ஆற்றல்
ஒழுக்கமற்றவன் = ஒழுக்கம் + அற்றவன்
சொன்மாரி = சொல் + மாரி
வெந்தணல் = வெம்மை + தணல்

III. சேர்த்தெழுது :

ஆசிரியர் + பெருந்தகை = ஆசிரியப்பெருந்தகை
தெய்வம் + புலவர் = தெய்வப்புலவர்
அதைவிட + சிறந்தது = அதைவிடச்சிறந்தது.

19. எஸ். சீனிவாச ஐயங்கார்

அருஞ்சொற்பொருள்

ஆதிக்கம் – அதிகாரம்
புறக்கணித்து – உதறித்தள்ளி
பேணி – காப்பாற்றி
உரையின்படி – வார்த்தையின் படி
இணங்கி – சம்மதித்து
வருவாய் – வருமானம்
எய்தினர் – அடைந்தார்
வலுப்பெற – வலிமையடைய
துறந்தனர்–விலகினர், நீங்கினர்
ஈட்டிய – சம்பாதித்த
இறுதிமுறி – இறந்தபின் தன் செல்வத்தை இன்னவாறு செலவிட வேண்டும் என எழுதும் பத்திரம்
இளஞ்சிருர் - சிறுவர்

I. வினு - விடை

1. சீனிவாச ஐயங்கார் எப்பொழுது எங்குப் பிறந்தார்? அவர் தகப்பனுரின் பெயர் என்ன?

சீனிவாச ஐயங்கார் இராமநாதபுரத்தில் 1847ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ஆம் தேதி பிறந்தார். இவர் தந்தையார் பெயர் சேஷாத்திரி ஐயங்கார்.

2. சென்னை பாஷ்யம் ஐயங்கார் குடும்பத்துக்கும் சீனிவாச ஐயங்கார் குடும்பத்துக்கும் எவ்வாறு தொடர்பு ஏற்பட்டது?

சீனிவாச ஐயங்காரின் தந்தை சேஷாத்திரி ஐயங்கார் வழக்கின் பொருட்டு அடிக்கடி சென்னைக்குச் செல்வார். அங்குப் புகழ்பெற்ற பாஷ்யம் ஐயங்காருடன் தொடர்பு கொண்டிருந்தார். அவ்வாறு அவர் சென்னை வரும்பொழுதெல்

லாம் தம் மகன் சீனிவாச ஐயங்காரையும் அழைத்து வருவ துண்டு. பாஷ்யம் ஐயங்கார் வீட்டில் தங்கியதால், நாளடைவில் இரு குடும்பங்களுக்குமிடையே நட்பும், தொடர்பும் ஏற்பட்டது. பாஷ்யம் ஐயங்காரின் மகளான அரங்கநாயகியை சீனிவாச ஐயங்கார் மணந்து கொண்டார். இவ்வாறு இரு குடும்பங்களுக்கிடையே நெருங்கிய உறவும் ஏற்பட்டது.

3. பட்டப் படிப்பில் இவர் பெற்ற சிறப்பு யாது?

சீனிவாச ஐயங்கார் பொருளாதாரம், ஆங்கிலம் என்னும் இருதுறைகளிலும் பல்கலைக் கழகத் தேர்வில் முதல்வராகத் தேர்ச்சி பெற்ருர். அதன் பொருட்டுப் பொற் பதக்கங்களையும் பரிசாகப் பெற்ருர்.

4. இவர் சட்டப் படிப்பினைப் பின்பற்ற நேர்ந்தமையைக் குறிக்க.

மாநிலக் கல்லூரியில் பட்டம் பெற்றதும் இவர் ஆங்கில ஆட்சியில் பேரலுவலர் ஆவதற்குரிய இந்திய ஆட்சிப்பணி (ஐ. சி. எஸ்) தேர்வு எழுத விரும்பினர். அதற்காக வெளிநாடு சென்று கற்க விரும்பினர். இவர் தந்தை அதனை விருமபவில்லை. தந்தையாரின் விருப்பப்படி பட்டப்படிப்பு முடிந்ததும், சட்டக் கல்லூரியில் சேர்ந்து படித்துப் பட்டம் பெற்ருர்.

5. இவர் உயர் பதவியையும் பட்டத்தையும் துறந்தது ஏன்?

சீனிவாச ஐயங்கார் அட்வகேட் ஜெனரல் என்னும் உயர் பதவியையும், சி. ஐ. ஈ. என்ற சிறந்த பட்டத்தையும் பெற்று வாழ்ந்து வருகையில் நாட்டில் சுதந்திர இயக்கம் வலிமை அடைந்தது. அப்போது ஆங்கில அரசு மக்களைத் துன்புறுத்தத் தொடங்கியது. தடையுத்தரவுகளும், இராணுவச் சட்டங்களும் அமுலாக்கப்பட்டன. அப்போது காந்தியடிகளின் ஆணைப் படி பலர் பட்டம், பதவிகளைத் துறந்து விடுதலைப் போரில் ஈடுபட்டனர். சீனிவாச ஐயங்காரும் அட்வகேட் ஜெனரல் பதவியையும், சட்ட மேலவை உறுப்பினர் பதவியையும் துறந்தார். திருநெல்வேலியில் நடைபெற்ற அரசியல் மாநாட்டின் போது சி. ஐ. ஈ பட்டத்தையும, தம் வழக்கறிஞர் தொழிலையும் விடுத்து, நாட்டு விடுதலைக்கு உழைக்க முன்வந்தார்.

6. இவர் கொடைப் பண்புடையவர் என்பதனை விளக்கு.

சீனிவாச ஐயங்கார் உழைத்துப் பெற்ற செல்வத்தை மக்களின் நன்மைக்கு மனமுவந்து அளித்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் சட்டத்தேர்வில் ஒவ்வோராண்டும் முதன்மையாகத் தேர்ச்சி பெறுபவருக்குத் தம் மாமனர் நினைவாகத் தங்கப் பதக்கம் அளிக்க நிதியுதவினர். பொருளாதார வல்லுநரும், அரசியல்வாதியுமான கோபாலகிருஷ்ண கோகலே நினைவுச் சொற்பொழிவுகளுக்கெனப் பத்தாயிரம் ரூபாய் வைப்பு நிதி வழங்கினர். வாரணசியிலுள்ள இந்துப் பல்கலைக் கழகத்துக்கு

பத்தாயிரம் ரூபாய் வழங்கினர். அனைத்திந்திய நூல் நூற்போர் சங்கத்துக்கும் பத்தாயிரம் ரூபாய் அளித்தார். இராமநாதபுரத்தில் தாம் பிறந்து வளர்ந்த வீட்டைப் பொதுச் சொத்தாக்கி, அங்கு நூல் நிலையம் அமைக்க இருபத்தையாயிரம் ரூபாய் கொடுக்கப் பத்திரம் எழுதிவைத்தார். பலருக்கும் அவ்வப்போது நன்கொடைகள் வழங்கினர்.

7. சீனிவாச ஐயங்காரின் பண்பு நலன்களைப்பற்றிப் பத்து வரிகள் எழுது.

இவர் நுண்ணறிவும், சுறுசுறுப்பும் கொண்டவர். கல்வியில் சிறந்து விளங்கினர். தம் தந்தையிடத்தில் அன்பும், மரியாதையும் கொண்டவர். அவர் விருப்பத்திற்கிணங்க வெளிநாடுபோகும் ஆசையைக் கைவிட்டார். சட்டக்கல்வி பயின்றார். தமிழ், சமஸ்கிருதம், பிரெஞ்சு மொழியினை நன்கு கற்றவர்; சிறந்த பேச்சாளர். ஆங்கிலக் கவிதைகள் இயற்றுவார். நாட்டுப்பற்று, கொடைப்பண்பு, வழக்காடும் திறன், சட்ட நுணுக்க அறிவாற்றல், சாதிமத வேறுபாடு கருதாமை, ஏழைகளிடம் அன்பு முதலிய குணங்களைக் கொண்டவர்.

II. பிரித்தெழுது :

பணியாற்றிய = பணி + ஆற்றிய
தடியடி = தடி + அடி
நாளெல்லாம் = நாள் + எல்லாம்
பற்றுணர்வு = பற்று + உணர்வு
அனைத்திந்திய = அனைத்து + இந்திய
சொற்பொழிவு = சொல் + பொழிவு

III. சேர்த்தெழுது :

சட்டம் + கல்லூரி = சட்டக்கல்லூரி
ஓய்வு + இன்றி = ஓய்வின்றி
மிக்கு + ஓங்கி = மிக்கோங்கி
செல்வம் + வாழ்வு = செல்வவாழ்வு
பயன் + அளிக்க = பயனளிக்க
இருபது + ஆயிரம் = இருபதாயிரம்

IV. வாக்கியத்தில் அமைத்தெழுது:

கவனக்குறைவு, அரிதின் முயன்று, புலமை

எச்செயலிலும் நமக்குக் **கவனக்குறைவு** இருக்கக் கூடாது.
அதியமான் **அரிதின் முயன்று** பெற்ற கனியை ஔவைக்கு அளித்தான்.
என் தகப்பனர் தமிழ்ப் **புலமை** நிறைந்தவர்.

20. குமண வள்ளல்

அருஞ்சொற்பொருள்

வெங்கதிர் - வெப்பம் மிகுந்த கதிரவன்	ஒளிர்ந்தது - பிரகாசித்தது
முதுரை - பழமொழி	கரந்துறைய - மறைந்து வசிக்க
பேதைமை - அறியாமை	புனிதன் - தூய்மையானவன்
இரவலர் - யாசிப்பவர்	விழையும் - விரும்பும்
புரவலர் - காப்பவர்	தளையற்ற - கட்டுப்பாடற்ற
அருங்கானம் - கொடியகாடு	கவினுர் - அழகு பொருந்திய
உறைகின்ருர் - வசிக்கின்ருர்	குழவி - குழந்தை
அரிமா - சிங்கம்	கொற்றம் - வெற்றி
அரியணை - சிங்காதனம்	எள்ளி - பரிகசித்து
அழுக்காறு - பொருமை	தருக்கர் - கர்வம் கொண்டவர்
	வரையாது - அளவில்லாமல்

I. வினு - விடை

1. வீட்டுக்குரியவர் புலவர் பெருமையைப் பற்றி யாது கூறினுர்?

"புலவர்கள் முகத்தில் அறிவொளி வீசும். அவர்கள் வாழ்வில் ஏழ்மையும் செல்வமும் மாறிமாறி வரும். வள்ளல்கள் கொடுக்கும் செல்வத்தை அவர்கள் தங்களுக்கே வைத்துக் கொள்ளாமல் பிறருக்குக் கொடுத்துவிடுவர். அதனுலேயே மீண்டும் வறுமையடைகின்றனர். புலவர் பெருஞ்சித்திரனுர் குமண வள்ளல் கொடுத்த செல்வத்தைத் தம் மனைவியின் கையில் கொடுத்து, 'நாளைக்கு நமக்கு வேண்டுமென்று எண்ணுமல் எல்லோருக்கும் கொடு' என்று கூறியதால் புலவர்களின் பெருமை விளங்கும். இவ்வாறு வீட்டுக்குரியவர் புலவர் பெருமை பற்றிக் கூறினுர்.

2. நாடாண்ட குமணன் காடாளச் சென்றது ஏன்?

குமணனின் புகழ் கண்டு அவன் தம்பி இளங்குமணன் பொருமை கொண்டான். அவனுக்கு அரசாள வேண்டுமென்ற விருப்பம் ஏற்பட்டது. அள்ளி வழங்கும் அண்ணனுல் நாட்டில் தனக்குச் செல்வம் குறைந்துவிடுமோ என அஞ்சினுன். இவனது உள்ளத்தினைக் குறிப்பாலுணர்ந்த வள்ளல் குமணன் நாட்டினைத் தம்பியிடம் கொடுத்துவிட்டு, தான் கானகம் ஏகினுன்.

3. புலவர் குமணனிடம் கூறியது யாது?

புலவர், குமணன் வாழும் காட்டிற்குச் சென்று அவரைக் கண்டு தன் வறுமையைக் கூறினுர். "என் இல்லத்தில் அடுப்பு, சமைக்கும் தொழிலையே மறந்துவிட்டது. அதில் காளான் பூத்துள்ளது. தாய்ப் பால் இல்லாமல் பச்சிளங் குழவி அழு

கிறது. அழும் குழந்தையைக் கண்டு மனைவி வருந்துகிருள். அவள் இன்னல் கண்டபின் வறுமையை நீக்கிக்கொள்ள உம்மை நாடி வந்தேன்'' என்று கூறினர்.

4. காட்டிலும் குமணன் எவ்வாறு மகிழ்வுடன் இருந்தான் ?

நாட்டு வளம் கண்ட குமணன் காட்டு வளம் கண்டு அக மகிழ்ந்தான். இயற்கையின் இருப்பிடமாக இருக்கும் காட்டில் வானேங்கிய மரங்களையும், தேன் சொரியும் மலர்களையும், இசை பாடும் பறவைகளையும், தளையற்ற விலங்குகளையும் கண்டு மகிழ்வெய்தினன். துன்பமும் சோர்வுமின்றி வாழ்ந்தான்.

5. புலவர்க்குக் குமணன் எவ்வாறு பரிசளித்தான் ?

பெருந்தலைச்சாத்தனர் தன் வறுமையைப் போக்கிக் கொள்ளத் தன்னை நாடி வந்திருப்பதைக் குமணன் அறிந்தான். அவருடைய வறுமையை நீக்க வழியறியாது கலங்கினன். தன்னை நாடி வந்த புலவர் பரிசு பெருது போவது, தான் நாடு இழந்ததைக் காட்டிலும் துன்பம கொடுக்கக்கூடியது என எண்ணினன். தன் தலைக்கு இளைய குமணன் விலை கூறி யுள்ளது நினைவுக்கு வந்தது. உடனே தன் வாளை உருவிப் புலவரிடம் கொடுத்து, ''என் தலையை வெட்டிக்கொண்டுபோய் இளங் குமணனிடம் கொடுத்துப் பரிசு பெற்று உமது வறுமை யைப் போக்கிக் கொள்ளுங்கள்'' என்று கூறினன்.

தமிழ் கற்ற புலவருக்குத் தன் தலையையே பரிசாகக் கொடுக்க முன் வந்தான் குமணன்.

6. இளங்குமணன் உள்ளம் திருந்திய முறையைச் சுருக்கி வரைக.

பெருஞ்சாத்தனர் தன் கையிலிருந்த வாளை இளங்குமண னிடம்காட்டி, ''அரசே இது பல வெற்றி பெற்ற உன் தமையன் வாள்; என் வறுமையைக் கூறிப் பரிசு பெற விரும்பிக் குமண னைக் கண்டேன். தன்னைப் பாடும் புலவர்க்குப் பரிசளிக்க இய லாத நிலையில் மிக வருந்தினன். அணிகளையும் மணிகளையும் விடச் சிறந்ததான தன் உயிரையே எனக்குக் கொடுத்தான். இந்த வாளை எனக்குத் தந்து, 'என் தம்பி என் தலையைக் கொண்டு வருபவர்க்குப் பெரும் பொருள் தருவதாகக் கூறியுள் ளான். என் தலையைக் கொய்து சென்று என் தம்பியிடம் கொடுத்துப் பெரும் பொருள் பெற்று உம் வறுமையைத் தீர்த்துக் கொள்வீர்' என்று கூறினன். தமிழுக்காகத் தன் உயிரையே கொடுக்கும் அந்நல்லோனின் உயிர் வேண்டுமா?'' என்று கேட்டார்.

அது கேட்டு இளங்குமணன் மனம் பதைத்தான்; தன் இழிசெயலுக்காக நாணினன். ''இவ்வரியணையில் நான் அமரத் தகுதியில்லை. அவர் இருக்கும் இடத்தைக் காட்

டுங்கள். அவர் தாளில் விழுந்து மன்னிப்புக் கேட்டுக்கொகிறேன்'' என்று கூறிப் புலவருடன் காட்டிற்குப் போனான்.

II. பிரித்தெழுது:

அறிவொளி	= அறிவு + ஒளி
நாடாண்டது	= நாடு + ஆண்டது
காரிருள்	= கருமை + இருள்
பச்சிளங் குழந்தை	= பசுமை + இளமை + குழந்தை
கரந்துறைதல்	= கரந்து + உறைதல்
விருந்திடாமல்	= விருந்து + இடாமல்

III. எதிர்ச்சொல் தருக:

இனிய × இன்னாத	குறைவு × நிறைவு
முன்னோர் × பின்னோர்	புகழ்தல் × இகழ்தல்
மறுத்து × ஏற்று	கல்லாதார் × கற்றவர்

இலக்கண வினா-விடை

1. எழுத்திலக்கணம்

1. மொழி உண்டாவதற்குக் காரணமாய் இருப்பது எது? அது எத்தனை வகைப்படும்?

மொழி உண்டாவதற்குக் காரணமாய் இருப்பது எழுத்து. அவ்வெழுத்துள் உச்சரிக்கப்படுவது 'ஒலி வடிவம்' என்றும், எழுதப்படுவது 'வரிவடிவம்' என்றும் பெயர் பெறும். இவ்வெழுத்து முதலெழுத்து, சார்பெழுத்து என இருவகைப்படும்.

2. முதலெழுத்துகள் எவை?

உயிரெழுத்து பன்னிரண்டும் (அ, முதல் ஔ முடிய) மெய்யெழுத்து பதினெட்டும் (க் முதல் ன் முடிய) முதலெழுத்துகள் என வழங்கப்படும்.

3. சார்பெழுத்துகள் யாவை?

1. உயிர்மெய், 2. ஆய்தம், 3. உயிரளபெடை, 4. ஒற்றளபெடை, 5. குற்றியலுகரம், 6. குற்றியலிகரம், 7. ஐகாரக் குறுக்கம், 8. ஔகாரக் குறுக்கம், 9. மகரக் குறுக்கம், 10. ஆய்தக் குறுக்கம் என்னும் பத்தும் சார்பு எழுத்துகள் எனப்படும்.

2. சுட்டெழுத்துகள்

1. சுட்டெழுத்துகள் யாவை ?

ஒன்றைச் சுட்டிக் காட்டும் எழுத்து சுட்டு எழுத்து எனப்படும். இச்சுட்டெழுத்துகள் மூன்று. அவை உயிரெழுத்து களாகிய அ, இ, உ என்பன. இம் மூன்று எழுத்துகளும் சொல்லில் அகத்தே நின்றும் புறத்தே நின்றும் சுட்டுப் பொருளை உணர்த்தினுல் அவை சுட்டெழுத்துகள் எனப்படும்.

2. அகச்சுட்டு, புறச்சுட்டு – விளக்கு. வகைக்கு இரு உதாரணங்கள் கொடு.

அகச்சுட்டு:- சுட்டுப்பொருளைத் தரும் அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளில் ஒன்று சொல்லின் ஓரெழுத்தாய் (அகத்தே) நின்று பொருளைச் சுட்டிக் காண்பிக்குமாயின் அஃது அகச் சுட்டு எனப்படும். அச்சுட்டெழுத்தை நீக்கின் சொல் பொருள் தராது. (உ-ம்) அவன், இவன்

ஒரு சொல்லின் அகத்தே நின்று பொருளைச் சுட்டிக் காட்டு வது அகச்சுட்டு ஆகும்.

புறச்சுட்டு :—சுட்டெழுத்துகளில் ஒன்று சொல்லுக்குப் புறத்தே (வெளியே) நின்று ஒரு பொருளைச் சுட்டிக்காட்டு மாயின் அது புறச்சுட்டு எனப்படும். (உ-ம்) அவ்வீடு; அம்மணி.

இச்சொற்களில் சுட்டெழுத்துகளை நீக்கி விட்டாலும் பிற எழுத்துகள் நின்று (வீடு, மணி) பொருள்தரும். எனவே இவை புறச்சுட்டு எனப்படும்.

3. 'சுட்டுத் திரிபு' என்ருல் என்ன ?

அ, இ, என்ற சுட்டெழுத்துகள் அந்த, இந்த என்று திரியும் போது 'சுட்டுத் திரிபு' எனப்படும்.

4. சேய்மைச்சுட்டு, அண்மைச்சுட்டு – விளக்கு.

சுட்டெழுத்துகளில் அகரம் சேய்மையில் (தூரத்தில்) உள்ளதைச் சுட்டுவதால் சேய்மைச் சுட்டு எனப்படும். இகரம் அண்மையில் (அருகில்) உள்ளதைச் சுட்டுவதால் அண்மைச் சுட்டு எனப்படும்.

5. வினு எழுத்துகள் யாவை ? எடுத்துக்காட்டு தருக.

ஆ, எ, ஏ, ஓ என்னும் உயிர் எழுத்துகளும் யா என் னும் உயிர்மெய் எழுத்துமாகிய இவ்வைந்து எழுத்துகளும் முதலிலோ, ஈற்றிலோ, இரண்டிலுமோ அமைந்து வினுப் பொருளைத் தருமாயின் வினு எழுத்துகள் எனப்படும். இவற் றுள் ஏ, யா இரண்டும் சொல்லுக்கு முதலில் நின்று வினுப் பொருளைத் தரும் (உ–ம்) எது?, யாவன்?

ஆ, ஓ இரண்டும் சொல்லுக்கு ஈற்றில் நின்று வினுப் பொருளைத் தரும். (உ-ம்) அவனு? (ஆ), அவனே? (ஓ)

ஏ மட்டும் சொல்லுக்கு முதலிலும் ஈற்றிலும் நின்று வினுப் பொருளைத் தரும். (உ-ம்) ஏது?, அவனே? (ஏ).

6. வினு எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

வினு இரண்டு வகை. அவை அகவினு, புறவினு என்பன.

7. அகவினு, புறவினு விளக்கு.

அகவினு:- சொல்லின் அகத்தே அமைந்து வினுப்பொருளைத் தரும் எழுத்து அகவினு எனப்படும். (உ-ம்) எது?, ஏன்?, யாவை? இவற்றுள் வினுப்பொருளைத் தரும் எழுத்தை நீக்கினுல் மற்ற எழுத்துகள் நின்று பொருள் தரமாட்டா.

புறவினு:- சொல்லின் புறத்தே நின்று வினுப் பொருளைத் தரும் எழுத்து புறவினு எனப்படும்.

எக்கூடை? (எ), இவனு? (ஆ), அவனே? (ஓ), அவனே? (ஏ). இச்சொற்களில் 'எ'என்பது முதலிலும், ஆ, ஓ இரண்டும் ஈற்றிலும் நின்று வினுப்பொருளைத் தருகின்றன. இவ்வினு எழுத்துகளை நீக்கினும் பிற எழுத்துகள் நின்று பொருள் தரும் சொல்லாய் அமையும்.

3. மாத்திரை

1. மாத்திரை என்பது யாது ?

எழுத்துகளை உச்சரிக்கும் கால அளவிற்கு மாத்திரை என்பது பெயர். நாம் இயல்பாகக் கண்ணிமைக்கும் நேர அளவையும், கைந்நொடிக்கும் நேர அளவையும் மாத்திரை என வழங்குகிறோம்.

2. எழுத்துகளுக்குரிய மாத்திரை எவ்வளவு ?

உயிர்க் குறிலுக்கும், உயிர்மெய்க் குறிலுக்கும் தனித் தனி மாத்திரை ஒன்றுகும். உயிர் நெடிலுக்கும் உயிர்மெய் நெடிலுக்கும் தனித்தனியே இரண்டு மாத்திரை ஆகும். மெய் எழுத்துக்கும், ஆய்த எழுத்துக்கும் தனித்தனியே மாத்திரை அரை ஆகும்.

4. குற்றியலுகரம்

1. குற்றியலுகரமாவது யாது ?

தனி நெட்டெழுத்தைச் சார்ந்தோ, பல எழுத்துகளைச் சார்ந்தோ ஒரு சொல்லின் இறுதியில் வல்லின மெய்யின் மேல் ஊர்ந்து நிற்கும் உ என்னும் எழுத்து தனக்குரிய ஒலியில்

குறைந்து ஒலிக்கும். அதுவே குற்றியலுகரம் எனப்படும். இதற்கு மாத்திரை அரையாகும்.

(உ-ம்) பறந்து (த் + உ = து), காடு (ட் + உ = டு)

2. குற்றியலுகரத்தின் வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்கு.

குற்றியலுகரம் தன் அயல் எழுத்தை (குற்றியலுகரம் கொண்ட சொல்லின் ஈற்றெழுத்துக்கு முன் எழுத்தை) நோக்க ஆறு வகைப்படும். அவையாவன:

1. பாட்டு, கட்டு —வன்றொடர்க் குற்றியலுகரம்
2. விருந்து, மண்டு —மென்றொடர்க் குற்றியலுகரம்
3. சார்பு, வீழ்து =இடைத் தொடர்க் குற்றியலுகரம்
4. மாடு, தீது =நெடிற்றொடர்க் குற்றியலுகரம்
5. படகு, முரசு =உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
   (ட்+அ) (ர்+அ)
6. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்=அஃது, எஃகு

5. குற்றியலிகரம்

குற்றியலிகரம் என்பதை எடுத்துக் காட்டுடன் விளக்கு.

தனக்குரிய மாத்திரையில் குறைந்து ஒலிக்கும் இகரம், குற்றியலிகரம் எனப்படும். குற்றியலுகரத்திற்கு முன்னே 'யகர'வருக்க எழுத்தை முதலாகக்கொண்ட சொல் வரும்போது, அக்குற்றியலுகரம் இகரமாய்த் திரிந்து குறைந்து ஒலிக்கும். 'மியா' என்னும் அசைச் சொல்லில் முதலில் உள்ள (ம்+இ) இகரம் குற்றியலிகரமாகும்.

(உ-ம்) வரகு+யாது=வரகியாது
கேண்+மியா=கேண்மியா

6. போலி

1. 'போலி' என்பது யாது?

அஃறிணைப் பெயர்களின் ஈற்றில் நிற்கும் மகர மெய்க்குப் பதில் னகர மெய் நிற்பது போலி எனப்படும். இம்மகர மெய் இரு குறில்களை அடுத்து வரும்; பொருள் வேறுபடாது.

(உ-ம்) அகம் - அகன்; வளம் - வளன்.

2. போலியின் வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கு.

போலி மூன்று வகைப்படும். அவை முதற் போலி, இடைப் போலி, கடைப் போலி எனப்படும். சொல்லின் முதலிலும், இடையிலும், கடையிலும் (ஈற்றிலும்) நிற்கும் ஒரெழுத்துக்குப்

பதிலாக மற்றோர் எழுத்து வருவதை முறையே முதற்போலி, இடைப்போலி, கடைப்போலி என வழங்குவர்.

(உ-ம்) மஞ்சு - மைஞ்சு } முதற் போலி
மயல் - மையல்
அமச்சு - அமைச்சு } இடைப் போலி
அரயர் - அரையர்
கலம் - கலன் } கடைப் போலி
வண்டு - வண்டர்
பந்தல் - பந்தர்

போலியில் எழுத்து வேறுபடுமே தவிரப் பொருள் வேறுபடாது.

7. மொழி முதல் எழுத்துகள்

1. மொழி முதல் எழுத்துகள் யாவை?

உயிரெழுத்துகள் (அ, முதல் ஔ, வரை) பன்னிரண்டும், க, ச, த, ந, ப, ம, என்னும் ஆறு எழுத்துகளின் வருக்க எழுத்துகள் - அஃதாவது, இந்த ஆறு மெய்களும் பன்னிரண்டு உயிர்களோடு கூடி வரும் 72 உயிர்மெய் எழுத்துகளும் மொழிக்கு முதலாய் வரும். வகர வருக்கத்தில் வ, வா, வி, வீ, வெ, வே, வை, வௌ என்னும் எட்டு எழுத்துகள் மொழிக்கு முதலாக வரும். யகர வருக்கத்தில், ய, யா, யு, யூ, யோ, யௌ என்னும் ஆறு எழுத்துகள் மொழிக்கு முதலாய் வரும். ஞகர வருக்கத்தில் ஞ, ஞா, ஞி, ஞெ, ஞொ என்னும் ஆறு எழுத்துகளும் மொழிக்கு முதலாய் அமையும். ஙகரம் ஒன்று மட்டும் மொழிக்கு முதலில் வரும்.

2. மொழிக்கு முதலில் வாரா எழுத்துகள் யாவை ?

மொழிக்கு முதலில் வாரா எழுத்துகள்: வு, வூ, வொ, வோ, யி, யீ, யெ, யே, யை, யொ, ஞீ, ஞு, ஞூ, ஞை, ஞோ, ஞௌ, ஆகிய எழுத்துகள்; தனிமெய் எழுத்துகள் (க் முதல் 'ன்' வரை); ட, ண, ர, ல, ழ, ள, ற, ன, என்பவற்றின் வருக்க எழுத்துகள் ; ஙகர வருக்கத்தில் முதல் எழுத்து ங தவிர மற்ற எழுத்துகள் – ஆகியவை மொழிக்கு முதலில் வாரா எழுத்துகள்.

8. மொழிக்கு ஈற்றில் வரும் எழுத்துகள்

1. மொழிக்கு ஈற்றில் நிற்கும் உயிர் எழுத்துகள் எவை ?

உயிர் எழுத்துகளில் எ, ஒ, அல்லாத பிற பத்து உயிர் எழுத்துகளும் மெய்யெழுத்தின் மீது ஊர்ந்து மொழிக்கு இறுதியில் நிற்கும்.

2. மொழிக்கு ஈற்றில் நிற்கும் மெய்யெழுத்துகள் எவை ?

ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் ஆகியவை மொழியின் ஈற்றில் நிற்கும் எழுத்துகள் ஆகும்.

3. மொழிக்கு ஈற்றில் நில்லாத உயிர் எழுத்துகள் எவை ? மெய் எழுத்துகள் எவை ?

மொழிக்கு இறுதியில் நில்லா உயிரெழுத்து எ, ஒ, என்பவை.

மெய்யெழுத்து தன் பதினெட்டனுள், வல்லினமெய்கள் ஆறும் (க், ச், ட், த், ப், ற்) மெல்லின மெய் ஒன்றும் (ங்) மொழிக்கு ஈற்றில் நில்லா.

9. சொல்லிலக்கணம்

1. சொல்லாவது என்ன ?

எழுத்து தனித்து நின்றும், பல சேர்ந்து நின்றும் பொருள் தருமாயின் சொல் எனப்படும்.

2. ஓரெழுத்தொரு மொழி என்பது யாது ?

ஓர் எழுத்து தனித்து நின்று பொருள் தருமாயின் அஃது ஓரெழுத்தொரு மொழி எனப்படும்.

3. பகாப் பதம், பகுபதம் என்பவற்றை விளக்கு.

சொல் இருவகைப்படும். அவை பகாப் பதம், பகுபதம் எனப்படும்.

பகுதி, விகுதி முதலியனவாகப் பிரிக்க முடியாமல் காரணமின்றி இடுகுறிப் பெயராய்த் தொன்று தொட்டு வழங்கி வரும் சொல் பகாப்பதம் எனப்படும்.

(உ-ம்) நிலம், தீ, காற்று.

பகுதி விகுதி முதலியனவாகப் பிரிக்கக் கூடிய சொல் பகுபதம் எனப்படும்.

(உ-ம்) கூனன் (கூன் - பகுதி + அன் - விகுதி)
உண்டான் (உண் - பகுதி + ட் - இடைநிலை + ஆன் - விகுதி)

10. பெயர்ச் சொற்கள்

1. பெயர்ச் சொல் என்றால் என்ன ? உதாரணம் தருக.

ஒரு பொருளுக்குப் பெயராக வரும் சொல் பெயர்ச் சொல்.
(உ-ம்) மனிதன், கடல், மரம்.

2. பெயர்ச் சொற்களின் வகையை எடுத்துக்காட்டுடன் விளக்கு.

பெயர்ச் சொற்கள் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறையும் அடிப்படையாகக் கொண்டு தோன்றும். இவற்றை அறுவகைப் பெயர்கள் என்பர்.

(உ-ம்) மனிதன், விலங்கு, கிளி —பொருட் பெயர்கள்.
வீடு, பள்ளி, கோவில் —இடப்பெயர்
ஆனி, திங்கள், காலை —காலப்பெயர்
கால், கை, செவி, கிளை —சினைப்பெயர்கள்
நன்மை, வெண்மை —குணப்பெயர்கள்
படித்தல், நடத்தல், —தொழிற்பெயர்கள்

11. வினைச்சொல்

1. வினைமுற்றை எடுத்துக் காட்டுடன் விளக்கு.

செய்யும் தொழிலின் முடிவைக் காட்டுவது அல்லது அதனைக் குறிக்கும் சொல்லே வினைமுற்று. இது மூன்று காலங்களுள் ஒன்றைக் குறிக்கும். எழுவாய்க்குப் பயனிலையாய் அமையும்.

(உ-ம்) பசு வந்தது - வருகிறது - வரும்.
பறவைகள் பறந்தன - பறக்கின்றன - பறக்கும்.

2. எச்சம் என்றால் என்ன ? அது எத்தனை வகைப்படும் ?

வினை முற்றின் விகுதி குறைந்து நிற்கும் வினைச் சொல்லே எச்சம் எனப்படும்.

அது பெயரெச்சம், வினையெச்சம் என இருவகைப்படும்.

3. பெயரெச்சம் என்பது யாது ? அதன் வகைகள் எவை ?

பெயரைக்கொண்டு முடியும் எச்சம் பெயரெச்சம் எனப்படும். இப்பெயரெச்சம் வினைமுற்றைப்போல மூன்று காலங்களையும் உணர்த்தும்.

வந்த பையன் —இறந்த காலப் பெயரெச்சம்.
வருகின்ற மகன் —நிகழ்காலப் பெயரெச்சம்
வரும் மகன் —எதிர்காலப் பெயரெச்சம்

4. வினையெச்சம் என்பது யாது ? அதன் வகைகள் எவை ?

வினையைக் கொண்டு முடியும் எச்சம் வினையெச்சம் எனப்படும். இதுவும் மூன்று காலங்களையும் உணர்த்தும்.

உண்டு சென்றான் —இறந்தகால வினையெச்சம்
ஓடிச் செல்கிறான் —நிகழ்கால வினையெச்சம்
படிக்கச் செல்வான் —எதிர்கால வினையெச்சம்

12. இடைச்சொல்

1. இடைச்சொல் என்றால் என்ன ?

தாமே தனித்து வழங்காமல் பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் சார்ந்து நிற்கும் சொற்கள் இடைச் சொற்கள் எனப்படும்.

(உ-ம்) பசியும் பிணியும் —'உம்' என்ற சொல்
நிலமே, நீரே, காற்றே—'ஏ' என்ற எழுத்து இடைச் சொல்

2. இடைச் சொற்களின் வகைகள் எவை ?

இடைச்சொற்கள் பல வகைப்படும். அவை பின்வருமாறு:

வேற்றுமை உருபுகள் ஐ, ஆல், கு, இன், அது, கண் என்பவை.

பாலைக் காட்டும் விகுதிகளாகிய அன், ஆன், அள், ஆள் முதலியவை.

காலங்காட்டும் இடைநிலைகளாகிய த், ட், ற், இன், கிறு, கின்று, ஆநின்று, ப், வ் என்பவை.

சாரியைகளாகிய அத்து, அல், அ, கு முதலியவை.

உவம உருபுகளான போல, அன்ன முதலியவை.

சுட்டெழுத்துகளாகிய அ, இ, உ என்பவை.

வினா எழுத்துகளாகிய ஆ, எ, ஏ, ஓ, யா என்பவை.

செய்யுளின் ஈற்றசையாகிய ஏ, அரோ என்பவை.

13. உரிச்சொல்

1. உரிச் சொல்லை விளக்கு.

பெயருக்கும் வினைக்கும் உரிமைப்பட்டு அவற்றின் குணத்தை விளக்க வரும் சொல் உரிச்சொல். அது பெயரைச் சார்ந்துவரின் பெயர் உரிச்சொல் என்றும், வினையைச் சார்ந்து வரின் வினை உரிச்சொல் என்றும் வழங்கப்படும்.

(உ-ம்) உறுமீன் —பெயர் உரிச்சொல்
சாலச் சிறந்தது—வினை உரிச்சொல்

2. உரிச் சொல்லின் வகையை விளக்கி எடுத்துக்காட்டுகள் தருக.

உரிச் சொற்கள், 'ஒரு குணம் தழுவிய உரிச்சொல், பல குணம் தழுவிய உரிச்சொல்' என இருவகைப்படும்.

(உ-ம்) சாலப் பசித்தது —மிகப் பசித்தது
தவப் பெரியன் —மிகப் பெரியவன்

சால, உறு, தவ, நனி, கூர், கழி என்பவை 'மிகுதி' என்னும் ஒரே பொருளைத் தருவதால் ஒரு குணம் தழுவிய உரிச்சொல்.

(உ-ம்) கடி நகர் —காவலையுடைய நகரம்
கடிவேல் —கூர்மையான வேல்

'கடி' என்னும உரிச்சொல், காப்பு, கூர்மை, விரைவு, விளக்கம் -முதலிய பல பொருள்களைத் தரும் பல குணம் தழுவிய உரிச்சொல்லாகும்.

துணைப்பாடக் கட்டுரைகள்

'பாரதக் கவிஞர்கள்'

1. வேதநாயகரின் வாழ்க்கை

முன்னுரை :

பத்தொன்பதாம் நூற்றுண்டில் தோன்றிய புலவர்கள் பலர். அவர்களில் சிறப்பாகக் கருதத் தக்கவர்கள் இராமலிங்க அடிகள், மகாவித்வான் மீனுட்சி சுந்தரம்பிள்ளை, கிருட்டினப் பிள்ளை, மாயூரம் வேதநாயகம்பிள்ளை, சுப்பிரமணிய பாரதியார் முதலியோர் தமிழுக்குப் பெருந்தொண்டு செய்தவராவர். அவர்களுள் வேதநாயகம்பிள்ளையின் வாழ்க்கையைப் பற்றி அறிவோம்.

பொருள் :

இவர் திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ள குளத்தூர் என்னும் ஊரில் பிறந்தார். தந்தையார் சவரிமுத்துப்பிள்ளை தாயார் ஆரோக்கிய மரியம்மாள். பிறந்த ஆண்டு 1826. குளத்தூரில் உள்ள திண்ணைப்பள்ளியில் பயின்றுர். கல்வி அறிவும் ஒழுக்கமும் இளமைப் பருவத்திலேயே இவரிடம் இயல்பாக அமைந்திருந்தன.

திரிசிரபுரம் தியாகராசப்பிள்ளை அவர்களிடம் ஆங்கிலமும் தமிழும் கற்றுர். ஆங்கிலத்தில் பேசவும் எழுதவும் கற்றுர். தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தமிழில் சிறந்த புலமை பெற்றுர். கவிதை புனையும் ஆற்றல் இயல்பாக அமைந்திருந்தது. தம் மைத்துனர் ஒருவரின் திருமணத்தில் நகைச் சுவை அமைந்த பாடல்களைப் பாடி வாழ்த்தினுர்.

முடிவுரை :

வேதநாயகர் இளமையிலேயே ஒழுக்கத்தில் சிறந்து விளங்கினுர். ஆசிரியரிடம் அடங்கி விரும்பிக் கல்வி கற்றமையால் பெரும் புலமைபெற்றுப் பிற்காலத்தில் பல அரிய பாடல்களை இயற்றி அழியாப் பெரும்புகழைப் பெற்றுர். இவரைப் போல் நாமும் முயன்று கற்றுச் சிறப்படைவோம்.

2. வேதநாயகர் மக்களுக்கும் தமிழுக்கும் செய்த சேவை

முன்னுரை :

பெண்ணுரிமை பேணுவதிலும், சமய சமரசத்திலும் இவர் திரு. வி. கல்யாணசுந்தரனுர்க்கும், இராமலிங்க அடிகளார்க்கும் ஒப்பானவர். இவர் பொதுவாகச் சமுதாயத்திற்கும், தமிழுக்கும் ஆற்றிய தொண்டு பலவாகும்.

பொருள்

ஆண் பெண் இருபாலரும் கல்வி கற்கவேண்டும் என்று ஓயாது பாடுபட்டார். தம் கருத்தைப் பாடல்கள் வாயிலாகவும், உரைநடை வாயிலாகவும் வெளிப்படுத்தினுர். மக்கட் சமுதாயம் முன்னேற ஆண்கள்போல் பெண்களும் கல்வி கற்கவேண்டும் என்பதை எல்லாரும் அறியச்செய்தார். சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு கூடாது என்பதை வலியுறுத்தினுர். தாதுவருடப் பஞ்சத்தில் உணவின்றி வருந்திய மக்களுக்குக் கஞ்சித்தொட்டி வைத்துக் கஞ்சி வார்த்தார்.

தமிழில் மிகப் பற்றுடையவர். மகாவித்வான் மீனுட்சி சுந்தரம்பிள்ளை, திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர் முதலியோரின் தொடர்பால் பெரும் புலமைபெற்றுத் தமிழுக்குப் பெருந்தொண்டு புரியலானுர்.

'நாவல்' என்னும் புனைகதையை முதன் முதல் எழுதி வழிகாட்டியவர் வேதநாயகரே. பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி முதலியன இவர் எழுதிய உரைநடை நூல்கள் 'நீதிநூல், சித்தாந்த சங்கிரகம், பெண்மதிமாலை, திருவருள் அந்தாதி' முதலியன இவர் இயற்றிய செய்யுள் நூல்கள். 'சர்வசமய சமரசக் கீர்த்தனை' என்பது இவர் இயற்றிய இசைத் தமிழ் நூல். சட்டங்களை ஆங்கிலமொழியில் இருந்து தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

முடிவுரை :

பிறமொழியில் மயங்கிக் கிடந்த தமிழகத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தினுர். தமிழ்ச் சமுதாயத்திற்கும், தமிழ் மொழிக்கும் இவர் பல வகையிலும் அரிய சேவைகள் செய்துள்ளார். இவரால் தமிழ்ப் பற்று இன்று தமிழ்நாட்டில் தலைசிறந்து நிற்பதைக் காண்கின்றோம்.

3. மணிக் குயில் தேசிகவிநாயகர் இளமையும் கல்வியும்

முன்னுரை :

ஒரு நாடு புகழடைய அந்நாட்டு மக்கள் கல்வி அறிவு பெற்று நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் விளங்க

வேண்டும். செல்வவளம் மட்டும் பெற்றிருத்தல் போதாது. மக்கள் மனவளம் பெற்றுவாழ இளமைப் பருவத்திலேயே அவர்கள் மனத்தைப் பண்படுத்தி வளர்க்கவேண்டும். அந்த வகையில் இளைஞர்களை வளர்க்க உழைத்தவர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.

பொருள் :

இவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் தேரூர் என்னும் சிற்றூரில் கி பி. 1876ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 27ஆம் நாள் பிறந்தார். தந்தையார் சிவதாணுப்பிள்ளை. தாயார் ஆதிலட்சுமி அம்மையார். வேளாளர் மரபைச் சார்ந்தவர்.

முதலில் மலையாளமொழியைக் கற்றார். பின் தம் தாய் மொழியாகிய தமிழ்மொழியையும் விரும்பிக் கற்கலானார். தேரூரில் இருந்த திருவாவடுதுறை மடத்தில் சாந்தலிங்கத் தம்பிரான் எனனும் பெரியார் தலைவராக இருந்தார். அவரிடம் தமிழ்மொழியை நன்கு கற்றார். பாடல்களைக் கேட்டு உடனே சொல்லும் நினைவு ஆற்றல் இளமையிலேயே இவரிடம் அமைந்திருந்தது. தொடக்கப்பள்ளிப் படிப்பு முடிந்ததும் ஆங்கிலப்பள்ளியில் சேர்ந்து படிக்கத் தொடங்கினார். அப் போதும் தம்பிரானிடம் தனியாக இலக்கண இலக்கியங்களை கற்கத் தொடங்கினார். இளமையிலேயே கவிபாடிக் கவிதை எழுதும் ஆற்றலைப் பெற்றார். முதல்முதல் இவர் எழுதிய நூல் 'அழகம்மை ஆசிரிய விருத்தம்' என்பது. தேசிக விநாயகரிடம் எதனையும் ஆராய்ந்து பார்க்கும் ஆர்வம் இளமையிலேயே அமைந்திருந்தது.

முடிவுரை :

இளமையில் பலவகையிலும் முயன்று கற்றுத்தேர்ந்து இளைஞர்க்கு என்றே பல பாடல்களை இயற்றியுள்ளார். இவர் இளைஞர்களை ஊக்கி உயர்வுபெறப் பலவகையில் முயன்றார். அதனை உணர்ந்து இவர் பாடல்களைப் படித்து இன்புறு வோமாக.

4. கவிமணி இயற்றிய நூல்கள்

முன்னுரை :

கவிமணி எழுதிய நூல்களில் பல இளைஞர்களுக்கு என்றே எழுதப்பட்டவை. இளைஞர் உள்ளத்தில் மொழிப் பற் றும், நாட்டுப்பற்றும், உண்டாக்க வேண்டும் என்பது இவரது பேரவா. சிறுவர்கள் தாமே உணர்ந்து கொள்ளும் வகையில் எளிமையாகப் பாடப்பட்டவை.

பொருள்:

இவர் எழுதிய நூல்களைக் கவிதை நூல்கள், இசைப் பாடல்கள், உரைநடை நூல்கள் என மூன்று வகைகளா கப் பிரிக்கலாம். 'மலரும் மாலையும், ஆசிய ஜோதி, உமர்

கயாம் பாடல்கள், நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழிமான்மியம்' ஆகியன கவிதை நூல்கள்; 'தேவியின் கீர்த்தனங்கள்' இசைப் பாடல் நூல்; கவிமணியின் உரைமணிகள், காந்தளூர்ச்சாலை முதலியன உரைநடை நூல்கள்.

கவிதைகளில் சிறந்தது 'மலரும் மாலையும்' என்பதாகும். குழந்தைகளுக்கு ஏற்றவகையில் இயற்கை வருணனை பெற்றவை. 'ஆசியஜோதி' புத்தர் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கப் பட்டது. உமர் கயாம் பாடல்கள் பாரசீக மொழியில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டது. 'நாஞ்சில்நாட்டு மருமக்கள் வழி மான்மியம்' என்னும் நூல் நகைச் சுவை நிரம்பியது. 'தேவியின் கீர்த்தனங்கள்' என்னும் இசைப்பாடல் பத்திச்சுவை நிரம்பிய நூல். தேவி - கவிமணியின் பெயரைக் குறிப்பதாக அமைந் துள்ளது.

இவரது பாடல்கள் எளிய சொற்களால் ஆனவை; இனிமை மிக்கவை. அருஞ்சொற்களைக் கொண்ட பாடல்களை யும் இயற்றியுள்ளார். பெரியவர்களும் உணரவேண்டிய உயர்ந்த கருத்துகள் கொண்ட பாடல்களையும் இயற்றியுள் ளார். குழந்தைகளுக்காகப் பாடுவதையே இவர் தம் குறிக் கோளாகக் கொண்டார். டி. கே சிதம்பரநாத முதலியார் இவரது பாடல்களைப் பாடி மகிழ்ச்சி அடைவார்.

முடிவுரை: தேசிக விநாயகரின் கவிமணம் தமிழ்நாடெங்கும் பரவியுள்ளது. கவிமணத்தை உணர்ந்த தமிழர்கள் அவரைப் பாராட்டினர். சிறப்பாக இளைஞர்களின் உள்ளத்தைக் கவரும் எளிய பாடல்கள் என்றும் அழியாப் புகழ் பெற்றவை.

5. விடுதலைக் குயில் பாரதியார்

சென்னை வாழ்வு

முன்னுரை: நாட்டிற்கு உழைத்தலையே உயிர்மூச்சாகக் கொண்டவர் பாரதியார். பல பாடல்களின் வாயிலாகவும், பல பத்திரிகை வாயிலாகவும் நாட்டுப் பற்றை ஊட்டியவர். அவர் பல இன்னல்களின் இடையேயும் தம்கொள்கையை விடாது பின்பற்றியவர்.

பொருள்: பாரதியார் எட்டையபுர அரசவைக் கவிஞராக வாழ்ந்தாலும், அவரது மனம் சுதந்திர வாழ்வையே விரும்பியது. அதனால் சென்னை சென்றார். 'சுதேசமித்திரன்' நாளிதழின் துணைஆசிரியராக இருந்தார். அதன் வாயிலாகப் பொதுமக்கள் விரும்பும் வகையில் எளிய நடையும், சொற் களும், பலவகைச் சந்தமும் அமைந்த பல பாடல்களை வெளி யிட்டார். இவை தமிழரிடையே விழிப்புணர்ச்சி உண்டாக்கின.

'சுதேசமித்திரன்' பத்திரிகை தம் எண்ணத்திற்கு இடையூறு யிருந்தமையால் அதனைவிட்டு விலகினார். நண்பர் திருமலாச் சாரியின் உதவியுடன் 1908 ஆம் ஆண்டு 'இந்தியா' என்னும் இதழைத் தொடங்கினார். கி. பி. 1908 ஆம் ஆண்டு சுதேச கீதங்கள் என்னும் தலைப்பில் அவர் பாடிய கவிதைத் தொகுதி யின் முதற்பகுதி வெளியிடப்பட்டது

வ. உ. சிதம்பரனாரின் தொடர்பு: சிதம்பரனார் வழக்கொன்றின் பொருட்டுச் சென்னை சென்றவர் பாரதியாரைக் கண்டு அவரோடு தொடர்பு கொண்டார். உள்ளத்தால் ஒன்றுபட்டிருந்த இரு வரும், மனங் கலந்து பல மணிநேரம் உரையாடினர். தேசத் துரோகக் குற்றங் காரணமாகச் சிதம்பரனார் சிறைப்பட்டிருந்த போது, செய்தி கேட்டுச் சிட்டெனப் பறந்து வந்து, சிதம்பர னாரைக் கம்பிகளுக்கிடையே கண்டு கண்ணீர் உகுத்தார். இந்தியா விடுதலை வேட்கையால் வீறு கொண்டெழுந்தது. எதிர்ப்பு எங்கும் எழுந்தது. ஆங்கில ஆட்சியின் அடக்கு முறைகள் தாண்டவம் ஆடின. நூலோரும், மேலோரும் சிறையில் அடைக்கப்பட்டுக் கிடப்பதை உலகோர் அறியப் பாரதியார் எழுதினார். அதனால் 'இந்தியா' இதழ் தடைசெய்யப் பட்டது. பாரதியாரைச் சிறையிலிட ஆணை பிறந்தது.எனவே, பாரதியார் புதுச்சேரிக்குப் புறப்பட்டார்.

முடிவுரை : பாரதியார் பல துன்பங்களிடையேயும் தம் கொள்கையை விடாது பிற்பற்றுபவர் என்பது இக்கட்டுரை யால் அறியலாம். வளமாக வாழ்வதைவிட எத்தகைய இடை யூறு நேர்ந்தாலும் நாட்டிற்கு உழைப்பதையே உயிர் மூச்சா கக் கொண்டவர்.

6. பாரதியாரின் இறுதி வாழ்வு

முன்னுரை : கவியரசர் பாரதியார் தம் வாழ்க்கையில் பல வகைத் துன்பங்களில் உழன்றவர். புதுவையில் இருந்தபோது பாரதியாருக்குப் பலவகையில் ஆங்கில ஆட்சியாளர் தொல்லை தந்தனர். அவர், மீண்டும் சென்னை வந்தடைந்தார்.

பொருள்: புதுவையிலிருந்து பாரதியார் தம் குடும்பத்துடன் சென்னைக்குப் புறப்படலானார். காவல் துறையினர் இதனை அறிந்து பாரதியாரைச் சிறை செய்தனர். பின் நாவலர் சோம சுந்தரபாரதியாரும் 'சுதேசமித்திரன்' ஆசிரியர் அரங்கசாமி ஐயங்காரும் முயன்று பாரதியாரை விடுதலை செய்வித்தனர். விடுதலை பெற்ற பாரதியார் தம் குடும்பத்துடன் எட்டையபுரம் சென்றார். அங்குச் சில நாள் வறுமையில் வாடினார். சென்னை யில் 'சுதேசமித்திரன்' துணை ஆசிரியராகப் பணியாற்ற அவ ருக்கு அழைப்பு வந்தது. அதனை யேற்றுப் பணிபுரிய சென்னைக்கு வந்தார்.

சென்னையில் பாரதியார் திருவல்லிக்கேணிப் பகுதியில் வாழ்ந்து வந்தார். அவர் நாள்தோறும் பார்த்தசாரதி கோயிலுக்குச் சென்று வழிபட்டுவருவார். திரும்பும்போது கோவில் யானைக்குப் பழமும் தேங்காயும் கொடுப்பது வழக்கம். ஒருநாள் கோவில் யானை மதங்கொண்டிருந்தது. வழக்கம்போல் பாரதியார் கொடுக்கும் பழத்தையும் தேங்காயையும் வாங்கிக் கொள்ளாமல அவரைத் தூக்கி எறிந்துவிட்டது. நண்பர் குவளைக் கண்ணன் உதவியால் அவர் காப்பாற்றப்பட்டார். மருத்துவ உதவிக்குப் பின் ஒருவாறு பாரதியார் குணம்அடைந் தார். பின் வயிற்றுக்கடுப்பு நோய் அவரைத் துன்புறுத்தியது. எவ்வளவோ முயன்று மருத்துவ உதவிசெய்தும் பயனளிக்க வில்லை. 11-9-1921 இல் பாரதியார் இயற்கை எய்தினர்.

முடிவுரை: தமது ஆற்றலும் இனிமையும் நிறைந்த குரலால் விடுதலைப் பண்ணிசைத்த வீரக் குயில், இவ்வுலகிலிருந்து விடுதலை பெற்றது. எனினும் அவர் கண்ட கனவுநனவாகியது. 'ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்'என்று அவர் பாடிய பாடலுக்கு ஏற்ப 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15ஆம் நாள் நாடு சுதந்தரம் அடைந்தது.

7. இஸ்லாமியக் குயில் உமறுப் புலவர்

இளமைப் பருவமும் கல்வியும்

முன்னுரை: பாரதநாடு சமயச் சார்பில்லாத நாடு. தமிழ் நாட்டில் வாழும் பல்வேறு இனத்தினரும், சமயத்தால் வேறு பட்டவராயினும் தமிழ்த்தாயின் குழந்தைகளாகவே கருதி வாழ்ந்தனர். அவர்களில் பெரும் புலவராக விளங்கித் தமிழுக்கு அருந்தொண்டு செய்தவர்களும் உண்டு. அவர்களுள் இஸ்லாம் சமயத்தைச் சார்ந்தவராகிய உமறுப் புலவரும் ஒருவர்.

பொருள்: தென்பாண்டிய நாட்டில் திருநெல்வேலி மாவட் டத்தில் எட்டையபுரத்தையடுத்த நாகலாபுரம் என்னும் சிற்றூரில், முந்நூறு ஆண்டுகட்குமுன் தோன்றியவர் உமறுப் புலவர். இவர் தந்தையார் செய்கு முகம்மது அலியார் என் பவர். இவரைச் சேகு முதலியார் என்று அழைப்பர். இவர் நறு மணப் பொருள் வணிகர்.

அக்காலத்தில் கடிகை முத்துப் புலவர் எட்டையபுர அரச வைக் கவிஞராக விளங்கினர். சேகு முதலியாருக்கும் புலவருக் கும் நட்பு ஏற்பட்டது. சேகு முதலியார் இல்லத்திற்கு புலவர் வந்து குழந்தை உமறுவை எடுத்துக் கொஞ்சுவார். உமறு, புலவரைப் பெரியப்பா என்றே அழைப்பார்.

கற்கும் பருவம் வந்ததும் சேகு முதலியார் தம் அன்பு மகனைக் கடிகை முத்துப் புலவரிடமே கல்வி பயிலச்

செய்தார். புலவர் எண்ணும் எழுத்தும் கற்பித்தார். உமறுவின் நுண்ணறிவையும் கற்கும் திறனையுங் கண்டு மகிழ்ந்த புலவர், தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் முறைப்படி கற்பித்தார். தமிழில் சிறந்த புலமை பெற்றார் உமறு. உள்ளக் கருத்துகளை அழகிய கவிதைகளாகப் பாடுவார். அதனால் அவரை அனைவரும் 'உமறுப் புலவர்' என்றே அழைக்கத் தொடங்கினர்.

முடிவுரை: உமறுப்புலவர் இஸ்லாமிய மதத்தவராயினும் தமிழ்ப் பற்றுடையவராக விளங்கினர். தமிழ்ப் புலவர் கடிகை முத்துப் புலவரிடம் வேறுபாடின்றி உறவுபாராட்டி வளர்ந்தார். புலவரின் முயற்சியால் புலமை பெற்றுத் தமிழுக்குப் பெருந் தொண்டுசெய்து புகழ்பெற்றார்.

8. 'சீருப்புராணம்' இயற்றல்

முன்னுரை :

உமறுப் புலவர், சதக்கத்துல்லா ஆணைப்படி மகுமூது நெயினு லெப்பை என்பவரின் உதவி பெற்று சீருப் புராணத்தைத் தமிழில் இயற்றத் தொடங்கினர். இது தமிழில் சிறந்த இலக்கியமாகத் தமிழரால் போற்றப்பட்டு வருகின்றது.

பொருள் :

உமறுப் புலவரைத் தமிழில் சீருப் புராணத்தை இயற்றுமாறு கேட்டுக்கொண்ட சீதக்காதி திடுமென இறந்துவிட்டார். அதனால் புலவர் செய்வதறியாது திகைத்தார். அப்போது பெருஞ்செல்வராகிய அபுல் காசிம் மரக்காயர் தாமாகவே உதவ முன் வந்தார். நூல் பாடி முடியும் வரை உமறுப் புலவரைத் தம் வீட்டிலேயே வைத்து ஆதரித்து வேண்டிய பொருளுதவியும் செய்தார். அரபு மூலத்திலிருந்து தாம் திரட்டிய குறிப்புகளைக் கொண்டு, தமிழ் மக்கள் படித்து மகிழும்படி, தீஞ்சுவைக் கவிதைகளால் புராணத்தைப் பாடி முடித்தார்.

சீருப் புராணத்தைப் பாடி முடித்ததும் இஸ்லாமியப் பெருஞ் செல்வர் பலரும், தத்தம் ஊரில் அதனை அரங்கேற்ற விரும்பினர். பல பொருள்களைப் பரிசாகத் தருவதாகப் பலரும் அழைப்பு விடுத்தனர். அவற்றுக்கெல்லாம் இசையாமல், ஆதரவற்ற காலத்தில் தாமாகவே முன்வந்து ஆதரவளித்த அபுல் காசிம் இல்லத்தின் முன்பே சீருப் புராணத்தை அரங்கேற்ற விரும்பினர்.

புலவரின் எண்ணத்தை அறிந்து அபுல் காசிம் மனம் மகிழ்ந்தார். அலங்காரப் பந்தல் அமைத்தார். தமிழகத்து அறிஞர்களுக்கு அழைப்புகள் அனுப்பி, பேரவை கூட்டி அந்த அவையில் சீருப் புராணத்தை அரங்கேற்றச் செய்தார்.

அறிஞர்கள் புலவரைப் பாராட்டிப் புகழ்ந்தனர். அபுல் காசிம் புலவருக்குப் பொன்னுடை போர்த்திப் பெரும் பொருளைப் பரிசாக வழங்கினர். சீறாப் புராணத்தில் உமறுப் புலவர் அபுல் காசிமின் அருங் குணங்களையும் வள்ளல் தன்மையையும் புகழ்ந்து பாராட்டியுள்ளார். இதனால் இவர் நன்றி உணர்ச்சியுள்ளவர் என்பது தெரிகிறது.

முடிவுரை :

இவர் பாடிய இப்புராணத்தால் இவரது புகழ் என்றும் நிலைத்துள்ளது. தன்னை ஆதரித்த அபுல்காசிம் என்ற வள்ளலைப் புராணத்தில் புகழ்ந்து பாடியிருப்பதால் அவருடைய புகழும் நிலைத்து நிற்பதாயிற்று.

9. வங்கக் குயில் இரவீந்திரர்

குடும்ப வாழ்க்கை

முன்னுரை :

பாரத நாட்டின் தேசியகீதமாகிய 'ஜனகணமன' எனத் தொடங்கும் பாடலைப் பாடியவர் வங்கக் குயில் இரவீந்திரராவர். உலகம் போற்றும் ஒப்பற்ற கவிஞர். இலக்கியத் துறையிலே இந்தியாவின் பெருமையை உலகறியச் செய்தவர். இவரது குடும்ப வாழ்க்கையை இக்கட்டுரையில் காண்போம்.

பொருள் :

இரவீந்திரருக்குப் பள்ளி சென்று படிப்பதில் விருப்பம் இல்லை. வீட்டில் இருந்தே கல்வி பயிலத் தொடங்கினர். இவருடன் பிறந்தவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் வல்லவராயிருந்தனர். அதனால் இவர் வடமொழி, ஆங்கிலம், இசை, நாடகம் ஆகியவற்றைக் கற்றுத் தேர்ந்தார். தம் தமையனார் பல நாடகங்கள் எழுதுவதில் வல்லவர். அதனால் அவருடன் சேர்ந்து இசைபாடி நாடகங்களில் நடித்தார். நாளடைவில் தாமே பல நாடகங்களை எழுதி நடிக்கச் செய்தார். இவருடைய பதினான்காம் வயதில் இவரது அன்னையார் இவ்வுலகை நீத்தார். இரவீந்திரர் தம் பதினேழாம் வயதில் மேற்படிப்புக்காக இங்கிலாந்து சென்றார். இலண்டன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து இலக்கியம் பயின்றார். தாகூரின் குடும்பத்தார் இவரைப் பாரிஸ்டராக்க விரும்பினர். ஆனால் அது பலிக்கவில்லை.

இரவீந்திரரின் மனம் கலைத்துறையில் ஈடுபட்டது. கங்கையின் கம்பீரத் தோற்றத்தைக் கண்டு, இயற்கை அழகில் இவரது மனம் ஈடுபட்டது. உள்ளத்தில் கவிதை ஊற்றுப் பொங்கியது. பல பாடல்கள் புனைந்தார். அதனை 'மாலைப்

பாடல்கள்' என்னும் நூலாக வெளியிட்டார். ஒரு திருமணத் திற்குச் சென்ற இரவீந்திரரை வங்காள நாவலாசிரியர் பங்கிம் சந்திரர் சந்தித்தார். உடனே அவர் தமக்குச் சூட்ட வந்த மாலையை வாங்கித் தாகூருக்குச் சூட்டி, இவரால் வங்க இலக் கியம் வாழ்வு பெறும் எனக் கூறிப் பாராட்டினர்.

தமது இருபத்து மூன்றும் வயதில் தாகூர் மிருணளினி தேவியார் என்பாரை மணந்து கொண்டார். இருவரும் நடத்திய இல்லற வாழ்வு நல்லற வாழ்வாகத் திகழ்ந்தது. இவரது வாழ்க்கை ஆடம்பரம் இன்றி எளிமையாக அமைந்தது. இவர்கள் நடத்திய இன்ப வாழ்வின் பயனாக ஆண் மக்கள் இருவரும், பெண் மக்கள் மூவரும் பிறந்தனர்.

முடிவுரை :

இவரது குடும்பம் ஒரு பல்கலைக்கழகமாக அமைந்திருந் தது. கலைக் கோயிலாகத் திகழ்ந்த இவரது இல்லத்தில், இசை, நாடகம், ஓவியம், காவியம் முதலியன செழிப்புற்று வளர்ந்தன. அச்சூழலில் தோன்றிய இரவீந்திரர் கலையில் தேர்ந்து உயர் புகழ் பெற்றார்.

10. உலகப் பெரும் புகழ்

முன்னுரை :

கவிதைகள் பல புனைந்து வங்க மொழிக்கு அழியாப் புகழைத் தேடிக் கொடுத்த வங்கக் கவிஞர், இந்திய நாட்டின ராலும் பிற நாட்டினராலும் பெரிதும் பாராட்டத் தக்க சிறப் பைப் பெற்றார். அதற்காக இவர் உலகப் புகழ் பெற்ற 'நோபெல்'' பரிசைப் பெற்றதையும், பிறவகையால் சிறப்புப் பெற்றதையும் இக்கட்டுரையில் அறியலாம்.

பொருள் :

1912ஆம் ஆண்டு இலண்டனுக்குச் சென்றார் இரவீந்திரர். அங்கிருந்த வில்லியம் ரோதன்ஸ்டீன் என்பவரிடம், தாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருந்த 'கீதாஞ்சலி'ப் பாடல் களைப் படித்துக் காட்டினார். அதனைக் கேட்டு அந்த நண்பர் மிக வியந்து பாராட்டினர். மற்றொரு நண்பர் 'இரவீந்திரரின் கவிதைகளில் ஒரு வரியைப் படித்தாலே துன்பங்கள் எல்லாம் மறைந்து விடும்' எனப் புகழ்ந்தார். அயல் நாட்டுப் பேரறிஞர் பலரும் அவர் பாடல்களைக் கேட்டு அவருக்குச் சிறந்த நண்பராயினர். இலண்டனிலிருந்து அமெரிக்கா சென்று இந்தியா திரும்பினர்.

இரவீந்திரருடைய கவித் திறமையைப் பாராட்டி 1913ஆம் ஆண்டு 'நோபெல் பரிசு' வழங்கப்பட்டது. கல்கத்தா பல்கலைக் கழகம் அவருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கிப்

பாராட்டியது. அரசாங்கம் 'சர்' என்ற பட்டம் வழங்கியது சீனு, ஜப்பான், இத்தாலி, இரஷ்யா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் உள்ள அறிஞர்கள் இரவீந்திரரைப் பாராட்டிப் பெருஞ் சிறப்புச் செய்தனர். 1918ஆம் ஆண்டு சாந்தி நிகேதனத்தில் 'விசுவபாரதி' என்னும் உலகப் பல்கலைக் கழகத்தை இரவீந்திரர் தொடங்கினுர். அக்கழகத்தில் பல நாடுகளின் கலைகளையும் இடம் பெறச் செய்தார். சாதி சமய வேறுபாடின்றி எல்லா நாட்டினரும் மனிதர் என்ற உணர்வுடன் மனம் ஒன்றிப் பழக வாய்ப்பு அளித்தார்.

முடிவுரை:

பாரத நாட்டிற்குப் பெரும் புகழைத் தேடித் தந்தவர் இரவீந்திரநாத தாகூர். அவர் மறைந்தாலும் இறவாத் தன்மை வாய்ந்த பாடல்களின் வாயிலாக இவரது எழில் உருவைக் காணலாம்; இனிய குரலைக் கேட்கலாம். இவரது புகழ் குன்றின்மேலிட்ட விளக்கென மிளிர்கிறது.

11. கேரளக் குயில் வள்ளத்தோல்

கல்வியும் கவித் திறமையும்

முன்னுரை :

கேரளம் என்னும் மலையாள நாடு முன்பு சேரநாட்டின் ஒரு பகுதியாக விளங்கியது. அங்கு வழங்கும் மலையாளமொழி அழகிய இனிய ஒரு மொழியாகும். அதனை வளப்படுத்த அறிஞர்கள் பலர் உழைத்தனர். பல்வேறு இலக்கியங்களை இயற்றினர். அவர்களுள் இருபதாம் நூற்றுண்டில் பெருங் கவிஞராக விளங்கியவர் வள்ளத்தோல் நாராயண மேனன் என்பவர் ஆவார்.

பொருள் :

கேரளநாடு நானில வளமும் ஒருங்கே பெற்றது. வேட்டத்துநாடு என்பது கேரளத்தின் ஒரு பகுதி. சென்னரா என்பது அப்பகுதியில் உள்ள கிராமம். அக்கிராமத்தில் பிறந்தவரே வள்ளத்தோல் நாராயணமேனன். தந்தையார் தாமோதரன் எளயத்து; தாயார் குட்டிப்பாரு அம்மையார். இருவருக்கும் 16–10–1878இல் இவர் ஒரே மகனுகப் பிறந்தார்.

இவரை இவரது பெற்ருேர் தொடக்கப்பள்ளி ஒன்றில் சேர்த்தனர். தாய்மொழி மலையாளத்தையும் வடமொழியினையும் விரும்பிப் பயின்ருர். தாய் மாமனுகிய இராமுன்னி மேனன் என்பவரால் வடமொழியில் வல்லவரானுர். வடமொழியிலுள்ள உயர்ந்த காவியங்கள், சிறந்த நாடகங்கள் முதலியவற்றை

நன்கு கற்றுத் தேர்ந்தார். இராம வாரியரிடம் உயர் கல்வி கற்க இவர் அனுப்பிவைக்கப்பட்டார்.

தாய்மொழியாகிய மலையாளத்தில் அழகிய கவிதைகள் பல இயற்றினர். இருபதாம் வயதில் 'இருது விலாசம்' என்னும் மலையாளக் கவிதை நூலை இயற்றினர். அறிஞர்கள் பலரும் வள்ளத்தோலின் கவிதைகளைப் படித்துப் பாராட்டினர். கலைத் துறையிலும் வல்லவரானர். தந்தையார் கதகளித் துறையில் தீராத ஆர்வமுடையவர். சிறுவயதிலேயே வள்ளத்தோல், தந்தையாருடன் சென்று கதகளியைக் கண்டு களிப்பதில் ஆர்வம் கொண்டவர். அதனல் வள்ளத்தோல் பிற்காலத்தில், கவிதையைப் போலவே கதகளி என்னும் மலையாள நாட்டியக் கலைத் துறையிலும் கருத்துடையவராக விளங்கினர்.

முடிவுரை :

இவரால் மலையாளமொழி, கவிதையிலும் கலைத்துறையிலும் சீரும் சிறப்பும்பெற்று விளங்கியது. இளமையிலேயே வடமொழி, தாய்மொழி ஆகியவற்றில் ஆர்வம் கொண்டு கற்ருர். அவரைப்போல நாமும் இளமை முதல் தாய் மொழிப் பற்றுடையவராய் இருக்கவேண்டும்.

12. வள்ளத்தோலின் இல்லற வாழ்க்கை

முன்னுரை :

இலக்கிய உலகில் நாடறிந்த ஒரு பெரும் புலவராய்த் திகழ்ந்த வள்ளத்தோல், இல்லறமே நல்லறமெனக்கொண்டு அதனை மேற்கொண்டார். 'காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம்' என்பதற்கேற்ப மனம் ஒன்றிய மனைவியுடன் இல்லறத்தை இனிதாக நடத்தலானர்.

பொருள் :

இவர் தமது இருபத்து மூன்ரும் வயதில், தம் மாமன் மகள் மாதவி என்னும் மங்கை நல்லாளை மணம் செய்துகொண்டார். திருமணத்திற்குப் பிறகு பொருள் தேடவேண்டித் திருச்சூர் சென்ருர். 'கேரள கல்பத்ருமம்' என்னும் அச்சகத்தில் மேலாளராகப் பணியாற்ற அழைப்பு வந்தது. முப்பது ரூபாய் ஊதியம் தருவதாக அறிவித்தனர். வள்ளத்தோல் அப்பணியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் குடும்பத்துடன் திருச்சூரில் வாழ்ந்து வந்தார். ஓய்வு நேரத்தில் இலக்கியப் பணியிலும் ஈடுபட்டார். பந்தள் நாட்டு மன்னர் 'கவனகௌமுதி' என்னும் இதழை நடத்தி வந்தனர். வள்ளத்தோல் அதனைச் சிறந்த முறையில் அச்சிட்டார். அது முழுதும் கவிதையினுலானது. இடையிடையே தம் கவிதைகளையும் சேர்த்து வெளியிட்டார்.

திருச்சூரில் இருந்தபோது பல பேரறிஞர்களின் நட்பு கிடைத்தது.

வான்மீகி இராமாயணத்தை வள்ளத்தோல் மலையாள மொழியில் மொழிபெயர்க்கத் தொடங்கினர். அதனைச் சிறிது சிறிதாக அச்சிட்டு வெளியிட்டார். எதிர்பாராத வகையில் கொடிய குளிர்காய்ச்சல் நோய்க்கு இவர் ஆளானர். அதனுல் செவிடரானர். வடமொழியில் உள்ள 'கதாசரித் சாகரம்' என்னும் நூலில் உள்ள ஒரு கதையைத் தழுவிச் 'சித்திர யோகம்' என்னும் காவியத்தை இயற்றத் தொடங்கினர். இரண்டாண்டுகள் பாடுபட்டு அப்பெருங் காவியத்தைப் பாடி முடித்தார். முப்பத்தாரும் வயதில் இதனை வெளியிட்டார். இவர் பாடிய இசை, நாடகம், வருணனை எனப் பல திறப்பட்ட கவிதைகளை எல்லாம் 'சாகித்ய மஞ்சரி' என்னும் நூலாக 1917 ஆம் ஆண்டு வெளியிட்டார். இவை யாவும் தம் இல்லற வாழ்க்கையில் இருந்து இயற்றியவையாகும்.

முடிவுரை :

இவரது இல்லற வாழ்க்கை பல அரிய நூல்களை இயற்ற வழிகாட்டியுள்ளது. இடைவிடா பெருமுயற்சியால் பெரும் புகழ்படைத்தார். இவரது இல்லற வாழ்க்கையும், இலக்கியத் தொண்டும் நமக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன.

13. ஆந்திரக் குயில் சத்திய நாராயணு

நூல்கள் இயற்றல்

முன்னுரை :

ஆந்திரர்களின் தாய்மொழி தெலுங்கு. இசை இனிமை வாய்ந்த மொழி என்பதைக் கருதியே பாரதியாரும் 'சுந்தரத் தெலுங்கு' எனப் பாராட்டியுள்ளார். இம்மொழியில் பல சிறந்த இலக்கியங்கள் உள்ளன. நன்னய பட்டர், போதனு, அல்ல சானி பெத்தண்ணு போன்றவர்கள் புகழ்பெற்ற கவிஞர்கள். இருபதாம் நூற்றுண்டில் தெலுங்கு இலக்கியம் பல துறையிலும் வளர உழைத்தவர் டாக்டர் விசுவநாத சத்திய நாராயணு என்பராவார்.

பொருள் :

சத்திய நாராயணு தெலுங்கானுவில் உள்ள கரீம் நகா கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி 1961 ஆம் ஆண்டு ஓய்வுபெற்றுர். ஓய்வு பெற்றபின் தன் வாழ்நாள் முழுவதையும் எழுத்துப் பணியிலேயே கழித்தார். முதன் முதலாக இவர் வெளியிட்ட கவிதை நூல் 'ஆந்திர பிரஸ்தி' என்பது. அதற்குப் பின்பு இவர் இயற்றிய 'சிருங்கார வீதி, தெலுங்கு ருதுவுலு

(தெலுங்கு பருவங்கள்), சசிதூதமு (சந்திரன் விடுதூது), ஜான்சி ராணி ஆகிய கவிதைகள் கவிதா நுட்பம் நிறைந்தவை. வள்ளி கல்யாணம், மாஸ்வாமி (எமது தெய்வம்) முதலிய பக்தி நூல்களையும் பாடியுள்ளார். இவர் பாடிய 'விசுவநாத மத்யாகரலு' என்னும் நூல் பக்தி நூலாகும். அந்நூலைப் பாராட்டிச் சாகித்திய அகாடமி அவருக்கு ரூபாய் 5,000 பரிசாக வழங்கியது.

இவர் இயற்றிய நூல்களுள் தலைசிறந்தது 'இராமாயண கல்ப விருட்சம்' என்னும் இலக்கியமாகும். இதில் சீதா தேவிக்கே முதலிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இராக்கதர்களைச் சிறந்த வீரராகவும் காட்டியுள்ளார். இந்நூல் அறிஞர்களின் சிந்தனையைத் தூண்டுவதாக உள்ளது. அதனால், இதனைப் பாராட்டி 1975ஆம் ஆண்டு ஞானபீட பரிசாக இலட்ச ரூபாய் இவருக்கு அளிக்கப்பட்டது.

புகழ்பெற்ற நாவலாசிரியராகவும் இவர் விளங்கினார். இவர் எழுதிய நாவல்கள் முப்பதுக்கும் மேற்பட்டவையாகும். இவர் எழுதிய முதல் நாவல் 'ஏகவீர' என்பது திரைப்படமாக வெளிவந்துள்ளது. இவர் எழுதிய நாவல்களில் தலைசிறந்தது 'வேயிபடகலு' (ஆயிரம் படங்கள்) என்பது. இந்நூலுக்கு ஆந்திரப் பல்கலைக்கழகம் பரிசளித்துப் பாராட்டியுள்ளது. பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. 'நர்த்தனசாலா, வேனராசு அனார்கலி, 'திரிசூலம்' ஆகியவை இவர் எழுதிய முழுநீள நாடகங்கள் ஆகும். பல சிறு நாடகங்களும் எழுதியுள்ளார். அவை வானொலியிலும் ஒலிபரப்பப்பட்டன.

மேலும் இவர் எழுதிய சிறுகதைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் திறனாய்வுக் கட்டுரைகள் முதலானவை கணக்கற்றவை. இவர் இசைப்பாடல்களையும் இயற்றியுள்ளார். 'கின்னரவாகுலு' என்பது கோதாவரியின் கிளை நதிகளுள் ஒன்று. அது பண்ணிசைத்துப் பாயும். அதன் நீரோட்டத்தை ஒட்டிய இசைச் சந்தம் அமையப் பாடப்பட்டதே 'கின்னரசானி' என்னும் இசை நூல்.

முடிவுரை :

ஆந்திரக் குயில் சத்திய நாராயணா தம் வாழ்நாள் முழுவதும் கவிதைகள், எண்ணற்ற நாவல்கள், நாடகங்கள், சிறுகதைகள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் முதலியன எழுதி ஆந்திர மொழியாகிய தெலுங்கிற்கும், அதன் வளர்ச்சிக்கும் ஓயாது உழைத்துப் பெரும் புகழ் பெற்றார்.

14. புகழ்மிக்க வாழ்வு

முன்னுரை :

உலகில் மக்களாய்ப் பிறந்தவர்கள் புகழோடு வாழ வேண்டும். 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்றார் வள்ளு

வரும். அதற்கு ஏற்ப உலகுபுகழ் இலக்கிய மேதையாகவும், கலைச்செல்வராகவும் விளங்கியவர் சத்திய நாராயணு என்பவர். இவரது புகழ்மிக்க வாழ்வைப்பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

பொருள் :

இவரது புகழ் இந்தியா முழுவதும் பரவியது. தம் புலமையால் டாக்டர் பட்டம் பெற்றதோடு 'கலாப்ரபூர்ண', 'கவி சாமராட்' போன்ற விருதுகளும் பெற்றுர். இந்தியப் பேரரசு 'பத்ம பூஷண்' என்ற விருது வழங்கிச் சிறப்பித்தது. 1971 ஆம் ஆண்டு ஆந்திர மாநில அரசு அரசவைக் கவிஞராக்கிப் பெருமைப் படுத்தியது. பல பரிசுகள் பெற்றுச் சிறப்புற வாழ்ந்தார். தம் நூல்களை அச்சிட்டு விற்றுப் பெரும் பொருள் தேடினுர்.

சத்திய நாராயணு வீறுபெற்றுயரக் காரணம் அவரது கவலையற்ற வாழ்வேயாகும். வாய்த்த மனைவியார் கருத்தறிந்து நடக்கும் கற்பரசி. மைந்தர் இருவரும் மகளிர் மூவரும் அறிவறிந்த நன்மக்கள் ஆவர். இவருடைய குடும்பம் ஒரு பல்கலைக்கழகமாக அமைந்திருந்தது.

நாடு போற்ற இவர் பொது வாழ்விலும் ஈடுபட்டார். ஆந்திர மாநில அரசு இவரைச் சட்டமன்ற மேலவை உறுப்பினராக ஆக்கிப் பெருமைப்படுத்தியது. 'சாகித்திய அகாடமி' அவரை ஆட்சிக்குழு உறுப்பினராக ஏற்றுச் சிறப்பித்தது. அதன் ஆந்திரக் கிளையின் தலைவராக இருந்து, அதன் வளர்ச்சிக்குப் பெரிதும் உழைத்தார். ஆயிரம் பிறைகண்ட மூதறிஞராகிய இவர்தம் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவினை 'சகஸ்ர சந்திர தரிசனேத்சவம்' என்ற பெருவிழாவாக ஆந்திர மாநிலம் கொண்டாடியது.

முடிவுரை :

அறிவு மேதையாக, ஒப்பற்ற கவிஞர் திலகமாக, எழுச்சியூட்டும் எழுத்தாளராக, நாவீறு படைத்த நாவலராக, பாரத நாட்டின் அருந்தவப் புதல்வராக விளங்கிய சத்திய நாராயணு புகழ்மிக்க வாழ்வு பெற்றுத் தம் 82ஆம் வயதில் இயற்கை எய்தினுர்.

பொதுக் கட்டுரைகள்

1. இன்பச் செலவு

முன்னுரை :

ஏட்டுக் கல்வி மட்டும் இருந்தால் போதாது. ஏட்டுக் கல்வியுடன் உலகியல் அறிவும் பெற வேண்டும். அதற்குத் துணை புரிவது இன்பச் செலவு ஆகும். நான் சென்று வந்த இன்பச் செலவு பற்றி இக்கட்டுரையில் கூறுகிறேன்.

பொருள் :

சென்ற வாரம் எங்கள் வகுப்பு ஆசிரியரும், மாணவர்கள் 45 பேரும் தொழிற்சாலை நகரமான மேட்டூருக்குச் சென்றோம். எங்கள் பள்ளிக்குத் தனிப் பேருந்து காலை 8 மணிக்கு வந்தது. அதில் அனைவரும் அமர்ந்து எங்கள் இன்பப் பயணத்தைத் தொடங்கினோம். வழியில் இயற்கைக் காட்சிகளைக் கண்டு இன்புற்றோம். சுமார் காலை 9 மணிக்கு நாங்கள் மேட்டூரை அடைந்தோம்.

பல ஆண்டுகளுக்கு முன் சிற்றூராக இருந்ததாகவும், இப்பொழுது பெருநகராக விளங்குகிறது என்றும் என் ஆசிரியர் கூறினார். மனிதனுடைய அறிவும், உழைப்பும் சேர்ந்தால் உலகில் ஆகாதது ஒன்றுமில்லை என்பதை மேட்டூருக்குச் சென்றவர் அனைவரும் ஒப்புக் கொள்வர். அங்கு கெமிக்கல்ஸ், பிளாஸ்டிக் தொழிற்சாலை, அலுமினியத் தொழிற்சாலை மற்றும் பல தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவை பல்லாயிரக் கணக்கானவர்க்கு வேலை வாய்ப்பைத் தந்து கொண்டிருக்கின்றன. இங்குள்ள நீர்த்தேக்கம் பெரியது. இது தொழிற்சாலைகளுக்கு வேண்டிய நீரைக் கொடுக்கிறது. சேலம் நகருக்கு மின்சாரம் கொடுக்கிறது. தஞ்சைக்குத் தேவையான நீரையும் தருகிறது. இவை யாவற்றையும் கண்டு இரவு சுமார் 8 மணிக்கு ஊர் வந்து சேர்ந்தோம்.

முடிவுரை :

இவ்வின்பச் செலவால் அறிவியல் அறிவு பெற்றதோடு, இயற்கை அழகையும் கண்டு மகிழ்ந்தோம். மேலும் உழைப்பின் உயர்வையும் உணர்ந்தோம்.

2. உழவுத் தொழில்

முன்னுரை :

மனிதன் உயிர் வாழ உணவு மிகமிகத் தேவை. உணவை உண்டாக்குவது உழவுத்தொழில். அத்தகைய உழவைப்பற்றி இக் கட்டுரையில் காண்போம்.

பொருள் :

வள்ளுவர் தனது நூலில் 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்றும், 'உழுவோரை மற்றெல்லோரும் தொழுது பின் செல்வர்' என்றும் கூறியுள்ளார். 'உழத்தல்' என்ற சொல்லுக்குத் துன்பப்படுதல் என்பது பொருள். உழவன் தான் துன்பப்பட்டு உலகை வாழவைக்கிறான். மற்ற எல்லாத் தொழிலுக்கும் அடிப்படையாக அமைவது இவ் உழவுத் தொழிலே.

நம் நாடு விவசாய நாடு. நம் நாட்டின் வருமானத்தில் பெரும் பங்கு வகிப்பது உழவே. இருப்பினும் உழவர்கள் வறுமையில் வாடுகின்றனர். இதனால் கற்றவர்கள் உழவைப் புறக்கணிக்கின்றனர். நம் நாட்டில் உழவு சிறப்படைய, காலத்திற்கேற்றவாறு மாற்றம் செய்ய வேண்டும். உழவன் வாழ்வு பெற்றால் உலகம் வளம் பெருகும்.

முடிவுரை :

நம் நாட்டில் மக்கள் பெருக்கம் அதிகரிப்பதால் உணவுப் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனைப் போக்க புதிய உழவு முறையை உழவன் கையாள வேண்டும். இதற்குக் கற்றவர் களும், மற்றவர்களும் உழவைப் போற்றிப் பேண வேண்டும். இதனால் உணவு பெருகும்; பற்றாக்குறை நீங்கும். நாடும், நாமும் வாழ்வோம்.

3. கிராம வாழ்க்கையும், நகர வாழ்க்கையும்

முன்னுரை :

நம் பாரத நாடு விவசாய நாடு. ஆனதால் கிராமங்கள் அதிகம் உள்ளன. நம் நாட்டின் மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் கிராமத்திலேயே வாழ்கின்றனர். நாகரிகம் உள்ளவை நகரங்கள். இவை இரண்டின் வாழ்க்கை முறை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

நகர வாழ்க்கை :

நாகரிகத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குவன நகரங் கள். தொழில் வளத்திற்குச் சிறப்பாக இருப்பது நகரங்கள். மனிதனின் செயற்கைச் சிறப்புகளை விளங்கச் செய்வது நகரங்கள். அழகிய கூட கோபுரங்களும், மாட மாளிகை களும், அகன்ற வீதிகளும், ஒளி மிக்க மின் விளக்குகளும், நகரை அழகு செய்கின்றன. உழைத்துப் பொருள் தேடுவோர் நகரை நாடுகின்றனர். 'கெட்டும் பட்டணம் சேர்' என்பது பழமொழி. இங்கு மக்கள் நெருக்கம் மிகுந்திருப்பதால் அமைதியின்மையும், சுகாதாரமின்மையும் வாழ்க்கையை இன்பமற்றதாகச் செய்கின்றன.

கிராம வாழ்க்கை :

இயற்கை அன்னையின் எழில் கொழிப்பது கிராமமே. கிராமத்தில் ஏரி, குளம், ஆறு போன்ற நீர் நிலைகளும், காடு, வயல், மலை, சோலை இவற்றின் அழகும் மனத்திற்கு மகிழ்ச்சியூட்டும்; கண்ணிற்குக் குளிர்ச்சியளிக்கும். தூய காற் றும், தூய நீரும் மக்களின் ஆரோக்கியத்திற்கு அடிகோலு கிறது. நெல்லும், கரும்பும், தேனும், கனியும், கிழங்கும்

கொடுப்பவை கிராமங்களே. அமைதியான வாழ்வுக்குச் சிறந்த இடம் கிராமமே.

முடிவுரை :

நகர வாழ்க்கை நாகரிகம் பெற்றது; கிராம வாழ்க்கை அமைதியுடையது. இயற்கை வளம் பெற்றது கிராமம். செயற்கையின் சிறப்பு மிளிர்வது நகரம்.

4. பொங்கல் விழா

முன்னுரை:

உழைப்பின் உயர்வைக் கொண்டாடும் நாள் பொங்கல் திருநாள். தமிழர்கள் திருநாள் பொங்கல் திருநாள். அறிவுத் தொடர்புடைய நன்றித் திருநாள் பொங்கல் திருநாள். இத் திருநாள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

பொருள் :

பொங்கல் விழா தை மாதம் முதல் நாள் கொண்டாடப் படுகிறது. பொங்கல் விழா மொத்தம் நான்கு நாட்கள் நடைபெறுகிறது. முதல் நாள் போகித் திருநாள். இந் நாளில் வீட்டிற்கு வெள்ளையடித்து, பயனற்ற பழைய பொருள்களை நீக்கிப் புதியனவற்றை வாங்கி வைப்பர். புத்தாடை புனைந்து மகிழ்வர். இரண்டாம் நாள் பொங்கல். அன்று உழவுத் தொழிலுக்கு உயிரூட்டும் மழைத் தெய்வத் திற்குப் பொங்கலிட்டு வணங்குவர். மூன்றும் நாள் மாட்டுப் பொங்கல். உழவுத் தொழிலுக்கு உறு துணையான கால் நடைகளுக்கு நன்றி செலுத்தும் நாள். அன்று கால் நடைகளைக் குளிப்பாட்டி, அழகு படுத்தி, அதை அன்று சுயேச்சையாக அவிழ்த்து விடுவர். நான்காம் நாள் கரிநாள். உழவுக்குக் காரணமாகிய கதிரவனுக்கு நன்றி செலுத்தும் நாள். அன்று வாசலில் கோலமிட்டு அழகு படுத்திப் பொங்கலிட்டுக் கதிரவனை வணங்குவர்.

முடிவுரை :

பொங்கல் விழா என்பது நன்றி செலுத்தும் விழாவாகும். தமிழர் நன்றி மறவாதவர் என்பதை இத்திருவிழா எடுத்துக் காட்டும் வகையில் கொண்டாடப்படுவதே இதன் சிறப்பாகும்.

மாதிரி வினாத்தாள்

ஏழாம் வகுப்பு

காலம் 2-30] தமிழ் [மதிப்பெண்-100

குறிப்பு : (1) விடைகள் குறிப்பிட்ட அளவினதாக இருத்தல் வேண்டும்.

(2) IVஆம் வினாவைத் தவிர மற்ற வினாக்கள் சொந்த நடையில் இருத்தல் வேண்டும்

I. பின்வருனவற்றுள் எவையேனும் ஐந்தனுக்கு மும்மூன்று வரிகளில் விடை எழுதுக. **($2\times5=10$)**

(அ) அன்பிலார், அன்புடையார் இயல்புகள் யாவை?

(ஆ) ஒறுத்தார், பொறுத்தார் பற்றி வள்ளுவர் கூறியவை யாவை ?

(இ) உடம்பு பெற்றான் நெடிது உய்க்கும் ஆற்றினைக் கூறுக.

(ஈ) எத்தகைய பைங்கூழைச் சிறுகாலையில் செய்ய வேண்டும் ?

(உ) சந்திரமதி தன் மகனை எங்குக் கண்டாள் ?

(ஊ) குசேலர் கண்ணனைக் கண்ட காட்சியை எழுதுக.

(எ) 'மதுவின் ஆறு' என்று பாரதிதாசன் எதைக் குறிப்பிடுகிறார் ?.

(ஏ) 'கதிரவனின் தாய்ப் பாசம்' என்று குறிப்பிடப்படுவது யாது ?

II. பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றனுக்கு ஒவ்வொன்றுக்கும் ஆறு வரிகளில் விடைதருக. **($4\times3=12$)**

(1) இராமலிங்க அடிகள் இறைவனை எவ்வாறு வாழ்த்துகிறார் ?

(2) கைக்குடையும் அச்சாணியும் கொண்டு விளக்கப் படும் நீதியை எழுதுக.

(3) ஊக்கமுடைமையின் சிறப்பைக் கூறுக.

(4) ஒரு பொருளை எங்ஙனம் ஆய்தல் வேண்டும் ?

(5) சந்திரமதி தன்மகனைத் தேடிச்சென்றபோது பட்ட துன்பங்கள் யாவை ?

(6) மகனுக்குக் கல்வி கற்பிக்குமாறு கூறிய ஆசிரியர்க்கு எல்லன் கூறிய மறுமொழி யாது ?

(7) நோயற்ற வாழ்வுவாழ நாமக்கல் கவிஞர் கூறும் வழிகள் யாவை ?

(8) உழவன் பயிரைக் காக்கும் முறைபற்றி ஆசிரியர் கூறுபவை யாவை ?

III. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றுபற்றிப் பதினைந்து வரிகளில் எழுதுக. (6)

(1) சந்திரமதி புலம்பிக் கூறிய உரைகள்.

(2) கல்வியின் சிறப்புப்பற்றி ஆசிரியர் கூறியவை.

(3) அவல் உண்டபோது கண்ணன் கூறிய உரைகள்.

IV. பின்வரும்பாடல்களை அடிபிறழாமல் எழுதுக. (4 × 2 = 6)

(1) "எப்பிறப்பாயினும்" என்று தொடங்கும் அறநெறிச் சாரப் பாடல்.

(2) "தெண்ணீர்" என்று தொடங்கும் குறள்.

V. நிகழிடம் கூறிப் பொருளை விளக்கு. (இரண்டனுக்கு மட்டும்) (3)

(1) இனியாரை நம்பி உயிர்வாழ்வம்.

(2) வன்பாற் கண்வற்றல் மரம் தளிர்த்தற்று.

(3) வலிதருமவற்றுள் நன்று வாய்த்தது.

VI. பின்வருவனவற்றுள் எவையேனும் ஐந்தனுக்கு ஒவ்வொன்றுக்கும் மூன்று வரிகளில் விடை எழுதுக. (2 × 5 = 10)

(1) உழவின் சிறப்பை வள்ளுவர் எங்ஙனம் விளக்கி யுள்ளார் ?

(2) கிளியைக் கூண்டில் அடைப்பது பற்றிப் பாண்டி யன் கொண்ட கருத்து யாது ?

(3) கல்வியின் சிறப்பை எழுது.

(4) ஒரே இந்தியா உருவானது எவ்வாறு ?

(5) இராசராசன் செய்த நிலவரிச் சீர்திருத்தம் பற்றி எழுது.

(6) காஞ்சியைப்பற்றிக் கூறும் தமிழ் இலக்கியங்கள் யாவை ?

(7) இராம் மோகன் தொடங்கிய கழகம் யாது? அதன் நோக்கம் யாது?

(8) மாதவியைப்பற்றிக் குறிப்பு வரைக.

VII. பின்வருவனவற்றுள் மூன்றனுக்கு ஆறு வரிகளில் விடை எழுதுக. **(4×3=12)**

(1) வழக்கினைச் சான்றோர் எவ்வாறு தீர்த்து வைத்தார்?

(2) தங்கப்பன் உண்மையை உரைத்தது ஏன்?

(3) பண்டைக்கால இந்தியரின் ஒருமைப்பாட்டுணர்வை விளக்குக.

(4) பெண்ணினத்துக்கு இராம்மோகன் செய்த தொண்டினை எழுது.

(5) ஔவையார் செய்த அரசியல் தொண்டுகள் யாவை?

(6) செஞ்சிலுவைச் சங்கத்தின் பணிகள் யாவை?

(7) மேரி கியூரி ரேடியம் கண்டறிந்த வரலாற்றை எழுதுக.

VIII. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றினைப் பற்றிப் பதினைந்து வரிகளில் எழுதுக. **(6)**

(1) ஒழுக்கமே கல்வியினும் உயர்ந்தது.

(2) அப்துல் அமீதின் வீரச்செயல்.

(3) சங்ககால மகளிரின் வீரம்.

X. பின்வரும் தொடர்களில் நான்கினைப் பிரித்து எழுதுக.

(1) 1. ஒவ்வொரு, 2. உழுதுண்டு, 3. ஆருயிர், **(2)**
4. சிற்றூர், 5. ஒழுக்கமற்ற, 6. தீஞ்சுவை,
7. கற்றூண், 8. பற்பல.

(2) இரண்டினை நும் சொந்த வாக்கியத்தில் பயன்படுத்தி எழுதுக.

1. ஈட்டினன், 2. உள்ளமுவந்து,
3. மளமளவென்று, 4. நல்குரவு. (2)

(3) 1. எச்சங்கள் எத்தனை வகைப்படும்? எடுத்துக் காட்டுகள் தருக. (2)

2. மொழிக்கு ஈற்றில் நிற்கும் உயிர் எழுத்துகள் யாவை? அல்லது சார்பு எழுத்துகள் யாவை? (2)

3. குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? எடுத்துக் காட்டுகள் தருக. (2)

X. **கீழ்க்காணும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றைப்பற்றி ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக.** **(10)**

(1) வேதநாயகரின் இலக்கியத் தொண்டு.
(2) தேசிக விநாயகரின் இளமைப் பருவம்.
(3) பாரதியின் தேசத் தொண்டு.

XI. **கீழ்க்காணும் கடிதங்களில் ஏதேனும் ஒன்றை வரைக.** **(5)**

(1) உன் பகுதிக் குறை பற்றி நகராட்சிக்கு வேண்டுகோள்.

(2) விடுமுறையைக் கழித்ததுபற்றி நண்பனுக்கு விளக்கி எழுதுக.

XII. **கீழ்க்காணும் பொதுக்கட்டுரைகளுள் ஏதேனும் ஒன்று பற்றி ஒரு பக்க அளவில் வரைக.** **(10)**

உங்கள் வீட்டில் கொண்டாடிய ஒரு பண்டிகை.
இந்தியப் பெரியார் ஒருவர்.
கல்வியின் சிறப்பு.

